# අස්සීරා වත්තාරීහ්

(ඉස්ලාමීය ඉතිහාසය)

**ඉස්ලාම් ආගමික (අහදිය්යා අල්කුර්ආන් පාසල්)**

**අවසන් සහතික පත්‍ර විභාගය සඳහා පෙළ පොත්**

# அஸ் ஸீறா வத்தாரீக்

**(இஸ்லாமிய வரலாறு)**

**இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்)**
**பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடப்புத்தகம்**

# As Seera Wathareeh

**(Islamic History)**

**Text Book for**
**Final Certificate Examination of Islamic Studies**
**(*Ahadhiyyah, Al Quran Schools)***

## السيرة والتاريخ

**الكتاب المقرر لشهادة الإمتحانات النهائية**
**للمدارس القرآنية والأحدية الإسلامية**


**إصدار: إدارة الشؤون الإسلامية**
**كولومبو-سريلانكا**

***Published by :***
***Department of Muslim Religious and Cultural Affairs***
***180, T. B. Jayah Mawatha,***
***Colombo - 10,***
***Sri Lanka.***



2-CM14795

CM 14795-5,000(2012/08)


بسم الله الرحمن الرحيم

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மத்
பிரதிப் பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்
துணைத் தலைவர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி (நளீமி)
முன்னாள் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் (நளீமி)
பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள் :** அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன் (M.A.)
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபிர் (M.A.)
விரிவுரையாளர்
கொழும்பு பல்கலைக்கழகம்

ஜனாப் எம். எஸ். எம். பூஸரி (B.A. Hons.)
அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி
திஹாரி

அஷ்ஷெய்க் ஏ. மிஹ்லார் (நளீமி) (M.A.)
ஸாஹிறாக் கல்லூரி
கொழும்பு

அஷ்ஷெய்க் ஜவ்பர் ஹுசைன் (M.Phil)
சிரேஷ்ட விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

| | | |
|---|---|---|
| **எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள் (தொடர்ச்சி)** | : | அஷ்ஷெய்க் என் கபூர்டீன் (M.Phil)<br>விரிவுரையாளர்<br>கொழும்பு பல்கலைக்கழகம்<br><br>அஷ்ஷெய்க் யு.எல்.ஏ.அமீர் (M.Phil)<br>விரிவுரையாளர்<br>கொழும்பு பல்கலைக்கழகம்<br><br>அஷ்ஷெய்க் நவாஸ் சனூர்டீன் (M.A)<br>ஆசிரிய ஆலோசகர் |
| **செம்மையாக்கற் குழு** | : | அல்ஹாஜ் எஸ். எச். எம் ஜெமீல் (M.A)<br>முன்னாள் செயலாளர்<br>முஸ்லிம் விவகார இராஜாங்க அமைச்சு<br><br>கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி)<br>முன்னாள் பீடாதிபதி / சிரேஷ்ட விரிவுரையாளர்<br>தென்கிழக்கு பல்கலைக்கழகம்<br><br>அல்ஹாஜ் எம். எச். எம். நாளிர் B.A. (Hons)<br>வளவாளர்<br>தேசிய கல்வி நிறுவகம் மகரகம<br><br>அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி (B.A.) Hon's PGDE<br>முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம்<br>மஹரகம |
| **இணைப்பாக்கம்** | : | மௌலவி அல்ஹாஜ் எம். எச். எம். லாபிர் (கபூரி) (B.A.) PGDE<br>மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத்தலைவர்<br><br>மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி) (B.A.) (Cey.)<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **அஸ் ஸீறா வத்தாரீக்**<br>**(இஸ்லாமிய வரலாறு)**<br><br>இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரியது |
| பதிப்பாசிரியர் | : | அல்ஹாஜ் மௌலவி எம். எச். நூறுல் அமீன் (நத்வி) (B.A.) (Cey.)<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| வெளியீடு | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>இல. 180, T. B. ஜாயா மாவத்தை<br>கொழும்பு - 10. |
| பதிப்பு | : | அரசாங்க அச்சகத் திணைக்களம்<br>இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,<br>கொழும்பு - 08. |
| முதற்பதிப்பு | : | 2014 |
| பதிப்புரிமை | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| ISBN | | |

# மாண்புமிகு பிரதமர், புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் அவர்களது ஆசிச் செய்தி

இலங்கை சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் ஒரு தேசமாகும். சிறுபிராயம் முதல் பிள்ளைகளிடையே கலாசாரம், சகவாழ்வு, மானிடத்துவம் பற்றிய மனப்பாங்கை வளர்ப்பதன் ஊடாகவே தேசத்தையும் சமூகத்தையும் மதிக்கின்ற, சமய கலாசாரத்தை கௌரவிக்கின்ற, மனிதமாண்பை புரிந்து கொண்ட சமூகமொன்றை உருவாக்க முடியும். பரீட்சையை மையப்படுத்திய கல்வித் திட்டத்தின் மூலம் சிலவேளை தார்மீக பண்பாட்டு ரீதியான கல்வியை வழங்குவது கடினமாகலாம். இதனால் இலங்கையில் ஞாயிறு சமய பாடசாலைக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமய பிள்ளைகள் தத்தமது சமய ஸ்தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு சென்று சமயக் கல்வியைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமயக் கல்விப் போதனைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை வளப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள், சீருடை வழங்கல் மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைந்நூல், மாணவர்களுக்கான பாடநூல் என்பனவும் இலவசமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பௌத்த சமய பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும் ஏனைய சமயம் சார்ந்த பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அஹதிய்யா என்ற பெயரில் செயற்படும் இஸ்லாமிய சமய பாடசாலைகளுக்கு அவசியமான பாடத்திட்டத்தை தயார் செய்யும் வேலைத்திட்டத்தினை சிறப்பாக நிறைவு செய்துள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதே பிரகாரம் பாடநூல் தொகுதியொன்றை வெளியிட மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

சமயக் கல்விப் போதனையின் இலக்கை அடைவதில் ஆசிரியர் களுக்கான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாததாகும். மிக விரைவில் இது விடயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

எந்தவொரு மட்டத்திலாயினும் கற்றல், கற்பித்தல் செயற்பாடு வெற்றியளிப்பதற்கு உரிய பாடநூல்கள் அவசியம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இவ்வவசியத் தேவையை சரியாகப் புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய பாடத்திட்டத்திற்கமைவாக இரு பரீட்சைகளுக்குமான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்திருப்பது காலத்தின் தேவையாகும். சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் இதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதை செய்து முடிப்பதற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. மு. ஜயரத்ன**
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் பிரதமரும்
புத்த சாசனம் மற்றும்
மத அலுவல்கள் அமைச்சரும்

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# கௌரவ புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் பிரதியமைச்சரின் ஆசிச் செய்தி

பல்லின சமய, கலாசார விழுமியங்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டு மக்கள் மத்தியில், தார்மீக சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையில் வதியும் பிரதான நான்கு சமயத்தவர்களும் தத்தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மூலம் முதன் முறையாக இஸ்லாமிய சமய (அஹதிய்யா) பாடசாலை மாணவர்களுக் கான பாடத்திட்டத்தினையும் அப்பாடத்திட்டத்திற்கமைவாக பாடநூல் களையும் வெளியிடும் இச்சிறப்பான வேளையில் வாழ்த்துச் செய்தி யொன்றை வெளியிடக் கிடைத்தமையினை பெரும் நற்பேறாகக் கருதுகிறேன்.

நீண்டகாலமாக நிலவிவந்த குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு எமது அமைச்சின் ஊடாக பங்களிப்புச் செய்வது எமது கடமை என்பதோடு பல தசாப்தங்களாக இயங்கிவரும் அஹதிய்யா சமய பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமது சமய கல்விப்பணிகளை முன்கொண்டு செல்வதற்கு இது பேருதவியாக அமையும் என நம்புகிறேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலைத்திருப்பது அரசியல் பொருளாதார அபிவிருத்தியுடன் சமய, சமூக மட்டத்திலான அபிவிருத்தியும் இணைந்து தான் என உறுதியுடன் நம்பிக்கை பூண்டுள்ளேன். குறிப்பாக சமூக மட்டத்திலான ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதாயின் சமய, கலாசார துறைசார் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்படி சமய, சமூக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதில் அஹதிய்யா முதலான சமயப் பாடசாலைகள் ஆற்றும் பணி விலைமதிக்க முடியாததாகும்.

சிறு பராயம் முதல் பிள்ளைகளை சமய பின்னணியில் வாழப் பயிற்றுவிப்பதுபோல் அதற்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் ஒழுக்க விழுமியங்களால் போஷிக்கப்பட்ட இளைய தலைமுறையொன்று உருவாகுவதை எதிர்பார்க்க முடியும்.

எங்களைப் போல் பல்லின சமய, கலாசார சமூகமொன்று வாழும் நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மக்கள் தமது பிள்ளைகளுக்கு அவரவர்களது சமய அறிவையும் விளக்கத்தையும் வழங்குவதற்கு இதுபோன்ற சமய பாடசாலைகள் ஊடாக மேற் கொள்ளும் அறப்பணி மகத்தானதாகும்.

இம்மகத்தான பணியைச் செய்வதில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இதற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது அமைச்சின் நன்றியறிதலை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

**எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,**
பிரதியமைச்சர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரது ஆசிச் செய்தி

தார்மீக சமுதாயமொன்றை தோற்றுவிப்பதில் சமயக் கல்வி அதிமுக்கிய பங்காற்றுகிறது. பாலர் பருவம் முதல் பிள்ளைகளிடையே சமய விழுமியச் சிந்தனையை ஏற்படுத்த முடியுமாயின் நாட்டின் சமூக சூழலை நல்ல நிலைக்கு மாற்றுவது கஷ்டமாயிராது. யாவரிடத்திலும் நல்ல மனப்பாங்கு ஏற்படுவது அனுபவங்கள் ஊடேயாகும். சமயக்கல்வி பயனுள்ள அனுபவங்களை வழங்குவதற்கான சிறந்த ஊடகமாகும். பரீட்சையை மையப்படுத்திய பொதுக்கல்வியுடன் மாத்திரம் சமய அறிவைப் புகட்டுவது சிரமமான காரியமாகும். இதற்கு மாற்றீடாக இலங்கையில் ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் சமய பாடசாலைகள் முறை இத்துறையில் பெருமளவு வெற்றியை ஈட்டித்தந்துள்ளது.

பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ பிள்ளைகளிடையே சமய சூழலும் சமய அறிவும் விருத்தி செய்யப்படும் வகையில் ஒவ்வொரு சமயம் சார் பிள்ளைகளுக்குமாக வெவ்வேறான சமயப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. சமய பாடசாலைகளுக்கான பாடத்திட்டம், பாடநூல் என்பன தற்போதைக்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு அவசியப்படும் பயிற்சித்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் சீருடை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு முக்கிய குறைபாடாக விளங்கி வந்த பாடநூல்களை வழங்க ஏற்பாடு செய்கின்றமை முக்கிய அம்சமாகும். சகல சமய குழந்தைகளுக்கும் ஒரே விதமான வசதிகளை செய்து கொடுப்பது அரசின் கொள்கையாகும். இஸ்லாமிய சமய பாடசாலைகள் விடயத்தில், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடத்திட்டத்தை தயாரித்து சிறப்பாக வெளியிட்டு வைத்த இத்திணைக்களம், தேவையான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்தமை சமய கல்வித்துறையில் ஒரு திருப்பு முனையாகும். எந்தவொரு கல்வி மட்டத்திலும் பாடத்திட்டத்தின் உரிய பலாபலன்களை அடைவதில் பாடநூல்கள் முக்கிய பங்கு வகிப்பதை மறுக்க முடியாது. இவ்வவசியத் தேவையினை சரிவரப்புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆரம்ப நடவடிக்கையாக அஹதிய்யா (தஹம்) இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்

களையும், தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்களுடன் மொத்தம் 10 நூல்களை வெளியிட எடுத்துள்ள நடவடிக்கையினையிட்டு இத்திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

மேற்படி அறப்பணியில் ஈடுபட்டிருக்கும் திணைக்கள ஊழியர்கள், வளவாளர்கள், நூலாக்கக்குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளை சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

**எம். கே. பீ. திசாநாயக்க,**
செயலாளர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இன்றைய உலகு பயங்கர ஆன்மீக வறுமையிலும் வெறுமையிலும் வாடிக் கொண்டிருக்கிறது. உண்மையாக இன்றைய உலகின் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது ஆன்மீக வீழ்ச்சியும் அதனடியாகப் பிறந்துள்ள பண்பாட்டு வீழ்ச்சியுமாகும் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

சமய சார்பற்ற சிந்தனை, சடவாதம், உலகாயதம் முதலான மதவிரோத கொள்கைகளின் செல்வாக்கின் காரணமாகவே ஆன்மீக, தார்மீக, ஒழுக்க பண்பாட்டுத் துறைகளில் பயங்கர பின்னடைவை இன்று நாம் கண்டு வருகிறோம். அறிவைப் பூஜிக்கின்ற சமூகம் ஆன்மீகத்தைப் புறக்கணிக்கிறது. உடலைக் கவனிக்கின்ற சமூகம் உள்ளத்தை மறந்துவிடுகின்றது. இம்மையை நேசிக்கின்ற சமூகம் மறுமையை நிராகரிக்கின்றது.

சமகால உலகின் இத்தகைய சமய விரோத சவால்களுக்கு முகங்கொடுத்து மனித சமூகத்தை சன்மார்க்க அடிப்படையில், ஆன்மீகப் பாதையில் வழிநடாத்த வல்ல அறிவையும், புலமையையும், ஆளுமையையும் உருவாக்குகின்ற பயிற்சிப் பாசறைகளான அரபுக் கல்லூரிகளோடு இணைந்து அஹதிய்யா பாடசாலைகளும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஹதிய்யா பாடசாலைகள் இலங்கையில் 50 வருடங்களுக்கும் மேலாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அஹதிய்யா பாடசாலைகளை சிறந்த முறையில் வழிநடத்துவதற்காக திணைக்களம் அதற்கான முழுமையான பாடத்திட்டத்தை வெளியிட்டு வழிநடாத்தி வந்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

இந்த வகையில் இப்பாடத்திட்டங்கள் மூலம் பூரண பயனைப் பெற முடியாது என்பதை அறிந்த திணைக்களம், முதற்கட்டமாக இப்பாடத்திட்டங்களுக்கு அமைவாக இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா; அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச்சான்றிதழ் பரீட்சை மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த பணியை சிறப்பாக மேற்கொண்ட புத்தக

ஆக்கக்குழுவுக்கும் தொகுப்பாசிரியர் குழு மற்றும் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்ட எமது திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் அவர்களுக்கும் மற்றும் இப்பணியில் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இப்பணியில் ஈடுபட்டவர்களது உழைப்பையும், அவர்களது முயற்சி யையும் அல்லாஹ் அங்கீகரித்துச் சிறந்த நற்கூலிகளை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல்,**
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்) ஆசிச் செய்தி

இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறியாகும். முஸ்லிமாக வாழ்வதாயின் அல்குர்ஆன், அல்ஹதீஸ் தொடர்பான தெளிவான அறிவைப் பெறுவது அவசியமாகும். "அறிவைத்தேடுவது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலார் மீதும் கடமையாகும்." என்ற கருத்தில் வரும் நபிமொழியும் "அல்குர்ஆனைக் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்" என்ற கருத்தில் வரும் நபிமொழியும் இதனை வலியுறுத்துகின்றன. இலங்கையில் இஸ்லாத்தை பாடசாலைப் பருவத்தில் கற்றுக்கொள்வதற்கான ஒரு சிறந்த ஊடகமாக அஹதிய்யா பாடசாலைகள் காணப்படுகின்றன. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளின் வளர்ச்சியில் போற்றத்தக்க சேவைகளை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததாகும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளுக்கு வருடாந்தம் வழங்கி வரும் சேவைகள் அஹதிய்யாவின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமைகின்றன.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையான 14 வருடங்களுக்குரிய தேசிய அஹதிய்யாப் பாடத்திட்டம் தயாரித்தமை இலங்கை அரசாங்க பரீட்சை திணைக்களம் மூலம் அஹதிய்யா இறுதி சான்றிதழ் பரீட்சை, இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) சான்றிதழ் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளையும் நடாத்த ஏற்பாடு செய்தமை, மாவட்ட ரீதியாக அஹதிய்யா ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் நடாத்தியமை, அஹதிய்யா ஆசிரியர்களுக்கான வருடாந்த நூல் கொள்வனவுக் கொடுப்பனவு வழங்கியமையும், வருடாந்தம் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கியமையும் என்பன அப்பணிகளில் சிலவாகும்.

இவற்றில் அஹதிய்யா பாடசாலைகளது வரலாற்றில் தேசிய பாடத்திட்டத்திற்கு அமைவாக பாடநூல்கள் வெளியிடப்படுவது முக்கியதொரு மைல்கல்லாகும். அஹதிய்யா சமூகத்தின் ஏகோபித்த



3-CM14795

கோரிக்கையின் முதற்கட்டம் இன்று நிறைவேறுவதையிட்டு உளப் பூரிப்படைகிறேன். முதற் கட்டமாக, அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை வகுப்புகளுக்குரிய அகீதா, மஸாதிருஷ்ஷரீஆ, பிக்குஹுல் இஸ்லாம், ஸீரா வத்தாரீக், அஹ்லாக் ஆகிய நான்கு பாடங்களுக்கும் தீனிய்யாத் பரீட்சைக்குரிய மேற்படி நான்கு பாடங்களுடன் அரபு மொழியும் இஸ்லாமிய இலக்கியமும் ஆகிய ஆறு பாடங்களுக்குமாக பத்து பாட நூல்கள் வெளிவருகின்றமை சிறப்பித்துக் கூறவேண்டிய தொன்றாகும். புதிய பணிப்பாளர் தலைமையில் இப்பணிகள் யாவும் தொடரும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

மேற்படி பணிகளை முன்கொண்டு செல்வதில் ஆரம்பம் முதல் இன்றுவரை அயராது உழைத்துவரும் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள், தொகுப்பாசிரியர்கள் ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்களாவர். அல்லாஹ் அவர்களது முயற்சிகளை அங்கீகரித்துக் கொள்வானாக. இப்பணியில் இவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கு கிடைத்தமையை அல்லாஹ் எனக்கு வழங்கிய ஒரு மகத்தான சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன்.

இதற்காக என்னால் ஆன பணிகளைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

அல்லாஹ்வின் அருள் வேண்டி அனைவருக்கும் பிரார்த்திக்கிறேன்.

ஆமீன் !

**அஷ்ஷெய்க் Y. L. M. நவவி**,
உயர் கல்வியமைச்சின்
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
(முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்)

உயர் கல்வியமைச்சு,
இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

# மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத் தலைவரின் ஆசிச் செய்தி

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அஹதிய்யாப் பாடசாலைகள் மூலம் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் பல நன்மைகளையடைந்து வந்துள்ளது. இருப்பினும் எதிர்பார்க்கப்படும் முறையான பயனை சமூகம் அடைவதற்கு முக்கிய சில தடைகள் இருந்து வந்துள்ளன. அவற்றுள் ஒன்று பாடநூல் இல்லாமை, மற்றையது தேவையான ஆசிரிய வளம் கிடைக்காமை எனலாம்.

பெரும்பாலும் அஹதிய்யாப் பாடசாலைகளில் க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது க.பொத.(உயர் தரம்) வரை கற்றவர்களே கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில இடங்களிலேயே உலமாக்களும் பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களும் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அஹதிய்யா பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்தும் வகையிலேயே இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியைக் கற்றுத் தேர்வதன் மூலம் அவர்கள் சன்மார்க்க போதனாசிரியர்களுக்கான தராதரத்தைப் பெறுகின்றனர். இச்சான்றிதழ் உடையவர்களை சமய ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தினை அரசு முன் கொண்டுள்ளது. எனவே இப்பாடத்திட்டம் முறையாக கற்பிக்கப்படுவதன் மூலம் அஹதிய்யாக்கள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும். அத்தோடு ஆசிரியர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தவும் முடியும். மேலும் இவர்களிடம் கற்கும் மாணவர்களது அறிவுமட்டம் உயர்வடையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கரிசனை கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு செயற்பட்டுவருகின்றமை பாராட்டுக்குரியது. இதற்கு முன்னோடியாக விளங்கிய முன்னாள் பணிப்பாளர் அஷ்ஷெய்க Y. L. M. நவவி அவர்களது பங்களிப்பு மெச்சத்தக்கதாகும். அவரது வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இதற்கு உறுதுணையாக விளங்கின. அவருக்கு பக்கபலமாக விளங்கிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. நூறுல் அமீன் அவர்களது அயராத முயற்சியும் ஈடுபாடும் இங்கு குறிப்பிடத்தக்கவை. அஹதிய்யாப்

பாடசாலைகள் மத்திய சம்மேளனம் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இந்தப் பங்களிப்பினை நன்றியுணர்வோடு நோக்குகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை பூராவும் எமது இளைய தலை முறையினரான பாடசாலைப் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவையும் உணர்வையும் ஊட்டி தூய இஸ்லாமிய ஷரிஆவின் வழியில் நடாத்தும் பொறுப்பையேற்று செயற்பட்டு வரும் அஹதிய்யாவின் முன்னோடிகள், அதன் தொண்டர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்கள் என்பதை கூறவிரும்புகிறோம்.

அஹதிய்யாவின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.அப்துல் அஸீஸ் அவர்களைத் தொடர்ந்து எம்மோடு பணியாற்றியாற்றுகின்ற தலைவர்கள், நிருவாகிகள் யாவருக்கும் இவ்விஸ்தாபனத்தை வழிநடாத்திச் செல்வதற்கான மனோபலத்தையும் உடற்சுகத்தையும் நல்க வேண்டுமென மத்திய அஹதிய்யா சம்மேளனம் பிரார்த்திக் கின்றோம்.

மத்திய அஹதிய்யா சம்மேளனம் 1988 ஆம் ஆண்டு பொதுப் பாடத்திட்டத்தை வகுத்தது, இதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியாக 2003 ஆம் ஆண்டு பொதுப்பாடத்திட்டத்தனை அறிமுகஞ் செய்தது, 2005 ஆம் ஆண்டு முதல் தேசிய மட்டத்தில் அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சைகள் இடம் பெற்றாலும் பரீட்சைகளுக்கான பாடநூல்கள் எதுவும் இல்லா திருந்தமை பெரும் குறைபாடாக இருந்தது. இதனால் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது எண்ணிக்கையும் குறைவாக இருந்ததுடன் விண்ணப்பித்தோருள் பரீட்சைக்குத் தோற்றாமலிருப்போரின் எண்ணிக்கையும் கணிசமாயிருந்தது.

மேற்படி குறைபாட்டை முன்னாள் முஸ்லிம் சமய, பண்பாட்டலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி அவர்களிடம் எடுத்துக்கூறியபோது அவர் தேவையான நூல்களைத் தயாரித்து வெளியிட முன்வந்தார். அவர் விட்ட இடத்தில் இருந்து இப்பணியை சிறப்பாக தொடர்கின்ற பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் அவர்களின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது.

இப்பணியில் ஒத்துழைத்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. அவர்களின் பணியை அங்கீகரிப்பானாக.

**மௌலவி எம். எச். எம். லாபிர்,**
மத்திய அஹதிய்யா சம்மேளனம்,
பாடத்திட்டக் குழுத்தலைவர்.

# பதிப்புரை

## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும்! அல்ஹம்துலில்லாஹ் !

“(எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை.”(அல்குர்ஆன் - 51 : 56)

இவ்வுலகில் மானிட வர்க்கம் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை அடிச்சுவடுகளை முறையாக பின்பற்றி முஸ்லிமாக வாழ்ந்து மரணிப்பதே யாகும். அல்லாஹ்வின் அடியார்கள் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஆத்மீக சிந்தனையுடன் தனது வாழ்வை இபாதத்துடன் இணைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கு பின்வருமாறு சான்று பகர்கின்றது : "இவ்வுலகத்தில் அல்லாஹ் ஒருவனுக்கு நன்மையை நாடினால் அவனுக்கு மார்க்கத்தில் தெளிவான விளக்கத்தை வழங்குகிறான்." (அல்ஹதீஸ்)

மேற்படி இறைவசனத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைக்கும் ஏற்ப மார்க்கத்துடன் தொடர்புடையவனாக வாழ்வது கட்டாயக் கடமையாகும். இவ்வாறாக ஒரு முஸ்லிம் இறையச்சம், பொறுமை, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், நற்பண்புகளுடன் வாழ்வதற்கு இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை பெற்றுக் கொள்வது இன்றியமையாத தாகும். மார்க்கக் கல்வியை பெறுவது உண்மையான மு.ஃ.மினாக வாழ்வதற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நல்லொழுக்கமுடைய ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இன்று நாடளாவியரீதியில் பல இஸ்லாமிய ஷரீஆ கல்வி நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் தங்களாலான பங்களிப்புகளைச் செய்து வருவது உண்மையில் போற்றத்தக்கதாகும்.

மேற்படி நோக்கத்தை மையமாகக் கொண்டு சுமார் ஆறு தசாப்தங்களுக்கு மேல் அஹதிய்யா கல்வியை மேம்படுத்துவதற்காக திட்டங்களை வகுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் மத்திய அஹதிய்யா சம்மேளன தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பணி என்றும் பாராட்டத்தக்கதாகும்.

அத்துடன் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக அரபுக் கல்லூரிகள், அஹதிய்யா பாடசாலைகள், குர்ஆன் மத்ரஸாக்கள் போன்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதிலும், பௌதிக வளங்களை விரிவுபடுத்துவதிலும் இத்திணைக்களம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவற்றுள் அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பல திட்டங்களை வகுத்து செயற்பட்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் முதல் பணியாக அஹதிய்யா மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டத்தினை 2003 ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்தமையும் இப்பாடத்திட்டத்திற்கமைவாக 2005 ஆம் ஆண்டு அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சையை நடாத்துவதற்கு இத்திணைக்களம் நிதியுதவி வழங்கி தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 2008 ஆம் ஆண்டு இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சையையும் பரீட்சைத்திணக்களத்தின் மூலமாக நடாத்துவதற்கு சகல நடவடிக்கை களையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. மேலும் 2008 ஆம் ஆண்டு அஹதிய்யா பாலர் வகுப்பு முதல் இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சை வரைக்குமான பாடத்திட்டங்களை வகுத்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இத்திணைக்களம் வருடந்தோறும் அஹதிய்யா ஆசிரிய ஆசிரியைகளுக்கான சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவு வழங்குதல்; கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றையும் நடை முறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் பாடப் புத்தகங்கள் இல்லாததன் காரணமாக பரீட்சைக்கு தோற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்திற்கொண்டு பரீட்சைகளுக்கு ஏற்றவிதமாக பாடப்புத்தகங்களை உருவாக்கும் பணியை எமது திணைக்களம் மேற்கொண்டது.

மேற்படி நூல்களை வெளியிடுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் முன்னோடியாக விளங்கி, ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய முன்னாள் பணிப்பாளர்களான அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களுக்கும் அஷ்ஷெய்க் M. I. அமீர் அவர்களுக்கும் இந்நூல் எவ்வித தங்கு தடையுமின்றி துரிதமாக வெளிவர காரணமாக இருந்த தற்போதைய பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. M. ஸமீல் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இப்பாடப் புத்தகத்தை வடிவமைத்து பிரசுரிப்பதற்கு எல்லா வகையிலும் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி மற்றும் பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சீ. அகார் முஹம்மத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இப்பணியை செவ்வனே முடிப்பதற்கு ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் வழங்கியவர்களையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

இப்புத்தகம் நூலுருவில் வெளிவருவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியில் பாடவிதானங்களுக்கேற்ப பாடங்களை எழுதி வடிவமைத்து தந்த எழுத்தாளர் குழு அங்கத்தவர்களான பேராதனை பல்கலைக் கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் எம். எம். எம். ஸாபிர், திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் ஆசிரியர் எம். எஸ். எம். பூசரி, கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் முகாமையாளர் அஷ்ஷெய்க் ஏ. பி. மிஹ்லார் (நளீமி),

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் ஜவ்பர் ஹுஸைன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம். என். கபூர்டீன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் யு. எல். ஏ. அமீர், ஆசிரிய ஆலோசகர் அஷ்ஷெய்க் நவாஸ் சனூர்டீன் ஆகியோருக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இப்புத்தகத்தினை செம்மைப்படுத்தி, வடிவமைத்து தந்தவர்களான முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல், சிரேஷ்ட விரிவுரையாளரும் ஒலுவில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதியுமான கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி) மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளர், அல்ஹாஜ் எம். எச். எம் நாளிர், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயல்திட்ட அதிகாரி அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி (நளீமி) ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை நூலாக்குவதற்கு ஆரம்பம் முதல் இன்று வரை என்னுடன் இணைப்பாளராக செயலாற்றிய மௌலவி எம். எச். எம். லாபீர் (கபூரி) மற்றும் அல்முபாரக் தேசிய பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி எம். டீ. எஸ். றுவைதா அவர்களுக்கும் இப்புத்தகம் நூல் வடிவில் வெளிவருவதற்கு பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம். ஜே. எம். அறபாத் கரீம் (நளீமி), அஷ்ஷெய்க் எம். ஏ. எம். அஸ்கர் (நளீமி) அவர்களுக்கும் மேலும் ஒத்துழைப்பு நல்கிய எமது திணைக்கள அதிகாரிகளான அஷ்ஷெய்க் எம். ஐ. முனீர் (நளீமி), திருமதி எம். ஐ. ரஸீனா, அல்ஹாஜ் ஏ. ஏ. எம். அஸ்ரின், திருமதி எம். வை. எப். இன்சிபா, மற்றும் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய திணைக்கள அனைத்து அதிகாரிகளுக்கும், சிற்றூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை கணினி வடிவமைத்துத் தந்த திருமதி எம். எப். ஷாமிலா, திருமதி எம். எச். எஸ். பாத்திமா மஹ்ஸனி, திருமதி எம். எச். எப். ரிஸானா ஆகியோருக்கும் மற்றும் இப்புத்தகத்தின் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த ஜனாப் அஸார் வஸீர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கணினிப் பிரிவில் கடமையாற்றும் திருமதி ஏ. என். ஹிதாயா அவர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடநூல் சம்பந்தமாக ஏதேனும் ஆலோசனைகளும் கருத்துக் களும் இருப்பின் மறுபதிப்பில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனவே இப்பணியில் ஈடுபட்ட சகலரதும் முயற்சியை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன் உரிய பயனை அடைவதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக!

ஆமீன் !!

**மௌலவி எம். எச். நூறுல் அமீன்**,
உதவிப்பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

## உள்ளடக்கம்


பக்கம்

**அருச் செய்திகள்**
**பதிப்புரை**
**நூல் அறிமுகம்**

01. **அய்யாமுல் ஜாஹிலிய்யா** 01 - 18
* காலமும் கருத்தும்
* இஸ்லாத்துக்கு முந்திய அறபு நாடு
- அறேபியாவின் புவியியல் அமைவு
- அறேபியாவின் பொருளாதார நிலை
- ஜாஹிலிய்யக் கால சமூக நிலை
- கலாசார நிலையும் இலக்கியத்தின் செல்வாக்கும்
- ஜாஹிலிய்ய சமூக பெண்கள் நிலை
- ஜாஹிலிய்ய சமூக திருமண முறைகள்
* ஜாஹிலிய்யக் கால சமய நம்பிக்கைகள்
- நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும்
- அறேபியரின் பண்புகள்
- ஜாஹிலிய்யக் கால அரசியல் நிலை

02. **நுபுவ்வத்துக்கு முன் நபியவர்களின் வாழ்வு** 19 - 27
* குடும்பமும் பரம்பரையும்
- நபியவர்களின் பரம்பரை அட்டவணை, பிறப்பு, இரஹாஸாத்
- தாயாரின் மரணம்
- இளமை, ஹர்புல் பிஜார், ஹில்புல் புழூல், ஜீவனோபாயம்
- நபி (ஸல்) அவர்களின் நற்குணங்கள்
- வாலிபமும் திருமணமும்
- க.்.பா புனர்நிர்மாணம்

பக்கம்


03. **நுபுவ்வத்துக்கு பிந்திய மக்கா வாழ்வு** 28 - 51

* நுபுவ்வத்தும் முதல் வஹியும்
  - இஸ்லாமிய பிரச்சாரம்
  - பகிரங்க அழைப்பு
  - பிரசாரத்தின் விளைவுகள்
  - அபிஸீனிய ஹிஜ்றத்
  - தாயிப் சம்பவம்
  - ஷி∴பு அபீதாலிப் பகிஷ்கரிப்பு
* அகபா உடன்படிக்கை
  - அரசியற் பின்னணி
* மி∴றாஜ்
* நபி (ஸல்) அவர்களின் மதீனா ஹிஜ்றத்
  - ஹிஜ்றத் முக்கியத்துவம்
  - ஹிஜ்றத்துக்கான காரணங்கள்
  - ஹிஜ்றத்தின் விளைவுகள்

04. **மதீனா வாழ்க்கை** 52 - 70

  - முஹாஜிர் அன்ஸார் உறவுகள்
  - மஸ்ஜிதுன் நபவீயின் பங்கு
* மதீனாவில் இஸ்லாத்தின் வளர்ச்சி
  - முக்கிய நிகழ்வுகள் (யுத்தங்கள்)
  - உடன்படிக்கைகள் (மதீனா சாசனம், ஹுதைபிய்யா உடன்படிக்கை)
  - மக்கா வெற்றி
  - இறுதி ஹஜ்
  - நபிகளாரின் இறுதிப் பேருரையின் சுருக்கம்
  - ஹிஜ்றத்தின் விளைவுகள்

பக்கம்


05. **ஸஹாபாக்களின் சிறப்புக்களும் முன்மாதிரிகளும்** 71 - 103

* அல் அஷறதுல் முபஷ்ஷறாஹ் வாழ்வும் முன்மாதிரிகளும்
  - குலபாஉர் றாஷிதூன் தவிர்ந்த ஏனைய அறுவர்
* உம்மஹாதுல் மூமினீன் வாழ்வும் முன்மாதிரிகளும்
* அல் குலபாஉர் றாஷிதூன் பணிகளும் முன்மாதிரிகளும்

06. **உமய்ய, அப்பாஸிய ஆட்சிகள்** 104 - 139

* உமய்யாக்கள் (ஹிஜ்ரி 41-132)
  - ஆட்சியின் தோற்றமும் ஆட்சியைக் கையேற்றலும்
  - உமய்யக் கால கலீபாக்கள்
  - நிர்வாக அமைப்பு
* அப்பாஸியர்
  - அப்பாஸியர் எழுச்சியும் முக்கிய கலீபாக்களும்
* பைத்துல் முகத்தஸ் வரலாறு
  - தோற்றமும் அமைவிடமும்
  - வளர்ச்சிக் கால கட்டங்கள்

07. **இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம்** 140 - 154

* அறிமுகம்
* இலங்கையில் முஸ்லிம்களின் பரவல்
* முஸ்லிம்களின் சமூக பண்பாட்டுப் பங்களிப்புகள்
  - பொருளியல் பங்களிப்புகள்
  - அரசியல் பங்களிப்புகள்
  - தேசிய பாதுகாப்புப் பங்களிப்புகள்
  - மருத்துவத்துறைப் பங்களிப்புகள்
  - கலாசார பண்பாட்டுப் பங்களிப்புகள்

பக்கம்

08. **முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்புக்கள்** 155 - 175
* மருத்துவம் (முக்கிய அறிஞர்கள்)
* வானவியல் (ஈடுபட்டமைக்கான காரணமும் வளர்ச்சியும்)
* புவியியல் (காரணிகளும் துறைசார் அறிஞர்களும்)
* வரலாறு
* விஞ்ஞானம்

09. **துறைசார் அறிஞர்களின் பங்களிப்பு** 176 - 191
* இமாம் அபூஹனீபா (றஹ்)
* இமாம் மாலிக் இப்னு அனஸ் (றஹ்)
* இமாம் ஷாபஈ (றஹ்)
* இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் (றஹ்)
* இமாம் புகாரீ (றஹ்)
* இமாம் முஸ்லிம் (றஹ்)
* இமாம் அபூதாவூத் (றஹ்)
* இமாம் திர்மதீ (றஹ்)
* இமாம் நஸஈ (றஹ்)
* இமாம் இப்னு மாஜஹ் (றஹ்)
* இமாம் கஸ்ஸாலீ (றஹ்)
* அப்துல் காதிர் ஜீலானீ (றஹ்)
* அபுல் ஹஸன் அஷ்ஷாதுலீ (றஹ்)

# அஸ்ஸீறா வத்தாரீக் (இஸ்லாமிய வரலாறு)

## நூல் அறிமுகம்

இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் என்பன ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாதவாறு இணைந்துள்ளன. இந்நூல் இஸ்லாமிய நாகரிகம், வரலாறு, இத்துறைக்கு முஸ்லிம் அறிஞர்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் என்ற பிரதான அம்சங்களை உள்ளடக்கியதாக எழுதப்பட்டுள்ளது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அஹதிய்யா மாணவர் களுக்கான இறுதிப்பரீட்சை, தீனிய்யாத் பரீட்சை முதலியவைகளை மையப்படுத்தி நடாத்தப்படும் அஸ்ஸீரா வத்தாரீக் என்ற பாடத்துக்குத் தயாராகும் பரீட்சார்த்திகளுக்கான ஒரு பாடநூலாக இந்நூல் அமையப் பெற்றுள்ளது.

பாடத்திட்டத்தின் பிரகாரம் இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அரேபிய வரலாறு தொடக்கம் அறிவியல் துறைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு, சமகால முஸ்லிம் உலகு என்ற தலைப்புக்களுக்கிடையிலானதொரு பாடப்பரப்பை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்து காணப்படுகிறது. பரீட்சார்த்திகளின் தேவைக்கேற்ப இதன் தலைப்புக்களின் உள்ளடக்கம் ஆழ அகல, செறிவு கூடி குறைந்து காணப்படுகின்றது. இது ஒரு குறித்த மட்டத்தினரை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் இந்நிலைக்கு குறைந்த, கூடிய தரத்தினருக்கும் இத்துறை சார்ந்ததொரு அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு மிகப்பொருத்தமானதொரு நூலாக உள்ளது.

துறை சார்ந்த அனுபவமும் அறிவும் பெற்றவர்கள் துணை கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளமையானது இந்நூலின் தன்மை வலுப்பெறு வதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவி யினால் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு இந்நூலில் அமையப்பெற்றுள்ள உள்ளடக்கங்கள் பொருத்தமாகவும் அதற்கு வெளியில் செல்லாதும் எழுதப்பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

நூலாக்கக் குழுவின் சார்பாக

**எம். ஐ. எம். அமீன்,**
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனை பல்கலைக்கழகம்.

# 01. அய்யாமுல் ஜாஹிலிய்யா

## காலமும் கருத்தும்

ஜாஹிலிய்யா எனும் பதம், ஜஹ்ல் எனும் வேர்ச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இப்பதம் அறியாமை, அடக்கமின்மை, மடமை, சத்தியத்தை அலட்சியம் செய்தல், வம்புத்தனம், அடாவடித்தனம், காட்டுமிராண்டித்தனம், அநாகரிகம் முதலான கருத்துக்களைக் கொண்ட, பொருட்செறிவு மிக்க ஒரு சொல்லாகும். கிறிஸ்தவ மதத்தின் தோற்றத்திற்கும் இஸ்லாத்தின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் வாழ்ந்த அறபு மக்கள் இத்தனை பண்புகளுக்கும் இலக்கணமாக வாழ்ந்ததால் இக்காலப்பிரிவு அரபு மொழியில் ஜாஹிலிய்யாக் காலம் என அழைக்கப்படுகின்றது.

இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்தில், குறிப்பாக நபி ஈஸா (அலை) அவர்களின் வருகைக்குப் பின்னர் அரேபியரிடையே இறைத்தூதர்களின் வழிகாட்டல்கள் கிடைக்காமல் போனமையால் அந்த மக்களின் வாழ்வியல் முறைமை ஜஹ்ல் நிறைந்ததாக அமைந்திருந்தது. இதனால்தான், இக்காலத்தை ஜாஹிலிய்யாக் காலம் என வரலாற்றாசிரியர்கள் அழைக்கிறார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் வழங்கப்படுவதற்கு முற்பட்ட ஒன்றரை நூற்றாண்டு காலம் ஜாஹிலிய்யாக் காலமாகும். "நபியவர்கள் பிறந்தபோதும் அதற்கு சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரும் நிலவிய காலப் பகுதியை இது குறிக்கிறது" என வரலாற்றாசிரியர் Hitti தனது History of the Arabs எனும் நூலில் ஜாஹிலிய்யாக் காலத்தை வரையறை செய்கிறார்.

இக்காலப் பிரிவில் தொழில்நுட்பம், கட்டடக் கலை என்பன ஓரளவு அறிமுகமாகியிருந்தன. மொழிப்புலமையும் கவிதைத் தேர்ச்சியும் பாராட்டத்தக்களவு வளர்ச்சி கண்டிருந்தன. ஆகவே "ஜாஹிலிய்யாக் காலம்" என்பதை அறியாமைக் காலம் அல்லது இருண்ட காலம் எனும் பொருள்களில் மட்டும் பயன்படுத்துவது பிழையானதாகவே அமையும். மாற்றமாக மேற்குறித்த அதன் பரந்த பொருளில் அது பயன்படுத்தப்படுவதே பொருத்தமானதாகும்.

> ஜாஹிலிய்யாக் காலத்தில் உயர் பண்பாடுகளோ சீரிய சிந்தனைகளோ விழுமிய வாழ்க்கைப் போக்குகளோ இல்லாது அநாகரிகப் பழக்க வழக்கங்களில் மக்கள் மூழ்கியிருந்தனர், "மனிதர்களின் கரங்கள் தேடிக்கொண்ட தீய செயல்கள் காரணமாக தரையிலும் கடலிலும் குழப்பங்கள் தோன்றலாயிற்று." (30 : 01) என அல்-குர்ஆன் குறிப்பிடுவது இக்காலப் பகுதிக்கு மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது.

## இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாடு

### அரேபியாவின் புவியியல் அமைவு

அரபு நாடு, ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ள ஒரு தீபகற்பமாகும். அப்போதைய அதன் எல்லைகள் பின்வரும் வகையில் அமைந்திருந்தன.

1. வடக்கு எல்லை - ஸிரியாப் பாலைவனமும் இராக்கின் ஒரு பகுதியும்
2. தெற்கு எல்லை - இந்து சமுத்திரமும் அரபுக்கடலும்
3. கிழக்கு எல்லை - பாரசீக வளைகுடா, யூப்ரடீஸ், தைகிரீஸ் நதிகள்
4. மேற்கு எல்லை - செங்கடல், ஸினாய்ப் பாலைவனம்

அரபு நாடு புவியியல், அடிப்படையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததோர் இடத்தில் அமையப்பெற்றுள்ளது. ஒரு பக்கம் பெரியதொரு பாலை நிலத்தாலும் ஏனைய மூன்று பக்கங்களும் கடலாலும் சூழப்பட்டுக் காணப்படுகின்றது. இக்குடா நாட்டுக்கு மிக அண்மையில் ரோம், பாரசீகம் என்ற இரு பேரரசுகள் காணப்பட்டன. ஆயினும் அரேபியாவின் வளம் குன்றிய நிலை காரணமாக அந்நிய அரசுகள் அதன்மீது ஆதிக்கம் செலுத்துவதில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை.

அரேபியா பிரதான மூன்று கண்டங்களை இணைக்கும் ஒரு மையமாகவும் விளங்குகிறது. அதன் வட மேற்குத் திசையால் ஆபிரிக்காக் கண்டத்தினுள்ளும் வட கிழக்குத் திசையால் ஐரோப்பாக் கண்டத்தினுள்ளும் பிரவேசிக்கக் கூடியதாக இருக்க, கிழக்குத் திசை ஆசியப் பிரதேசங்களைத் தொடர்பு படுத்துகின்றது. மட்டுமன்றி முப்பெரும் கண்டங்களோடு கடல் மார்க்கமாகவும் அது இணைக்கப்படுகின்றது. இதனால் அரேபியாவின் வடக்கு எல்லையைத் தவிர்ந்த ஏனைய கரையோரப்பகுதிகள் அனைத்தும் மக்கள் தொடர்புக்கு வசதியாகக் காணப்பட்டன.

உலகளாவிய ரீதியில் “ரிஸாலத்'' எனும் இறைத்தூது அருளப்படுவதற்குரிய இடமாக அரபு நாடு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இவ்வாறான அதன் புவியியல் அமைவும் முக்கியமான ஒரு காரணியாக அமைந்தது.

### மாகாணங்கள்

அக்கால அரேபியா ஐந்து பெரும் மாகாணங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

**1. ஹிஜாஸ் மாகாணம்**

ஹிஜாஸ் அரேபியாவின் வட பகுதியில் இருக்கும் ஒரு மாகாணமாகும். இம்மாகாணத்தில் திஹாமா என்பது ஒரு மாவட்டமாகும். மக்கா, மதீனா ஆகிய பிரதான நகரங்கள் இங்குதான் அமைந்துள்ளன. பூமியில் முதன் முதலில் நிர்மாணிக்கப்பட்ட க.்.பாவும், மக்காவிலேயே அமைந்துள்ளது. அந்நகருக்கு உம்முல் குரா (நகரங்களின் தாய்) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இஸ்லாத்துக்கு முன்பிருந்தே பிரசித்தி பெற்ற கீழைத்தேய உரோம சாம்ராஜ்யத்துக்கும் தென்-கிழக்காசிய நாடுகளுக்குமிடையே நடைபெற்ற வணிகத்தில் முக்கிய தங்குமிடங்களில் ஒன்றாக அந்நகர் இருந்து வந்தது. மதினா, தாயிப் எனும் இரண்டும் அதன் மற்றிரு முக்கிய நகர்களாகும்.

**2. நஜ்த் மாகாணம்**

அரேபியாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள இப்பகுதி நில, நீர் வளங்களைக் கொண்ட செழிப்பு மிக்க ஒரு பிரதேசமாகும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 4000 அடி உயரத்தில் அமைந்திருக்கும் இப்பகுதியின் மூன்று எல்லைகளில் மணல் வெளிகளே அமைந்துள்ளன. இதன் வட புலத்தில் ஸிரியாப் பாலைவனமும் வடகிழக்கில் இராக் பாலைவனமும் காணப்படுகின்றன. கிழக்கே ஹிஜாஸின் மலைத் தொடரிலிருந்து பாரசீகக் குடாவிலுள்ள பஹ்ரைன், அல்-அஹ்ஸ் பாலைவனம் வரை நீண்டிருக்கும் இம்மாகாணம் பாலைவனங்களும் மலைக் கணவாய்களும் நிறைந்த பீடபூமியாகும். இடையிடையே பரவலாகக் காணப்படும் பாலைவனச் சோலைகள் பாதுகாப்பிடங்களைப் போன்று அமைந்துள்ளன. இங்குதான் யமாமா, ரியாத் போன்ற நகரங்கள் கணப்படுகின்றன.

**3. உம்மான் மாகாணம்**

இது இந்து சமுத்திரத்தின் கிளையான உம்மான் குடாக் கரையில் அமைந்துள்ளது. இதற்குக் கிழக்கே உம்மான் குடாவும் வடக்கே பஹ்ரைனும் மேற்கே தஹ்னாப் பாலைவனமும் தெற்கே ஹழ்ரமௌத் மாகாணமும் எல்லைகளாய் அமைந்துள்ளன. மஸ்கத் என்பது இம்மாகாணத்தின் தலை நகராகும். இப்பகுதியின் கடற்கரைப் பிரதேசம் செழிப்பான நிலவளம் பொருந்தியது. தற்காலத்தில் தனி ஒரு நாடாக விளங்கும் இப்பிரதேசத்தில் மலைகளும் குன்றுகளும் நிறைந்து காணப்படுகின்றன. மலைகளில் இரும்பு, செம்பு, ஈயம், கந்தகம் முதலான தாதுப்பொருட்களும் சந்தனம், அகில் போன்ற வாசனைத் திரவியங்களும் பெருமளவில் உற்பத்தியாகின்றன.

**4. ஹழ்ரமௌத் மாகாணம்**

இது யெமன் மாகாணத்தின் கிழக்கேயுள்ள பகுதியாகும். முன்பு இப்பிரதேசம் யெமனின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. இம்மாகாணத்திற்குத் தெற்கிலும் கிழக்கிலும் இந்து சமுத்திரமும் மேற்கில் யெமனும் வடக்கில் உம்மானும் எல்லைகளாக அமைந்துள்ளன. அதிகமாக தேன் விளையும் இம்மாகாணத்தின் பெரும்பகுதி, மலைப்பாங்கானதாகவும் சிறு பகுதி மணற் பாங்கானதாகவும் காணப்படுகின்றன.

**5. யெமன் மாகாணம்**

அரேபியத் தீபகற்பத்தின் தென்-மேற்குப் பகுதியில் இம்மாகாணம் அமைந்துள்ளது. சில சமயங்களில் இதனையும் ஹிஜாஸையும் சேர்த்து திஹாமா என்றும் அழைப்பர். செல்வச் செழிப்புக்கும் வியாபாரச் சிறப்புக்கும் பெயர் பெற்ற இப்பிரதேசத்தின் தெற்கே இந்து சமுத்திரமும் மேற்கே செங்கடலும் வடக்கே ஹிஜாஸ், நஜ்த் மாகாணங்களும் கிழக்கே ஹழ்ரமௌத் மாகாணமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இங்கு விளையும் தங்கம், செம்பு, சாம்பிராணி முதலான பொருட்கள் வெளி நாட்டவரைக் கவர்ந்தன. இதனால் வெளி-நாடுகளிலிருந்து பெருந்தொகையான வர்த்தகர்கள் அரேபியாவுக்கு வருகை தந்தனர். இன்றும் இப்பகுதி அரேபியாவின் கவனத்தை ஈர்த்த பகுதியாகக் கருதப்படுகிறது. சிற்றாறுகளும் ஓடைகளும் இங்கு பெருமளவில் காணப்படுகின்றன. ஏடன் எனும் பிரசித்திபெற்ற நகர் அமைந்துள்ள இம்மாகாணத்தின் தலைநகராக அன்று முதல் இன்று வரை ஸன்-ஆ விளங்கி வருகின்றது.

அரபுத் தீபகற்பத்தை புவியியல் அடிப்படையில் வட அரேபியா, தென் அரேபியா என இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

**ஜாஹிலிய்யாக் கால அரேபியாவின் பொருளாதார நிலை**

அயல் நாடுகளோடு ஒப்பிடுகையில் அக்காலத்தில் அரேபியா பொருளாதாரம் நலிவடைந்து காணப்பட்டது. அதன் வட பகுதி வர்த்தகத்திலும் தென் பகுதி விவசாயத்திலும் விருத்தி கண்டிருந்தது. அன்றைய அரேபியர் பின்வரும் மூன்று வழிகளில் பொருளீட்டினர்.

**1. வணிகம் :**

இது அரேபியரின் குறிப்பாக மக்கத்துக் குறைஷியரின் பிரதான தொழிலாக அமைந்திருந்தது. மக்கா நகர் வர்த்தகத்தின் கேந்திரஸ்தலமாக விளங்கியது. களவு, கொள்ளை போன்றவற்றிலிருந்து வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகக் கட்டணம் அறவிடும் முறையொன்றும் அங்கு இருந்து வந்தது. இவ்வாறான வர்த்தக நடவடிக்கைகளால் ஒரு சாரார் செல்வந்தராக வாழ்ந்தனர். அரேபியாவில் கொடூரமான வட்டி முறையொன்றும் நிலவியது. அங்கிருந்த யூதர்கள் இத்தொழிலைச் செய்து வந்தனர்.

**2. வேளாண்மை**

விலங்கு வேளாண்மை, பயிர்ச்செய்கை ஆகிய இரு வகை வேளாண்மையும் அரேபியாவில் மேற்கொள்ளப்பட்டன. விலங்கு வேளாண்மையில் மந்தை (ஆடு, ஒட்டகை) வளர்ப்பு பிரதானமானது. பயிர்ச்செய்கையில் பேரீச்சை உற்பத்தி முக்கிய இடம் வகிக்க உப உணவுச் செய்கைகளும் நடைபெற்றன.

அரேபியரின் பொருளாதாரத்தில் பேரீச்சையும் ஒட்டகையும் இரு கண்கள் போன்றதாகும். பேரீச்சை அவர்களின் பொருளாதாரத்தில் பாதியைப் பூர்த்தி செய்ய, ஒட்டகை மீதியைப் பூர்த்தி செய்தது. பேரீச்சை “பதவி” நாட்டுப்புறங்களின் பிரதான உணவாகும். அயன் மகரந்தச் சேர்க்கை மூலம் உற்பத்தியை அதிகரிக்கும் அளவு அவர்கள் பேரீச்சைச் செய்கையில் முன்னேற்ற மடைந்திருந்தனர்.

**(அ) விலங்கு வேளாண்மை**

ஒட்டகை அவர்களது பொருளாதாரத்தில் வகித்த பங்கை, அதற்கு அவர்கள் சூட்டியிருந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட பெயர்களைக் கொண்டு மதிப்பிட முடியும். "ஒட்டகை வாழுமிடங்களில்தான் அறேபியர்க்கு வாழ்வுண்டு” என்ற அரபுப் பழமொழி ஒட்டகையின் பொருளாதார முக்கியத்துவத்தை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. ஒட்டகை பற்றிப் பேராசிரியர் Phlip K Hitti, History of the Arabs என்ற தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

“ஒட்டகை” பதவி”களின் உணவு ; பயணத்தின் போது வாகனம், சுமை தாங்கி ; தனிவழியே நண்பன் ; சீதனச் சொத்து ; பாலைவனக் கப்பல் ; ஷெய்கின் செல்வம் ; நண்பருக்கு விருந்து ; அதன் தோல் அவர்களின் உடையாகவும் ; கூடாரத்தின் கூரையாகவும் பயன்பட்டது. சாணம் அடுப்பின் விறகு ; சிறு நீர் தலைக்கு எண்ணெய்; நோய்க்கு மருந்து” என்றெல்லாம் பயன்பட்டது.

அரேபியரின் பொருளாதாரச் சுழற்சியில் குதிரைக்கும் ஓர் இடம் இருந்தது. குதிரை கொள்ளையடிப்பதற்கு உபயோகிக்கப்பட்டது. கொள்ளையடிப்பதன் மூலம் ஒரு சாரார் பொருளீட்டி வந்தனர். அரேபியாவின் நஜ்த் பிரதேசம் குதிரை வளர்ப்புக்குப் பிரசித்தமானது. பணம் படைத்தோரின் சொத்தாகவே இது கருதப்பட்டது. வேட்டையாடவும் துரிதமாகப்பயணம் செல்லவும் இது பயன்படுத்தப்பட்டது. விளையாட்டுப் போட்டிகளிலும் போர்க்களங்களிலும் கூட குதிரை பெரும் பங்காற்றியது.

**(ஆ) பயிர்ச்செய்கை**

மக்கா, மதீனா ஆகிய நகரங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களில் ஒரு பகுதி, தாயிப் நகரிலிருந்து பெறப்பட்டது. மரக்கறி, திராட்சை, அப்பிள், மாதுளை, தோடை, வாழை, ஆப்ரிகொட் முதலானவையும் இங்கு விளைந்தன. ஹிஜாஸில் பேரீந்து செழித்து வளர்ந்தது. யெமனிலும் ஏனைய சில பாலைவனப் பகுதிகளிலும் கோதுமை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

**3. கைத்தொழில்**

கைத்தொழில் வகைகளுள் சலவைக் கல் வெட்டுதல், தோல் பதனிடுதல் என்பன குறிப்பிடத்தக்கவை. இவை தவிர வேறு சிறு கைத்தொழில்களும் அங்கு காணப்பட்டன. கைத் தொழிலாளர்கள் பெரும்பாலும் விருத்தி அடைந்திருந்த நகரங்களிலேயே நிரந்தரமாகக் குடியேறி வாழ்ந்து வந்தனர்.

அரேபியாவில் மிகக் குறைந்தளவு மூல வளங்களே கிடைக்கப் பெற்ற போதும், இருந்த சொற்ப வளங்களையேனும் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்வதற்கு அங்கு மத்திய அரசோ அல்லது பாரிய அளவிலான முயற்சியாளர்களோ இருக்கவில்லை. இதுவே அரேபியாவில் பொருளாதார விருத்தி ஏற்படாமைக்கான பிரதான காரணியாக அமைந்தது.

**ஜாஹிலிய்யாக் கால சமூக நிலை**

சுமார் 150,000 மக்கள் தொகையைக் கொண்டிருந்த ஜாஹிலிய்யாக் கால சமூகத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1. "பதவி"கள் எனப்பட்ட நாடோடிகள்
2. "ஹழரி"கள் எனப்பட்ட நகர்ப்புறவாசிகள்

**நாடோடிகள் (பதவிகள்)**

பொருளாதாரத்திலும் நாகரிகத்திலும் பின்தங்கியிருந்த இவர்களே அரேபியாவில் அதிக தொகையினராவர். இவர்களுக்கு வசிப்பதற்கென நிரந்தரமான ஓரிடம் காணப்படவில்லை. அடிக்கடி இடம் மாறிய இவர்களின் பிரதான தொழில் மந்தை வளர்ப்பாகும். நீரூற்றுக்காகவும் பசுமையான புற்றரைக்காகவுமே இவர்கள் இடம் பெயர்ந்தனர். திடகாத்திரமான தேகத்தையுடைய இவர்கள் சில வேளைகளில் வழிப்பறியிலும் ஈடுபட்டனர். கல்வியறிவில்லாத இவர்களுக்கு நாகரிகம் பற்றிய சிந்தனையென்பது கிஞ்சிற்றும் இருக்கவில்லை.

“பதவி”கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்தனர். குழுக்களை “கபீலா” என்றும் அவற்றின் தலைவர்களை “ஷெய்க்” என்றும் அழைத்தனர். வயதில் மூத்தோராகவும் சமூக அந்தஸ்துப் பெற்றோராகவும் தர்ம சிந்தை, வீரம் போன்ற சிறந்த பண்புடையோராகவும் இருந்தவர்களில் இருந்தே ஷெய்குகள் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு குழுவும் தத்தம் குழுவின் கௌரவத்தைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்தியது. இதனால், அவர்களிடையே அடிக்கடி மோதல்களும் போர்களும் ஏற்பட்டன. ஒரு குழு பிறிதொரு குழுவின் உடைமைகளைக் கொள்ளையடிப்பதும் அவர்களோடு சண்டையிடுவதும் வழக்கமான நடவடிக்கைகளாக அமைந்திருந்தன.

**நகர்ப்புற வாசிகள் (ஹழரிகள்)**

ஹழரிகள் நீர், நில வளமுள்ள பிரதேசங்களில் வசித்து வந்தோராவர். இவர்கள் நிலையான வீடுகளில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் “பதவி"களை விட பொருளாதாரத்திலும் கல்வித் துறையிலும் நாகரிகத்திலும் முன்னேற்றமடைந்து காணப்பட்டனர். ஆயினும் நகர்ப்புறவாசிகளிடமும் ஜாஹிலிய்யாப் பண்புகள் காணப்பட்டன. நகர்ப்புற வாசிகள் “யெமன்", “ஹழ்ரமவ்த்" பகுதிகளிலேயே அதிகமாக வசித்து வந்தனர். ஹிஜாஸின் பெரும் பகுதி நாடோடிகள் வதியுமிடமாக இருந்தது. இருப்பினும் ஹிஜாஸிலும் ஆங்காங்கே நகர்ப்புறவாசிகள் வசித்து வந்தனர். மக்கா ஹழரிகளைக் கொண்ட நகரமாக விளங்கிற்று.

பொருளாதார அடிப்படையில் அரேபிய சமூகத்தை நான்காக வகைப் படுத்தலாம்.

1. பிரபுத்துவ நிலையில் இருந்தோர்
2. மத்திய தர வகுப்பினர்
3. கூலி வேலையாட்கள்
4. அடிமைகள்

பிரபுத்துவ நிலையில் காணப்பட்டோர் நிலச் சுவாந்தர்கள் ஆவர். இவர்கள், “ஹழரி”கள் ஆவர். தமது பணிகளை அடிமைகளையும் கூலியாட்களையும் கொண்டு நிறைவேற்றி வந்தனர். பொருளாதாரத்தில் நடு நிலையில் காணப்பட்டோர் மத்தியதர வகுப்பினராவர். கூலியாட்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்தவர்கள். கூலி வேலை செய்து அன்றாட ஜீவனோபாயத்தைத் தேடிக்கொண்டவர்களாவர். அடிமைகள் சுதந்திரத்தை இழந்தவர்கள் தமக்கென சொத்துக்கள் எதுவும் வைத்திராதவர்கள். இவர்களது உழைப்பு முழுவதும் எஜமானருக்கே உரியது.

சமூக அந்தஸ்தைக் கருத்திற்கொண்டு அரேபிய சமூகம் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது.

1. சுதந்திரமானவர்கள்
2. அடிமைகள்
3. அடிமையாக இருந்து விடுதலை செய்யப்பட்டோர் (மவாலிகள்)

சுதந்திரமானோர், சமூகத்தில் உயர்தர வர்க்கத்தினராவர். இவர்களிலிருந்தே “ஷெய்கு”கள் தெரிவுசெய்யப்படுவர். யுத்தங்களின் போது கைது செய்தல், சந்தையில் கொள்வனவு செய்தல் போன்ற காரணிகளின் அடிப்படையில் ஒருவர் அடிமையாக்கப்படுவார். இவர்களுக்கு சமூகத்தில் எவ்வித மதிப்பும் இருக்கவில்லை. இவர்கள் எஜமானின் உடைமைகள் ஆவர். விரும்பிய போது இவர்களை விற்க அல்லது பணத்தைப் பெற்றுக்கொண்டோ பணத்தைப் பெறாமலோ விடுதலை செய்ய எஜமானுக்கு உரிமை இருந்தது. மவாலிகள் என்பவர்கள் அடிமைத் தளையில் இருந்து விடுதலை பெற்றவர்களாவர். எனினும் இவர்கள் சுதந்திரமாக பிறந்தவர்களுக்கு சமமாகக் கருதப்படவில்லை.

### கலாசார நிலையும் இலக்கியத்தின் செல்வாக்கும்

அன்றைய அரேபியரின் வாழ்வில் கலாசார நிலை ஓரளவு மேம்பட்டுக் காணப்பட்டது. இம்மக்கள் அறியாமையில் மூழ்கியிருந்தாலும் அவர்களுள் எழுத வாசிக்கத் தெரிந்த சிலரும் இருந்து வந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. அறிவுடையோரை மதிக்கும் பண்பைப் பெற்றிருந்த இவர்களது கலாசார வாழ்வில் கவிதை இலக்கியம் முக்கிய இடம் வகித்தது. கவிஞர்களுக்கு பெரு மதிப்பளித்த அந்த சமூகத்தினர், கவிஞர்களை கபீலாக்களின் அருஞ்சொத்தாக மதித்தனர். கவிஞனில் ஆவி குடிகொண்டிருப்பதாக நம்பினர். அதனால் அவர்கள் கவிஞனுக்கு மதிப்பளித்த அதேவேளை, அவனுக்கு அதிகம் பயப்படுபவர்களாகவும் இருந்தனர். அவனுக்கு ஷைத்தானோடு இருந்த தொடர்பு பிறரில் இருந்து அவனை மேம்படுத்தியது. அவன் அதன் மூலம் அதிசயமான ஆற்றலையும் பெற்றுக் கொண்டான். ஜின்களும் ஷைத்தான்களும் மனித ஆற்றலை மிகைத்தவர்கள் என்பது அன்றைய அரபு மக்களின் நம்பிக்கையாகும். இதனால்தான் ஒவ்வோர்

அரபுக் கோத்திரத்தாரும் தமக்கிடையே ஒரு கவிஞன் தோன்றிவிட்டால் அக்கவிஞனுக்காக விழா எடுத்து மகிழ்ந்தனர். இந்நிலையை பேராசிரியர் நிகல்ஸன் தனது "அரேபியர் இலக்கிய வரலாறு" எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "அரபுக் கோத்திரமொன்றில் கவிஞனொருவன் இருக்கிறான் என்பது தெரிய வந்ததும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களெல்லாம் ஒன்றுகூடி அவனது வீட்டுக்குச் சென்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதுடன் அவனது நல்லதிர்ஷ்டத்திற்காக அக்குடும்பத்தையே வாழ்த்திவிட்டு வருவார்கள்."

அவர்களுள் அதிகமானவர்கள் நினைத்தவுடன் கவி பாடும் வல்லமை படைத்தவர்களாக இருந்தனர். அரேபியாவில் பாலை நிலம் வரண்டாலும் கவிஞர்களின் உள்ளங்கள் வரண்டு போயிருக்கவில்லை. அவர்களது உள்ளங்களில் இருந்து ஆற்றொழுக்குப் போன்று கவிதைகள் பிரவாகித்துப் பாய்ந்தன. ஒட்டகையின் காலடி சப்தத்துக்கு இசைவாக அவர்கள் கவிதை பாடினர். இவ்வகையில் பிறந்தவை "ரஜ்ஸ்" இனக் கவிதைகள் எனப்பட்டன.

இஸ்லாத்திற்கு முந்திய காலக் கவிதைகளை முற்றுப்பெறாதது, முற்றுப் பெற்றது என இரு வகைப்படுத்தலாம். முதல் வகைக் கவிதையை ஸஜா, ரஜ்ஸ் என இரு வகையாகப் பிரிப்பர். "ஸஜா" என்பது எவ்வித செய்யுள் அமைப்பும் பெறாத, ஆனால், எதுகை மோனை வரப்பெற்ற வசனச் சிதறல்களாகும். இவை செய்யுள் அமைப்புப் பெறாத போதும், இசையோடு பாடக்கூடியனவாய் அமைந்திருக்கும். "றஜ்ஸ்" என்பது செய்யுள் அமைப்போடு கூடிய "ஸஜா" கவிதைகளின் திருந்திய வடிவமாகும். பல வகையான கவிதைகள் சேர்ந்த கவிதைத் தொகுதிகளை "முற்றுப்பெற்ற" கவிதை என்பர். அக்காலத்தில் எழுந்த முஅல்லகாத், முபழ்ழலிய்யாத், ஹமாஸா போன்ற கவிதைத் தொகுதிகள் இவ்வகையைச் சேர்ந்தவை.

ஆண்டுதோறும் உக்காழ், துல் மஜாஸ் என்ற இடங்களில் நடைபெறும் இலக்கிய விழாக்களில் அரபுக் கவிதைப் போட்டிகள் நடைபெறத் தவறுவதில்லை. நாட்டிலுள்ள புகழ்பெற்ற கவிஞர்களெல்லாம் இப்போட்டிகளில் கலந்துகொள்வார்கள். போட்டியில் வெற்றி பெற்றவர்களின் கவிதைத் தொகுதிகளைத் தங்கத்தில் செதுக்கி, கஃ. பாவின் சுவர்களிலே தொங்கவிடுவார்கள். இத்தகைய கவிதைத் தொகுதிகளை அவர்கள் "முஅல்லகாத்" என்று பெயரிட்டு அழைத்தனர். இவ்வாறான ஏழு "முஅல்லகாத்"கள் கஃ.பாவின் சுவர்களில் தொங்கவிடப்பட்டன. இம்ரஉல் கைஸ், ஜஸ்ஸாஸ், முஹல்ஹில், அந்தராஹ் ஆகிய கவிஞர்கள் அக்கால அரேபியர் களிடையே மிகுந்த புகழ் பெற்றிருந்தார்கள். இவர்களுள் இம்ரஉல் கைஸ் அக்கால அரபுக் கவிஞர்களின் மன்னனாகக் கருதப்பட்டார். இவருடைய கவிதைகள் இஸ்லாத்திற்கு முந்திய அரபுக் கவிதையின் வளர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் அளவிட உதவும் கருவியாக விளங்குகின்றன.

இக்காலத்தில் கவிஞர்கள் மட்டுமன்றி அக்தம், ஹாஜிப், ஹிந்தா போன்ற பல அறிஞர்களும் வாழ்ந்தார்கள். அரேபியர்களுள் பலர் பேச்சுவன்மை மிக்கவர்களாயும் இருந்தார்கள். இவற்றையெல்லாம் ஆராயும் போது இஸ்லாத்திற்கு முந்திய கால அரேபியர்கள் முற்றாகக் கல்வி அற்றவர்களாக இருக்கவில்லை என்று துணிந்து கூறலாம்.

அரேபியரின் உள்ளத்தைப் பொறுத்தவரை கவிதைச் சொல்லம்பானது வில்லம்பை விடப் பலம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. அடிக்கடி தோன்றும் கோத்திரச் சண்டைகளில் கவிஞனின் பங்கு போராட்ட ஆயுதங்களை விடத் தாக்கம் மிக்கதாக இருந்தது. இதனாலேயே நபியவர்கள் "குறைஷியருக்கு நீங்கள் கவிதையில் பதிலடி கொடுங்கள். ஏனெனில், அது அவர்களுக்கு ஈட்டி முனையை விடக் கூரியதாகும்" (ஸஹீஹ் முஸ்லிம்) என்று கூறினார்கள்.

ஜாஹிலிய்யாக் காலத்தில் உரைநடை இலக்கியம் வளர்ச்சியடைந்திருக்க வில்லை. கவிதை இலக்கியமே வளர்ந்திருந்தது. கவிதையின் கருப்பொருளாக பெரும்பாலும் காதல், போர், வேட்டை, மது, மாது போன்றவையே விளங்கின. ஜாஹிலிய்யாக்காலம், அரபு இலக்கிய வரலாற்றில் கவிதை இலக்கியத்தின் பொற்காலம் என்று புகழப்படும் அளவுக்கு கவிதை இலக்கியத்தில் முன்னேற்ற மடைந்திருந்தது. இதனாலேயே “அஷ்ஷி.ஃ.ரு தீவானுல் அரப்” கவிதை அரேபியரின் வாழ்க்கைப் பதிவேடு என்று உமர் (ரழி) கூறினார்கள்.

நபியவர்களுக்கு அருளப்பட்ட குர்ஆன், “நழ்ம்” (செய்யுள்), “நஸ்ர்” (உரைநடை) ஆகிய இருவகை இலக்கியங்களுக்கும் இடைப்பட்ட ஒப்பற்றதொரு நடையில் அருளப்பட்டது. அத்துடன், அது ஜாஹிலிய்யாக் கால இலக்கியப் படைப்புக்களை விட அனைத்துத் துறைகளிலும் மேம்பட்டு விளங்கியது. இன்றும் கூட அரபு இலக்கியப் படைப்புக்களில் தன்னிகரற்ற ஒரே உருவமாக அல் குர்ஆன் விளங்குகின்றது.

### ஜாஹிலிய்யா சமூகத்தில் பெண்களின் நிலை

அன்றைய சமூகத்தில் பெண்கள் மிக மோசமாக நடத்தப்பட்டார்கள். சில கோத்திரங்கள் வறுமைக்காகவும் வேறு சில காரணங்களுக்காகவும் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்து வந்தனர். இவர்களுள் ரபீஆ, முழர், தமீம் முதலாம் கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் முக்கியமானவர்களாவர்.

பெண் குழந்தை பிறந்தபோது இவர்களது மனோ நிலை எவ்வாறிருந்தது என்பது பற்றிய அல்-குர்ஆனின் பின்வரும் கூற்று நோக்கத்தக்கது.

> “அவர்களில் ஒருவனுக்குப் பெண் குழந்தை பிறந்துள்ளதாக நற்செய்தி கூறப்பட்டால் அவனது முகம் கோபத்தால் கறுத்துவிடும். அவனிடம் கூறப்பட்ட செய்தியை தீய செய்தியாகக் கருதி அச்செய்தியின் கெடுதிக்காகத் தன்

சமூகத்தாரை விட்டும் ஒழிந்து கொள்கின்றான். இழிவோடு அந்தக் குழந்தையை வைத்துக் கொள்வதா அல்லது அதனை உயிரோடு மண்ணில் புதைத்து விடுவதா என்று குழம்புகிறான்." (16 : 58 - 59)

"நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே வாழ்க்கை வசதிகளை (யும் உணவையும்) அளிக்கின்றோம். அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும்." (17:31) என்று கூறி அல்லாஹ் இத்தீய செயலை தடுக்கிறான்.

கொடிய பாவம் எது என்று நபியவர்களிடம் வினவப்பட்ட போது முதலாவதாக, அல்லாஹ்வுக்கு இணைவைத்தலையும், இரண்டாவதாக, தனது குழந்தையைக் கொலை செய்தவையும் குறிப்பிட்டதாக ஒரு ஹதீஸ் ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹுல் முஸ்லிம் ஆகிய நூல்களில் பதியப்பட்டுள்ளது.

மேற்கண்ட அல்குர்ஆன் வசனங்களும் நபி மொழியும் குழந்தைகளை உயிருடன் புதைக்கும் பழக்கம் அன்று இருந்து வந்ததை எடுத்துக் காட்டுகின்றன. ஜாஹிலிய்யாச் சமூகத்தில் பெண்கள் தொடர்பாக மேலும் பல முறைகேடான பழக்கங்கள் இருந்தன. அவற்றுள் சில:

1. கணவனை இழந்த கைம்பெண்ணை அக்கணவரின் மற்றைய தாரத்து மூத்த மகன் திருமணம் செய்தல்.
2. விதவையை தனது உறவினரிடம் செல்ல விடாது இறந்த கணவரின் உறவினர் பலாத்காரமாகத் தடுத்து வைத்தல்.
3. உடன் பிறந்த இரு சகோதரிகளை ஓர் ஆண் சம காலத்தில் மனைவிகளாக வைத்திருத்தல்.
4. "ழிஹார்" என்ற முறை மூலம் மனைவியைத் தனது தாய்க்கு ஒப்பாக்கி, விவாகரத்தும் செய்யாது தாரமாகவும் கொள்ளாது கணவன் தன் மனைவியைத் தடுத்து வைத்தல்.
5. பெண்ணுக்குச் சொத்தில் பங்கு கொடுக்காதிருத்தல்.

இவ்வாறாக பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் களைந்து, அவர்களுக்குத் தகுதியான சகல உரிமைகளையும் கொடுத்து, அவர்களை சமூகத்தில் உன்னதமான ஓர் இடத்துக்கு அல்குர்ஆன் உயர்த்தியுள்ளது.

**ஜாஹிலிய்யாக் கால சமூகத்தில் காணப்பட்ட திருமண முறைகள்**

1. பெண்ணைப் பராமரிப்பவரிடமிருந்து (வலி) திருமணம் பேசி மஹர் கொடுத்து மணந்து கொள்ளும் முறை. இம்முறை "நிகாஹ் அஸ்ஸஹீஹ்” எனப்பட்டது.

2. "நிகாஹ் அல்-இஸ்திப்ழா.ஃ.” : கணவன் தனது மனைவிக்கு அவள் விரும்பும் கல்வி, வீரம் போன்ற சிறப்பியல்புகளைக் கொண்ட ஒருவருடன் உடல்ரீதியான உறவு கொண்டு கருவுற அனுமதியளித்தல். இதன் மூலம் பிறக்கும் குழந்தை குறித்த சிறப்பியல்பை அடைய வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறு செய்யப்பட்டது.

3. "நிகாஹ் அத் தவாதி.ஃ." ஒரு பெண் தான் விரும்பிய ஏறத்தாழ 10 ஆண்களோடு உடலுறவு கொண்டு அதன் மூலம் குழந்தை பிறந்த பின்னர் அவள், அவர்களுள் தான் விரும்பும் ஒருவரைச் சுட்டிக்காட்டிப் பிறந்த குழந்தையின் தந்தை அவரே எனப் பிரகடனப்படுத்தல்.

இவற்றிற்கு அப்பால் அல்-முத்ஆ, அல்-ப.ஃ.காயா, அஷ்-ஷிஆர் போன்ற திருமண முறைகளும் அங்கு காணப்பட்டன. இவற்றுள் முதல் வகைத் திருமண முறையை (நிகாஹ் அஸ்ஸஹீஹ்) மட்டுமே இஸ்லாம் அனுமதித்தது. நபியவர்களும் அவர்களது மூதாதையர்களும் முதல் வகைத் திருமணத்தின் மூலமே பிறந்தனர். தூய்மையான ஆண்-பெண் உறவின் மூலம் பிறக்கும் பேற்றை இறைவன் நபியவர்களுக்கு அருளியிருந்தான்.

## ஜாஹிலிய்யாக் கால சமய நம்பிக்கைகள்

## நம்பிக்கைகளும் வழிபாட்டுமுறைகளும்:-

அன்றைய அரேபியாவில் இருந்த சமய அடிப்படையிலான குழுக்கள்

1. “முஷ்ரிக்”கள்
2. “ஸாபிஈன்”கள்
3. “மஜூஸி”கள்
4. “யஹூதி”கள்
5. “நஸாரா”க்கள்
6. “ஹனீப்”கள்

**1. முஷ்ரிக்கள் :**

இவர்கள் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போராவர். இவர்களே அரேபியாவில் பெரும்பான்மையாக வசித்தவர்கள். குறைஷிகளுள் பெரும்பாலானோர் விக்கிரக வணங்கிகளாகவே இருந்தனர். நபியவர்கள் பிறப்பதற்கு சுமார் 300 வருடங்களுக்கு

முன்பிருந்தே அரேபியாவில் விக்கிரக வணக்கம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் அரேபியர் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தை (மில்லத்) ஏற்று நடப்போராகவே இருந்தனர். பின்னர் "குஸாஆ" கோத்திரத் தலைவனாக இருந்த அம்ர் இப்னு லுஹை என்பவன் ஸிரியாவுக்குச் சென்றிருந்த போது, அங்கு பின்பற்றப்பட்டு வந்த விக்கிரக வணக்கத்தால் கவரப்பட்டு "ஹுபல்" எனப்பட்ட விக்கிரகத்தை எடுத்து வந்து க.்.பாவில் வைத்து விக்கிரக வழிபாட்டை ஆரம்பித்து வைத்தான்.

ஒரு நாளைக்கு ஒரு கடவுள் என்ற வகையில் க.்.பாவில் மாத்திரம் 360 சிலைகள் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தினதும் தலைமைச் சிலையாக ஹுபல் வைக்கப்பட்டிருந்தது. விலை உயர்ந்த செந்நிறக் கல்லில் செதுக்கப்பட்டிருந்த இந்த ஹுபலின் இரு மருங்கிலும் பொன்னால் செதுக்கப்பட்ட இரு மான் குட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றைச் சூழவே இதர 360 சிலைகளும் வைக்கப்பட்டிருந்தன.

நபி இப்றாஹிம் (அலை) அவர்களது மார்க்கத்தில் தம்மை இணைத்து வாழ்ந்தாலும் காலம் செல்லச் செல்ல நம்பிக்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை வரலாறு காண்பிக்கிறது. ஷாம் தேசத்திலிருந்து அம்ர் இப்னு லுஹை என்பவன் சிலையை கொண்டு வந்து மக்காவில் அறிமுகப்படுத்தினான். அதன் பால் மக்கள் கவரப்பட்னர். எனினும் அவர்களது வழிபாடுகளில் பல முரண்பாடுகள் நிகழ்ந்துள்ளதை பின்வரும் விடயங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

1. விக்கிரகங்களுக்கு முன்னால் தலையை நிலத்தில் வைத்து வணங்குதல்
2. அவற்றுக்கு அண்மையிலமர்ந்து அவற்றிடம் தஞ்சமடைதல்
3. அவற்றைச் சுற்றி வலம் வருதல்
4. அவற்றுக்குப் படையல்களைச் சமர்ப்பித்தல்
5. கால் நடை, விவசாய விளைச்சல் முதலானவற்றில் நேர்ச்சை செய்தல்

அரேபியரின் பிரதான விக்கிரகங்கள் பற்றியும், நபி நூஹ் (அலை) அவர்களது காலத்து விக்கிரகங்கள் பற்றியும் அல்-குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

1. நீங்கள் வணங்கி வழிபடும் தெய்வங்களான "லாத்", "உஸ்ஸா" போன்றவற்றையும் மூன்றாவதான "மனாத்"தையும் பார்த்தீர்களா? (53: 19 - 20)

2. மேலும் அவர்கள் உங்கள் தெய்வங்களை விட்டு விடாதீர்கள். இன்னும் "வத்து" (ஆண் உரு), "ஸுவா.்." (பெண் உரு), "யகூஸ்" (சிங்க உரு.) "யஊக்" (குதிரை உரு), "நஸ்ர்" (கழுகு உரு) முதலானவற்றை நிச்சயமாக நீங்கள் விட்டுவிடாதீர்கள் எனவும் கூறுகின்றனர். (71: 22)

"அல்-ஜிப்த்", "அத்-தாகூத்" எனும் பெயரிலான இரு கடவுளர்களை குறைஷியர் வணங்கி வந்தனர். நபி நூஹ் (அலை) அவர்கள் காலத்து விக்கிரகங்கள் புதைக்கப்பட்டிருந்தன. அவற்றை அகழ்ந்தெடுத்து வழிபாட்டுக்காக பயன்படுத்தினர். சிலை வணக்கத்தில் ஈடுபட்டாலும் கூட திரிபடைந்த நிலையில் ஹஜ், உம்றா போன்ற வணக்கங்களும் அரேபியரிடம் இருந்துள்ளன. ஹஜ் கடமையின் போது க.ஃ.பாவைத் தவாப் செய்தல், அரபா, முஸ்தலிபாவில் தங்குதல், குர்பான் கொடுத்தல், க.ஃ.பாவை கண்ணியப்படுத்தல் போன்ற வழிபாடுகளும் அவர்களிடம் காணப்பட்டன.

நபி இப்றாஹீம் (அலை) அவர்களால் தவ்ஹீதின் நிலைக்களமாக அமைக்கப்பட்ட க.ஃ.பா, "ஷிர்க்"கின் மையமாக விளங்கிற்று. அதனுள் சிலைகள் நிரம்பிக் காணப்பட்டன. அவை நாள்தோறும் பூஜிக்கப்பட்டன. மக்கள் நிர்வாணமாக அதைச் சுற்றி வலம் வந்தனர். அவ்வேளை கைகொட்டி, சீட்டியடித்து, கொம்பூதி ஆர்ப்பரிக்கப்பட்டது. "குர்பானி"யின் இரத்தம் க.ஃ.பாவில் தோய்க்கப்பட்டு அதன் மாமிசம் தரையில் பரப்பப்பட்டது. "இபாதத்" வழிபாடு சம்பிரதாயபூர்வமாக அமைந்ததே தவிர அர்த்த புஷ்டியுள்ளதாகவோ உள்ளார்ந்ததாகவோ அமையப் பெறவில்லை. இவ்வாறு இவர்கள் சிலை வணக்கத்தில் ஈடுபட்ட போதும் அல்லாஹ்வுடைய ருபூபிய்யத் தொடர்பான விடயத்திலும் தெளிவான நம்பிக்கை இருந்தது. இதனை அல்-குர்ஆன் பின்வருமாறு நிறுவுகிறது.

"வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார் என்று அவர்களிடம் கேட்டால், "அல்லாஹ்" என்றே அவர்கள் நிச்சயமாகப் பதில் கூறுவார்கள்".... (31 : 25).

எனினும் அச்சிலைகள் தமக்காக அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யுமென அவர்கள் நம்பினர். இது பற்றி அல்-குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"(இணைவைப்பவர்கள்) தங்களுக்கு யாதொரு நன்மையும் தீமையும் செய்ய முடியாத அல்லாஹ் அல்லாதவற்றை அவர்கள் வணங்குவதுடன் "இவை அல்லாஹ்விடத்தில் எங்களுக்காக சிபாரிசு செய்பவை என்றும் கூறுகின்றனர்."... (10 : 18)

### 2. ஸாபிஈன்கள் (நட்சத்திர வணங்கிகள்)

இவர்கள் ஏக இறைவனில் நம்பிக்கை கொண்டிருந்தனர். ரிஸாலத் பற்றிய நம்பிக்கையும் இவர்களுக்கிருந்தது. ஆயினும் அது பற்றிய தெளிவு இருக்கவில்லை. ஸாபிஈன்கள் அரேபியாவில் சிறுபான்மையினராவர். அல் குர்ஆன் யஹூதி, நஸாறாக்கள் பற்றிக் குறிப்பிடும் சந்தர்ப்பங்களில் ஓரிரு இடங்களில் ஸாபிஈன்களையும் சேர்த்துக் கூறியிருப்பதைக் காணலாம்.
(பார்க்க - 2 : 62, 22 : 17, 5 : 69)

### 3. மஜூஸிகள் (Zoroatrianism)

இவர்கள் நெருப்பு வணங்கிகள். அரேபியாவில் இவர்கள் மிகச் சிலரே வசித்து வந்தனர். அண்டை நாடான பாரசீகத்தில் மஜூஸிகள் நன்கு எழுச்சி பெற்று வாழ்ந்தனர். அரேபியருக்கும் பாரசீகருக்கும் வர்த்தகத் தொடர்பு இருந்தமையால் இவர்களின் சடங்குகள் பற்றிய அறிவு அரபியருக்கிருந்தது.

### 4. யஹூதிகள் (யூதர்கள்)

திரிபடைந்த தவ்றாத்தைப் பின்பற்றிய இவர்கள் மதீனாவின் அயலில் வாழ்ந்த வந்தேறு குடிகளாவர். இஸ்ராயில் என்பவரின் சந்ததியினரான இவர்கள் எகிப்தில் மிகவும் செல்வாக்குடன் வாழ்ந்து வந்தனர். எகிப்தின் பூர்வீகக் குடிகளான கிப்தியரின் குறிப்பாக பிர்ஔனின் எல்லை மீறிய கொடுமைகளுக்கு உள்ளானபோது நபி மூஸா மூலம் யூதர்கள் காப்பாற்றப்பட்டனர். மூஸாவின் மரணத்தின் பின்னர் அவர்கள் ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் குடியேறி வாழ்ந்தனர். பலஸ்தீனில் யஹூதிய்யா எனும் பெயரில் இவர்கள் நிறுவிய அரசை அலக்ஸாண்டரும் (கி.மு.333), ரோமரும்(கி.பி. 44) அவ்வப்போது பலவீனப்படுத்தி அழித்ததனால் யூதர்கள் பல்வேறு பகுதிகளில் சிதறி வாழ்ந்தனர். அரபுத் தீபகற்பத்திலும் பல பகுதிகளில் தமது குடியிருப்புக்களை அமைத்தனர். யஸ்ரிபில் பனூ கைனுகா, பனூ குறைழா, பனூ நாழிர் முதலாம் யூத கோத்திரங்கள் குடியேறி வாழ்ந்து வந்தன. பொருளாதார வளமிக்க இவர்கள் அரேபிய சமூகத்தில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தினர். இவர்கள் வட்டித் தொழில் மூலம் பொருளீட்டினர். நபியொருவர் அனுப்பப்படுவதை அறிந்திருந்த யூதர்கள், தமது சமூகத்துள்ளே அந்நபி அனுப்பப்படுவார் என நம்பி எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அதற்கு மாற்றமாக குறைஷியருக்குள் நபி அனுப்பப்படவே அந்நபி மீது பொறாமை கொண்டு பல சமயங்களில் அவர்களைக் கொலை செய்யவும் அவர்கள் துணிந்தனர்.

### 5. நஸாராக்கள் (கிறிஸ்தவர்கள்)

திரிபடைந்த இஞ்ஜீலைப் பின்பற்றிய இவர்கள் மதீனாவின் சூழலில் கணிசமான அளவில் வாழ்ந்தனர். ரோமச் சக்கரவர்த்தி கொன்ஸ்தாந்தீன் (கி.பி. 326) மூலம் ஸிரியாவிலும் பலஸ்தீனிலும் இம்மதம் அறிமுகம் பெற்றது. பின்னர் படிப்படியாக நஜ்த், யஸ்ரிப், நஜ்ரான் போன்ற பிரதேசங்களிலும் வியாபகமாகியது. திரித்துவக் கொள்கையை விசுவாசித்த அரபுக் கிறிஸ்தவர்கள் தமது சமயப் பிரசாரத்தை அரபுச் சந்தைகளில் மேற்கொண்டதாலேயே அரேபியர் மறுமை, விசாரணை, சுவர்க்கம், நரகம் முதலான அம்சங்கள் பற்றியறிந்து கொண்டனர். குஸ் இப்னு ஸாய்தா, உமையா பின் அபுஸ்ஸல்லத் போன்றோர் அரேபியாவில் வாழ்ந்த கிறிஸ்தவக் கவிஞர்களாவர். கி.பி. 525 களில் யமன் நாட்டை ஆட்சி செய்த அப்ரஹாவும் ஒரு கிறிஸ்தவனே.

### 6. ஹனீப்கள் / ஹனீபிய்யூன்

விக்கிரக வணக்கத்தையும் அன்றைய சமூகத்தில் நிலவிய படுபாதகச் செயல்கள் பலவற்றையும் விட்டு ஒதுங்கி தனியாக வாழ்ந்து வந்தவர்களே இப்பெயரால் அழைக்கப்பட்டனர். நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட மார்க்கம் ஒன்று இருப்பதாக இவர்கள் அறிந்திருந்தார்களாயினும் அது பற்றிய பூரண விளக்கம் இவர்களுக்குக் கிடைத்திருக்கவில்லை. அரபு நாட்டில் விரல் விட்டு எண்ணக் கூடிய மிகச் சில ஹனீப்களே வசித்தனர். அவர்களுள் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

1. சிறந்த பேச்சாளரான குஸ் இப்னு ஸாஇதா அல் இயாதி
2. ஸைதிப்னு அம்ரிப்னு நுபைல்
3. அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ்
4. உஸ்மான் பின் ஹுவைரிஸ்
5. உமையா பின் அபூ ஸல்லத்

### அரேபியரின் பண்புகள்

சமய நம்பிக்கையுடன் தொடர்புடைய சில மூடப் பழக்கங்கள்

1. அம்பு எறிந்து குறி பார்த்தல்
2. சாஸ்திரம், சோதிடம் பார்த்தல்
3. மை வெளிச்சம் பார்த்தல்
4. நட்சத்திரக் குறி பார்த்தல் (நவ்உ) - நட்சத்திரக் குறி பார்ப்பவன் முனஜ்ஜிம் எனப்பட்டான்.
5. பறவைச் சகுனம் (தியரா)
6. நாட் பலன் பார்த்தல்
7. இறந்தோரின் ஆவி சாந்தியடைய வேண்டும் என்பதற்காகப் பலியிடல்

### தீய பழக்க வழக்கங்கள்

1. வழிப்பறி, கொள்ளையில் ஈடுபடுதல்
2. பழி வாங்குதல்
3. மதுவருந்துதல்
4. சூதாடுதல்
5. பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்தல்
6. விபசாரம்
7. கோத்திரச் சண்டை

**நற்பண்புகள்**

1. தர்ம சிந்தை
2. வாக்கு மீறாமை
3. தன்மானம் காத்தல்
4. இலட்சிய வேட்கை
5. வறுமையில் பொறுமை
6. தலைமைத்துவத்துக்கு அடிபணிதல்
7. அமானிதம் பேணல்
8. விருந்தோம்பல்
9. போரில் புற முதுகு காட்டாமை
10. தளரா மன உறுதி
11. இரக்க சிந்தை
12. எளியோரை ஆதரித்தல்
13. நேர்மை
14. சுதந்திர வேட்கை

**ஜாஹிலிய்யாக் கால அரசியல் நிலை**

அக்காலப் பிரிவில் அரேபியாவுக்கு வெளியே இரு பெரும் பேரரசுகள் அல்லது சாம்ராஜ்யங்கள் காணப்பட்டன.

1. பாரசீகப் பேரரசு - Persian Empire (கிழக்கு)
2. ரோமப் பேரரசு - Romanian Empire (மேற்கு)

இவ்விரு பேரரசர்களுக்கு மத்தியில் அரேபியா அமைந்திருந்த போதிலும் அவற்றின் முடியரசு நிர்வாக முறை இங்கு பின்பற்றப்படவில்லை. இன, கோத்திர உணர்வு வலுப்பட்டிருந்ததே இதற்குக் காரணமாகும். நபியவர்கள் பிறந்து வளர்ந்த ஹிஜாஸின் அரசியல் நிலை இதுவாயினும் கிழக்கே ஹீராவிலும் மேற்கே கஸ்ஸானிலும் முறையே பாரசீக, உரோம அரசின் கட்டுப்பாட்டின் கீழ் சிற்றரசர்கள் ஆட்சி செய்தனர். அரேபியாவில் மத்திய அரசு அமையாவிட்டாலும் ஒரு வகை நிர்வாக முறை அங்கிருந்ததை அறிய முடிகின்றது. சமூக மக்களுக்கிடையில் அவர்கள் சில பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டிருந்தனர்.

உதாரணங்கள் :

1. பனூ ஜும்ஹ் குடும்பம் - குறிபார்க்கும் வேலை
2. பனூ ஸஹ்ம் குடும்பம் - விக்கிரகங்களுக்காகப் பலியிடுபவற்றைப் பொறுப்பேற்றல், வழக்குகளைத் தீர்த்தல்.
3. பனூ தமீம் குடும்பம் - தண்டம் அறவிடல்
4. பனூ அதீ குடும்பம் - தூது செல்லல்

இவை தவிர அங்கு வழக்கில் இருந்து வந்த பின்வரும் சொற்பிரயோகங்களும் அங்கு ஒரு நிர்வாக முறை இருந்ததை உணர்த்துகின்றன.

1. “தாறுன்-நத்வா” ஆலோசனை மன்றம், இது பாராளுமன்றம் போன்றதொரு அமைப்பாகும்.
2. “லிவா.ஃ.” கொடி, யுத்தத்தில் தலைமை தாங்குவதை இது குறிக்கும்.
3. “ஹிஜாபா” க.ஃ.பாவிற்கு ஆடை போர்த்துதல்.
3. “ஸிகாயா” ஹாஜிகளுக்குக் குடிநீர் வழங்குதல்.
4. “ரி.ஃ.பாதா” ஹாஜிகளுக்கு உணவு விநியோகித்தல்.

இவை அனைத்தும் இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்தில் அரேபியாவில் முறை சாரா அரசியல் நிர்வாக அமைப்பொன்று இருந்து வந்ததை எடுத்துக் காட்டுகின்றன.

# 02. நுபுவ்வத்துக்கு முன் நபியவர்களின் வாழ்வு

**குடும்பமும் பரம்பரையும்**


நபியவர்கள் அரபு சமூகத்தில் காணப்பட்ட கண்ணியம் மிக்க குடும்பமொன்றில் பிறந்தார்கள். பனூ ஹாஷிம் என அழைக்கப்பட்ட இக்குடும்பம், அன்றைய அரபு சமூகத்தில் உயர்நிலையில் வைத்து மதிக்கப்பட்ட மிக கௌரவத்துக்குரிய குறைஷிப் பரம்பரையின் ஒரு கிளையாகும்.

நபி (ஸல்) அவர்களின் பாட்டனாரான ஹாஷிம் இப்னு அப்துல் மனா∴பின் பெயரோடு இணைத்து நபியவர்களின் குடும்பம் ஹாஷிம் குடும்பம் என அழைக்கப்படுகிறது.

நபியவர்கள் பிறந்த வேளையில் குறைஷிகளே மக்காவை ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் பிஹ்ரென்பவரின் மரபு வழியைச் சேர்ந்தவர்களாவார்கள். கி. பி. 3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் இவர், நபி இஸ்மாயில் (அலை) அவர்கள் வழி வந்த அத்னான் என்பவரின் புதல்வர் மஆதின் வழித்தோன்றலாவார். தமது பரம்பரை பற்றி மிகுந்த பெருமை கொண்டிருந்த குறைஷியர், அரேபியரிடையே ஓர் உன்னத ஸ்தானத்தை வகித்து வந்தனர். பின்வரும் ஹதீஸ் நபியவர்களின் குடும்பம் மற்றும் பரம்பரை பற்றிய தகவல்களை எமக்கு அறியத்தருகிறது.

“நிச்சயமாக அல்லாஹ் இப்றாஹிமின் புதல்வர்களுள் இஸ்மாயிலைத் தேர்ந்தெடுத்தான் ; இஸ்மாயிலின் சந்ததிகளுள் கினானாவைத் தேர்ந்தெடுத்தான்; கினானாவின் சந்ததிகளுள் குறைஷைத் தேர்ந்தெடுத்தான் ; குறைஷியருள் பனூ ஹாஷிமைத் தேர்ந்தெடுத்தான்; பனூ ஹாஷிமிகளுள் என்னைத் தேர்ந்தெடுத்தான்”. (முஸ்லிம்)

## நபியவர்களின் பரம்பரை அட்டவணை




**பிறப்பு**

யானை ஆண்டிற்கு ஓர் ஆண்டிற்கு முன்னரே நபியவர்களின் பெற்றோரான அப்துல்லாஹ் ஆமினா ஆகியோரின் திருமணம் நடைபெற்றது. நபியவர்கள் பிறப்பதற்கு 2 மாதங்களுக்கு முன் அப்துல்லாஹ் யத்ரிபில் மரணமடைந்தார். அவர் மரணமடையும் போது 5 ஒட்டகைகள், சில ஆடுகள், "உம்மு அய்மன்" என்ற அபிஸீனிய அடிமைப் பெண் ஆகியவற்றையே அனந்தரமாக விட்டுச் சென்றார். முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் யானை ஆண்டு (ஆமுல் ∴பீல்)

றபீஉல் அவ்வல் மாதம் பிறை 12 திங்கட்கிழமை அதிகாலை மக்கா நகரில் பிறந்தார்கள். இது கி.பி.571 ஏப்ரல் 22ம் திகதி எனக் கணிக்கப்படுகிறது. நபியவர்களின் தந்தை பெயர் அப்துல்லாஹ், தாயார் ஆமினா. இவர்கள் இருவரும் ஒரே பரம்பரையைச் சேர்ந்தவர்களாவர்.

## இர்ஹாஸாத்

நபியவர்கள் பிறப்பதற்கு முன்னரும் பிறக்கும் பொழுதும் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. நபிமார்களுக்கு நபித்துவம் வழங்கப்பட முன்னர் நடைபெறும் அற்புதங்கள் "இர்ஹாஸாத்" என்று அறபு மொழியில் குறிப்பிடப்படுகின்றன. அதன்படி நபியவர்களுக்கு காணப்பட்ட "இர்ஹாஸாத்"கள் பின்வருமாறு:

1. ஆப்ரஹாவின் யானைப் படை அபாபீல் எனும் சிறிய பறவைகளால் முறியடிக்கப்பட்டமை. (அல் குர்- ஆன் 105 : 01-05)
2. வானத்தை நெருங்கும் ஜின்கள் விண்கற்களால் தாக்கப்பட்டமை. (அல் குர்-ஆன் 72:08-09)
3. நபியவர்கள் பிறக்கும் போது அவர்களுடன் பிரகாசமான ஓர் ஓளி வெளிவந்தமை. (முஸ்னத் அஹ்மத்)
4. அவர்கள் பிறந்த வேளை பாரசீக மன்னனின் அரண்மனையில் 14 அறைகள் இடிந்து விழுந்தமை. (தலாயிலுன்னுபுவ்வா)
5. ஈரானின் வடக்கே அமைந்துள்ள ஸாவா நகரத்திலிருந்த கோயில்கள் இடிந்தமை. (தலாயிலுன்னுபுவ்வா)
6. "ஸாவா"வில் இருந்த வற்றாத வாவி வற்றியமை. (தலாயிலுன்னுபுவ்வா)
7. நபியவர்களுக்குப் பால் கொடுக்கத் தொடங்கியதும் ஹலீமா அவர்களின் மார்பில் பால் சுரந்தமை. (சீறா இப்னு ஹிஷாம்)

## குழந்தைப் பருவம்

நபியவர்கள் பிறந்தது முதல் சில நாட்கள் அவர்களின் தாயாரே அவர்களுக்குப் பாலூட்டி வந்தார்கள். பின்னர் கிராமத்துப் பெண்ணான ஹலீமதுஸ் ஸஃதியா அவர்கள் பாலூட்டி வளர்த்தார்கள். கிராமப் புறங்களில் தூய மொழி பேசப்படுவதாலும், தொற்று நோய்கள் குறைவானமையாலும், தூய காற்றுப் போன்ற இயற்கையான சுகாதார வசதிகள் இருந்தமையாலும், திடகாத்திரமான உடற்கட்டு ஏற்பட வாய்ப்புண்டாகையாலும் குழந்தைகளைக் கிராமப்புறப் பெண்களிடம் வளர்ப்பதற்காகக் கொடுப்பது அக்கால வழக்கமாகும். இதன்படியே

நபியவர்களும் ஹலீமா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். நபியவர்களை ஹலீமா அவர்கள் கையேற்க முன்னரே அபூலஹபின் அடிமைப் பெண்ணான துவைபதுல் அஸ்லமியாவும் அவர்களுக்குப் பாலூட்டினார்கள். நபியவர்கள் பெற்றோரின் ஏக புதல்வராகையால் அவர்களுக்கு உடன் பிறந்த சகோதரர்கள் இல்லை. ஆயினும் ஹலீமா, துவைபா ஆகிய இருவர் மூலமும் பால் குடிச் சகோதரர்கள் இருந்தனர். நபியவர்களை வளர்க்கக் கொண்டு வந்ததிலிருந்து ஹலீமா அவர்களின் வறுமை குறைந்து வாழ்வு செழிப்புற்றது. ஆதலால் அவர்கள் தனது சொந்த மக்களை விடவும் நபியவர்கள் மீது அதிக அன்பு செலுத்தினார்கள்.

குழந்தைக்கு இரண்டு வயதான போது அதைத் தாயாரிடம் சேர்ப்பதற்காக ஹலீமா அவர்கள் மக்காவிற்குக் கொண்டு வந்தார்கள். தமது உள்ளத்தில் உயரிய இடத்தைப் பிடித்துக் கொண்ட அக்குழந்தையைப் பிரிவது ஹலீமா அவர்களுக்குச் சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்தினாலும் குழந்தையைத் தாயாரிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கிருந்தது.

தனது சின்னஞ்சிறு குழந்தையைக் கண்டதனால் ஆமினா அவர்கள் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தார்கள். எனினும், மக்காவில் அப்பொழுது தொற்று நோய் பரவியிருந்தமையால் குழந்தையை மீண்டும் கிராமத்துக்கே அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் ஹலீமா அவர்கள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்தார்கள்.

நபியவர்கள் தமது நான்காம் வயதில் ஒரு முறை சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களிடம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வருகை தந்து, அவர்களை நிலத்தில் அண்ணார்ந்து படுக்க வைத்து அவர்களது மார்பைப் பிழந்து இதயத்தை எடுத்து அதிலிருந்த “அலகா” எனும் சதைத்துண்டை அகற்றி விட்டு (“இது ஷைத்தானின் பகுதி” என அதனைச் சுட்டிக்காட்டினார்கள்.) தொடர்ந்து இதயத்தைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்து “ஸம் ஸம்” நீரினால் கழுவிய பின்னர் அதை மார்பில் பொருத்தி பழைய நிலையிலேயே வைத்தார்கள். அவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், வளர்ப்புத் தாயிடம் ஓடி வந்து நபியவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டதாகக் கூறினர். அவர்கள் எல்லோரும் அங்கு வந்து பார்த்த போது நபியவர்கள் நிறம் பேதலித்த நிலையில் இருந்தார்கள். இந்நிகழ்ச்சியை இமாம் முஸ்லிம் பதிவு செய்துள்ளார்கள்.

நபியவர்களின் இதயம் அவர்களின் வாழ்நாளிலேயே இரண்டு முறை மலக்குகளினால் சுத்திகரிக்கப்பட்டிருப்பதை ஸுன்னாவில் இருந்து அறிய

முடிகின்றது. மேற்கண்ட நிகழ்ச்சியினால் அதிர்ச்சியடைந்த ஹலீமா அவர்கள் எதிர்காலத்தில் குழந்தைக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சினார்கள். எனவே, குழந்தையைத் தாயாரிடம் ஒப்படைத்தார்கள்.

## தாயாரின் மரணம்

மகனின் நான்காம் வயதில் அவரைப் பொறுப்பேற்றுக் கொண்ட தாயார் ஆமினா அவர்கள், கணவனின் கப்றைத் தரிசிக்க எண்ணி தன் மகனோடும் அடிமைப் பெண்ணோடும் யத்ரிப் சென்றார்கள். பின்னர் அங்கிருந்து மக்கா திரும்பும் வழியில் அப்வா எனுமிடத்தில் அவர்கள் மரணமடைந்தார்கள். அப்போது நபியவர்களுக்கு வயது ஆறு. தாயாரின் மரணத்தையடுத்து நபியவர்களை அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரோ தனது பேரப்பிள்ளையைக் கண்ணெனப் போற்றி வந்தார். தனக்கென விரிக்கப்படும் கம்பளத்தில் தனது மக்கள் கூட உட்காருவதில்லையாயினும் தனது பேரப்பிள்ளை அதில் உட்காருவதை அவர் விரும்பினார். தனது முதுமையையும் இயலாமையையும் அறிந்த அப்துல் முத்தலிப் தனக்குப் பின்னர் தன்னருமைப் பேரனை வளர்க்கும் பொறுப்பை ஒப்படைக்க தனது மகனும் அப்துல்லாஹ்வின் சகோதரருமான அபூதாலிபைத் தெரிவு செய்திருந்தார். நபியவர்களின் 8 ஆம் வயதில், அப்துல் முத்தலிப் மரணமடைய நபியவர்களை அபூதாலிப் பொறுப்பேற்றுக் கொண்டார். அபூதாலிப் நபியவர்களை எதுவித குறையுமின்றிக் கண்ணும் கருத்துமாகப் பேணிப் பாதுகாத்து வந்தார். நபியவர்களின் ஒழுக்க சீலமும் அறிவுக்கூர்மையும் அருள் முகமும் அபூதாலிபை பெரிதும் கவர்ந்தன. திருமணம் முடிக்கும் வரை நபியவர்கள் அபூதாலிபிடமே இருந்து வந்தார்கள்.

## இளமைப் பருவம்

அபூதாலிப் நபியவர்களின் 12 ஆம் வயதில் வியாபாரத்துக்காக சிரியா சென்றார். அப்போது நபி அவர்களையும் அழைத்து சென்றார். வழியில் “புஸ்றா” என்ற இடத்தை அடைந்த போது அங்கு ஓர் ஆசிரமத்தில் இருந்த “புஹைறா” என்ற பாதிரியார் வழமைக்கு மாறாக எழுந்து வந்து வர்த்தகக் குழுவை ஆதரித்து விருந்து வைத்து கௌரவித்தார். நபியவர்களிடம் தென்பட்ட நுபுவ்வத்தின் அடையாளங்களை இனங்கண்டு அவர்களின் கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, “இவரோ உலகத் தலைவர். இவரை அல்லாஹ் உலகோர்க்கு அருட்கொடையாக நியமிப்பான்'' என்று கூறினார். யூதர்கள் நபிகளாரை இனங்கண்டு, அவருக்கு ஏதேனும் ஆபத்து விளைவிக்கக் கூடும் என்று பயந்து, நபியவர்களை சிரியா செல்லவிடாது மக்காவுக்கே திருப்பி அனுப்பி வைத்தார்.

**ஹர்புல் பிஜார்**

ஹறம் புண்ணிய பூமிக்குள் அத்துமீறிப் பிரவேசித்தோருக்கு எதிராகப் போர் ஒன்று நடைபெற்றது. இது வரலாற்றில் ஹர்புல் புஜ்ஜார் (தீயோரின் போர்) என அழைக்கப்படுகிறது. இப்போரினால் ஹறமின் கண்ணியமும் சங்கையான நான்கு மாதங்களின் கண்ணியமும் சிதைக்கப்பட்டதனால் இப்பெயர் வழக்கத்தில் வந்தது. இப்போரின் போது நபியவர்களுக்கு வயது 15. இதில் நபியவர்கள் குறைஷியருக்கு உதவியாளராகக் கலந்து கொண்டார்களே தவிர ஆயுதமேந்திப் போர் செய்யவில்லை.

**ஹில்புல் புழூல்**

ஹர்புல் புஜ்ஜாரினால் ஏற்பட்ட பயங்கர விளைவுகள் காரணமாக இதன் பிறகும் இவ்வாறான அனர்த்தங்கள் நடைபெறாவண்ணம் கவனித்துக்கொள்ள வேண்டுமென குறைஷித் தலைவர்கள் தீர்மானித்தனர். இதற்காகத் தங்கள் மத்தியில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இவ்வொப்பந்தமே ஹில்புல் புழூல் (கணவான்கள் ஒப்பந்தம்) என அழைக்கப்படுகிறது.

அநீதி இழைக்கப்பட்டோரின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும் அவர்களின் நலன்களைப் பாதுகாக்கவுமே இவ்வொப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. சுதேசிகளுக்கு மட்டுமன்றி விதேசிகளுக்கும் இதன் சேவை விரிவுபடுத்தப்பட்டிருந்தது. இவ்வொப்பந்தத்தில் நபியவர்களும் பங்குபற்றினார்கள். இச்செயற்பாடு நபியவர்களுக்கிருந்த சமூகப் பற்று, இன ஐக்கியம், அடிப்படை மனித உரிமைகள் பேணப்படுவதில் ஆர்வம் போன்றவற்றைப் பறைசாற்றி நிற்கின்றது.

**ஜீவனோபாயம்**

சிறு வயதில் நபியவர்கள் பெற்றோரை இழந்து அநாதையானாலும் அவர்கள் இரந்து வாழப் பழகவில்லை. தமது சிறிய வயதில் ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டார்கள். ஹலீமா அவர்களிடம் இருக்கும் போதும் பின்னர் மக்காவிலும் ஆடு மேய்த்ததாக அறிய முடிகின்றது. ஒரு முறை நபியவர்கள் “அல்லாஹ் எவரையும் (ஆரம்பத்தில்) ஆடு மேய்க்கும் பயிற்சியை கொடுக்காது நபியாக அனுப்பவில்லை என்று கூறிய போது, ஸஹாபாக்கள் தாங்களுமா என வினவினார்கள். அதற்கு நபியவர்கள் ஆம், நான் மக்காவாசிகளுக்கு “கீறாத்” (சிறு தொகைப் பணம்)துக்காக ஆடு மேய்த்துள்ளேன் என கூறினார்கள்”. (ஸஹீஹுல் புஹாரி)

நபிமார்களுக்கு அல்லாஹ் ஏன் ஆடு மேய்க்கும் பயிற்சியைக் கொடுத்தான், ஆட்டு மந்தைகளுக்கு இடையன் செய்யும் பணியானது ஒரு கலீபா பிரசைகளுக்கு நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கு ஒப்பானதே.

சிறு வயதில் ஆடு மேய்த்த நபியவர்கள் தமது இளமைப் பருவத்தில் குறைஷியரின் பரம்பரைத் தொழிலான வர்த்தகத்தில் ஈடுபட்டார்கள். அவர்களின் வர்த்தகப் பயணங்களில் இரண்டு குறிப்பிடத்தக்கவை. ஒன்று அவர்கள் தமது 12 ஆம் வயதில் சிரியா சென்று இடையில் திரும்பியமை. மற்றொன்று 25 ஆம் வயதில் சிரியா சென்றமை.

இரண்டாம்முறை நபியவர்கள் அக்காலத்தில் மக்காவில் பெரும் வாணிபம் நடத்தி வந்த பெண்மணி கதீஜா அவர்களின் வர்த்தகப் பங்காளராக சிரியா சென்றார்கள். கதீஜா அவர்களின் சார்பில் அவர்களது அடிமை மைசறா என்பவர் நபியவர்களுடன் சென்றார்.

## நபி (ஸல் அவர்களின் நற்குணங்கள்

நபி (ஸல்) அவர்கள் அழகிய நற்குணமுடையவர்களாக விளங்கினார்கள். “நிச்சயமாக நீர் நற்குணமுடையவராவே இருக்கிறீர்” (68 : 04) என்று அல்லாஹ்தஆலா, நபியவர்களைப் பற்றிப் புகழ்ந்து கூறுகின்றான்.

### உண்மைப் பேசுதலும் அமானிதம் காத்தலும்

நபி (ஸல்) அவர்கள் மக்களில் மிக உன்னதமான குணத்தைப் பெற்றிருந்தார்கள். அவர்களிடம் எந்தக் கெட்ட குணமும் இருந்ததில்லை. சகித்துக் கொள்வதும், மன்னிப்பதும் சிரமங்களைத் தாங்கிக் கொள்வதும் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ், வழங்கிய இயற்கைப் பண்புகளாகும். அவர்கள் மிகவும் தாராளத் தன்மையுள்ளவர்களாக விளங்கினார்கள்.

ஜாபிர் (றழி) அவர்கள் கூறுகிறார்கள். “நபி (ஸல்) அவர்களிடம் ஏதாவதொன்று கேட்கப்பட்டு, அவர்கள் அதை இல்லை என்று சொன்னதாக இல்லை”. (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

### அவரது நண்பர்கள்

அவர்கள் மிக்க நீதமுள்ளவராக, ஒழுக்க சீலராக, உண்மையாளராக, நம்பிக்கையாளராகத் திகழ்ந்தார்கள். அவர்களின் இப்பண்புகளை எதிரிகள் கூட நன்கு அறிந்து வைத்திருந்தனர். நபித்துவம் கிடைக்கு முன்பே அவர்களை

“அல் அமீன் (நம்பிக்கைக்குரியவர்)” என்று மக்கள் அழைத்தனர். அறியாமைக் காலத்தில்கூட மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு நாடி அவர்களிடம் வருவார்கள்.

நபி (ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள். “நபி (ஸல்) அவர்கள் தங்களது காலணிகளிலும், தங்களது ஆடைகளிலும் உள்ள கிழிசல்களைத் தாங்களே தைத்துக் கொள்வார்கள். உங்களில் ஒருவர் தனது வீட்டில் வேலை செய்வது போன்றே நபியவர்களும் தங்களுடைய வீட்டில் வேலை செய்வார்கள். மனிதர்களில் ஒருவராகவே இருப்பார்கள். தங்களது ஆடைகளைத் தாங்களே சுத்தம் செய்வார்கள். தனது ஆட்டில் தானே பாலைக் கறப்பார்கள். தங்களது வேலைகளைச் தானே செய்து கொள்வார்கள்”. (மிஷ்காத்)

எப்பொழுதும் மலர்ந்த முகமும், இளகிய குணமும், நளினமும் பெற்றிருப்பார்கள். கடுகடுப்பானவராகவோ, முரட்டு சுபாவம் கொண்டவராகவோ, அதட்டுபவராகவோ அவர்கள் ஒருபோதும் இருந்ததில்லை.

நன்மையானவற்றைத் தவிர வேறெதையும் பேசமாட்டார்கள். தேவையானவற்றை மட்டுமே பேசுவார்கள். அதிகம் மௌனம் காப்பார்கள். புன்முறுவலாகவே சிரிப்பார்கள். சபைகளில் தனக்கென்று ஓர் இடத்தைத் தெரிவு செய்து கொள்ளமாட்டார்கள். அவ்வாறே பிறரையும் ஏவுவார்கள். தன்னுடன் அமர்ந்திருக்கும் ஒவ்வொருவருடனும் உரையாடுவார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தயாளத் தன்மையுடனும், நற்குணங்களுடனும் ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடின்றியும் அனைவருக்கும் முன்மாதிரியாக நடந்து கொண்டார்கள்.

### வாலிபமும் திருமணமும்

கதீஜா அவர்கள் குறைஷிக் குலத்தவர், பண்பாளர், ஒழுக்கமுடையவர், பெருந்தன்மையும் தாராள மனமும் படைத்தவர், சீமாட்டி, குணவதி, அழகி, விதவை. கணவனை இழந்த பின்னர் அவரை விவாகம் புரிய உயர் குலப் பிரபுக்களெல்லாம் போட்டியிட்ட போதும் அவர்கள் அதைப் புறக்கணித்து வந்தார்கள்.

அதேவேளை தனது நற்குண நல்லொழுக்கத்தாலும் நாணயம் நம்பிக்கையாலும் “அல் அமீன்” (நம்பிக்கைக்குரியவர்), “அஸ்ஸாதிக்” (உண்மையாளர்) என்று பாராட்டப்பட்ட நபியவர்களின் பண்புகள் கதீஜா அவர்களைப் பெரிதும் கவர்ந்தன.

இவ்வாறான ஒருவரே தனக்குப் பொருத்தமான கணவர் என்று கதீஜா அவர்கள் தீர்மானித்தார்கள். அன்றைய வழக்கப்படி திருமணப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. நபியவர்களின் தந்தையின் உடன்பிறப்புக்களான அபூதாலிப் முதலான சகோதரர்களின் நல்லாசியுடன் திருமணம் நடந்தேறியது.

திருமணத்தின் போது நபியவர்களின் வயது, கதீஜா அவர்களின் வயதிலும் பார்க்க குறைவானதாகும். திருமணத்தின் பின்னர் நபியவர்கள் வர்த்தகத்தில் நேரடியாக ஈடுபடவில்லை. கதீஜா அவர்கள் தனது சொத்துக்களை நபியவர்களின் விருப்பத்திற்கேற்ப செலவு செய்வதற்கு அனுமதி வழங்கினார்கள்.

நபியவர்களும் கதீஜா அவர்களும் சுமார் 25 வருடங்கள் இல்லறம் நடத்தினார்கள். இவர்களுக்கு ஸைனப், றுகையா, உம்முகுல்ஸூம், பாத்திமா என்று நான்கு பெண் பிள்ளைகளும் காசிம், அப்துல்லாஹ் என்று இரண்டு ஆண் பிள்ளைகளும் பிறந்தனர். இவர்களைத் தவிர நபியவர்களுக்கு எகிப்தியப் பெண்ணான மாரியதுல் கிப்தியா அவர்கள் மூலம் இப்றாஹீம் என்ற குழந்தையும் பிறந்தது.

### கஃபா புனர் நிர்மாணம்

நபியவர்களின் முப்பத்தைந்தாம் வயதில் நடைபெற்றதொரு நிகழ்ச்சி அவர்களின் மதி நுட்பத்தையும் சமாதான வேட்கையையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

அப்பொழுது குறைஷியர் க.்.பாவைப் புதுப்பித்துக் கட்டினர். கட்டட வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, ஹஜறுல் அஸ்வத் கல்லை க.்.பாவின் சுவரில் பதிக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அக்கல்லைத் தூக்கி உரிய இடத்தில் வைப்பவர் யார் என்ற கேள்வி எழுந்தது. எல்லா கபீலாக்களும் அவ்வுரிமை தமக்கே வேண்டுமென வாதாடின. இதனால் வேலை ஸ்தம்பிதமடைந்து. யுத்தம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஈற்றில் மறுநாள் அதிகாலை மஸ்ஜிதுல் ஹறாமில் பாபுஷ்ஷைபா எனும் வாயிலூடாக முதன் முதல் நுழைபவரின் முடிவை ஏற்பதாக தீர்மானிக்கப்பட்டது. மறுநாள் வைகறையில் முதன் முதலில் மஸ்ஜிதில் நுழையும் பேற்றை நபியவர்கள் பெற்றார்கள். அதனால் ஹஜருல் அஸ்வத் கல்லை க.்.பாவில் வைக்கும் பேற்றை நபியவர்கள் பெற்றார்கள்.

நபியவர்கள் தமது மேலங்கியை விரித்து அதன் மீது ஹஜருல் அஸ்வத் கல்லைத் தூக்கி வைத்து எல்லா கபீலாக்களின் ஷெய்குகளையும் அத்துணியின் ஓரங்களை பிடித்து உயர்த்துமாறு அவர்களிடம் கூறினார். அவர்கள் அவ்வாறு உயர்த்தவே நபியவர்கள் அதை உரிய இடத்தில் எடுத்து பதித்தார்கள். நபியவர்களின் சமயோசிதமும் புத்திசாதுரியமுமான இச்செய்கை மூலம் அரேபியருக்கிடையில் ஏற்படவிருந்த போர் தடுக்கப்பட்டது. இது நபியவர்களின் விவேகத்துக்கும் மதிநுட்பத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

# 03. நுபுவ்வத்துக்கு பிந்திய மக்கா வாழ்வு

**நுபுவ்வத்தும் முதல் வஹியும்**

முஹம்மத் (ஸல்) அவர்கள் அரேபிய மக்களின் அவல நிலையைக் கண்டு மனம் வெதும்பியவர்களாக, மக்காவை அடுத்துள்ள ஒரு மலையின் உச்சியில் உள்ள 'ஹிரா' குகையில் தனிமையில் தங்கியிருந்து தியானித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது நாற்பதாவது வயது நெருங்கிக் கொண்டிருந்த வேளையில், மிக அதிகமாகவும், அடிக்கடியும் தியானத்தில் ஈடுபட்டார்கள். வஹி அருளப்படுவதற்கு சிறிது காலத்திற்கு முன்பிருந்தே அவர்கள் வாரக் கணக்கில் தங்கியிருந்து தியானம் செய்து வந்தார்கள். சில சமயங்களில் அவர்களது அன்பு மனைவி கதீஜாவும் அவர்களோடு தியானத்தில் பங்கு கொண்டார். அவர்களுக்கு சந்திர வருடக் கணக்கின்படி நாற்பது வருடங்களும், ஆறு மாதங்களும் ஆன போது, வழமை போன்று ரமழான் மாதத்தில் புனித லைலத்துல் கத்ர் இரவில் தியானத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஜிப்ரீல் (அலை) அவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் முன் தோன்றி 'ஓதுவீராக!' என்றார்கள். 'எனக்கு ஓதத் தெரியாது' என்று முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியபோது ஜிப்ரீல் (அலை) முஹம்மத் (ஸல்) அவர்களை ஆரத்தழுவினார்கள். இவ்வாறு மூன்று முறை நிகழ்ந்த பின் ஜிப்ரீல் (அலை) அவர்கள் சூறத்துல் அலக்கின் பின்வரும் முதல் 05 வசனங்களையும் ஓதிக் காண்பித்தார்கள்.

> "படைத்த உமதிறைவனின் பெயரால் ஓதுவீராக. அவன்தான் இரத்தக் கட்டியிலிருந்து மனிதனைப் படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் மாபெரும் கருணையாளன். அவன்தான் எழுது கோலைக் கொண்டு கற்பித்தான். அன்றியும் மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்." (96 : 1-5)

இந்நிகழ்ச்சியால் அச்சமடைந்தவர்களாகவும், நடுங்கியவர்களாகவும் வீடு திரும்பிய முஹம்மத் (ஸல்) அவர்கள் தமக்கு ஏற்பட்ட புதுமையான அனுபவத்தைத் தமது மனைவி கதீஜாவிடம் விபரித்துக் கூறி, தம்மைப் போர்த்துமாறு கூறினார்கள். அப்பொழுது கதீஜா அம்மையார் தமது கணவரை நோக்கி "இல்லை! நீங்கள் பயப்பட வேண்டியதில்லை, இறைவன் நிச்சயம் உங்களைக் கைவிடமாட்டான், நீங்கள் உற்றார் உறவினரிடத்தில் அன்பு காட்டுகிறீர்கள்; தேவையுள்ளவர்களுக்குக் கொடுத்துதவுகின்றீர்கள், விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கின்றீர்கள்; சோதனைகளின் போது நீதியை நிலைநாட்ட உண்மையின் பக்கம் இருக்கின்றீர்கள். ஆதலால் உங்களைத் துன்பம் அணுகாது" என்று ஆறுதல் சொல்லி அவர்களைத் தேற்றினார்கள்.

தமது கணவரின் இப்புதிய அனுபவம் பற்றிய உண்மையை அறிந்து, அவரின் அச்சத்தைப் போக்கி, தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கில், அவர்களை கதீஜா நாயகி தனது பெரிய தந்தையின் புதல்வரும் முன்னைய வேதங்களில் ஆழமான பரிச்சயம் உடையவருமான ‘வரகா பின் நவ்பல்’ என்பவரிடம் அழைத்துச் சென்றார். முழு விபரங்களையும் முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டறிந்த வரகா பின் நவ்பல், மூஸா, ஈஸா ஆகியோரிடம் வந்த அதே ஜிப்ரீல் (அலை) அவர்கள் தான் உங்களிடம் வந்துள்ளார்கள் என்று கூறி, அவர்களது நபித்துவத்துக்குச் சான்றுரைத்தார்.

இந்நிகழ்ச்சியிலிருந்து சிறிது காலம் கழிந்த பின், நபி (ஸல்) அவர்கள் இனிமேல் வஹி அருளப்படாதோ என்று ஏக்கமும் கவலையும் கொண்டிருந்த வேளையில் "யா அய்யுஹல் முத்தஸ்ஸிர்" என்று ஆரம்பிக்கும் சூறாவின் பின்வரும் வசனங்கள் அருளப்பட்டன.

> "போர்த்திக் கொண்டிருப்பவரே, எழுந்திருப்பீராக ! மக்களுக்கு அச்சமூட்டி எச்சரிப்பீராக! உம்முடைய இறைவனைப் பெருமைப் படுத்துவீராக! உம்முடைய ஆடைகளைத் தூய்மைப்படுத்திக் கொள்வீராக! அசுத்தத்தை வெறுப்பீராக!" (74 : 01 – 05)

### இஸ்லாமிய பிரசாரம்

மேற்குறிப்பிடப்பட்ட வசனங்கள் அருளப்பட்டதும் தம்மீது எத்தகையதொரு பொறுப்பு இறைவனால் சுமத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தமது மக்கள் மத்தியில் தாம் செய்ய வேண்டிய பிரசாரப் பணி என்ன என்பதையும் விளங்கிக் கொண்ட நபி (ஸல்) அவர்கள், முதலில் இரகசியமாக இஸ்லாத்தைப் பிரசாரம் செய்யலானார்கள். முதலில் தன் குடும்பத்தினர், தன்னுடன் நெருங்கிப் பழகிய நண்பர்கள் முதலானோருக்கு அழைப்பு விடுத்தார்கள். அதனை ஏற்று மனைவி கதீஜா (றழி), அபூபக்கர் (றழி), அலி (றழி), ஸைதிப்னு ஹாரிதா (றழி), பிலால் (றழி) ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றனர். இதனைத் தொடர்ந்து நபியவர்களின் பெண்மக்களும் இஸ்லாத்தை ஏற்றனர். அபூபக்கர் (றழி) அவர்கள் இத்தூதை தனது நண்பர்களுக்கு எத்தி வைத்ததன் மூலம் உதுமான் (றழி), சுபைர் (றழி), தல்ஹா (றழி), அப்துர் றஹ்மான் பின் அவ்ப் (றழி), ஸஅத் பின் அபீவக்காஸ் (றழி) ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றனர். இஸ்லாத்தை ஏற்ற இவர்களின் உழைப்பால் அம்மார் (றழி), ஹப்பாப் (றழி), அர்க்கம் (றழி), சஈது பின் ஸைது (றழி), அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (றழி), உத்மான் பின் மழ்ஊன் (றழி), அபூ உபைதா பின் ஜர்ராஹ் (றழி), சுஹைப் அர்றூமி (றழி) முதலானோர் அடுத்த கட்டமாக இஸ்லாத்தில் நுழைந்தனர்.

ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் உறவினர்களும் நெருங்கிய நண்பர்களுமாவர். முஹம்மது (ஸல்) அவர்களின்

தனி வாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு என்பவற்றை உள்ளும் புறமுமாக இவர்கள் அறிந்திருந்தனர். வாழ்வின் சகல துறைகளிலும் தூய்மையாக நடந்த நபி (ஸல்) அவர்கள், மக்களை ஒருபோதும் வழிகெடுக்கமாட்டார்கள் என்ற திடமான நம்பிக்கை இவர்களிடம் இருந்தது.

நபித்துவத்தின் முதல் மூன்று வருடங்களிலும் இஸ்லாமிய அழைப்பு மிகவும் இரகசியமாகவே நடந்தது. மலைச்சாரல்கள் ஒதுக்குப் புறங்களில் அவர்கள் இரகசியமாக வணக்கம் செலுத்தினர். இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கு இஸ்லாமியப் பயிற்சியளிக்கும் மத்திய தளமாக அர்க்கம் (றழி) அவர்களின் வீட்டை நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்தினார்கள்.

### பகிரங்க அழைப்பு

"ஆகவே, அல்லாஹ் உமக்களித்தவற்றை பகிரங்கமாக அறிவிப்பீராக" (15:94) என்றும் "நீர் உம்முடைய நெருங்கிய உறவினர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!" (26:214) என்றும், அல்லாஹ் அறிவித்தபோது, நபி (ஸல்) அவர்கள் தம் பாட்டனாரின் குடும்பத்தவர் அனைவரையும் விருந்துக்கு அழைத்து தனது தூதை எத்தி வைத்து, இஸ்லாத்தை ஏற்றால் இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஜெயம் பெறலாம் என்று அறிவுரை வழங்கினார்கள். அப்போது 13 வயதுச் சிறுவனாக இருந்த அலி (றழி) அவர்கள் நபியவர்களுக்கு உதவியாக இருப்பதாகக் கூறினார்கள். அங்கிருந்த ஏனையோர் நபிகளாரின் அழைப்பை நிராகரித்தது மட்டுமன்றி சிரித்து, ஏளனம் செய்து அங்கிருந்து கலைந்து சென்றனர்.

ஆபத்துக்களில் அவசர அழைப்பு விடுக்கும் ஜாஹிலிய்யாக்கால குறைஷியர் மரபைப் பின்பற்றி, ஸபா மலையில் ஏறி, தனது உறவினர்களை நபிகளார் அழைத்தார்கள். இவ்வாறு அழைத்தவர் முஹம்மத் என்பதால் எல்லோரும் அவ்விடத்துக்கு விரைந்து சென்றனர். நபியவர்கள் அவர்களை நோக்கி "இந்த மலைக்குப் பின்னால் ஒரு படை உங்களைத் தாக்க வருகின்றது என்று நான் சொன்னால் நீங்கள் நம்புவீர்களா?" என வினவினார்கள். அதற்கு அங்கு கூடியிருந்தோர் ஏகோபித்த குரலில் "நீர் பொய் சொன்னதாக நாங்கள் அறியமாட்டோம்" என பதிலளித்தனர். அப்போது நபியவர்கள் "குறைஷியர்களே! நான் அல்லாஹ்விடமிருந்து தூதொன்றைக் கொண்டு வந்திருக்கிறேன். உங்களை எச்சரிப்பவனாகவும், கடினமான தண்டனைகளைக் குறித்து முன்னறிவித்தல் செய்பவனாகவும் நான் உங்களிடம் வந்திருக்கிறேன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை என நீங்கள் ஏற்றுக் கொண்டு உறுதிமொழி பகராத வரையில் நீங்கள் பேரழிவை எதிர்நோக்குவீர்கள்" என எச்சரித்தார்கள். இதைக் கேட்டு ஆத்திரமடைந்த நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தையாகிய அபூலஹப் "உனக்குக் கேடுதான், இதற்காகவா எங்களை அழைத்தாய்" என்று நபியவர்களை ஏசினான். இவ்வேளையிலேயே, அவனைச் சபித்து ‘சூறத்துல் லஹப்’ எனும் அத்தியாயத்தை அல்லாஹ் அருளினான்.

## பிரசாரத்தின் விளைவுகள்

பகிரங்க அழைப்பு விடுக்குமாறு அல்லாஹ் ஏவியதற்கேற்ப முஹம்மது (ஸல்) அவர்கள் கஃபாவின் முன் நின்று இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். தமது கடவுளர்க்கும் கஃபாவுக்கும் இழைக்கப்பட்ட அவமானம் இது என்று கருதிய குறைஷியர் முஹம்மது (ஸல்) அவர்களையும் அவரது நண்பர்களையும் தாக்கினார்கள். உதவிக்காக ஓடி வந்த “அபூஷஅலா” எனும் முஸ்லிம் சகோதரர் குறைஷியரைச் சாந்தப்படுத்த முயற்சித்தபோது கடுமையான காயங்களுக் குள்ளானார்கள். அதனால் அவர் இறையடியெய்தினார். இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற முதல் உயிர்த்தியாகம் இதுவாகும். இதன் பின் முஸ்லிம்கள் பலர் சித்திரவதைகளுக்கும், சொல்லொணாத் துன்பங்கள் பலவற்றுக்கும் உட்படுத்தப்பட்டதுடன் அன்னை சுமையா (றழி) குறைஷியரால் கொலை செய்யப்பட்டார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாமியத் தூதை முன்வைத்த போது, குறைஷியர் அதனை நிராகரித்ததுடன் நபியவர்களின் பிரசாரத்தைத் தடை செய்வதற்கும் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டார்கள்.

முதலில் இஸ்லாத்தையும், நபி (ஸல்) அவர்களையும் பரிகசிக்கும் வகையில் இழிவான கவிதைகளைப் புனையும்படி கவிஞர்களைத் தூண்டினர். இம்முயற்சி பலனளிக்காததால் நபியவர்களுக்கு ஏமாற்றுக்காரர், பைத்தியக்காரர், குறி சொல்பவர், வித்தை காட்டுபவர் எனப் பல பட்டப் பெயர்களைச் சூட்டி எதிர்ப் பிரசாரத்தை மேற்கொண்டார்கள்.

குறைஷியரின் இத்தகைய கூற்றுக்கள் நபி (ஸல்) அவர்களது உள்ளத்தைப் பெரிதும் உறுத்தின. ஆதலால், குறைஷியரின் அத்தகைய சாடுதல்களுக்கு அல்லாஹ்வே அல்குர்ஆன் ஊடாக தக்க பதிலளித்து, அவர்களைத் தன் பணியில் ஈடுபட உற்சாகப்படுத்தினான்.

> "(நபியே உம்மைப் பற்றி) அவர்கள் (கேவலமாகக்) கூறுபவை உம் இருதயத்தை நெருக்குகிறது என்பதை நிச்சயமாக நாம் அறிவோம். (அதை ஒரு சிறிதும் பொருட்படுத்தாதீர்)"(15:97)

> "(நபியே), நீர் உமதிறைவனின் அருளால், பைத்தியக்காரர் அல்ல. நிச்சயமாக உமக்கு முடிவுறாத (நீடித்த) ஒரு கூலி இருக்கிறது. நிச்சயமாக நீர் மகத்தான நற்குணங்கள் உடையவராக இருக்கிறீர்". (68 : 2-4)

> "(மக்காவாசிகளே, நம்முடைய தூதரான) உங்களுடைய சினேகிதர் பைத்தியக்காரர் அல்லர்". (82:22)



6-CM 14795

மேற்படி வசனங்கள் மூலம் குறைஷியரின் கொடுமைகளையும் பரிகசிப்புக்களையும் பொருட்படுத்தாது தம் பணியை முன்னெடுக்குமாறு அல்லாஹ் ஆர்வமூட்டியுள்ளதைக் காண முடிகிறது.

குறைஷியரின் மேற்படி நடவடிக்கைகள் பலனளிக்காததால் நபி (ஸல்) அவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் உடல் ரீதியான கொடுமைகளைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் க.்.பாவில் தொழுது கொண்டிருந்தபோது, உக்பா இப்னு அபீ முஈத் என்பவன் ஒரு துணியைக் கொண்டு வந்து அவர்களின் கழுத்தில் சுற்றி இழுத்தான். அச்சந்தர்ப்பத்தில் அவ்விடத்துக்கு வந்த அபூபக்கர் (றழி) அவர்கள் உக்பாவை ஒரு புறம் தள்ளி, நபியவர்களைக் காப்பாற்றினார்கள். இவ்வாறே ஒரு முறை அபூபக்கர் (றழி) அவர்கள் க.்.பாவில் வைத்து, இஸ்லாத்தில் இணைந்து கொள்ளுமாறு குறைஷியருக்குப் பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்கள். இதனால் அபூபக்கர் (றழி) அவர்கள் குறைஷியரினால் கடுமையாகத் தாக்கப்பட்டு, அன்று பகல் முழுவதும் மயக்கமுற்றிருந்தார்கள்.

பனூதமீம் கோத்திரத்தைச் சேர்ந்த ஹப்பாப் (றழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றமைக்காக நெருப்புத் தழல்களில் படுக்க வைக்கப்பட்டார். அம்மார் பின் யாஸிர் (றழி) அவர்களின் குடும்பமே சித்திரவதைக்குள்ளானது. பிலால் (றழி) அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள்.

என்னதான் சித்திரவதைகள் செய்தாலும், முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமிருந்ததால் குறைஷியர்கள், நபியவர்களைத் தனது பிரசாரத்திலிருந்து திசை திருப்புவதற்கான வழிவகைகளைக் கையாண்டார்கள். நபியவர்களிடம் வந்து "உமக்கு செல்வம் வேண்டுமென்றால் உம்மைச் செல்வந்தனாக்குகின்றோம், உம்முடைய நோக்கம் அந்தஸ்தும், அதிகாரமும் என்றால் நாம் உம்மை எமது தலைவராக்கி விடுகிறோம். ஜின்களின் பார்வையால் நீர் நோய்வாய்ப்பட்டு, குணமாக்க சக்தியில்லையென்றால், எமது செல்வத்தை யெல்லாம் செலவிட்டு, நல்லதொரு வைத்தியர் மூலம் பரிகாரம் தேடுகிறோம்" என்று கூறி, இஸ்லாமியப் பிரசாரத்தைக் கைவிடும்படி வேண்டினார்கள். எனினும், நபியவர்கள் இவை எதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இவை எதுவுமே பலன் தராததால் அபூதாலிபிடம் சென்று "அம்மார் இப்னு முகீராவை உங்களது வளர்ப்பு மகனாக எடுத்துக் கொண்டு, முஹம்மதை எம்மிடம் ஒப்படைத்து விடுங்கள்" என்று அவரை வேண்டிக் கொண்டார்கள். தங்களது இந்த முயற்சியும் பலனளிக்காததால், "எங்களால் இனியும் பொறுக்க முடியாது, முஹம்மதை இந்தப் பிரச்சாரத்திலிருந்து தடுத்து நிறுத்துங்கள் அல்லது அவரை விட்டு நீங்கள் ஒதுங்கி விடுங்கள்" என அபூதாலிபை வற்புறுத்தினர். எனவே, அபூதாலிபும் மனம் மாறி பொறுமையிழந்து நபியவர்களைத் தன்னிடம் அழைத்து நிலைமையை விளக்கி அவர்களது கொள்கையை விட்டு விடுமாறும் இதற்கு மேல் தன்னால் பொறுத்துக் கொள்ள முடியாது என்றும் வற்புறுத்தினார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்களோ, ஒரு கையில் சூரியனையும், மறு கையில் சந்திரனையும் தந்தாலும் எனது கொள்கையை விட்டு விலகமாட்டேன் என்று உறுதியுடன் கூறினார்கள். நபியவர்களின் உறுதியைக் கண்ட அபூதாலிப் "நீ உனது கொள்கையிலேயே தொடர்ந்திரு. உனக்கு நான் உதவியாயிருக்கிறேன்" என தனது நிலையை மாற்றிக் கொண்டு உறுதியாகக் கூறினார்.

முஸ்லிம்களது உறுதிநிலையைக் கண்ட காபிர்கள் அவர்களைத் துன்புறுத்துவதை அதிகரிக்கத் தொடங்கினர். இவ்வாறு எதிர்ப்புக்களும், துன்புறுத்தல்களும் அதிகரித்தபோது நபி (ஸல்) அவர்கள் பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொண்டார்கள். முதல் நடவடிக்கையாக நுபுவ்வத் ஐந்தாம் ஆண்டு பதினொரு ஆண்களும் நான்கு பெண்களுமாக மொத்தம் பதினைந்து பேரை அபிஸீனியாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

### அபீஸீனிய ஹிஜ்ரத்

நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பகிரங்கமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தது முதல் குறைஷியர் முஸ்லிம்களுக்குப் பல துன்பங்களைக் கொடுக்க ஆரம்பித்தார்கள். அவர்களது கொடுமைகளிலிருந்து முஸ்லிம்களைப் பாதுகாக்கும் சக்தி அப்போதைக்கு நபி (ஸல்) அவர்களுக்கோ, ஸஹாபாக்களுக்கோ இருக்கவில்லை. ஆதலால், செங்கடலுக்கு மறுகரையிலுள்ள அபீஸீனியாவுக்குச் சென்று வாழுமாறு நபியவர்கள் முஸ்லிம்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

நபியவர்களின் ஆலோசனையின்படி நுபுவ்வத் ஐந்தாம் ஆண்டு, ரஜப் மாதம் பதினொரு ஆண்களும் நான்கு பெண்களுமாக மொத்தம் பதினைந்து பேர், மிகவும் இரகசியமாக அபீஸீனியா நோக்கிப் புறப்பட்டனர். செங்கடற் கரையை அடைந்தபோது, இரு வர்த்தகக் கப்பல்கள் மறு கரைக்குச் செல்லத் தயாராகிக்

கொண்டிருந்தன. அவற்றில் தலைக்கு ஐந்து திர்ஹம் வீதம் செலுத்தி மறு கரையை அடைந்தனர்.

அபீஸீனியாவை அடைந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் உமர் (றழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றதைக் கேள்வியுற்ற அவர்கள் இனிமேல் மக்காவில் அச்சமின்றி வாழலாம் என்றெண்ணி மீண்டும் மக்காவுக்குத் திரும்பி வந்தனர். எனினும், நிலைமை முன்னரை விடவும் மோசமாக இருந்ததால் மக்காவிலிருந்த ஏனைய முஸ்லிம்களில் சிலரையும் அழைத்துக்கொண்டு மொத்தமாக எண்பத்து மூன்று பேர் மீண்டும் இரகசியமாக அபீஸீனியாவைச் சென்றடைந்தனர். இந்நிகழ்வே வரலாற்றில் 'முதலாம் ஹிஜ்ரத்' என அழைக்கப்படுகிறது.

அபீஸீனியாவைச் சென்றடைந்த முஸ்லிம்கள், அங்கு நிம்மதியாக வாழ்வதைக் கேள்வியுற்று ஆத்திரமடைந்த குறைஷியர், அப்துல்லாஹ் பின் ரபீஆ, அம்ரிப்னு ஆஸ் ஆகிய இருவரையும் அபீஸீனிய மன்னனைச் சந்தித்து முறையிடுவதற்காக அன்பளிப்புப் பொருட்களுடன் அனுப்பி வைத்தனர். அவ்விருவரும் மன்னனைச் சந்திப்பதற்கு முன்னர், அரசவையிலுள்ள மத குருமாரையும், பிரமுகர்களையும் சந்தித்து. அவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களை வழங்கி, அவர்களது ஆதரவையும் பெற்றுக் கொண்டனர். மறுநாள் அரசவைக்குச் சென்ற அவர்கள் மன்னனிடம் தமது முறைப்பாட்டைத் தெரிவித்து, அபீஸினியாவில் தஞ்சம் புகுந்துள்ள முஸ்லிம்களைத் தம்மிடம் மீள ஒப்படைக்க வேண்டுமெனக் கோரி நின்றனர். நீதி தவறா மன்னனான நஜ்ஜாஸி, தனது நாட்டுக்குள் அடைக்கலம் தேடி வந்துள்ள முஸ்லிம்களை விசாரிக்காது, அவர்களை மக்காவுக்குத் திருப்பியனுப்ப விரும்பாததால், அவர்களை விசாரணைக்காக அழைத்து, குறைஷியரின் குற்றச்சாட்டை எடுத்துக் கூறி, அவர்களது புதிய மார்க்கத்தைப் பற்றி வினவினார். முஸ்லிம்கள் அலி (றழி) அவர்களின் சகோதரரான ஜ.்.பர் இப்னு அபீதாலிப் (றழி) அவர்களை முன்னிலைப்படுத்தினர். ஜ.்.பர் இப்னு அபீதாலிப் (றழி) அவர்கள் மன்னனின் கேள்விக்குப் பின்வருமாறு விடையளித்தார்கள்.

"மாட்சிமை தாங்கிய மன்னர் அவர்களே, நாங்கள் அறியாமையில் மூழ்கியிருந்தோம்; சிலைகளை வணங்கிக் கொண்டிருந்தோம்; செத்த மிருகங்களின் மாமிசத்தை உட்கொண்டோம்; அயலவர்களைக் கொடுமைப்படுத்தினோம்; சகோதரர்களுடன் சண்டை பிடித்தோம்; பலமில்லாத எளியவர்களைக் கொடுமைப்படுத்தினோம். இவ்வாறு நாம் வாழ்ந்து கொண்டிருந்த போது அல்லாஹ்,

எம்மீது அருள்கூர்ந்து எம்மிலிருந்த ஒருவரைத் தனது தூதராக அனுப்பி வைத்தான். ஏற்கனவே நம்பிக்கையும் நாணயமும் உடையவராக அறியப்பட்டிருந்த அவர், எங்களை இஸ்லாத்தின் பால் அழைத்தார். சிலை வணக்கத்தைத் தவிர்க்குமாறும், அநாதைகளின் சொத்துக்களை அபகரிக்க வேண்டாம் என்றும், கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூற வேண்டாம் என்றும் தொழுது, நோன்பு நோற்று, தர்மம் கொடுக்குமாறும் ஏவியுள்ளார். நாம் அவரை நம்பினோம். இதற்காகவே மக்காவாசிகள் எங்களை எதிர்க்கிறார்கள். எங்களுக்குத் தொல்லை தருகிறார்கள். எங்களைச் சித்திரவதை செய்து, எம்மைக் கொன்று விடவும் முயற்சிக்கின்றார்கள். இதனாலேயே நாம் இங்கு அடைக்கலம் புகுந்துள்ளோம். எமது வீடுகளில் வசிக்க மக்காவாசிகள் எங்களை அனுமதித்திருந்தால், நாம் எமது வீடுகளை விட்டுவிட்டு இங்கு வந்திருக்க வேண்டியதில்லை" எனக் கூறி முடித்தார்.

ஜ∴பர் இப்னு அபீதாலிப் (றழி) அவர்களின் இந்த விளக்கம் நஜ்ஜாஸி மன்னனின் உள்ளத்தைத் தொட்டது. ஆதலால், அல்குர்ஆனின் ஆயத்துகள் சிலவற்றை ஓதுமாறு அவர் கேட்டபோது, ஜ∴பர் (றழி) அவர்கள் சூறா மர்யமின் முதல் முப்பத்து மூன்று ஆயத்துகளை ஓதிக் காண்பித்தார்கள். இதைக் கேட்ட மன்னர் இந்த இறை வாக்கும் இன்ஜீலும் ஒரே விளக்கின் இரு சுடர்கள் என்றும், எதிர்காலத்தில் ஒரு நபி தோன்றுவார் என்று ஈஸா (அலை) அவர்கள் முன்னறிவிப்புச் செய்த நபி இந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் தான் என்று தான் சாட்சி கூறுவதாகவும் தெரிவித்து குறைஷியரின் வேண்டுகோளை நிராகரித்தார்.

தமது முயற்சியில் தோல்வி கண்ட குறைஷியர் மறுநாள் புதியதோர் உத்தியுடன் மன்னர் நஜ்ஜாஸியைச் சந்தித்து, "முஸ்லிம்கள் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ்வின் மைந்தர் என்று நம்புவதில்லை; மர்யமின் மகன் என்றே அழைப்பர். இது கிறிஸ்தவர்களின் நம்பிக்கைக்கு முரண்பட்ட செயல்" என்று முறையிட்டனர். இதைக் கேட்ட மன்னர், முஸ்லிம்களை மீண்டும் அரசவைக்கு அழைத்தார். இவ்வழைப்பால் முஸ்லிம்கள் அச்சமடைந்த போதிலும், உண்மையைப் பேசுவது என்ற உறுதியுடன் அரசவைக்குச் சென்றனர். அவர்களை நோக்கி மன்னர் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி வினவினார். அதற்கு அவர்கள் "ஈஸா (அலை) அல்லாஹ்வின் அடியாரும், அவனது தூதரும், அவனது ரூஹும் ஆவார் என்று எங்கள் நபி எங்களுக்கு அறிவித்துள்ளார்" எனக் கூறினார்கள். இதைக் கேட்ட மன்னர் தரையில் இருந்த ஒரு துரும்பைப் பொறுக்கி எடுத்து, அல்லாஹ்வின் மீது ஆணையாக ஈஸா (அலை) அவர்கள் நீங்கள் குறிப்பிட்டதை விட இந்தத் துரும்பின் அளவு கூட கூடிய அந்தஸ்துடையவரல்லர் என்று கூறி, குறைஷியரைத் திருப்பியனுப்பியதோடு, முஸ்லிம்களைத் தனது நாட்டில் கண்ணியமாக வாழவும்

விட்டார். பின்னர் அவர் இஸ்லாத்தைத் தழுவியமையும், அவர் மரணித்த பின்னர் நபி (ஸல்) அவர்கள் அவருக்காக மதீனாவில் ஜனாஸாத் தொழுகை தொழுவித்தமையும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

முஸ்லிம்களின் அபீஸீனிய ஹிஜ்ரத் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். முஸ்லிம்கள் தம் கொள்கை மீது கொண்டிருந்த பற்றையும், அதனைக் காப்பதற்கு எத்தகைய தியாகங்களையும் செய்ய அவர்கள் தயாராக இருந்ததையும் அது காண்பிக்கிறது. தமது கொள்கைக்காக அவர்கள் தமது சொத்து, சுகம், வீடுவாசல், குடும்பம், உறவினர் முதல் அனைவரையும் துறந்தார்கள். யத்ரிபுக்கு ஹிஜ்ரத் செல்வதற்கும் இது ஒரு முன்னோடி நிகழ்ச்சியாக அமைந்தது எனலாம்.

**தாயிப் சம்பவம்**

குறைஷிகளின் துன்புறுத்தல்கள் அதிகரித்தபடியால் முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவாசிகள் மீது நம்பிக்கை இழந்த நிலையில், மக்காவுக்கு வெளியே தனது தூதுத்துவத்துக்கு ஆதரவு தேடி அயல் நகரமான தாயிபுக்குச் செல்ல ஆயத்தமானார்கள். தாயிப் நகரம் மக்காவுக்கு கிழக்கே ஐம்பது மைல் தொலைவிலுள்ள செல்வச் செழிப்புமிக்க நகரமாகும். அங்கு வாழ்ந்த மக்கள் சிறந்த வசதிவாய்ப்புக்கள் உடையவர்களாக காணப்பட்டனர். இம்மக்கள் தமது போதனைகளுக்குச் செவி சாய்க்கலாம் என எதிர்பார்த்த நபியவர்கள், நுபுவ்வத்தின் பத்தாம் ஆண்டு இறுதியில், தமது வளர்ப்பு மகன் ஸைத் பின் ஹாரிதா (றழி) அவர்களையும் அழைத்து கொண்டு தாயிப் நோக்கிப் புறப்பட்டார்கள். செல்லும் வழியில் மக்கள் காணப்பட்ட இடங்களிலெல்லாம் இஸ்லாமிய பிரசாரத்தைச் செய்து கொண்டே தாயிப் நகரத்தை அடைந்தார்கள்.

முதலில் நபியவர்கள் தகீப் கோத்திரத்தின் உமைர் கிளையைச் சேர்ந்த மூவரைச் சந்தித்தார்கள். அப்போது, தாயிப் நகரத்தில் வாழ்ந்த கோத்திரங்கள் அனைத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தியவர்கள் இவர்களேயாவர். இவர்களிடம் தமது தூதுத்துவத்தைப் பற்றி விளக்கிக் கூறிய நபியவர்கள் தமது பிரசாரப் பணிக்கு ஒத்துழைப்பு நல்குமாறும் இவர்களை வேண்டிக் கொண்டார்கள். எனினும், அவர்கள் ஒவ்வொருவரும் அளித்த பதில்கள் நபியவர்களது உள்ளத்தை மிகவும் புண்படுத்தியது. "உண்மையில் அல்லாஹ் உம்மையே தனது தூதராக அனுப்பியிருந்தால், நான் க.்.பாவின் போர்வையைக் கிழித்து விடுவேன்" என்று அவர்களுள் ஒருவன் ஆவேசப்பட்டான். "தூதராக அனுப்புவதற்கு அல்லாஹ்வுக்கு உம்மைவிடச் சிறந்த வேறொருவர் கிடைக்க வில்லையா?" என்று இரண்டாமவன் பரிகசித்தான். "அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நான் எந்த வகையிலும் உம்மோடு பேச முடியாது. நீர் கூறுவது போல் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒரு நபியாக நீர் இருந்தால், உம்முடன் பேசுவதற்கு நான் தகுதியற்றவன் அவ்வாறில்லா மல், நீர் ஒரு பொய்யனாக இருந்தால், அப்படிப்பட்ட பொய்யனோடு பேச நான் விரும்பவில்லை" என்று மூன்றாமவன் கூறினான்.

இவர்களது இந்த பதில்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மன வேதனையை அளித்த போதிலும், அவற்றைப் பொறுமையோடு தாங்கிக் கொண்டார்கள். தமது எதிர்ப்பை இந்த பதில்களோடு மட்டும் நிறுத்திக்கொள்ள விரும்பாத அந்த மனிதர்கள் சிறுவர்களை ஏவி, நபியவர்கள் மீது கற்களை வீசித் தாக்கி நகரத்தை விட்டே துரத்தி விட்டார்கள்.

இப்னு ஸ.்.தின் கூற்றுப்படி நபியவர்கள் தாயிபில் பத்து நாட்கள் தங்கியிருந்தார்கள். பின்னர், மக்காவிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள 'நக்லா' எனும் கிராமத்திற்குச் சென்று, அங்கே சில நாட்கள் தங்கினார்கள். பின்னர் மக்காவுக்குத் திரும்பி, தமது ஏகத்துவப் பிரசாரத்தை மீண்டும் ஆரம்பித்தார்கள்.

## ஷி:.பு அபீதாலிப் பகிஷ்கரிப்பு

இஸ்லாத்தின் பரவலைத் தடுக்க குறைஷியர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எதுவும் வெற்றியளிக்காததால், ஹாஷிமிக்கள் தாமாகவே முன்வந்து, முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொலை செய்வதற்காகத் தம்மிடம் ஒப்படைக்கும்வரை ஹாஷிமிக்கள் அனைவரையும் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பகிஷ்கரிப்பதாக முடிவெடுத்தனர். முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொலை செய்வதற்காக ஒப்படைக்காத வரை பனூ ஹாஷிம்களுடனோ, பனூ முத்தலிப்களுடனோ விவாகத் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை என்றும், அவர்கள் மீது கருணை காட்டுவதில்லை என்றும் ஒரு பிரகடனத்தை எழுதி, அதற்கான அங்கீகாரத்தை அனைத்துக் கோத்திரங்களிடமும் பெற்று க.்.பாவின் உட்புறத்தில் தொங்க விட்டனர். இம்முடிவை ஏனைய அனைத்துக் கோத்திரங்களும் அங்கீகரித்துச் செயற்படுத்தின. அதன் விளைவாக மக்காவிலிருந்து சற்று தூரத்திலுள்ள அபூதாலிபுக்குச் சொந்தமான 'ஷி.்.பு அபூதாலிப்' என்ற பள்ளத்தாக்கில் நுபுவ்வத் 07 - 10 வரை தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டனர். இம்முடிவின் காரணமாக அவர்களுடன் எந்தப் பண்டமாற்றும் இடம்பெற அனுமதிக்கப்படவில்லை. எல்லாவித வர்த்தகத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இதனால் உணவுப் பொருட்களின் விநியோகம் தடைப்பட்டது. மக்கள் பட்டினியால் வாடினர். காய்ந்த தோலைக் கொதிக்க வைத்து, அதன் பானத்தை அருந்தினர். பசியின் கொடுமையால் சிறுவர்கள் அழுத போது அந்த அழுகைக் குரலைக் கேட்டு கடின சித்தமுடைய குறைஷியர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். எனினும், இந்த அவல நிலை சில குறைஷிக் காபிர்களின் உள்ளத்தைக் கசிய வைத்தது. 'ஹகீம் பின் ஹதம்' என்பவர் மிகவும் இரகசியமாக உணவுப் பண்டங்கள் அடங்கிய பொதிகளை ஒட்டகங்களில் ஏற்றி, ஷி.்.பு அபூதாலிப் பக்கமாகத் துரத்தி விட்டார். 'ஹாசிம் பின் அம்ரு' என்பவரும் இவ்வாறு இரகசியமாக உணவுப் பண்டங்களை அனுப்பி வைத்தார். குறைஷியரின் இத்தடுப்பு நடவடிக்கை காரணமாக கண்ணியமிக்க மாதங்களாகக் கணிக்கப்பட்ட நான்கு மாதங்களில் ஹஜ்ஜுக்காக மக்காவுக்கு வெளியே வாழ்ந்த அரேபியர்கள் அங்கு வந்த போது அவர்களுடன் முஸ்லிம்கள் தொடர்பு கொண்டனர். தம் கொள்கையைக்

காப்பதற்காக முஸ்லிம்கள் படும் துன்ப துயரங்களைக் கண்டு அவர்களின் உள்ளங்கள் அனுதாபப்பட்டன. அதனால், பலர் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்டனர்.

மூன்றாண்டுகளின் பின் க.்.பாவினுள் சென்று பார்த்தபோது அங்கு தொங்கவிடப்பட்டிருந்த பிரகடனத்தில் 'அல்லாஹ்வின் திருநாமத்தால்' என்று எழுதப்பட்டிருந்த பகுதியைத் தவிர்த்து ஏனைய அனைத்துப் பகுதிகளையும் கறையான்கள் உண்டு முடித்திருப்பதைக் கண்டு வியப்புற்றவர்களாக ஹாஷிமிய்யாக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை அகற்றி அவர்களை விடுவித்தனர்.

## அகபா உடன்படிக்கை / உறுதிமொழி

### அரசியல் பின்னணி

இஸ்லாமியக் கோட்பாடு பரவலாக ஏற்கப்படுவதற்கும் அதனை ஏற்றோர் பாதுகாப்பாக வாழ்வதற்குமான களங்களைத் தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்த நபி (ஸல்) அவர்கள், இம்முயற்சியின் மற்றுமொரு நடவடிக்கையாக தாயிப் சென்றார்கள். இப்பயணம் வெற்றியளிக்காதபோதும் நபியவர்கள் தனது முயற்சியைக் கைவிடவில்லை. இவ்விலக்கை அடைவதற்காகவே யத்ரிபிலிருந்து ஹஜ்ஜுக்காக வந்த அவ்ஸ், கஸ்ரஜ் குழுவினருடன் தொடர்பு கொண்டார்கள். இத்தொடர்பு வலுவடைந்தபோது நபியவர்கள் யத்ரிப் வாசிகளுடன் 'அகபா' எனுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். இவ்வுடன்படிக்கையே இஸ்லாமிய வரலாற்றில் 'அகபா உடன்படிக்கை' என்று அழைக்கப்படுகின்றது. முஸ்லிம் சமூக அமைப்பு அதன் பாதுகாப்பு என்பவற்றைப் பொறுத்தவரை மிக முக்கியத்துவம் வாய்ந்த இவ்வுடன்படிக்கையே நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட முதலாவது அரசியல் உடன்படிக்கையாகும்.

இக்காலப்பகுதியில் மக்காவிலோ, யத்ரிப் நகரிலோ குடிமக்கள் எல்லோரையும் கட்டுப்படுத்திப் பரிபாலிக்கக்கூடிய 'அரசு' என்று கருதத்தக்க எந்தவொரு தாபனமும் இருக்கவில்லை. இரு நகர்களிலும் வாழ்ந்த முக்கிய கோத்திரங்கள் தமது உறுப்பினர்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. அக்கோத்திரங்கள் ஒன்றினை விஞ்ச மற்றொன்று போராடியதை காண முடிந்தது. எனினும் நுபுவ்வத்தின் பின் மக்காவாசிகள் தமது கோத்திரப் பகைமைகளை மறந்து இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்ப்பதில் ஒன்றுபடலாயினர். மக்காவின் பரிபாலனம், பொருளாதார வளம், ஆட்பலம் என்பனவும் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பும் இக்கோத்திரங்களிடம் இருந்ததால் மக்காவுக்கு வெளியேயுள்ள கோத்திரங்களிலும்

இவர்களது செல்வாக்கை ஓரளவு காண முடிந்தது. இவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் வெறுத்ததோடு தமது பாரம்பரிய வாழ்க்கை முறைக்கு சவால் விடுபவர்களாகக் கருதி, அவ்வாழ்க்கை முறைக்கு மீண்டும் திரும்புமாறு துன்புறுத்தினர். சமூக வாழ்வில் பங்கு கொள்ள இடமளிக்காது "ஷி∴பு அபூதாலிப்" எனுமிடத்தில் மூன்று வருடங்களாக ஒதுக்கி வைத்தனர். எனினும், முஸ்லிம்கள், மரபு ரீதியான தலைமைத்துவத்தைத் தாங்கிய இக்குழுவுக்குப் பயந்து தமது கொள்கைகளை விட்டுக் கொடுக்க ஒருபோதும் தயாராக இருக்கவில்லை.

யத்ரிபில் வாழ்ந்த குடிமக்களில் அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தவர்களும் யூதர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். யூதர்கள் அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரங்களுடன் பகைமை கொண்டு ஒன்றிற்கு எதிராக மற்றொன்றை மோதச் செய்வதில் வெற்றி கண்டனர். யூதர்களின் தூண்டுதலால் அடிக்கடி மோதிக்கொண்ட போதும் அவர்களிடையே நடைபெற்ற 'புஆத்' யுத்தம் மிகப் பயங்கரமானதாகும். இவ்யுத்தத்தில் இரு கோத்திரத்தாரும் தமது நீண்டகாலப் பகைமையையும், விரோதத்தையும் பயன்படுத்தி ஒருவரையொருவர் முற்றாகப் பழிதீர்த்துக் கொண்டனர். ஒவ்வொரு தரப்பினரும் தாம் வெற்றி பெற முடிந்தால் தமது எதிர்த்தரப்பில் ஒருவர் கூட எஞ்சியிராமல் ஒழித்துக் கட்டிவிட தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்தனர். போரின் முதற் கட்டத்தின்போது அவ்ஸ் கோத்திரத் தினர் தோல்வி கண்ட போதும் தமது தலைவரின் வார்த்தைகளால் உணர்வூட்டப்பட்ட வர்களாக மீண்டும் போர்க்களத்திற்குத் திரும்பி வந்து உறுதியோடும் ஊக்கத்தோடும் போராடியதன் விளைவாக கஸ்ரஜ் கோத்திரத்தினர் படுதோல்வி அடைந்தனர். இதனால் இரு கோத்திரங்களிலும் இழப்பு ஏற்பட்டது. இதன் விளைவாக யூதர்கள் தமது அரசியல், பொருளாதார செல்வாக்கை நிலைநாட்டிக் கொண்டனர். அத்துடன் அவர்கள் ஒரு புதிய நபி தோன்றப் போகிறார் என்றும், அவரை அழைத்து வந்து உங்கள் அனைவரையும் பூண்டோடு அழித்து விடுவோம் என்றும் அரேபியர்களை அடிக்கடி அச்சுறுத்தி வந்தனர்.

இதன் பின்னர் தான் அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தவர்கள் யூதர்களின் சதிக்குள்ளாகித் தாம் பேரிழப்படைந்ததாகக் கருதினர். தம்மிடையே மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்தி கஸ்ரஜ் கோத்திரத்தவரான அப்துல்லாஹ் பின் முஹம்மத் என்பவரைத் தம் தலைவராக்கிக் கொண்டனர். இப்பின்னணியில்தான் யாத்திரை வந்த நேரத்தில் அகபா எனுமிடத்தில் நபிகளாரைச் சந்தித்தனர். முஹம்மத் (ஸல்) அவர்கள் தன்னை இறைத்தூதர் என்று அறிமுகப்படுத்தியபோது யூதர்கள் நபிகளாரை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு தாம் ஏற்றுக் கொண்டு தம் கையைப் பலப்படுத்த வேண்டும் என்று கருதினார்கள்.

யத்ரிபில் யூதர்களுக்கு எதிராக தம்மை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தவரும் மக்காவில் குறைஷிக் காபிர்களின் கொடுமையிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வழி தேடிய முஹம்மத் (ஸல்) அவர்களும் ஹஜ் காலத்தின்போது கி. பி. 621 இல் அகபா எனுமிடத்தில் ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டனர். இதுவே முதலாவது அகபா உடன்படிக்கை என அழைக்கப்படுகிறது. அடுத்த ஆண்டும் அதே இடத்தில் அவ்வுடன்படிக்கையுடன் மேலும் ஒரு நிபந்தனையைச் சேர்த்து நபியவர்களின் கையில் வாக்குறுதி யளித்தார்கள். இது இரண்டாம் அகபா உறுதிமொழி என்று அழைக்கப்படுகிறது. இப்பின்னணியில் இவ்வுறுதிமொழியை நோக்கும் போது ஒடுக்கப்பட்ட இரு குழுவினர் தம்மை பலப்படுத்திக் கொள்வதற்காக செய்து கொண்ட உடன்படிக்கையாக இருப்பதை அவதானிக்கலாம்.

இவ்வுறுதிமொழி நபி (ஸல்) அவர்களுக்கும் யத்ரிப் வாசிகள் பன்னிருவருக்கும் இடையில் கி. பி. 621 இல் பரிமாறிக்கொள்ளப்பட்டதாகும். அதிற் பின்வரும் நிபந்தனைகள் இடம்பெற்றிருந்தன.

1. அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் சிரம் சாய்ப்பதில்லை.
2. களவு எடுப்பதில்லை.
3. விபச்சாரம் செய்வதில்லை.
4. தமது குழந்தைகளைக் கொலை செய்வதில்லை.
5. அறிந்து கொண்டே தீமைகள் புரிவதில்லை.
6. எந்தவொரு நன்மையான விடயத்திலும் இறைவனின் கட்டளை களையேற்று அவனுக்குக் கீழ்படியத் தவறுவதில்லை.

நற்செயல்களும், பணிவும் கொண்ட இவ்வாழ்க்கை முறையைக் கைக் கொண்டால், அதற்குரிய பிரதிபலனாக மறுமையில் சுவர்க்கம் கிடைக்கும் என்ற திருப்தியோடு அவர்கள் யத்ரிபுக்குத் திரும்பிச் சென்றனர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க யத்ரிபில் குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதற்காகவும், இஸ்லாமியப் பிரசாரத்தில் ஈடுபடுவதற்காகவும் அவர்களுடன் முஸ்அப் இப்னு உமைர் (றழி) அவர்களையும் நபியவர்கள் அனுப்பி வைத்தார்கள். முஸ்அப் இப்னு உமைர் (றழி) அவர்கள் யத்ரிபில் தங்கியிருந்து அல்குர்ஆனையும் இஸ்லாமிய வாழ்க்கை முறையையும் போதிப்பதில் ஈடுபட்டார்கள். இவர்களது பிரச்சாரத்தின் காரணமாக யத்ரிபில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. அடுத்த ஆண்டு ஹஜ் காலம் நெருங்குவதற்கு முன்னர் முஸ்அப் இப்னு உமைர் (றழி) அவர்கள் மக்கா வந்து நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து

யத்ரிபில் இஸ்லாம் பரவியிருக்கும் நற்செய்தியையும், இஸ்லாமியப் பிரசாரம் செய்வதற்கு அங்கிருக்கும் சாதகமான நிலைமையையும் விளக்கி விட்டு மீண்டும் யத்ரிபுக்குத் திரும்பினார்கள்.

முதலாவது அகபா உடன்படிக்கை நிகழ்ந்து ஓராண்டின் பின்னர் அதாவது கி.பி. 622ல், 73 ஆண்களையும் இரு பெண்களையும் கொண்ட குழுவொன்று அகபா வெளியில் நபி (ஸல்) அவர்களை மிக இரகசியமான முறையில் சந்தித்தனர். நபி (ஸல்) அவர்கள் இவர்களுக்கு அல்குர்ஆனிலிருந்து சில வசனங்களை ஓதிக் காண்பித்து விட்டு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். இவர்கள் அங்கு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதுடன் நபியவர்களை யத்ரிபுக்கு வருமாறும் அழைத்தனர். அத்துடன் முதலாம் அகபா உடன்படிக்கையிலுள்ள நிபந்தனை களுடன் மேலும் ஒரு நிபந்தனையைச் சேர்த்து தமது பெண்களையும் பிள்ளை களையும் பாதுகாப்பது போல் நபியவர்களையும் பாதுகாப்பதாக நபி (ஸல்) அவர்களின் கரத்தைப் பிடித்து பைஅத் செய்தனர். இவ்வுடன்படிக்கையின்போது அதுவரையில் இஸ்லாத்தை ஏற்றிராதவரும் நபியவர்களின் சிறிய தந்தையுமான அப்பாஸ் (ரழி) அவர்களும் நபியவர்களுடன் இருந்தார்கள்.

இவ்வுடன்படிக்கையின் இலட்சியம் மிகத் தெளிவானது. அதன் நிபந்தனைகள் மட்டுமன்றி அவ்வுடன்படிக்கை நடந்த காலமும் சூழலும் அவ்விலட்சியத்தை மேலும் தெளிவாக்குகின்றன. குறைஷியர்களின் கொடுமைகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வழியேதுமின்றி இருந்த ஒரு சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்புத் தருவதாகக் கூறி அழைப்பு விடுத்தபோது பாதுகாப்பே முக்கிய பிரச்சினை என்பதால் வேறு நிபந்தனைகள் இன்றி அதனை ஏற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றி மேலும் சில கருத்துக்களுடன் இரு குழுவினரும் உடன்பட்டிருக் கிறார்கள் என்பது இவ்வுடன்படிக்கை பாதுகாப்பை மட்டுமன்றி உயர்ந்ததோர் இலட்சியத்தைக் கருத்திற் கொண்டிருந்தது எனலாம்.

முதலாம் அகபா உடன்படிக்கை இடம்பெற்ற அதே ஆண்டில் தான் மி∴ராஜ் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. இந்நிகழ்வு காலத்தில் அருளப்பெற்ற ‘பனூ இஸ்ராயீல்’ எனும் சூறா ஒரு முஸ்லிமிடம் தென்பட வேண்டிய ஒழுக்க மாண்புகளை அழகாகச் சுட்டிக் காட்டியுள்ளது. குறிப்பாக, அதன் 23-40 வரையிலான ஆயத்துக்களில் இவை விபரிக்கப்பட்டுள்ளன. இஸ்லாத்தின் அடுத்த வளர்ச்சிக் கட்டமான சமூக அமைப்புக்கு ஏற்பாடு செய்வது போன்ற அல்லது தகைமை ஆக்குவதற்குத் தேவையான குர்ஆன் ஆயத்துக்கள் அருளப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அகபா உடன்படிக்கை இடம்பெறுகிறது. ஆதலால்தான் அகபா உடன்படிக்கை பாதுகாப்பை மட்டுமன்றி யத்ரிபில் அமையப்போகும் சமூகத்தின் ஒழுக்க

மாண்புகளைப் பற்றியும் பேசுகிறது எனலாம். இக் கண்ணோட்டத்தில் இவ்வுடன்படிக்கையை ஆராய்ந்தால் முன்மாதிரியான ஒரு சமூகத்தை உருவாக்குவதே இவ்வுடன்படிக்கையின் நோக்கமாக இருந்தது எனலாம். இவ்வுடன்படிக்கைக்கு ஏற்ப நபிகளார் (ஸல்) யத்ரிப் சென்ற பின் எடுத்த நடவடிக்கைகள் எல்லாம் சமூக அமைப்பை கட்டியெழுப்புவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன என்பதும் நோக்கத்தக்கதாகும்.

இவ்வுடன்படிக்கையின் விதிகளும் இதனையே வலியுறுத்துகின்றன. இவ்வுடன்படிக்கையின் முதலாவது விதி மதீனாவில் அமையப்போகும் முஸ்லிம் சமூகம் இதுகாலவரை அரேபியாவில் இருந்த மரபு ரீதியான கோத்திர அமைப்புச் சமூகமாக அமையாது கொள்கை வழிச் சமூகமாக அமையும் என்பதைப் பிரகடனப்படுத்துகிறது.

2 - 5 வரையிலான விதிகள் இச்சமூகத்தில் வாழ்வோர் கொலை, களவு, விபச்சாரம் போன்ற கொடிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்பதனை வலியுறுத்துகின்றன. ஜாஹிலிய்யா சமூகத்தில் இத்தகைய பண்புகள் பாராட்டப்பட்டன. இதற்கு மாற்றமாக முஸ்லிம் சமூகத்தில் அவை முழுமையாக ஒழிக்கப்படும் என்பதையே இவ்விதிகள் பிரகடனப்படுத்துகின்றன. அதன் ஆறாம் விதி இச்சமூகத்தவர் நன்மையான, பயன்தரும் காரியங்களையே செய்வர் அதற்கு ஒருவருக்கொருவர் துணையாக இருப்பர் என்பதைப் பிரகடனப்படுத்து கின்றது.

ஆறாம், ஏழாம் விதிகள் இச்சமூகத்தின் தலைமைத்துவத்துக்கு முற்று முழுதாக கீழ்ப்படிவதையும் தமது உயிரை அர்ப்பணித்தேனும் அதன் தலைமைத்துவத்தை பாதுகாப்பது பற்றியும் பேசுகின்றன. இவ்விரு பண்புகளையும் பற்றிப் பேசுகின்ற குர்ஆன் வசனங்கள் பல இருக்கின்றன. இவற்றையெல்லாம் அவதானிக்கும்போது அகபா உடன்படிக்கை இஸ்லாமிய சமூக அமைப்பொன்றை உருவாக்குவதையே இலட்சியமாகக் கொண்டிருந்தது. இவ்விலட்சியத்துக்கு செயல் வடிவம் கொடுக்கவே இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்றார்கள் எனக் குறிப்பிடலாம்.

**மி∴றாஜ்**

நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம்பெற்ற மு.∴ஜிஸாத்களில் மி.∴றாஜ் மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் அல்குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளதுமான ஓர் அற்புதச் செயலாகும். நபி (ஸல்) அவர்களை

அல்லாஹ் தன் சந்நிதானத்துக்கு அழைத்து கண்ணியப்படுத்திய நிகழ்வு வரலாற்றில் ‘மி∴றாஜ்’ என அழைக்கப்படுகிறது. ஹிஜ்ரத்துக்கு ஒரு வருடத்துக்கு முன்பு ரஜப் மாதம் பிறை 27 இல், திங்கள் இரவில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது. மி∴றாஜ் நிகழ்வு இரு கட்டங்களைக் கொண்டது.

1. மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து பைத்துல் முகத்தஸிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸா வரை மேற்கொள்ளப்பட்ட பிரயாணம். இந்நிகழ்வு ‘அல் இஸ்ரா’ என அழைக்கப்படுகிறது.

2. மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து ஸித்ரதுல் முன்தஹா வரை மேற்கொள்ளப் பட்ட பிரயாணம். இந்நிகழ்வு ‘மி∴ராஜ்’ என அழைக்கப்படுகிறது. இப்பிரயாணம் பற்றி அல்குர்ஆனில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"தன் அடியாரை (க∴பாவாகிய) சிறப்புப் பெற்ற பள்ளியிலிருந்து (பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு இரவின் ஒரு பகுதியில் பயணம் செய்வித்தானே அத்தகையவன் மிகப் பரிசுத்தமானவன். (மஸ்ஜிதுல் அக்ஸாவாகிய) அது எத்தகையதென்றால் நாம் அதனைச் சூழவுள்ள பகுதிகளை அபிவிருத்தியடையச் செய்திருக்கிறோம். நம்முடைய அத்தாட்சி களை அவருக்குக் காண்பிப்பதற்காகவே அழைத்துச் சென்றோம். நிச்சயமாக (உமதிறைவனாகிய) அவன் செவியுறுவோனாகவும் உற்றுநோக்குபவனாகவும் இருக்கிறான்." (17:01)

"அன்றியும் நிச்சயமாக அவர் மற்றொரு முறை (ஜிப்ரீலை அவரது சுய உருவில்) இறங்கக் கண்டிருக்கிறார். ஸித்ரதுல் முன்தஹா எனும் (இலந்தை மரத்தின்) இடத்தில் (இக்காட்சி நிகழ்ந்தது). அவ்விடத்தில்தான் (நல்லடியார்கள்) தங்கும் சொர்க்கம் இருக்கின்றது. இலந்தை மரத்தை மூடிக் கொள்ளும் ஒன்று மூடிக் கொண்டபோது, (அதிலிருந்து அவரது) பார்வை சறுகிவிடவில்லை; (எல்லையைக்) கடந்து விடவுமில்லை. நிச்சயமாக அவர் தன் இரட்சகனின் அத்தாட்சிகளில் மிகப் பெரியதைக் கண்டார்". (53 : 13 – 18)

இஸ்லாமிய வரலாற்றில் க∴பதுல்லாஹ்விலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா சென்று அங்கிருந்து வானுலகில் உள்ள ஸித்ரதுல் முன்தஹா வரை சென்ற பயணம் மி∴ராஜ் என்ற பதத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

புகாரியிலும் முஸ்லிமிலும் ஏனைய நம்பத்தகுந்த ஹதீஸ் நூல்களிலும் இஸ்ரா∴ பற்றியும், மி∴ராஜ் பற்றியும் குறிப்பிடும் பல ஹதீஸ்கள் பதிவாகியுள்ளன.

ஒரு நாள் இரவு நபி (ஸல்) அவர்கள், அலி (றழி) அவர்களின் வீட்டில் படுத்திருந்தார்கள். அப்போது, ஜிப்ரீல் (அலை) அவர்கள் அவ்வீட்டின் கூரையைக் கிழித்து, அதனூடாக நபி (ஸல்) அவர்களை 'ஹதிம்' எனும் இடத்துக்குக் கூட்டி வந்தார்கள்.( ஹதிம் என்பது க.்.பாவுக்கும், மகாமே இப்றாஹீமுக்குமிடையில் உள்ள ஓர் இடமாகும்) அங்கு நபி (ஸல்) அவர்களின் நெஞ்சைப் பிளந்து, 'ஸம்ஸம்' நீரைக் கொண்டு இதயத்தைக் கழுவி, அதனை அறிவைக் கொண்டும் கருணையைக் கொண்டும் நிரப்பினார். அதன் பின்னர் 'புறாக்' எனப்படக்கூடிய ஒரு வாகனத்தைக் கொண்டு வந்தார்.

இவ்வாகனத்தில் நபி (ஸல்) அவர்களை ஏற்றி, மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து பைத்துல் முகத்தஸிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்குக் கூட்டிச் சென்றார்கள். அங்கு ஏனைய நபிமார்களுடன் இரு ரக்அத்கள் தொழுதபின், அவ்விடத்திலிருந்து அல்லாஹ்வைத் தரிசிப்பதற்காக ஸித்ரதுல் முன்தஹா வரை ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூட்டிச் சென்றார்கள். செல்லும் வழியில் முதலாம் வானத்தில் ஆதம் (அலை) அவர்களையும், இரண்டாம் வானத்தில் யஹ்யா (அலை), ஈஸா (அலை) அவர்களையும், மூன்றாம் வானத்தில் யூசுப் (அலை) அவர்களையும், நான்காம் வானத்தில் இத்ரீஸ் (அலை) அவர்களையும், ஐந்தாம் வானத்தில் ஹாரூன் (அலை) அவர்களையும், ஆறாம் வானத்தில் மூஸா (அலை) அவர்களையும், ஏழாம் வானத்தில் இப்றாஹீம் (அலை) அவர்களையும் சந்தித்து ஸலாம் கூறினார்கள். அதன் பின் ஸித்ரதுல் முன்தஹாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு தினந்தோறும் எழுபதாயிரம் மலக்குகள் தவாபு செய்கின்ற 'பைத்துல் ம.்.மூர்' எனப்படுகின்ற, விண்ணுலகிலுள்ள ஆலயமும், சுவர்க்கமும், நரகமும் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டன. அங்கு வைத்தே அல்லாஹ்வுடன் நேரில் பேசும் பாக்கியத்தை நபி (ஸல்) அவர்கள் பெற்றார்கள்.

அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு நாள் ஒன்றிற்கு ஐம்பது நேரத் தொழுகையை அன்பளிப்பாக வழங்கினான். மீண்டு வரும் வழியில் மூஸா (அலை) அவர்களிடம் இவ்வன்பளிப்புப் பற்றிக் கூறிய போது, முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்தினர் ஐம்பது நேரத் தொழுகையைத் தினந்தோறும் நிறைவேற்றச் சக்தியற்றவர்கள். ஆதலால், மீண்டும் அல்லாஹ்விடம் சென்று, இவ்வெண்ணிக்கையைக் குறைத்து வருமாறு அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். இதைக் கேட்டு முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் சென்று முறையிட்டபோது, அல்லாஹ் பத்து நேரத் தொழுகையைக் குறைத்தான். இத் தொழுகையையும் நிறைவேற்றுவது சிரமம் என மூஸா (அலை) அவர்கள் அறிவுறுத்தியதால், மீண்டும் மீண்டும் சென்று, பத்துப் பத்தாகக் குறைத்து, இறுதியில் ஐந்து நேரத் தொழுயையாகக் குறைத்துக் கொண்டார்கள். அதனையும் குறைக்குமாறு மூஸா (அலை) அவர்கள் கேட்க, நபி (ஸல்) அவர்கள் வெட்கப்பட்டார்கள். இவ்வைந்து நேரத் தொழுகையும் ஐம்பது நேரத் தொழுகையின் நன்மைகளைப் பொதிந்துள்ளன.

நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் பைதுல் முகத்தஸுக்குச் சென்றதில்லை என்பதைக் காபிர்கள் அறிந்திருந்தனர். எனவே, அவர்களின் பிரயாணத்தின் உண்மைத் தன்மை பற்றி அறிய, பைதுல் முகத்தஸின் அமைப்புப் பற்றி 'முத்இம் இப்னு அதி' என்பவன் அவர்களிடம் விசாரித்தான். அச்சந்தர்ப்பத்தில் அல்லாஹ் பைதுல் முகத்தஸை நபியவர்களின் கண்களுக்குப் புலப்படச் செய்தான். அதனால், பைதுல் முகத்தஸை நேரடியாகக் கண்ணால் பார்த்து பதில் சொல்வது போல் நபி (ஸல்) அவர்கள் பதில் சொன்னார்கள். நபியவர்களின் பதிலைக் கேட்ட அபூபக்ர் (றழி) அவர்கள், உங்களை நான் அல்லாஹ்வின் இறைதூதர் என்று சாட்சியம் கூறுகிறேன் என உண்மைப்படுத்தியதனாலேயே அவர்களுக்கு நபியவர்கள் 'அஸ்ஸித்தீக்' என பெயர் சூட்டினார்கள்.

மி∴ராஜ் சென்று வந்தமை பற்றி நபி (ஸல்) அவர்கள் அறிவித்தபோது, முஸ்லிம்களில் சிலரும், முஸ்லிம் அல்லாதோரும் அதற்கான ஆதாரங்களைத் தருமாறு கேட்டனர். தான் பைதுல் முகத்தஸுக்குச் செல்லும் வழியில் வர்த்தகக் குழு ஒன்றைச் சந்தித்ததாகவும், அக்குழுவின் ஒட்டகக் கூட்டத்திலிருந்து வழி தவறிச் சென்ற ஒட்டகையொன்று இருக்கும் இடத்துக்கு அக்குழுவின் தலைவனைத் தாம் கூட்டிச் சென்று காட்டியதாகவும் அக்குழுவின் ஒட்டகைகளில் சுமந்து சென்ற தண்ணீர்க் கூசா ஒன்றிலிருந்து தான் தண்ணீர் அருந்தியதாகவும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். குறைசியர் அக்குழுவின் தலைவனைச் சந்தித்து இது பற்றி விசாரித்த போது, அவன் நபியவர்களின் கூற்றை உண்மைப்படுத்தினான்.

மி∴ராஜின் போது தொழுகை கடமையாக்கப்பட்டு, மனிதனின் ஆன்மீக எழுச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உரமிடப்பட்டது போலவே, மி∴ராஜ் நிகழ்ந்த காலகட்டத்தில் அருளப்பட்ட 'அல்இஸ்ரா' என்ற அத்தியாயத்தில், எதிர் காலத்தில் அமையப் போகின்ற முஸ்லிம் சமுதாயத்தில் இருக்கவேண்டிய பண்புகள் பல சுட்டிக்காட்டப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கதாகும்.

### நபி (ஸல்) அவர்களின் மதீனா ஹிஜ்ரத்

நபி (ஸல்) அவர்களுக்கும், யத்ரிப்வாசி களுக்குமிடையில் நடைபெற்ற உடன்படிக்கை பற்றியும், அவர்கள் நபியவர்களை யத்ரிபுக்கு வருமாறு அழைத்தமை பற்றியும் கேள்வியுற்ற குறைஷியர் ஆத்திரமும் ஆவேசமும் அடைந்தனர். இதனால் மக்காவில் வாழ்ந்த முஸ்லிம்களுக்குச் செய்யும் கொடுமைகளை இரட்டிப்பாக்கினர். இஸ்லாத்தை அரேபிய மண்ணிலிருந்து அடியோடு அழித்தொழிப்பதே அவர்களது ஒரே நோக்கமாக இருந்தது.

ஸஹாபாக்கள் தாம் அனுபவிக்கும் துன்ப துயரங்களை நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். அதற்கு நபியவர்கள் தாம் யத்ரிபுக்கு ஹிஜ்ரத் செல்ல கனவு கண்டதாகவும், அங்கு ஹிஜ்ரத் செல்ல விரும்புவர்கள் செல்லலாம் என்றும்

அறிவித்தார்கள். அதற்கிணங்க ஸஹாபாக்கள் இவ்விருவராகவும், மும்மூவராகவும் இரகசியமாகச் சென்று யத்ரிபில் குடியேறலானார்கள். உமர் (றழி) அவர்கள் மாத்திரமே தனது ஹிஜ்ரத் பற்றி குறைஷியரிடம் பகிரங்கமாக அறிவித்து விட்டுச் சென்றார்கள். அபீஸினியாவுக்கு ஹிஜ்ரத் சென்றிருந்த ஸஹாபாக்களும் அங்கிருந்தே மதீனாவுக்கு வந்து சேர்ந்தார்கள். மக்காவில் வாழ்ந்த முஸ்லிம்களில் மிகவும் பலவீனமானவர்களும், குறைஷியர் தடுத்து வைத்திருந்த சிலரும், அபூபக்ர் (றழி), அலி (றழி) அகியோரும் தவிர்ந்த அனைவரும் யத்ரிபை அடைந்திருந்தனர். தான் ஹிஜ்ரத் செல்வதற்காக அல்லாஹ்வின் அனுமதி கிடைக்கும் வரை நபி (ஸல்) அவர்கள் காத்திருந்தார்கள்.

முஸ்லிம்களின் யத்ரிப் விஜயம் பற்றிக் கேள்வியுற்ற குறைஷியர் மேலும் ஆத்திரமடைந்ததுடன் நபி (ஸல்) அவர்கள் அங்கு செல்வதைத் தடுப்பதற்காகக் கலந்துரையாடும் பொருட்டு தாருந் நத்வாவில் ஒன்றுகூடினர். இக்கூட்டத்தில் உத்பா, ஷைபா, அபூசுப்யான், அபூஜஹ்ல் முதலான பிரமுகர்கள் உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைகளுள் நபி (ஸல்) அவர்களை ஆயுட்காலம் வரை சிறையில் அடைக்க வேண்டும் அல்லது நாட்டை விட்டும் துரத்த வேண்டும் என்ற இரு யோசனைகளையும் நிராகரித்த சபை, நபியவர்களைக் கொலை செய்ய வேண்டும் என்று அபூஜஹ்லினால் முன்வைக்கப்பட்ட மூன்றாவது யோசனையை ஏற்றுக்கொண்டது. இதற்கிணங்க, ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொரு வாலிபனைத் தெரிந்தெடுத்து அவர்களைக் கொண்டு நபியவர்களின் வீட்டை முற்றுகையிடச் செய்து, அனைவரும் ஒரே முறையில் நபியவர்களைத் தாக்கிக் கொலை செய்ய வேண்டும் என அபூஜஹ்ல் கூறிய வழிமுறையைப் பின்பற்றுவ தெனவும் முடிவு செய்தனர். இது குறித்து அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு பின்வருமாறு அறிவித்தான்.

> "நபியே, உம்மைச் சிறைப்படுத்தவோ, அல்லது உம்மைக் கொலை செய்யவோ, அல்லது உம்மை (ஊரைவிட்டு) வெளியேற்றிவிடவோ உமக்கு விரோதமாக நிராகரிப்போர் சூழ்ச்சி செய்து கொண்டிருந்த நேரத்தை நினைத்துப் பாரும். அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர். (அவர்களுக்கு எதிராக) அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். ஆனால், சூழ்ச்சி செய்பவர்களிலெல்லாம் அல்லாஹ் மிக்க மேலானவன்".(8:30)

குறைஷியர் தம் திட்டத்தை நிறைவேற்ற முஹம்மத் (ஸல்) அவர்களின் வீட்டை இரவில் முற்றுகையிட்டனர். முஹம்மத் (ஸல்) அவர்கள், அலி (றழி) அவர்களைத் தன் படுக்கையில் போர்த்திக் கொண்டு படுக்குமாறும், குறைஷிக் காபிர்கள் தன்னிடம் அடைக்கலமாக வைத்திருந்த பொருட்களை உரியவர்களிடம் ஒப்படைத்து விட்டு, மதீனாவுக்கு வந்து சேருமாறும் கூறிவிட்டு, வீட்டைவிட்டு வெளியேறினார்கள்.

ஒரு பிடி மண்ணை எடுத்து, சூறா யாசீனின் முதல் ஒன்பது வசனங்களை ஓதி, முற்றுகையாளர்களின் கண்முன்னே எறிந்து விட்டு, அவர்கள் அறியாத விதமாக வெளியேறினார்கள். நேரடியாக அபூபக்ர் (றழி) அவர்களின் வீட்டுக்குச் சென்ற முஹம்மத் (ஸல்) அவர்கள், மதீனாவுக்குச் செல்ல அல்லாஹ் அனுமதி வழங்கியிருப்பதாகக் கூறினார்கள். தான் ஏற்கனவே தயார் நிலையில் வைத்திருந்த இரு ஒட்டகைகளில் ஒன்றை முஹம்மத் (ஸல்) அவர்கள் பிரயாணம் செய்ய வழங்குவதாக அபூபக்ர் (றழி) அவர்கள் கூறியபோது, அவ்வொட்டகத்தை நபியவர்கள் விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்களும், அபூபக்ர் (றழி) அவர்களும் மக்காவை விட்டு வெளியெறி, 'தௌர்' மலை குன்றின் குகையொன்றில் அடைக்கலமாயினர். அக்குகையின் வாயிலில், அல்லாஹ், கிளைவிட்டுப் படர்ந்த மரம் ஒன்றைப் படைத்து, குகை வாயிலில் சிலந்தி வலை பின்னச் செய்து, புறாக்கள் கூடு கட்டிவாழும் அற்புதம் ஒன்றை ஏற்படுத்தி வைத்தான். அபூபக்ர் (றழி) அவர்களின் மகன் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் தன் மந்தையை அப்பகுதியால் ஓட்டிவந்து, தேவையான பாலை அவ்விருவருக்கும் வழங்கி வந்தார்.

குறைஷி வாலிபர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் படுக்கையிலிருந்து அலி (றழி) அவர்கள் எழுந்து வருவதைக் கண்டு தம் திட்டம் பிழைத்து விட்டதை உணர்ந்து நபியவர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும், அவர்களால் வெற்றி காணமுடியவில்லை. மூன்று தினங்கள் 'தௌர்' குகையில் தங்கியிருந்த பின், அதுவரை இஸ்லாத்தை ஏற்றிராத 'அப்துல்லாஹ் பின் "உரைக்கத்" என்பவரின் வழித் துணையுடன் மதீனாவை நோக்கிப் பயணித்தனர். நுபுவ்வத் பதிமூன்றாம் ஆண்டில் றபிஉல் அவ்வல் பிறை எட்டில் குபாவைச் சென்றடைந்த அவர்கள் அங்கு அம்ரு பின் அவ்ப் கோத்திரத்தைச் சேர்ந்த 'குல்தூம் பின் ஹின்த்' என்பவரின் வீட்டில் தங்கியிருந்தார்கள்.

அலி (றழி) அவர்கள் மக்காவில் மூன்று தினங்கள் தங்கி, அடைக்கலப் பொருட்களை உரியவர்களுக்குக் கொடுத்தபின் குபாவுக்கு வந்து சேர்ந்தார்கள். முஹம்மத் (ஸல்) அவர்களதும், அபூபக்ர் (றழி) அவர்களதும் குடும்பத்துப் பெண்களை சைது (றழி) அவர்களும், அப்துல்லாஹ்பின் அபீபக்ர் (றழி) அவர்களும் கூட்டிச் சென்றனர்.

குபாவில் தங்கியிருந்த போது அங்கு ஒரு மஸ்ஜிதைக் கட்டினார்கள். அதைக் கட்டுவதற்காக நபியவர்கள் தமது தோழர்களுடன் சேர்ந்து தோள்களில் கற்களைச் சுமந்தார்கள்.



7-CM 14795

குபாவில் சில தினங்கள் தங்கியிருந்த பின், வெள்ளிக்கிழமை காலையில் மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள். செல்லும் வழியில் பனூ ஸாலிம் எனுமிடத்தில் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றினார்கள். ஜும்ஆத் தொழுகையின் பின், மதீனாப் பிரயாணத்தை ஆரம்பித்தார்கள். நபியவர்களின் வருகையால் ஆனந்தமடைந்த மதீனத்து மக்கள் முஹம்மத் (ஸல்) அவர்களையும் தோழர்களையும் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். மதீனாவாசிகள் ஒவ்வொருவரும் தத்தம் வீட்டில் தங்குமாறு நபியவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். தான் பிரயாணம் செய்யும் ஒட்டகம் எந்த வீட்டின் முன் நிற்கிறதோ, அதே வீட்டில் தங்குவதாகக் கூறிய நபியவர்கள், தனது ஒட்டகையின் கடிவாளத்தைத் தளர்த்தி சுயமாகச் செல்லவிட்டார்கள். ஒட்டகை அபூ அய்யூப் அல் அன்ஸாரி (றழி) அவர்களின் வீட்டின் முன்னால் நின்றது. மதீனாப் பள்ளியில் தனக்கான வீடு கட்டப்படும் வரை, நபியவர்கள் அந்த வீட்டில் ஏழு மாதங்கள் வரை தங்கினார்கள்.

இந்த ஹிஜ்ரத்திலிருந்து ஆரம்பமாகும் இஸ்லாமிய எழுச்சி உலக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற சம்பவமாகத் திகழ்கின்றது.

இரண்டாவது அகபா உடன்படிக்கையைத் தொடர்ந்து ஹிஜ்ரத் செல்வதற்கான நடவடிக்கைகளில் நபி (ஸல்) அவர்கள் ஈடுபட்டார்கள். பொதுவாக இந்த ஹிஜ்ரத் நிகழ்ச்சி பகைவர்களின் துன்பங்களிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் கிடைத்த ஒரு விடுதலையாக மட்டுமன்றி, பாதுகாப்பானதும், பொருத்தமானதுமான ஒரு பூமியிலே ஓர் இலட்சிய சமூக அமைப்பை உருவாக்குவதற்கான ஒரு பொது வாய்ப்பாகவும் அமைந்திருந்தது.

### ஹிஜ்ரத்தின் முக்கியத்துவம்

நபி (ஸல்) அவர்களின் யத்ரிபுக்கான ஹிஜ்ரத் இஸ்லாமிய வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்நிகழ்ச்சி நபியவர்களின் வாழ்வில் ஒரு புதுத் திருப்பத்தையும், இஸ்லாத்தின் வளர்ச்சிப் போக்கில் ஒரு மறுமலர்ச்சியை யும் தோற்றுவித்தது. நுபுவ்வத்தின் 13 ஆம் வருடம் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியிலிருந்தே முஸ்லிம்களின் ஆண்டு முறையான ஹிஜ்ரி வருடம் ஆரம்பமாகின்றது. அரபிகளைப் பொறுத்தவரை வரலாற்றில் இடம்பெற்ற சில முக்கிய சம்பவங்களை அடிப்படையாக வைத்து வருடக் கணக்கெடுப்பைச் செய்து வருவது அவர்களின் வழக்கமாகும். அப்ரஹாவின் யானைப் படையெடுப்பு நிகழ்ந்த வருடத்தை 'யானை வருடம்' என அவர்கள் அழைத்து வந்தமை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இவ்வாறே இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்த ஒரு முக்கிய நிகழ்ச்சியாக ஹிஜ்ரத் விளங்குவதால் இந்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய வருடக் கணக்கெடுப்பை உமர் (றழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பம் செய்தார்கள்.

ஹிஜ்ரத் சம்பவம் நபியவர்களின் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது. இச்சம்பவத்துடன் அவர்களது மக்கா வாழ்க்கை முற்றுப் பெற்று, மதீனா வாழ்க்கை ஆரம்பமாகியது. மக்காவில் ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டிருந்த நபியவர்கள் யத்ரிபில் ஓர் உன்னத தலைவராக வரவேற்கப்பட்டார்கள். நபியவர்களது வருகையினால் ஆனந்தமடைந்த யத்ரிப் மக்கள் அன்று முதல் தங்கள் ஊரின் பெயரை 'மதீனதுந்நபி' (நபிகளாரின் நகரம்) என பெருமையுடன் அழைத்து வந்தார்கள். இதுவே இன்று மதீனா என அழைக்கப்படுகின்றது.

ஒரு சமூகத்துக்குத் தேவையான அனைத்து வழிகாட்டல்களும் ஹிஜ்ரத்துக்குப் பின்னர் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த வகையில் மதீனாவில் அருளப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான சட்ட திட்டங்கள், ஒழுக்க நெறிகள், கொடுக்கல் வாங்கல்கள், வியாபாரம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளை உள்ளடக்கி யிருந்தன.

நபியவர்களும், ஸஹாபாக்களும் மக்காவில் சில வணக்க வழிபாடுகளைத் தனிமையாகச் செய்து வந்த போதிலும் அவைகள் கூட்டாக ஒரே தலைமைத்து வத்தின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கட்டளை மதீனாவிலேயே வழங்கப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் ஒரு முன் மாதிரியான சமூக அமைப்பை உருவாக்க நினைத்தார்கள். அனைத்து முஸ்லிம்களையும் ஒருங்கிணைத்து அதற்குரிய பயிற்சியளிப்பதற்கான பயிற்சிப் பாசறையாக பள்ளிவாசலொன்றை அமைத்தார்கள். ஆத்மீகப் பயிற்சி வழங்குவதற்குரிய மத்திய தளமாகவும், சமூகத்தின் பல்வேறு பிரச்சினைளை ஆராய்வதற்குரிய தளமாகவும் நபியவர்கள் பள்ளிவாயலைக் கருதியதால் அதனை அமைத்து அங்கிருந்து சமுதாயப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டார்கள்.

பள்ளிவாயல் நிர்மாணத்தை அடுத்து நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை சகோதரத்துவத்தை வலியுறுத்துவதாக அமைந்தது. மக்காவில் தமது சொத்து சுகங்களையும், மனைவி, மக்களையும், உற்றார், உறவினர்களையும் விட்டு விட்டு வெறுங்கைகளோடு மதீனாவில் குடியேறிய முஹாஜிரீன்களுக்குப் புனர்வாழ்வளிக்க வேண்டிய அவசியம் நபிகளாருக்கு ஏற்பட்டது. முஹாஜிரீன் களுக்கும், அன்ஸாரீன்களுக்குமிடையே சகோதரத்துவ உறவை ஏற்படுத்துவதன் மூலம் இந்த அடிப்படைப் பிரச்சினையை நபியவர்கள் தீர்த்து வைத்தார்கள். நபியவர்கள் ஏற்படுத்திய இந்த உறவு முறை சமூக ரீதியான, அரசியல் ரீதியான ஓர் ஒருமைப்பாட்டைத் தோற்றுவிக்கவும், முஸ்லிம்களின் அணியில் பலவீனமோ, வாழ்க்கைப் பிரச்சினையோ, பிரிவினையோ தோன்றாதிருக்கவும் வழிவகுத்தது.

இவ்வாறானதோர் சமூக அமைப்பொன்று உருவானதன் பின்னர், நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் வாழ்ந்த பல்வேறு நம்பிக்கைகளையும் கொண்டிருந்த மக்களது ஒத்துழைப்பைப் பெறுவதற்காக அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்த வகையில் மதீனா சாசனத்தை உருவாக்கினார்கள். இதன் மூலம் எதிரிகளிடமிருந்து இஸ்லாத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்ததோடு மதீனாவில் இஸ்லாமியக் குடியரசு உதயமாவதற்கும் வழி பிறந்தது.

**ஹிஜ்ரத்துக்கான காரணங்கள்**

நபியவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றமைக்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று மதீனா மக்களின் அழைப்பாகும். அகபா உடன்படிக்கையின் போது மதீனாவாசிகள் நபியவர்களைத் தங்கள் நகருக்கு வருமாறு பல முறை அழைத்திருந்தார்கள். அவர்கள் அவ்வாறு அழைத்தமைக்கு சமயக் காரணிகள் மட்டுமன்றி அரசியற் காரணிகளும் இருந்தன. மதீனாவில் அவ்ஸ் கோத்திரத்துக்கும் கஸ்ரஜ் கோத்திரத்துக்கும் இடையே நீண்ட காலமாகப் போர்கள் நடைபெற்று வந்தன. இந்த இரு கோத்திரங்களும் தமது பிணக்கை நடுவர் ஒருவரின் மூலம் தீர்த்துக் கொள்ள விரும்பினர். நபியவர்கள் இப்பிணக்கை எவ்விதப் பக்க சார்புமின்றி நியாயமான முறையில் தீர்த்து வைக்கக் கூடியவர்கள் என அவர்கள் நம்பினர். குறைஷியர் கொடுத்த துன்புறுத்தல்களும் ஸஹாபாக்கள், ஹிஜ்ரத் செல்லக் காரணமாயின. அத்துடன் தனது பிரசாரத்துக்கான புதிய களம் ஒன்று தேவை என்று நபிகளார் கருதியிருந்தமையும் மற்றொரு காரணியாகும்.

மேலும், நபியவர்களுக்கு மதீனா நகர் ஒரு புதிய நகராக இருக்கவில்லை. அவர்களது பாட்டனார் ஹாஷிம், கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த மதீனத்துப் பெண்ணொருவரைத் திருமணம் செய்திருந்தார். அதன் மூலம், மதீனா நகரத்தவர்களோடு நபியவர்கள் இரத்த உறவைப் பேணி வந்தார்கள். இவ்விரத்த உறவும் நபியவர்களின் மதீனாக் குடியேற்றத்திற்கு ஓர் ஆதரவான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததெனலாம்.

**ஹிஜ்ரத்தின் விளைவுகள்**

நபியவர்களின் மதீனா ஹிஜ்ரத் வரலாற்றில் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியதைக் காணலாம். இந்த ஹிஜ்ரத், நபியவர்களது வாழ்வில் புதியதொரு திருப்பத்தையும் இஸ்லாத்தின் வளர்ச்சியில் ஓர் உத்வேகத்தையும் ஏற்படுத்தியது. முஸ்லிம்களது ஆண்டுக் கணிப்பு முறையான ஹிஜ்ரி வருடம் இந்த சம்பவத்திலிருந்தே ஆரம்பமாகின்றது இந்த ஆண்டுக் கணிப்பை முதன் முதலில் கலீபா உமர் (ரழி) அவர்களே துவக்கி வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஹிஜ்ரத் சம்பவம் நபியவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு புதிய மாற்றத்தின் தோற்றத்தையே குறிப்பிடுகிறது. இச்சம்பவத்தோடு நபியவர்களின் மக்கா வாழ்க்கை முடிவுற்று மதீனத்து வாழ்க்கை உதயமாகியது. துன்பமும் துயரமும் தோல்வியும் நிறைந்த காலம் அஸ்தமித்து வெற்றியின் ஆண்டு உதயமானது. மக்களால் வெறுக்கப்பட்ட மனிதராக மக்காவைத் துறந்து வந்த நபியவர்கள் ஓர் உன்னத மனிதராக - ஒரு சமூகத் தலைவராக - மதீனாவினுள் பிரவேசித்தார்கள். மதீனா மக்கள் யாவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதோடு மக்காவிலிருந்து வந்த முஹாஜிர்களுக்கு தமது வீடு, பொருள், நிலம் அனைத்திலும் பங்கு வழங்கி உதவினார்கள். அதனால், மதீனா வாசிகளுக்கு நபியவர்கள் “அன்சாரிகள்” என்ற பெயரைச் சூட்டி கௌரவித்தார்கள்.

இந்த ஹிஜ்ரத் பிற்காலத்தில் தோற்றம் பெற்ற இஸ்லாமிய கிலாபத்தை நிறுவ ஊன்றப்பட்ட முதல் வித்தாக அமைந்தது. உலகின் மூன்றில் ஒரு பகுதியை இஸ்லாம் சென்றடைவதற்கு இதுவே காரணமாக அமைந்தது. ஹிஜ்ரத்தின் பின்னர் அதுவரை இருந்த அச்ச சூழ்நிலை நீங்கியது. அதிகாரம் கையில் கிடைத்ததால் இஸ்லாத்தை அதன் முழுப் பரிமாணத்தோடு அமுல் நடாத்தவும் முடிந்தது.

# 04. மதீனா வாழ்க்கை

## முஹாஜிர் - அன்ஸார் உறவுகள்

நபியவர்கள் முஹாஜிர் அன்ஸார்களுக்கிடயே சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்திவிட்டமை இஸ்லாத்தின் மனிதாபிமானப் பண்பாட்டியல் ஒழுங்கை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

முஹாஜிர்களைப் பொறுத்தவரை அவர்கள் தமது சொத்து சுகங்களையெல்லாம் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்துவிட்டு உலகச் செல்வங்கள் எதுவுமற்ற வர்களாக மதீனாவுக்கு வந்தவர்களாவர். அன்ஸார்களைப் பொறுத்தவரை அவர்கள் விவசாயம், கைத்தொழில், வளங்களைக் கொண்டிருந்தார்கள். எனவே அவர்களில் ஒரு சகோதரன் இன்னொரு சகோதரனைப் பொறுப்பேற்றுக் கொள்ளட்டும். வாழ்வின் இன்ப துன்பங்களை அவர்களோடு பங்கு போட்டுக் கொள்ளட்டும். செல்வந்தராக இருந்தால் தனது செல்வத்தில் அரைப் பகுதியை தனது சகோதரனுக்கு வழங்கிவிடட்டும் என நபியவர்கள் அன்ஸார்களை கேட்டுக்கொண்டார்கள். இந்த சகோதரத்துவப் பிணைப்பு ஏற்படுத்திவிட்ட சமூக நீதியைவிட உயர்ந்த ஒரு நீதியை உலகில் எங்கும் காணமுடியாது.

மக்காவில் இஸ்லாத்தை ஏற்றவர்கள் தமது குடும்பத்தாரின் அன்பு, ஆதரவு, உதவி முதலானவற்றை இழந்தனர். அவர்களுள் இருந்த ஏழை முஸ்லிம்கள் தமது குடும்பத்தின் பொருளாதார நலன்களை அனுபவிக்க முடியாதவர்களாயினர். குடும்ப பலம் அற்றதனால் துன்புறுத்தப்பட்டனர். இந்நிலையில் அவர்களிடையே அன்பையும் ஆதரவையும் பரஸ்பர உதவியையும் வழிகாட்டுதலையும் வழங்கு முகமாக ஹிஜ்ரத்துக்கு முன்பே மக்கத்து முஸ்லிம்களை நபியவர்கள் சகோதரர்களாக பிணைத்திருந்தார்கள். முஸ்லிம்களிடையே துளிர்த்த இந்த சகோதரத்துவ உணர்வு மக்கா வாசிகள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற போது மிக அழகாகத் தொழிற்பட்டது. முஹாஜிர்கள் மதீனாவுக்கு வரும் போது தம் சொத்துக்களையெல்லாம் இழந்து வெறுங்கையாகவே வந்து சேர்ந்தார்கள். வர்த்தகர்களான அவர்களிடம் அதற்கான மூலதனம் கூட இருக்கவில்லை. விவசாயத்துக்கு உகந்த நிலம் மதீனாவில் காணப்பட்ட போதும் மக்கா வாசிகளுக்கு விவசாயம் செய்யும் அனுபவம் இருக்கவில்லை. இதனால், அன்சாரிகள் முஹாஜிர்களுக்கு தம் விளைச்சலில் பங்கு கொடுத்தனர். வீடு கட்ட நிலத்தையும் வழங்கினர். இவ்வேற்பாடு தற்காலிகமானதாக அமைந்து விட்டால் முஹாஜிர்களின் பிரச்சினை தீராது எனக் கருதிய நபியவர்கள் மதீனா வாசிகள் ஒவ்வொருவரோடும் முஹாஜிர்கள் ஒவ்வொருவரையும் சகோதரர்களாக்கி விட்டார்கள். இவர்கள் சுய உழைப்பில் மட்டுமன்றி வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஏற்படும் பிரச்சினைகளை எதிர் கொள்வதில் சகோதரர்களாகத் தொழிற்பட்டார்கள். இதற்கும் அப்பால் அவர்களது சொத்திலும் வாரிசுரிமைப்

பங்கைப் பெற்றனர். சொத்தில் பங்கு வழங்கும் இச்செயற்பாடு அசாதாரண ஒரு சூழலுக்கு மிகப் பொருத்தமானதாக இருந்த போதும் இரத்த உறவின் முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட முடியாததாக இருந்ததால் மதீனாவின் வாழ்க்கைக்கு அவர்கள் பழக்கப்பட்டும் பத்ருப் போரில் ஓரளவு கனீமத்துப் பொருட்கள் கிடைத்தும் இருந்ததால் அல் குர்-ஆன் இக்கொள்கை வழிச் சகோதரத்துவத்திற்குட்பட்ட வாரிசுரிமை மரபை ரத்துச் செய்தது. எனினும், வாரிசுரிமை தவிர்ந்த ஏனைய அனைத்து அம்சங்களிலும் இவர்கள் தொடர்ந்தும் சகோதரர்களாகவே பிணைக்கப்பட்டிருந்தனர்.

இச்சகோதரத்துவ இணைப்பானது அகதிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஓர் உடனடித் தீர்வாக மட்டும் அமையாது நபியவர்கள் அமைக்க விரும்பிய சமூக அமைப்புக்கான ஓர் அடித்தளமாகவும் அமைந்தது. வர்க்க, கோத்திர, நிற, மொழி பேதமற்ற ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப இச்சகோதரத்துவ உணர்வு பெருமளவில் உதவியது.

### மஸ்ஜிதுன் நபவியின் பங்கு

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற பின்னர் மதீனாவில் மேற்கொள்ளப்பட்ட முதன்மையான பணிகளுள் மஸ்ஜித் நிர்மாணமும் ஒன்றாகும். மக்கா வாழ்க்கைப் பகுதியில் மஸ்ஜிதுகளை நிறுவும் வாய்ப்பு நபியவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவேதான் ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து குபாவில் மஸ்ஜிதுத் தக்வாவும் மதீனாவில் மஸ்ஜிதுன் நபவியும் நிர்மாணிக்கப்பட்டன. ஆரம்பத்தில் பேரீத்தம் மரக் குற்றிகளாலும் பேரீந்து ஓலைகளினாலும் எளிய முறையில் மஸ்ஜிதுன் நபவி எழுப்பப்பட்டது.

நபியவர்கள் எங்கு தங்கினாலும் அங்கு முஸ்லிம்களை ஒன்றுகூட்டக் கூடிய வகையில் ஒரு மஸ்ஜிதை முதலில் கட்டிவிடுவார்கள். மஸ்ஜிதுல் குபாவை இதற்குதாரணமாகக் குறிப்பிடலாம். இந்தவகையிலேயே மஸ்ஜிதுன் நபவியும் அமைந்ததெனலாம். இஸ்லாத்தில் மஸ்ஜிதுக்கு வழங்கப்படக்கூடிய முக்கியத்து வத்துக்கு இவை போதிய சான்றாகும். இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடுகள் யாவும் ஆன்மீக பரிபக்குவத்தை நோக்காகக் கொண்டவை மட்டுமன்றி பரஸ்பர ஒத்துழைப்புக்கான அடிப்படைகளைப் பலப்படுத்துபவையுமாகும். ஐவேளைத் தொழுகை, ஜுஃம்ஆத் தொழுகை, பெருநாள் தொழுகை முதலான சகல வழிபாடுகளும் முஸ்லிம்களின் ஒற்றுமை, ஐக்கியம், ஒருமித்த இலக்குகள் போன்றவற்றை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

மக்காவில் அமைக்க இயலாது போன சமூக அமைப்பை மதீனாவில் கட்டியெழுப்ப ஆயத்தமானார்கள். அந்த இலக்கை அடைவதற்கு மஸ்ஜித் என்ற பெயரில் ஒரு சமூக நிறுவனம் அவசியமாகியது. மக்களை ஒன்றுகூட்டும் இடமாக மஸ்ஜிதும் ஒன்று கூட்டும் அழைப்பாக அதானும் அமைந்தன. இங்கு கூட்டுத் தொழுகைக்காக

ஒன்றுகூடியோர் அதனூடாக சமூக இணக்கத்துக்கும் இயக்கத்துக்குமான பயிற்சிகளைப் பெற்றனர். இவற்றுக்கு மேலாக அங்கு வந்த மக்களுக்கு தலைவரைத் தெரிவு செய்தல், தலைமைக்குக் கீழ்ப்படிதல், தலைமையின் தவறைச் சுட்டிக் காட்டல் மக்களோடு இணக்கமாக நடத்தல் பரஸ்பர உதவி ஒத்தாசை செய்தல் முதலான பயிற்சிகளும் கூட்டுத் தொழுகையினூடாக வழங்கப்பட்டன.

இந்த மஸ்ஜித் ஆன்மீகச் செயற்பாடுகளுக்கான பயிற்சிப் பாசறையாக மாத்திரமன்றி உலகியல் விவகாரங்களுக்கான ஒரு மையதளமாகவும் விளங்கியது. அங்கு நடைபெற்ற கல்விப் போதனைகளில் அஸ்ஹாபுஸ்-ஸுஃப்பாக்கள் நிரந்தர மாணவர்களாக அமர்ந்திருந்தனர். வாராந்தம் குத்பாக்கள் இடம் பெற்றதோடு மக்களது நாளாந்தத் தேவைகள், பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்களும் நடைபெற்றன. வழக்கு விசாரணையின் பின்னர் சரியான தீர்ப்பு வழங்கப்பட்டது. அதிதிகளை வரவேற்க தனியிடம் அமைக்கப்பட்டது. பைத்துல் மாலின் மையமாக வும் இராணுவப் பள்ளியாகவும் தொழிற்பட்டது. மதீனத்து முஸ்லிம் சமூகத்தின் தலைவரான நபியவர்கள் அங்கேயே தங்கினார்கள். அவர்களைச் சந்திக்க வந்தோர் இங்கேயே சந்தித்தனர். உயர் சாதியினர் எனக் கருதப்பட்ட குறைஷியர், மதீனத்து சுதேசிகள், இஸ்லாத்தை ஏற்ற யூதர்கள், வெளிப் பிரதேச முஸ்லிம்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் முரண்பாடுகளைத் தவிர்த்து ஒருமுகப்பட்டு வாழும் நிலையை நபியவர்களின் மஸ்ஜிதுன் நபவி ஏற்படுத்திக் கொடுத்தது.

# மதீனாவில் இஸ்லாத்தின் வளர்ச்சி

## முக்கிய நிகழ்வுகள்

மதீனாவில் நபியவர்கள் நிலைகொண்டமை குறைஷியரிடையேயும் அவர்களைச் சார்ந்தவர்களிடையேயும் வெஞ்சினத்தையும், அமைதியின்மையையும் தோற்றுவித்தன. முஹம்மத் மதீனத்து சமூகத்தின் தலைவராகி விட்டார் என்பதையும் நாளுக்கு நாள் இஸ்லாமிய அரசு செழிப்புற்றோங்கி வருவதையும் கண்டு கலங்கி நின்றனர். எனவே அவர்கள் மதீனாவில் அமையப் பெற்ற இஸ்லாமிய அரசை வேரோடு பிடுங்கி எறிந்துவிட வேண்டுமெனத் தீர்மானித்தனர். எதிரிகளின் இத்தகைய தீர்மானம்தான் பிற்காலத்தில் சந்திக்க நேர்ந்த யுத்தங்களாக பரிணமித்தது.

## பத்ர் யுத்தம்

இந்த யுத்தம் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ரமழான்மாதம் 17 ஆம் தினத்தில் நிகழ்வுற்றது. ஷாமிலிருந்து மக்கா நோக்கிச் சென்றுகொண்டிருந்த வியாபாரக் குழுவை வழிமறிக்குமாறு நபியவர்கள் ஸஹாபாக்களைப் பணித்தார்கள். குறைஷிகளைப் பயமுறுத்தவேயன்றி அவர்களோடு யுத்தம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் நபியவர்கள் இதனைச் செய்யவில்லை. எவ்வாறாயினும் வியாபாரக் குழு ஸஹாபிகளிடமிருந்து தப்பிச் சென்றுவிட்டது.

வியாபாரக் குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்ற அபூஸுஃப்யான் பாதுகாப்பு உதவிகோரி முன்னதாகவே குறைஷியரிடம் தூதனுப்பியிருந்தமையால் சுமார் 1000 போராளிகளோடு குறைஷியர் மக்காவிலிருந்து மதீனா நோக்கி வந்தனர். அப்படை, போர்க்கவசம் அணிந்த அறுநூறு வீரர்கள். கவசமிடப்பட்ட 100 குதிரை வீரர்கள் 700 கோவேறு கழுதைகள் எனப் பலம் பொருந்தியதாகக் காட்சியளித்தது. இவற்றுக்கு அப்பால் அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக மேளம் கொட்டி வசை பாடவெனப் பெண்களையும் அழைத்து வந்திருந்தனர்.

முஸ்லிம்களில் 313 பேர் இருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் அன்ஸாரிகளாவர். அவர்களிடம் 70 ஒட்டகைகளும் இரண்டு அல்லது மூன்று குதிரைகளுமே காணப்பட்டன.

இரு அணியினரும் ரமழான் 17 இல் மதீனாவுக்குத் தென்-மேற்காக உள்ள பத்ர் எனும் இடத்தில் சந்தித்துக் கொண்டனர். எந்த விதமான போர்ப் பயிற்சியுமற்ற முஸ்லிம்கள் ஆயுதம் தாங்கிய 1000 எதிரிகளோடு போரிட்டு வெற்றியீட்டினர். எதிரிகளில் அபூஜஹ்ல், உத்பா போன்ற குறைஷித் தலைவர்கள் உட்பட எழுபது பேர் கொல்லப்பட்டனர். எழுபது பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவர்கள் மனிதத் தன்மையோடு நடாத்தப்பட்டனர்.

இந்த யுத்தம் இஸ்லாமிய வரலாற்றில் புதியதொரு திருப்பத்தையும் மகத்தான மாற்றத்தையும் ஏற்படுத்தியது. இஸ்லாம் எனும் சத்தியம் அசத்தியத்தோடு போரிட்டு வெற்றி பெற்றது. ஜாஹிலிய்யத்தின் ஆதிக்கத்துக்கு இதனூடாக மகத்தான பாடம் கற்பிக்கப்பட்டது. பத்ருப் போரின் வெற்றி குழந்தைப் பருவத்தில் இருந்த இஸ்லாமியக் குடியரசைத் துரித வளர்ச்சி பெறச் செய்ததோடு அதன் செல்வாக்கை அரபுலகெங்கும் ஊன்றவும் வழிவகுத்தது. நபியவர்கள் மதீனாவில் பெற்றிருந்த செல்வாக்கை மேலும் வலுப்பெறச் செய்தது. முஸ்லிம்கள் நபியவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை மேலும் பலம் பெறச் செய்தது. மதீனாவில் பயந்தும் ஒதுங்கியும் வாழ்ந்த முஸ்லிம்கள் தலை நிமிர்ந்து வாழலானார்கள். உண்மையில் பத்ரில் முஸ்லிம்கள் பெற்ற வெற்றிதான் அவர்கள் பிற்காலத்தில் பெற்றுக்கொண்ட வெற்றிகளுக்கெல்லாம் அடித்தளமாக அமைந்தது. (அல்பிரட் கியூம்)

**உஹுத் யுத்தம்**

உஹத் யுத்தம் ஹிஜ்ரி 3 ஷவ்வால் 15 ஆம் நாள் நடைபெற்றது. பத்ரில் ஏற்பட்ட தோல்விக்குப் பழி தீர்த்துக்கொள்ளும் வகையில் குறைஷியர் மதீனா சென்று நபியவர்களோடு யுத்தம் செய்யத் தயாராகினர். குறைஷியர் தம்மோடு நேசம் கொண்டிருந்த 3000 பேரைத் திரட்டிக் கொண்டு மதீனாவை நோக்கிப் புறப்பட்டனர். அவர்களில் 700 கவசமணிந்த படை வீரர்கள், 200 குதிரை வீரர்கள் உட்பட 17 பெண்களும் அடங்கி இருந்தனர். பெண்கள் குழுவில் அபூஸுஃபியானின் மனைவி ஹிந்தாவும் உள்ளடங்கியிருந்தார். இவரது தந்தை பத்ரில் கொல்லப்பட்டிருந்தார். குறைஷிப் படை மதீனாவுக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள உஹத் மலைக்கு முன்னாலுள்ள பள்ளத்தாக்கை வந்தடைந்தது.

உஹத் மலைச்சாரல் உருக்கி வார்க்கப்பட்ட கற்கோட்டை போன்றது. எனினும், அம்மலையில் கணவாய் ஒன்றிருந்தது. அக்கணவாயில் திறமை வாய்ந்த ஐம்பது அம்பு வீரர்களை அப்துல்லாஹ் இப்னு சுபைர் அல் அன்ஸாரி என்பவரின் தலைமையில் நிறுத்தி, வெற்றி ஏற்பட்டாலும் தோல்வி ஏற்பட்டாலும் அவ்விடத்தை விட்டும் சிறிதும் நகரக் கூடாது என்றும், எதிரிகள் மீது ஓயாமல் அம்பு எய்து கொண்டிருக்க வேண்டுமென்றும் நபியவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள்.

போர் ஆரம்பமானது. முஸ்லிம்கள் எதிரிகளைத் தோற்கடித்தனர். பகைவர்கள் பின்வாங்கி ஓடவே முஸ்லிம்கள் அவர்கள் விட்டுச் சென்ற பொருட்களை திரட்டலாயினர். கணவாயிலிருந்த முஸ்லிம் வீரர்களும் இதனைக் கண்ணுற்று, பெருமானாரின் கட்டளையையும் தம் தளபதி இப்னு சுபைரின் எச்சரிக்கையையும் மீறி கணவாய்க் காவலை விட்டு கனீமத் பொருட்களைத் திரட்ட ஓடினார்கள். இதனை எப்படியோ கண்டுகொண்ட எதிரிகளின் தளபதி காலித் இப்னு வலீத் நூறு வீரர்களுடன் பாய்ந்து சென்று கணவாயைப் பிடித்துக் கொண்டார். இதனால், முஸ்லிம்களுக்கு முற்றிலும் சாதகமாக இருந்த போர், மறுபக்கம் திரும்பலாயிற்று. காலிதும் அவர்களுடைய வீரர்களும் ஓயாமல் அம்பெய்து முஸ்லிம் படையை

நிலைகுலையச் செய்தனர். இதே சமயத்தில் இப்னு காமியா என்ற குறைஷி வீரன் நபியவர்களை நோக்கிக் கற்களை வீசி எறிந்தான். இதனால், நபியவர்களின் முன் பல்லொன்று உடைந்து போயிற்று. எனினும், முஸ்லிம்கள் அஞ்சாமல் நின்று நெஞ்சுரத்தோடு போரிட்டனர். முஸ்லிம்களின் உக்கிரமான தாக்குதலால் மீண்டும் எதிரிகள் பின் வாங்கினர். முஸ்லிம்கள் மீண்டும் அக்கணவாயைக் கைப்பற்றிக் கொண்டனர். இப்போர், வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போரில் ஹம்ஸா (ரழி), முஸ்-அப் (ரழி) உட்பட சுமார் 70 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் படுகாயமுற்றனர். எனினும், குறைஷியரில் 22 பேர் மாத்திரமே கொலை செய்யப்பட்டனர்.

இப்போரில் முஸ்லிம்கள் முழுமையாகத் தோல்வி அடையவில்லையாயினும் அதிக இழப்புகளும், சிரமங்களும் அவர்களுக்கு ஏற்பட்டன. சில வரலாற்றாசிரியர்கள் இதனை முஸ்லிம்களின் தோல்வி என்றும் குறிப்பிட்டுள்ளனர். நபி முஹம்மத் (ஸல்) அவர்களது கட்டளையை மீறித் தங்களின் சொந்த விருப்பத்தின்படி நடந்தமையினாலேயே இவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டது என்ற பாடத்தை உஹத் போர் முஸ்லிம்களுக்குக் கற்பித்தது. இப்பாடத்தைத் தொடர்ந்து, அவர்கள் எச்சமயத்திலும் நபியவர்களின் ஆணையை மீறவில்லை. இதனால், அவர்களுக்கு தொடர்ந்து வெற்றி மேல் வெற்றி கிடைத்தன.

### அகழி யுத்தம் (அஹ்ஸாப் போராட்டம்)

ஹிஜ்ரி 5 ஷவ்வால் மாதம் இடம்பெற்ற இந்த யுத்தம் ஹந்தக் போர் எனவும் அழைக்கப்படுகிறது. பனூ நுழைர் கோத்திரத்தார் நாடு கடத்தப்பட்ட பின்னர் அவர்களின் சில தலைவர்கள் மக்காவில் உள்ள குறைஷியரிடம் வந்து நபியவர்களோடு போரிடுமாறு வேண்டுகோள் விடுத்து ஊக்கமளித்தனர். குறைஷியர் இதற்கு சாதகமான பதிலை வழங்கியதைத் தொடர்ந்து அந்த யூதத் தலைவர்கள் கத்பான் எனும் கோத்திரத்தாரிடம் சென்றனர். அவர்களும் இவர்களுக்கு சாதகமாகப் பதிலளித்தனர். இவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து மிக உற்சாகத்தோடு மதீனாவை நோக்கிப் படையெடுத்தனர். இதனை அறிந்த நபியவர்கள் தோழர்களோடு கலந்தாலோசித்த போது ஸல்மான் அல் பாரிஸி எனும் தோழர் மதீனாவைச் சுற்றி அகழி வெட்டுமாறு ஆலோசனை வழங்கினார். இதனை ஏற்ற நபியவர்கள் அகழி வெட்டும் பணியில் ஈடுபடுமாறு தோழர்களுக்குப் பணித்ததோடு தாமும் அப்பணியில் இணைந்து கொண்டார்கள்.

குறைஷிகளும் அவரது சகாக்களும் மதீனாவை வந்தடைந்ததும் தமக்கு முன்னால் அகழி வெட்டப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். அரபிகளைப் பொறுத்த வரை இந்த நடவடிக்கை புதுமையானதாகவே இருந்தது. போருக்கு வந்த காபிர்களின் எண்ணிக்கை சுமார் 10,000 ஆகவும் முஸ்லிம் போராளிகளின் எண்ணிக்கை சுமார் 3,000 ஆகவும் காணப்பட்டது.

காபிர்களின் குதிரை வீரர்களில் சிலர் அகழியின் ஒரு புறம் இருந்த ஒடுக்கமானதோர் இடத்தைப் பயன்படுத்தி கடக்க முயற்சித்தனர். முஸ்லிம்கள் அவர்களைத் தடுத்து நிறுத்த முயற்சித்தனர். இச்சந்தர்ப்பத்தில் நுஜம் இப்னு மஸ்-ஊத் என்பவர் நபியவர்களிடம் வந்து தான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட தாகவும் இதனை எவரும் அறியமாட்டார்கள் என்றும் கூறினார். அப்போது நபியவர்கள் நீங்கள் எங்களில் ஒருவராக ஆகிவிட்டீர்கள். உங்களால் முடியுமாயின் எதிரிகளிடையே பிளவை, கருத்துவேற்றுமையை ஏற்படுத்துங்கள் யுத்தம் என்பது தந்திரத்தைப் பயன்படுத்துவது தான் என்றார்கள்.

நுஜமும் தனது அறிவுக் கூர்மையைப் பயன்படுத்தி குறைஷியர்க்கும், அவர்களின் நேசர்களான பனூ குறைழாக்களுக்குமிடையே பிளவை ஏற்படுத்தினார். இரண்டு பிரிவினரது உள்ளங்களிலும் அடுத்த பிரிவினர் பற்றிய சந்தேகங்களை விதைத்து விட்டார்.

இதனால் இரு தரப்பினரும் ஒன்றிணைந்து போரிடும் வாய்ப்பு அருகியது. இப்பின்னணியில் கடுமையான குளிரைக் கொண்ட மாரி கால இரவொன்றில் அல்லாஹ் அவர்கள் மீது பலமானதொரு காற்றை அனுப்பினான். இதன் காரணமாக அவர்களது தீப்பந்தங்கள் அணைந்து போனதோடு முகாம்களும் அழிந்து போயின. இதனால், அவர்களது உள்ளங்களில் பயம் ஆட்கொண்டு விடவே குறித்த இரவிலேயே அவர்கள் வெளியேறி விட்டார்கள். முஸ்லிம்கள் காலையில் எழுந்து பார்த்த போது எதிரிகளில் எவரையும் காண முடியவில்லை. இந்த யுத்தம் தொடர்பாக அல் குர்-ஆன் சூறா அஹ்ஸாப் (9 - 11 ) குறிப்பிடுகிறது.

மதீனா நகர் மிகப் பெரும் ஆபத்தொன்றில் இருந்து இறைவனின் வல்லமையினால் காப்பாற்றப்பட்டது. இஸ்லாம் இப்போரின் மூலம் மிகப் பெரிய வெற்றியொன்றைப் பெற்றுக் கொண்டதோடு மதீனாக்குடியரசின் பாதுகாப்பும் ஸ்திரமாகியது.

## கைபர் போர்

இந்த யுத்தம் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு முஹர்ரம் இறுதிப்பகுதியில் நடைபெற்றது. கைபர் பிரதேசம் ஷாம் பக்கமாக மதீனாவுக்கு வடக்கே சுமார் 100 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது யூதர்கள் வாழ்ந்த ஒரு பெரு-நிலப்பரப்பாகும். ஹுதைபிய்யா மூலம் ஒரு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொண்ட நபியவர்கள் மதீனாவின் எல்லைப் புறங்களில் வாழ்ந்த யூதக் குழுக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முற்பட்டார்கள். ஏற்கனவே மதீனாவில் வாழ்ந்த யூதர்களை நபியவர்கள் வெளியேற்றி விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைபர் பிரதேசத்தில் யூதர்களுக்கு மிகப் பாதுகாப்பான அரண்கள் காணப்பட்டன. அவற்றில் பெருந்தொகையான போராளிகள் வாழ்ந்து வந்தனர். பாரியளவிலான ஆயுத பலத்தையும் ஏனைய வசதிகளையும் பெற்றிருந்த அவர்கள் மிக மோசமானவர்களாகவும், தந்திரமிக்கோராகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் காணப்பட்டனர். எனவே, முஸ்லிம்களின் தலைநகரான மதீனாவில் இவர்கள் பிரச்சினைக்குரியவர்களாக மாறு முன்னர் அவர்களது பிரச்சினையை அவசியம் தீர்த்து விடவேண்டி இருந்தது.

இதன் காரணமாகவே நபியவர்கள் முஹர்ரம் மாதத்தின் இறுதிப் பகுதியில் 1600 போர் வீரர்களோடு கைபரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களில் 200 குதிரை வீரர்களும் அடங்கியிருந்தனர். ஹுதைபியா உடன்படிக்கையில் கலந்துகொண்ட எல்லா ஸஹாபாக்களையும் நபியவர்கள் யுத்தத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள். வீரர்களுக்கு நீர் விநியோகிக்கவும் காயமுற்றோருக்கு முதலுதவி செய்யவும் சில பெண்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். கைபரில் ஆறு கோட்டைகள் இருந்தன. அவற்றில் பெருந்தொகையான வீரர்கள் ஆயுதம் தரித்து நின்றனர்.

யுத்தம் ஆரம்பமானது. முஸ்லிம்கள் ஒவ்வொரு கோட்டையாக வெற்றிகொள்ள ஆரம்பித்தார்கள். முதலில், உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த நாயிம் எனும் கோட்டையைத் தாக்கித் தம்வசமாக்கினர். இதனைத் தொடர்ந்து ஏனைய கோட்டைகளும் ஒன்றன் பின் ஒன்றாக வெற்றி கொள்ளப்பட்டன. இறுதியில் இரண்டு கோட்டைகள் மாத்திரமே யூதர்கள் வசமிருந்தன. அக்கோட்டைகளில் இருந்த யூதர்கள் நபியவர்களோடு சமாதானம் செய்துகொள்ள விரும்பினர். இதன்படி தமது போராளிகளின் இரத்தத்தைச் சிந்தக் கூடாதெனவும் தமது பெண்கள், பிள்ளைகளோடு கைபர் பிரதேசத்திலிருந்து தாம் வெளியேறிச் செல்ல அனுமதிக்க வேண்டுமெனவும், ஒவ்வொருவரும் ஒரேயோர் ஆடையை மாத்திரமே எடுத்துச் செல்வதாகவும் குறிப்பிட்டனர். இதற்கு உடன்பட்ட நபியவர்கள் ஏதும் மறைத்து வைத்திருந்தால் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் பொறுப்பிலிருந்து அவர்கள் நீங்கிவிடுவார்கள் என்றும் குறிப்பிட்டார்கள்.

பின்னர் யூதர்கள் அவ்விரு கோட்டைகளில் இருந்தும் வெளியேறிச் சென்றனர். முஸ்லிம்கள் அங்கு அதிகமான ஆயுதங்களையும் தௌராத் பிரதிகளையும் கண்டெடுத்தார்கள். யூதர்கள் அவற்றை மீளக் கேட்டு வரவே நபியவர்களும் அவற்றைத் திருப்பிக் கொடுக்குமாறு பணித்தார்கள். இந்த யுத்தத்தில் 93 யூதர்கள் கொல்லப்பட்டதோடு முஸ்லிம் தரப்பில் 15 பேர் ஷஹீதானார்கள். யூதர்களின் கெஞ்சுதலின் பேரில் அவர்களின் விளைநிலங்களுக்கு நிலவரி செலுத்தும் ஒப்பந்தத்தின் கீழ் அவர்களை மன்னித்து, இங்கு தொடர்ந்து குடியிருக்க நபியவர்கள் அனுமதி அளித்தார்கள்.

இந்த யுத்தங்களுக்கு அப்பால் நபியவர்கள் மரணிக்கும் வரையான காலப் பகுதிவரை வேறு பல யுத்தங்களும் நடை பெற்றுள்ளன அவற்றுள் சில.

1. முஅத்தாப் போராட்டம் (ஹிஜ்ரி 8, ஜமாதுல் ஊலா மாதம்
2. ஹுனைன் யுத்தம் (ஹிஜ்ரி 8, ஷவ்வால் மாதம் பிறை 10)
3. தபூக் யுத்தம் (ஹிஜ்ரி 9. ரஜப் மாதம்)

## உடன்படிக்கைகள்

### (அ) மதீனா சாசனம்

முஹாஜிர், அன்ஸார்களுக்கிடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்திய பின் நபியவர்கள் மதினாவில் வாழ்ந்த யூத சமூகத்தினருடனும் ஓர் உடன்படிக்கைச் செய்து கொண்டார்கள். இதுவே மதினா சாசனம் எனப்படுகிறது. இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய முதல் இஸ்லாமிய அரசுக்கான அடிப்படைகளை அது உள்ளடக்கி இருந்தது. இந்த சாசனத்தில் மானுடத்துவம், சமூக நீதி, மத சகிப்புத் தன்மை, சமூக நலனுக்கான பரஸ்பர ஒத்துழைப்பு முதலான அம்சங்கள் விளக்கப்பட்டிருந்தன. (முஸ்த∴பா ஸிபாஈ)

**இந்த நிலையான வரலாற்று ஆவணம் உள்ளடக்கியிருந்த பொதுவான அடிப்படைகளாவன :**

1. பிளவுகளற்ற முஸ்லிம் சமூக ஐக்கியம்.
2. உரிமைகளிலும் கௌரவத்திலும் சமூக அங்கத்தவர்கள் அனைவரும் சமமானவர்கள்.
3. அநியாயம், பாவம், அத்துமீறல் போன்றவற்றுக்கெதிரான சமூகத்தின் பரஸ்பர ஒத்துழைப்பு.
4. எதிரிகளுடனான உறவுகளைத் தீர்மானிப்பதில் சமூகப் பங்கேற்பு, ஒரு மு∴மின் இன்னொரு மு∴மின் பாதிக்கப்படும் விதத்தில் சமாதானம் செய்து கொள்ள முடியாது.
5. சிறந்ததும், நேர்த்தியானதும், நிலையானதுமான ஒழுங்குகளின் அடிப்படையில் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.
6. அரசுக்கும் அதன் பொது ஒழுங்குகளுக்கும் எதிராக செயற்படுபவர் களுடன் போராடுவதும் அவர்களுக்கு உதவி செய்வதைத் தவிர்த்துக் கொள்வதன் அவசியமும்.
7. முஸ்லிம்களுடன் சமாதானமாகவும் ஒத்துழைப்போடும் வாழ விரும்பு வோரைப் பாதுகாத்தலும் அவர்கள் மீது அத்துமீறுதல், அநியாயம் இழைத்தல் போன்றவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுதலும்.

8. முஸ்லிமல்லாதோர் அவர்களது மார்க்கத்தையும் செல்வங்களையும் பாதுகாத்துக் கொள்ள உரிமையுடையவர்கள். அவர்கள் முஸ்லிம்களை பின்பற்ற வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படமாட்டார்கள். அத்துடன், அவர்களது செல்வங்கள் சூறையாடப்படவும் மாட்டாது.
9. முஸ்லிம்களைப் போலவே முஸ்லிமல்லாதோரும் நாட்டின் செலவினங்களில் பங்கு கொள்ள வேண்டும்.
10. எதிரிகள் மேற்கொள்ளும் அத்துமீறல்களினால் ஏற்படும் அபாயங்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்க முஸ்லிம்களுடன் முஸ்லிமல்லாதோரும் ஒத்துழைக்க வேண்டும்.
11. நாடு யுத்த சூழலில் இருக்கும் போது முஸ்லிமல்லாதோரும் யுத்த செலவினங்களில் பங்கெடுக்க வேண்டும்.
12. அநியாயம் இழைக்கப்படுகின்றவர்களுக்கு அரசு உதவி செய்ய வேண்டும். மேலும், அத்துமீறலுக்கு உட்படுகின்ற ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அது உதவ வேண்டும்.
13. முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதோரும் நாட்டின் எதிரிகளுக்கும் அவர்களுக்கு உதவி செய்யக் கூடியவர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
14. சமூக நலன் சமாதானத்தில் தங்கியிருக்குமெனின், முஸ்லிமான, முஸ்லிமல்லாத, நாட்டினுடைய அனைத்துப் பிரஜைகளும் அதனை ஏற்க வேண்டும்.
15. ஒருவர் செய்த குற்றத்துக்காக இன்னொருவர் தண்டிக்கப்படமாட்டார். குற்றமிழைப்பவர் தனக்கும் தனது குடும்பத்துக்கும் எதிராகவே அதனைச் செய்கிறார்.
16. நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் நடமாடுவதற்கான சுதந்திரம் நாட்டின் பாதுகாப்புக்கேற்ப உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.
17. பாவம், அநியாயம் இழைப்பவனுக்கு பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது.
18. இறையச்சம், நன்மை, பரஸ்பர புரிந்துணர்வு போன்றவற்றின் அடிப்படையிலேயே சமூகம் கட்டியெழுப்பப்படும். அது பாவம், அத்துமீறலின் அடிப்படையில் அமைந்திருக்கமாட்டாது.

**(ஆ) ஹுதைபிய்யா உடன்படிக்கை**

இந் நிகழ்வு ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு துல்க.்.தா மாதம் இடம்பெற்றது. நபியவர்கள், தானும் தனது தோழர்களும் தலைமுடி சிரைத்தவர்களாக க.்.பாவுக்குள் அச்சமின்றிப் பாதுகாப்பாக நுழைவதைக் கனவில் கண்டார்கள். எனவே உம்றாச் செய்வதற்காக மக்கா செல்லத் தயாராகுமாறு மக்களுக்கு நபியவர்கள் அழைப்பு விடுத்தார்கள்.

சுமார் 6 வருடங்களாக க.்.பாவைத் தரிசிக்கும் சந்தர்ப்பத்தை இழந்திருந்த முஹாஜிர்களும் அன்சார்களும் க.்.பாவைக் காண வேண்டும் என்ற

பேரார்வத்தோடு நபியவர்களுடன் மக்காவை நோக்கிச் சென்றார்கள். அவர் களோடு சில நாட்டுப் புற அறபிகளும் இணைந்து கொண்டனர். நபியவர்கள் க.்.பாவை கண்ணியப்படுத்துவதற்கென வழமையாகக் கொண்டு செல்லும் ஆடு, ஒட்டகைகளை தமக்கு முன்னால் ஓட்டிச் சென்றார்கள்.

நபியவர்கள் தாம் யுத்தத்துக்காக வரவில்லை என்பதை குறைஷியருக்கு உணர்த்துவதற்காக துல் ஹுலை.்.பா எனுமிடத்தில் உம்ராவுக்கான இஹ்ராமைக் கட்டிக் கொண்டார்கள். சுமார் 1500 பேர் நபியவர்களோடு வருகை தந்திருந்தனர். அக்காலத்தில் பயணிகள் தமது தற்காப்புக்கென எடுத்துச் செல்லும் உறை வாள்களையே நபியவர்களும் மக்களும் எடுத்துச் சென்றிருந்தனர். அஸ்.்.பான் எனுமிடத்தை இவர்கள் அடைந்த போது நபியவர்களிடம் ஒருவர் வந்து "உங்களது வருகையை அறிந்த குறைஷியர் நீங்கள் அங்கு நுழைவதை தடுக்கும் நோக்கில் அல்லாஹ் மீது சத்தியம் செய்து வெளியேறி உள்ளார்கள்" எனக் கூறினார்.

இதைக் கேட்ட நபியவர்கள் "குறைஷியருக்கு சாபம் உண்டாகட்டும். அவர்கள் எங்களுக்கு வழிவிடாமல் இருக்க அவர்களுக்கு என்னதான் நேர்ந்திருக்கிறது, அவர்கள் எனக்குத் தீங்கு செய்யவே விரும்புகிறார்கள். அல்லாஹ் எனக்கு வெற்றியைத் தந்தால் அவர்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தினுள் நுழைந்து விடுவார்கள். அல்லாதபோது அவர்களிடம் பலமிருக்கும் வரை போராடுவார்கள். குறைஷியர் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ் எனக்கு வழங்கிய இத்தூதுக்கு வெற்றி கிட்டும் வரை அல்லது இப்பாதையில் மரணிக்கும் வரை நான் தொடர்ந்து போராடுவேன்" எனப் பதிலுரைத்தார்கள்.

நபியவர்களும் தோழர்களும் மக்காவுக்கு சமீபமாக உள்ள ஹுதைபிய்யா (தற்போது இப்பிரதேசம் மக்கா-ஜித்தா வீதிக்கு அண்மையில் அமைந்துள்ளது) என்ற இடத்தை அடைந்தார்கள். அவ்வேளை, ஹுஸாஆ கோத்திரத்தைச் சேர்ந்த சிலர் நபியவர்களின் வருகைக்கான காரணத்தை வினவிய போது தாம் உம்ராவை நிறைவேற்றும் நோக்கிலேயே வந்துள்ளதாக அவர்களிடம் குறிப்பிட்டார்கள். பின்னர், அவர்கள் குறைஷியரிடம் சென்று நீங்கள் முஹம்மதுடைய விஷயத்தில் அவசரப்பட வேண்டாம் எனவும் அவர் யுத்தம் செய்ய வரவில்லை. மாறாக, க.்.பாவை தரிசிக்கவே வந்திருக்கிறார் எனவும் கூறினர். இது கேட்ட குறைஷியர் "இல்லை, இல்லை இறைவன் மீது ஆணையாக! அவர் எமது பிரதேசத்தினுள் ஒருபோதும் பலாத்காரமாக நுழைய முடியாது. அரபு மக்கள் இது தொடர்பாக எம்மைப் பற்றி இழிவாகப் பேசவும் கூடாது" எனக் கூறினார்கள்.

இவ்விடயம் குறித்து நபியவர்களோடு பேசுவதற்கென குறைஷிகள் தமது தரப்பிலிருந்து உர்வத் இப்னு மஸ்-ஊத் என்பவரை அனுப்பி வைத்தனர். இவருக்கும் சில ஸஹாபிகளுக்கும் இடையில் நடைபெற்ற நீண்ட கலந்துரையாடலின் பின் குறைஷிகளிடம் அவர் திரும்பிச் சென்று நபித்தோழர்கள் நபியவர்கள் மீது

வைத்துள்ள அன்பு, கௌரவம், அபிமானம் குறித்தும் அவர்கள் சமாதானத்தில் கொண்டுள்ள வேட்கை குறித்தும் எடுத்துக் கூறினார். ஆயினும், குறைஷியர் அதனை ஏற்க மறுத்தனர்.

பின்னர், நபியவர்கள் தமது வருகையின் நோக்கத்தை தெளிவுபடுத்தும் வகையில் உஸ்மான் இப்னு அப்பான் (ரழி) அவர்களை குறைஷியரிடம் அனுப்பி வைத்தார்கள். மக்கா சென்ற உஸ்மான் (ரழி) அவர்களின் வருகை தாமதமாகவே, அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற செய்தி முஸ்லிம்களுக்கு மத்தியில் பரவத் தொடங்கியது. இதனை அறிந்த நபியவர்கள் இக்கூட்டத்தாரோடு யுத்தம் புரியாது இந்த இடத்திலிருந்து நகர மாட்டோம் எனக் கூறிவிட்டு ஜிஹாதில் ஈடுபடவும் அல்லாஹ்வின் பாதையில் வீர மரணம் அடையவும் தன்னிடம் பைஅத் செய்யுமாறு தோழர்களை கேட்டுக் கொண்டார்கள். இதன்படி அங்கிருந்த மரமொன்றின் நிழலிலிருந்து போராட்டத்தில் பின்வாங்குவதில்லை எனவும், ஒன்று சமாதானம் அல்லது வீர மரணம் எனவும் நபியவர்களது கையில் தோழர்கள் பைஅத் செய்து கொடுத்தார்கள்.

நபியவர்கள் இவ்வாறு தோழர்களிடம் பைஅத் செய்து கொண்டதை அறிந்த குறைஷிகள் அது குறித்து அச்சம் கொண்டு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களாக சமாதானம் செய்து கொள்ள முன்வந்தனர். இதன்படி, சில நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கையொன்று குறைஷியருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே கைச்சாத்தானது. இந்த உடன்படிக்கையே இஸ்லாமிய வரலாற்றில் ஹுதைபிய்யா உடன்படிக்கை என வழங்கப்படுகிறது.

### ஹுதைபிய்யா உடன்படிக்கையின் நிபந்தனைகள்

1. நபியவர்களும் தோழர்களும் இவ்வருடம் உம்றா செய்யாது மதீனாவுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அடுத்த வருடம் மூன்று நாட்கள் மட்டுமே மக்காவில் தங்கிச் செல்ல முடியும். அவ்வாறு வரும் போது பயணிகள் வழக்கமாக எடுத்துச் செல்லும் உறை வாள்களை மட்டுமே எடுத்து வரமுடியும்.

2. இரு பிரிவினருக்கிடையேயும் 10 வருடங்களுக்கு யுத்தம் இடம்பெறமாட்டாது. இவ்விடைக்காலத்தில் இரு தரப்பினரும் எவ்வித பயமுமின்றி நாட்டில் வாழ முடியும்.



8-CM 14795

3. முஹம்மதிடமிருந்து மக்கா வரும் எவரும் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள். ஆனால் மக்காவில் இருந்து முஹம்மதிடம் வரும் அனைவரும் மக்காவுக்கு திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

4. இரு தரப்பினரும் தாம் விரும்பிய ஏனைய கோத்திரத்தாரோடு உடன்படிக்கைகள் செய்து கொள்ளலாம். எனினும், ஒரு தரப்பினர் மற்றத் தரப்பினரின் ஆதரவாளர்களுக்கெதிராக போர் தொடுக்கக் கூடாது.

இந்த உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதற்காக குறைஷியர் சார்பில் சுஹைல் இப்னு அம்ர் என்பவர் கலந்து கொண்டார். ஈற்றில் குறைஷியரது விருப்பத்துக்கு ஏற்பவே உடன்படிக்கையும் கைச்சாத்தானது. உடன்படிக்கையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் முஸ்லிம்களுக்கு மிகுந்த ஆத்திரத்தை ஏற்படுத்தின. குறித்த நிபந்தனைகள் தொடர்பாக தோழர்கள் நபியவர்களோடு தர்க்கிக்கவும் முனைந்தார்கள். நபித்தோழர் உமர் (ரழி) மிகக் கடுமையாகவே இருந்தார். இந்த இக்கட்டான நிலையிலும் நபியவர்கள் உறுதி குலையாதவராக நின்று “நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய அடிமை. அவன் என்னை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வழிதவறச் செய்யமாட்டான்” என்று கூறி அவர்களின் வாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

நபித்தோழர்களுக்கு ஆத்திரத்தை ஊட்டிய - ஆனால், நபியவர்கள் ஏற்றுக் கொண்ட இந்த நிபந்தனைகள் மேலோட்டமாக முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவது போன்ற சாயலைக் கொண்டிருந்தாலும் குறித்த நிபந்தனைகளின் பயன்களை பிற்காலங்களில் காணமுடிந்தது. இவை நபியவர்களின் தூர நோக்கு, அறிவுக் கூர்மை, கருத்திலும் செயலிலும் அவர்களை நேர்வழிப்படுத்திய வஹியின் வழிகாட்டல் முதலானவற்றால் பெறப்பட்டனவாகும்.

இந்த வெற்றி குறித்து அல் குர்-ஆன் பின்வரும் வசனங்களின் ஊடாக ஹுதைபிய்யாவிலிருந்து திரும்பிச் செல்லும் வழியிலேயே முன்னறிவிப்புச் செய்தமை நோக்கத்தக்கது.

> "(நபியே!) நிச்சயமாக நாம் மிக மகத்தான வெற்றியை அளித்தோம். (48 : 1)

இந்த வசனத்தில் வரும் மகத்தான வெற்றி என்பது ஹுதைபிய்யா உடன்படிக்கையின் விளைவுகளுள் ஒன்றாக அமைந்த மக்கா வெற்றியையே சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

**மக்கா வெற்றி**

மக்கா வெற்றி எனப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வு ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ரமழான் மாதம் இடம் பெற்றது. எந்தவோர் அரபுக் கோத்திரமும் தமது விருப்பத்தின் பிரகாரம் முஸ்லிம்களுடனோ அல்லது குறைஷியருடனோ உடன்படிக்கை செய்து கொள்ள முடியும் என்ற ஹுதைபிய்யா நிபந்தனையின்படி குஸாஆ எனும் கோத்திரம் நபியவர்களோடும் பக்ர் கோத்திரத்தார் குறைஷியரோடும் பாதுகாப்பு உடன்படிக்கை செய்து கொண்டனர். ஹிஜ்ரி 8 இல் பக்ர் கோத்திரத்தார் குஸாஆ கோத்திரத்தாரைத் தாக்கி சுமார் 20 பேரைக் கொலை செய்தனர். அதேவேளை குறைஷியர் அவர்களுக்குத் தமது தோழமைக் கூட்டணி என்ற வகையில் ஆயுதங்களையும் செல்வங்களையும் வழங்கி உதவி புரிந்தனர். இதனால் குஸாஆ கோத்திரத்தவர் நபிகளாரிடம் முறையிட்டனர். இதனால் நபிகளார் குறைசியரிடம் பின்வரும் மூன்று கோரிக்கைகள் முன்வைத்தார்கள்.

I. இறந்தவர்களுக்காக நஷ்ட ஈடு கொடுங்கள்.
II. முடியாதெனில் பனூ பக்ருகளுக்கு உதவுவதை நிறுத்துங்கள்.
III. அதுவும் முடியாதெனின் ஹுதைபியா உடன்படிக்கையை கிழித் தெறியுங்கள். குறைசியர் மூன்றாவது கோரிக்கையைத் தெரிவுசெய்தனர் இதனால் நபியவர்கள் கடும் கோபமடைந்த நிலையில் குறைஷியரோடு யுத்தம் செய்யும் நோக்கில் குறித்த வருடம் ரம்ழான் மாதம் 10ம் நாள் சுமார் 10,000 பேர் கொண்ட படையணியினரோடு மதீனாவிலிருந்து வெளியேறிச் சென்றார்கள். பயணக் களைப்பு மிகுதியால் முஸ்லிம்கள் இடையில் நோன்பையும் முறித்துக் கொண்டனர். முஸ்லிம் படை “மர்ரு லஹ்ரான்” எனுமிடத்தில் தங்கியவேளை அப்பாஸ் (றழி), அபூசுப்யானுக்கு பாதுகாப்பு வழங்கி நபிகளாரிடம் கூட்டிவந்தார்கள். குறைஷிகளின் தலைவரும் நபியவர்களின் மிகக் கொடிய எதிரிகளுள் ஒருவருமான அபூஸுபியான், தன்னால் 20 வருடங்களாகப் பல்வேறு இன்னல்களுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்ட ஒரு மனிதனின் கருணையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இக்காட்சி மனக் கிளர்ச்சியை அளிக்க வல்லதாயிருந்தது. ஈற்றில் அபூஸுபியான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

அபூஸுப்யான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதோடு இரத்தம் சிந்தாது மக்காவைக் கைப்பற்றும் தனது இலக்கை நபிகளார் (ஸல்) அவர்கள் அடைந்தார்கள். நபியவர்களுக்கு மக்காவில் இருந்து வந்த எதிர்ப்பும் முடிவுக்கு வந்தது. நபியவர்கள் தமது தோழர்களோடு தமது ஒட்டகத்தில் அமர்ந்தவாறு, இந்த மகத்தான வெற்றியை நல்கிய அல்லாஹ்வுக்கு நன்றி கூறும் வகையில் தமது நெற்றி, ஒட்டகத்தின் திமிலைத் தொடுமளவு தலையை முன்னோக்கித் தாழ்த்தியவர்களாக மக்காவினுள் நுழைந்தார்கள். முதலில் கஃபாவினுள் பிரவேசித்தார்கள். கஃ. பாவை வலம் வந்த நபியவர்கள்

"சத்தியம் வென்றது. அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்" (17: 81) என்ற வசனங்களை உச்சரித்தவர்களாக அங்கிருந்த 360 சிலைகளையும் அகற்றியதோடு அங்கே ஏகத்துவக் கொள்கையையும் பிரகடனம் செய்தார்கள். பிறகு க.்.பாவில் இரண்டு ரக்அத்துகள் தொழுதுவிட்டு அதன் வாயிலின் முன்னால் நின்று கொண்டார்கள்.

முஹம்மதால் தமக்கு என்னவெல்லாம் நேர்ந்துவிடப் போகிறதோ என்று குறைஷியர் அஞ்சினர். அவர்களைப் பார்த்த நபியவர்கள் "குறைஷியரே, நான் உங்களுக்கு என்ன செய்வேன் என்று நினைக்கின்றீர்கள்" எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் "நீங்கள் நல்லதையே செய்வீர்கள், நீங்கள் கண்ணியமான ஒரு சகோதரன், கண்ணியமான ஒரு சகோதரனின் புத்திரர்" எனக் கூறினர். இதனைக்கேட்ட நபியவர்கள், "நபி யூஸுப் கூறிய வார்த்தைகளையே நானும் உங்களுக்குக் கூறுகின்றேன். இன்று உங்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது. நீங்கள் அனைவரும் விடுதலை பெற்று விட்டீர்கள். சென்று விடுங்கள்" எனக்கூறி அவர்கள் அத்தனை பேரையும் மன்னித்துவிட்டார்கள். மக்காவினுள் நபியவர்கள் வெற்றியாளராகப் பிரவேசித்தபோது நான்கு பேருக்கு மட்டுமே மரண தண்டனை வழங்கினார்கள். நபிகளாரின் முன்மாதிரியைப் பின்பற்றிய தோழர்களும் அமைதியாகவும் சமாதானமாகவும் மக்காவினுள்ளே நுழைந்தார்கள். அவர்கள் எந்த வீட்டையும் கொள்ளையடிக்கவுமில்லை. எந்தவொரு அநியாயத்திலும் ஈடுபடவுமில்லை.

ஒரு துளி இரத்தமும் சிந்தாது மக்காவைக் கைப்பற்றிய இந்த நிகழ்வு வரலாற்றில் மிக உன்னதமான இடத்தை வகிக்கின்றது. அரேபியரின் சமயத் தலைவராக இருந்த குறைஷியர், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும் அரேபியா முழுதும் விக்கிரக வழிபாட்டின் பிடியிலிருந்து விடுதலை பெற்றது. நபியவர்களின் பிறந்தகமான, மக்காவில் இறைவனின் வேத வெளிப்பாடு முதலில் வெளியாகியது. அங்கு இஸ்லாமியப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்ட பதின்மூன்றாண்டுகள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகி ஈற்றில் இஸ்லாம் அங்கு வாழ முடியாதவாறு மாற்றப்பட்டிருந்த மக்கமா நகரம், இவ்வெற்றியின் பயனாக முஸ்லிம்கள் அனைவரும் கொண்டாடும் புனித நகராக மாறியது. இந்த மாபெரும் வெற்றி பற்றி பேராசிரியர் ஹிட்டி பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது. "முற்கால வரலாறுகளிலுள்ள எந்தவொரு வெற்றிப் பிரவேசத்தையும் இந்த நிகழ்வோடு ஒப்பீடு செய்து பார்ப்பது மிக மிகக் கடினமான ஒன்றே." (அரேபியர் வரலாறு) மக்காவை வெற்றி கொண்ட அன்றைய தினம் நபியவர்கள் தோழர் பிலாலிடம் க.்.பாவின் மீது ஏறி நின்று, ழுஹர் தொழுகைக்காக அதான் கூறுமாறு பணித்தார். இதுவரை இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாது அங்கு இருந்த குறைஷியருக்கு இது மிகுந்த மன வருத்தத்தை ஏற்படுத்தியது. எனினும், நபியவர்கள் மிக முக்கியமானதொரு நோக்கத்திற்காகவே இதனை மேற்கொண்டார்கள்.

மக்காவில் குறைஷியருக்கு ஏற்பட்ட வீழ்ச்சி அரேபியாவில் மிகப் பழங்காலம் முதல் இருந்து வந்த, ஊறிப் போயிருந்த உருவ வழிபாட்டின் வீழ்ச்சியையே குறித்துக் காட்டியது. மக்கா நகரமே உருவ வழிபாட்டுக்கான கேந்திர மையமாக விளங்கி வந்தது. மக்கத்துக் குறைஷியர் பழமை வாய்ந்த மூடக் கொள்கைகளைப் பின்பற்றுவதில் பிரபல்யம் பெற்று விளங்கினர். மக்கா, முஸ்லிம்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்ததோடு அறியாமை இருள் நீங்கி இஸ்லாம் எனும் புதிய நம்பிக்கையின் பேரொளி அரேபியா எங்கும் வியாபிக்கலாயிற்று. இஸ்லாத்தின் பிற்கால வெற்றிகளின் வரலாற்றை பத்ஹ் மக்கா எனப்படும் இந்த மகத்தான மக்கா வெற்றியே ஆரம்பித்து வைத்ததெனலாம்.

## இறுதி ஹஜ்

ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டு நபியவர்கள் ஹஜ் செய்யத் தீர்மானித்தார்கள். எனவே குறித்த ஆண்டில் துல்க..தா மாதம் நபியவர்கள் ஹஜ் செய்ய இருக்கிறார்கள் என்ற செய்தி அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்தி அரபுலகம் முழுவதும் பரவியது. நபியவர்களோடு ஹஜ் செய்யக்கூடிய மகத்தான பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளும் பேரார்வத்தோடு அரபுலகம் முழுவதும் ஒன்று திரண்டது.

நபித்துவம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் நபியவர்கள் மேற்கொண்ட ஒரேயொரு ஹஜ் இதுவாகும். சில வரலாற்றாசிரியர்கள் நபியவர்களின் இறுதி ஹஜ்ஜுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து பதினான்காயிரமாக இருந்தது என்று குறிப்பிடுகின்றனர். இதனை அண்ணளவான எண்ணிக்கை என்றே கருதலாம்.

துல்க..தா மாதம் மதீனாவில் இருந்து புறப்பட்ட நபியவர்கள் துல்ஹஜ் 4 ஆம் நாள் மக்காவை அடைந்தார்கள். மக்கா வந்த நபியவர்கள் முதலில் க..பாவைத் தவாப் செய்தார்கள். பின்னர் மகாமு இப்றாஹீமில் இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். பின்னர் ஸஈ செய்துவிட்டு துல்ஹஜ் 8 ஆம் நாள் தோழர்கள் சகிதம் மினாவில் சென்று தங்கினார்கள். அடுத்த நாள் துல்ஹஜ் 9 இல் அரபாவைச் சென்றடைந்தார்கள். இங்குதான் நபியவர்கள் வரலாற்றுப் புகழ்வாய்ந்த அந்த சிறப்புரையை நிகழ்த்தினார்கள். இந்த உரையைத்தான் இஸ்லாமிய வரலாறு நபியவர்களின் இறுதிப் பேருரை - ஹஜ்ஜதுல் விதா என அழைக்கின்றது.

இந்த இறுதிப் பேருரை நிகழ்வில் இரண்டு முக்கிய விடயங்கள் எமது கவனத்தை ஈர்க்கின்றன.

1. அங்கு சமுகமளித்திருந்த பெருந்திரளான மக்கள் நபியவர்களை விசுவாசித்தவர்களாக, அவர்களது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக, அவர்களது ரிஸாலத்தை உண்மைப்படுத்துபவர்களாக அறேபியத் தீவகற்பத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அங்கு வந்து

குழுமியிருந்தனர். ஆனால் அவர்கள் அத்தனை பேரும் சுமார் 23 வருடங்களுக்கு முன்னர் தீவிர சிலை வணங்கிகளாகவும் இணைவைப்பாளர்களாகவுமே இருந்து வந்தனர்.

2. நபியவர்கள் இங்கு ஆற்றிய அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேருரை மறுமை வரை தோன்றப் போகும் முழு மனித சமுதாயத்தினருக் காகவும் ஆற்றிய மதி நுட்பமானதும் தூர நோக்குக் கொண்டதுமான ஒரு பிரசங்கமாகும். தனது தலைமைத்துவத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து தனது ரிஸாலத்தையும் பூரணப்படுத்தியதன் பின்னர், நபியவர்கள் அறிவிப்புச் செய்த அடிப்படைகள், அவர்கள் த.்.வாவின் ஆரம்பத்தில் தனிமையாகவும் இம்சைகளுக்கு உட்படுத்தப்பட்டும், அவர்களைப் பின்பற்றுபவர்கள் எண்ணிக்கையில் குறைந்தோராகவும், பலவீனமுற்ற நிலையிலுமிருந்த வேளையில் அறிவிப்புச் செய்த அடிப்படைகளை வலியுறுத்துவனவாகவே அமைந்துள்ளன.

## நபிகளாரின் இறுதிப் பேருரையின் சுருக்கம்

"மனிதர்களே! எனது பேச்சைச் செவிமடுங்கள். இந்த வருடத்துக்குப் பின்னர் இந்த இடத்தில் நான் உங்களைச் சந்திப்பேனா என்பதை அறியேன். (இது நபியவர்களின் அற்புதங்களில் ஒன்று.) மனிதர்களே! நீங்கள் உங்கள் இரட்சகனைச் சந்திக்கும் வரை உங்களுடைய இரத்தமும் செல்வங்களும் கண்ணியமிக்க இந்த நாளைப்போல, கண்ணியமிக்க இந்த மாதத்தைப் போல, உங்களுக்குப் புனிதமானவையாகும். நீங்கள் நிச்சயமாக உங்களுடைய இரட்சகனைச் சந்திப்பீர்கள். உங்கள் செயல்கள் குறித்து அவன் உங்களிடம் வினவுவான். இதனை நான் உங்களுக்கு எத்தி வைத்துவிட்டேன். யாரிடத்தில் அமானிதமாக ஒப்படைக்கப்பட்ட பொருள் இருக்கிறதோ, அவர் அதனை உரியவரிடத்தில் ஒப்படைத்துவிடட்டும்.

"அஞ்ஞான காலத்து பழக்கவழக்கங்கள் அனைத்தும் வேரோடு அழிக்கப் பட்டுவிட்டன."

"ஓர் அறபிக்கு, அறபியல்லாதாரை விடவோ, அறபியல்லாதோருக்கு, ஓர் அறபியை விடவோ எந்தச் சிறப்பும் மேன்மையும் இல்லை. நீங்கள் அனைவரும் ஆதமின் மக்களே! ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டவராவார்."

"முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாவர். உங்கள் அடிமை கள் பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் உண்பதையே அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள். நீங்கள் அணிவதையே அவர்களுக்கும் அணிவியுங்கள்."

“அறியாமைக் காலத்து இரத்தப் பழிக்குப் பழிவாங்குதல் அனைத்தும் தடை செய்யப்பட்டுவிட்டன. இனி பழைய கொலைக்குப் பழிவாங்கும் உரிமை எவருக்கும் இல்லை. அனைவருக்கும் முதலாக நான் என் குடும்பத்தாரின் ரபூஆ பின் ஹர்ஸின் மகனுக்கான இரத்தப் பழி வாங்குதலை தடை செய்கிறேன்.”

அறியாமைக் காலத்து வட்டிகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டு விட்டன. அனைவருக்கும் முதலாக நான் எனது குடும்பத்தாரின் வட்டியை செல்லாததாக ஆக்குகிறேன்.”

“பெண்கள் தொடர்பாக இறைவனைப் பயந்து கொள்ளுங்கள். பெண்கள் மீது உங்களுக்கும் உங்கள் மீது பெண்களுக்கும் உரிமைகள் உள்ளன. அவர்கள் உங்களது கைகளில் ஒப்படைக்கப்பட்ட அடைக்கலப் பொருட்கள் அவர்களை அன்போடு நடாத்துங்கள்.”

“நான் உங்களிடையே இரண்டை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அவற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டால் என்றுமே வழி பிறழ்ந்து போகமாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் புனித கலாமும் எனது சுன்னாவுமாகும்.”

இதன்பிறகு நபியவர்கள் ஷரீஅத் தொடர்பான அடிப்படைச் சட்டங்களை எடுத்துரைத்தார்கள். பின்னர் திரண்டிருந்த சனத் திரளை நோக்கி பின்வருமாறு வினவினார்கள்.

“உங்களிடம் இறைவன் என்னைப் பற்றி விசாரித்தால் என்ன சொல்வீர்கள்?”

“நீங்கள் இறைவனின் தூதை எடுத்துரைத்து விட்டீர்கள். உங்களது கடமையை முழுமையாக நிறைவேற்றி விட்டீர்கள்” என நாங்கள் கூறுவோம் என்று நபித் தோழர்கள் பதில் கூறினர்.

நபியவர்கள் வானத்தை நோக்கி விரலை உயர்த்தி மூன்று முறை “இறைவா! இதற்கு நீயும் சாட்சியாக இரு!” என்று கூறினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அல்குர்ஆனின் கீழ் வரும் வசனங்கள் இறக்கியருளப்பட்டன.

“இன்று உங்களுக்காக இந்த மார்க்கத்தை பூரணப்படுத்தி விட்டோம். நமது அருளை முழுமையாகப் பொழிந்துவிட்டோம். உங்களுக்காக இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக அங்கீகரித்துவிட்டோம்”.

இந்த ஹஜ்ஜின்போது நபியவர்கள் ஹஜ் செய்யும் வழிமுறைகள் அனைத்தையும் தாமே முன்னின்று செய்து காட்டினார்கள். இந்த சந்தர்ப்பத்தில்தான் நபியவர்கள், "என்னிடமிருந்து ஹஜ்ஜின் சட்டங்களைக் கற்றுக் கொள்ளுங்கள். இதற்குப் பிறகு மற்றுமொரு ஹஜ் செய்ய வாய்ப்புக் கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்பதை நான் அறியேன்." என்றும் "இங்கே இப்போது என்னுடன் இருப்பவர்கள் அனைவரும் இங்கு நான் கூறிய அறிவுரைகளை இங்கு சமுகம் தராதோருக்கு எடுத்துரைப்பார்களாக!" என்றும் கூறினார்கள்.

நபிகளாரின் இந்த இறுதிப் பேருரை வரலாற்றில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. முஸ்லிம்களின் வாழ்க்கைச் சிறப்புக்காக நிகழ்த்தப்பட்ட நபியவர்களின் போதனைகளை இப்பிரசங்கம் நினைவூட்டியது. நபியவர்கள் கொண்டிருந்த இலட்சிய சமுதாயம் பற்றிய கருத்துக்களையும், சகோதரத்துவத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு சமுதாயத்தின் தத்துவத்தையும் பிரகடனம் செய்வதாக இப்பிரசங்கம் அமைந்தது. இஸ்லாமியக் கோட்பாடுகளின் சாராம்சமாக அமைந்த இந்தப் பிரசங்கத்தின் மூலம் நபி (ஸல்) அவர்கள் சமத்துவமும் சகோதரத்துவமுமே ஓர் இலட்சிய சமுதாயத்தின் உயிர் நாடிகள் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள்.

# 5. ஸஹாபாக்களின் சிறப்புகளும் முன்மாதிரிகளும்

## அல் அஷறதுல் முபஷ்ஷறாஹ் வாழ்வும் முன்மாதிரிகளும்

நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளில் பல ஸஹாபாக்களுக்கு பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில், “நிச்சயமாக உங்களுக்கு சுவனம் செல்லும் வாய்ப்புக்கிட்டும்” என்பதாக உற்சாகமூட்டும் நற்செய்திகளைக் கூறியிருக்கிறார்கள். அவற்றில் சில நற்செயல்களை குறிப்பிட்டுக் காட்டியும், சில குறிப்பிட்ட நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தியும் காணப்படுகின்றன. உதாரணமாக, அபூஹுரைரா (றழி) அவர்களின் காலடிச் சப்தம் சுவனத்தில் கேட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்கள், அதே போல் ஹஸன், ஹுஸைன் (றழி) சுவனத்து இளைஞர்களின் தலைவர்கள் எனக் கூறியுள்ளார்கள், பாத்திமா (றழி) அவர்களைப் பார்த்து சுவனத்தில் பெண்களின் தலைவி எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறே முஸ்லிம்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டபோது பி.்.று றூமாவை வாங்கிக் கொடுப்பவருக்கு சுவனத்தை வாக்களித்தார்கள், அதேபோல் கஷ்டகாலத்து படை தயார் செய்வதில் பங்கேற்போருக்கு சுவனம் கிடைப்பதாக வாக்குறுதி வழங்கினார்கள். அதே போல் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்ட அனைத்து ஸஹாபாக்களுக்கும் ஆயுட்கால பாவமன்னிப்பை அல்லாஹ் முற்கூட்டியே வாக்களித்திருந்தான். இவற்றை மையமாகக் கொண்டு நோக்கும் போது பலநூறு ஸஹாபாக்கள் சுவர்க்கத்திற்கான தகுதியை முற்கூட்டியே பெற்றிருந்தனர் என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் ஸஹாபாக்கள் அனைவரும் சுவனம் செல்லத் தகுதியானவர்களே என்பதை அன்னவர்கள் இஸ்லாத்திற்காக சிந்திய இரத்தங்களும் செய்த தியாகங்களும் மிகத் தெளிவாக விளக்குகின்றன. ஆயினும், மறைவானவற்றின் ஞானமும், இறுதித் தீர்மானமும் அல்லாஹ்வுக்கு மட்டுமேயுள்ள உரிமை என்பது நினைவிற் கொள்ளப்பட வேண்டும்.

இவ்விதமிருக்க, “அஷறதுன் முபஷ்ஷறாஹ்” சுவர்க்கத்திற்கான சுபசோபனம் கூறப்பட்ட பத்து ஸஹாபாக்கள் என குறிப்பிட்ட சிலரை மட்டும் ஏன் வரலாற்றில் சிலாகித்துக் கூறப்படுகின்றது என்ற விடயம் விசேடமாக நோக்கப்பட வேண்டியதொன்றாகும். அதாவது இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலேயே அதனை ஏற்று, அங்கீகரித்து அதற்காகவே தம்மையும் தமது செல்வம், சுகம், காலம் அனைத்தையும் அர்ப்பணித்த அந்த தோழர்களின் பெறுமானத்தை அன்று தொடக்கம், உலக முடிவு வரையுமுள்ள இஸ்லாமிய சமூகம் அறிந்து அதன் மூலம் படிப்பினையும் வழிகாட்டலும் பெறவேண்டும் என்பதற்காக நபி (ஸல்) அவர்கள் அவ்வனைவருக்கும் ஒரே சந்தர்ப்பத்தில் ஒருவர் பின் ஒருவராக சுவனத்தின் உரிமைச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்துள்ளார்கள் எனலாம்.

முதல் நான்கு கலீபாக்களும் பின்வரும் ஆறு ஸஹாபாக்களும் அஷரதுல் முபஷ்ஷராவில் அடங்குவர். இவர்களில் கலீபாக்கள் வரலாறு பின்னர் விரிவாகக் கூறப்படவிருப்பதால் அவர்கள் தவிர்ந்த ஏனைய ஆறு பேர் பற்றிய விபரங்களும் கீழே தரப்படுகின்றன.

### ஸுபைர் இப்னுல் அவ்வாம் (றழி) அவர்கள்

பதினைந்து வயது பூர்த்தியாகு முன்னரே இஸ்லாத்தின் முதல் ஏழு நபர்களுள் ஒருவராக பிரவேசித்த அவர்கள் நபியவர்களின் உயிர் தனது உயிரே என்பது போல் அன்னார் மீது பாசமுடன் செயற்பட்டார்கள். அபூபக்ர் (றழி) அவர்களின் மகள் அஸ்மா (றழி) அவர்களை மணந்து கொண்ட ஸுபைர் (றழி) அவர்களே இஸ்லாத்திற்காக முதன் முதலில் வாளை உருவியவராவார். ஹபஷா, மதீனா ஹிஜ்றத்களில் பங்கேற்ற அவர்கள் பத்ர் தொடக்கம் நபியவர்கள் காலத்து அனைத்துப் போர்களிலும் பங்கேற்றதோடு பிற்காலத்திலும் கலீபாக்களின் படைகளிற் கலந்து பாரிய வெற்றிகளுக்கு காரணமாயிருந்த பிரபல குதிரை வீரராவார். இவரை இஸ்லாத்தின் தூண்களில் ஒன்று என உமர் (றழி) ஒரு முறை புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். பெரும் கொடை வள்ளலான இவர்கள் தனது அனைத்து வருமானங்களையும் அல்லாஹ்வுக்காக தர்மம் செய்பவராகக் காணப்பட்டார். இறுதியில் தனது 67 ஆம் வயதில் ஜமல் யுத்தத்திலிருந்து ஒதுங்கி வெளியேறிச் சென்ற போது ஒரு நயவஞ்சகனால் கபடத்தனமாக ஷஹீதாக்கப்பட்டார்கள்.

### ஸஃதுப்னு அபீவக்காஸ் (றழி) அவர்கள்

இஸ்லாத்தின் ஆரம்ப உறுப்பினர்களுள் ஒருவரான ஸஃத் (றழி) அவர்கள், தனது பதினேழாம் வயதில் இஸ்லாத்தில் நுழைந்தார்கள். அன்றிலிருந்து மார்க்க செயற்பாடுகளில் தீவிர பங்கேற்றார்கள். ஒருமுறை ஒரு கணவாயில் முஸ்லிம்கள் மறைந்து தொழுது கொண்டிருந்த போது மக்கத்து முஷ்ரிக்களில் ஒருவன் தொந்தரவு செய்தான். அதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஸஃது (றழி) அறிவுறுத்தியும் அவன் அதற்கு செவிசாய்க்காமையால், அவனை இரத்தம் சிந்துமளவு தாக்கி விட்டார்கள். இதுவே இஸ்லாத்தின் பெயரில் சிந்தப்பட்ட எதிரியின் முதலாவது இரத்தமாகும். ஈட்டி எறிதலில் தேர்ச்சி பெற்றிருந்த அவர்கள் இஸ்லாத்தைக் காப்பதற்காக பல்லாயிரம் அம்புகளை (குறிப்பாக உஹதில்) எய்துள்ளார்கள். அன்னாரது தியாகங்களைக் கண்டு பூரித்த நபி (ஸல்) அவர்கள் ஸஃதுடைய துஆக்களை எப்போதும் எற்றுக்கொள்ளுமாறு அல்லாஹ்விடம் விண்ணப்பித்தார்கள்.

இவர் நபி (ஸல்) அவர்கள் காலத்து அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டுள்ளதோடு, கலீபாக்கள் காலத்திலும் தமது ஜிஹாதினைத் தொடர்ந் தார்கள். உமர் (றழி) அவர்களால் தளபதியாக நியமிக்கப்பட்ட அவர்கள், பாரஸீகர்களுக்கெதிராகப் பல யுத்தங்களை மேற்கொண்டு பாரஸீகர்களைத்

தோற்கடித்து வரலாற்றுப் புகழ்பெற்ற காதிஸிய்யாப் போரில் அவர்களது கொட்டத்தை அடக்கினார்கள்.

மதாஇனை வெற்றி கொண்டு கிஸ்ராவை வெளியேற்றினார்கள், அத்துடன் கூபா நகரை நிறுவி இஸ்லாமிய ஆட்சிக்கு பலம் சேர்த்தார்கள். கலீபா உமர், உஸ்மான் (றழி) காலத்தில் இறாக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த ஸ.்.த் (றழி) அவர்கள் ஹிஜ்ரி 55ல் முஹாஜிர்களில் இறுதியானவராக மதீனாவில் வபாத்தாகி அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

## அபூ உபைதா ஆமிறிப்னு அப்துல்லாஹ் அல் ஜர்ராஹ் (றழி) அவர்கள்

இவர்களும் முன்னையவர்கள் போன்று ஆரம்ப நாட்களிலேயே தன்னை இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டு அதற்காகவே தன்னை அர்ப்பணம் செய்த ஒருவர். ஹபஷா, மதீனா ஹிஜ்றத்களில் பங்கேற்ற இவர்கள், பத்ர் யுத்தம் முதல் நபி (ஸல்) அவர்கள் காலத்து அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்றவர்கள். இஸ்லாத்தின் எதிரியாக பத்ரில் போர் புரிந்த தனது தந்தையை தந்தை என்று கூடப் பார்க்காது கொலை செய்த கொள்கைப்பற்றாளர்.

நபி (ஸல்) அவர்களால் "அமீனு ஹாதிஹில் உம்மா" இந்த சமுதாயத்தின் காவலன் எனும் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்ட அவர்கள் நபியவர்களின் வபாத்தின் பின்னர் இடம் பெற்ற இஸ்லாமிய கிலாபத் விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். கலீபா உமர் (றழி) அவர்களால் ஷாம் தேசத்திலிருந்த இஸ்லாமியப் படையணியின் தளபதியாக நியமிக்கப்பட்ட இவர்கள், உரோமர்களுக்கெதிராக இடம் பெற்ற மிகப் பிரமாண்டமான யுத்தங் களுக்கு தலைமை தாங்கி இஸ்லாமியப் படையணியை வெற்றியின் பால் வழிநடாத்தினார்கள். இறுதியில் இஸ்லாமியப் படையணியுடனேயே தனது பணிகளை முன்னெடுத்துக் கொண்டிருந்த வேளை கொலரா நோயினால் பீடிக்கப்பட்டு ஹிஜ்ரி பதினெட்டாம் ஆண்டு அல்லாஹ்வின் பாதையிலேயே ஷஹீதானார்கள்.

## தல்ஹா இப்னு உபைதில்லாஹ் (றழி) அவர்கள்

இவர்களும் இஸ்லாத்தின் ஆரம்ப கால அங்கத்தவராவார். பெரும் செல்வந்தரான இவர்கள் இஸ்லாத்திற்காக தமது செல்வத்தை வாரி இறைத்தது மட்டுமல்லாது, இஸ்லாத்திற்காக அனைத்து முக்கிய நிகழ்வுகள் மற்றும் போராட்டங்களிலும் கலந்து கொண்டார்கள். குறிப்பாக உஹத் போரில் நபி (ஸல்) அவர்களைக் காப்பாற்றுவதற்காக சுமார் எழுபதுக்கு மேற்பட்ட காயங்களைத் தாங்கிக் கொண்டு களத்தில் நிலைத்திருந்து நபியவர்களைத் தனது தோள்களில் சுமந்து சென்று பாதுகாத்தார்கள்.

ஜமல் யுத்தத்தின்போது ஆயிஷா (றழி) அவர்களது அணியில் இருந்த போதும் அலீ (றழி) அவர்கள் அன்னாரைச் சந்தித்து நிலைமையை உணர்த்திய போது அதனை ஏற்று குழப்பங்களிலிருந்து ஒதுங்கிச் சென்றார்கள். ஆயினும் மர்வான் அவரைப் பின்தொடர்ந்து அன்னாரை கபடத்தனமாகக் கொலை செய்து விட்டார்.

### அப்துர் றஹ்மான் இப்னு அவ்ப் (றழி) அவர்கள்

சுபசோபனம் கூறப்பட்டோரில் ஒன்பதாவது நபராகக் கருதப்படும் அப்துர் றஹ்மான் (றழி) அவர்கள், மிகப் பிரபலமான செல்வந்தராகக் காணப்பட்டார்கள். இஸ்லாத்தை ஏற்ற முதல் ஏழு நபர்களில் ஒருவரான அவர்கள் ஹபஷாவுக்கான ஹிஜ்றத் மற்றும் மதீனா ஹிஜ்றத்திலும் பங்கேற்றார்கள். பத்ர் யுத்தம் முதல் அனைத்து இஸ்லாமியப் போர்களிலும் கலந்து கொண்ட அவர்கள் உஹதின் போது இருபதுக்கு மேற்பட்ட காயங்களுடன் களத்தில் நிலைத்திருந்து போராடினார்கள். இதனால் ஒரு காலில் நிரந்தர வடுவொன்று உண்டாயிருந்தது. மட்டுமன்றி பற்களும் சேதமடைந்து அவர்களது பேச்சிலும் குறைபாடு ஏற்பட்டது. இவையனைத்திற்கும் மேலாக கோடீஸ்வரரான அன்னவர்கள் எப்போதுமே செல்வத்தைத் தேக்கிவைக்காது அல்லாஹ்வின் பாதையில் வாரி இறைத்தார்கள். அதாவது மதீனா வாசிகள் அனைவருமே அப்துர் றஹ்மான் (றழி) அவர்களின் செல்வத்தில் பங்காளிகளாகக் காணப்பட்டனர் எனுமளவு தனது செல்வத்தைத் தாராள மயப்படுத்தியிருந்தார்கள்.

அவ்வாறிருந்தும், நபியவர்களின் பாசறையிற் பெற்ற பயிற்சி அன்னாரின் வாழ்க்கையில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது. அடிக்கடி நோன்பு நோற்பதோடு சாதாரண உணவுகளையே உண்ணுவார்கள். அடிக்கடி தனது சகாக்களான ஹம்ஸா (றழி), முஸ்அப் (றழி) அவர்களது இறுதி நிலையும் அவர்கள் கபனிடப்பட்ட உடை பற்றியும் குறிப்பிடுவதோடு தனது நிலையை சரி செய்து கொள்வார்கள். அவரைத் தேடி வெளியிலிருந்து வருவோர் பணியாட்களிலிருந்து அவரைப் பிரித்து அடையாளங்காண சிரமப்படுமளவு வேற்றுமையின்றி பணியாளர்களுடன் மிக நெருக்கமாகப் பழகுவார்கள். எவ்வேளையும் தனது செல்வம், தான் சுவனம் செல்வதைத் தாமதமாக்கிவிடக் கூடாது என்பதில் கவனமாயிருந்தார்கள். பல்லாயிரக் கணக்கில் தீனார்களை அல்லாஹ்வின் பாதையில் செலவிட்டார்கள்.

ஹிஜ்ரி முப்பத்திரெண்டாம் ஆண்டில் வபாத்தான அன்னவர்களுக்கு ஆயிஷா (ரழி) தனது அறையில் நபி (ஸல்) அவர்களுடனும் அவர்களது ஏனைய இரு தோழர்களான அபூபக்ர், உமர் (றழி) ஆகியோருக்குமருகில் அடக்கம் செய்து விசேட கௌரவமளிக்க விரும்பினார்கள். ஆயினும் அவர்களது அளவுக்குத் தம்மை உயர்த்திக் கொள்ளத் தயக்கம் காட்டிய அப்துர் றஹ்மான் (றழி) அவர்கள் தனது மற்றுமொரு உற்ற தோழரான உஸ்மானிப்னு மஃஊன் என்னும் ஸஹாபிக்கருகில் அடக்கம் செய்து விடுமாறு வஸிய்யத் செய்திருந்த பிரகாரம் அவ்வாறே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

### ஸஃத் இப்னு ஸைத் (றழி) அவர்கள்

கலீபா உமர் (றழி) அவர்களின் மைத்துனரான ஸஃத் (றழி) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப அங்கத்தவர்களில் ஒருவராவார். தனது தந்தை ஜாஹிலிய காலத்திலேயே விக்கிரக வணக்கத்திலிருந்து தூரமாகி ஓரிறைக் கொள்கையிலிருந்ததை அறிந்திருந்த அவர்களுக்கு, நபி (ஸல்) அவர்கள் போதித்த ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக்கொள்ள நீண்ட காலம் தேவைப்படவில்லை. நபி (ஸல்) அவர்களுடன் பத்ரைத் தவிர அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள், தல்ஹா (ரழி) அவர்களுடன் பத்ர் நிகழ்வின்போது இணைந்து உளவுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

பேணுதலும், உலகப் பற்றற்ற சிந்தனையும் கொண்ட அவர்களது, பிரார்த்தனை உடனே ஏற்றுக்கொள்ளப்படும் சிறப்புத் தன்மையைப் பெற்றிருந்தது. ஒரு முறை அபூ உபைதா (றழி) அவர்கள் சிரியாவின் ஒரு பகுதியின் நிர்வாகத்தை ஸஃத் (றழி) அவர்களிடம் ஒப்படைத்த போது அல்லாஹ்வின் நெருக்கத்திலிருந்தும் ஜிஹாதிலிருந்தும் என்னை தூரமாக்கப் பார்க்கிறீர்களா எனக்கேட்டுவிட்டுப் படையுடன் போர்க்களத்துக்கே சென்றுவிட்டார்கள்.

மதீனா சமூகத்தினால் தலைவராக மதிக்கப்படும் அளவு அவர்களது மதிப்பு உயர்ந்து காணப்பட்டது. ஹிஜ்ரி 51ல் காலமான அவர்கள், கண்ணியமிக்கவர் பலரின் பிரசன்னத்துடன் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

மேற்கூறப்பட்ட பதின்மரும், நபியவர்களால் ஒரே சந்தர்ப்பத்தில் சுவன சான்றிதழ் வழங்கப்பெற்றவர்களாவர். இவ்வரிய நற்பேற்றின் பின்னணியை ஆராய்ந்து பார்க்கும் போது அன்னவர்கள் தாம் தெளிவாக விளங்கி உறுதி கொண்ட கொள்கையில் எத்துணை தூரம் விசுவாசம் கொண்டிருந்துள்ளனர். தாம் மதித்த தமது தலைவருக்கு எவ்வளவு மதிப்பும் கௌரவமும் வழங்கியுள்ளனர் அத்துடன்

அன்னாரது மறைவின் பின்னரும் அவர்களது பணியைத் தொடர்வதில் எவ்வளவு தூரம் இதய சுத்தியுடன் தொண்டாற்றியுள்ளனர் என்பதை மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

எனவே வல்லவன் அல்லாஹ் இம்மாமனிதர்களுக்கு வாக்களித்ததைப் பார்க்கிலும் மிகச் சிறந்ததை வழங்குவான் என்பதே எமது எதிர்பார்ப்பும் பிரார்த்தனையுமாகும்.

## உம்மஹாத்துல் மூமினீன் வாழ்வும் முன்மாதிரிகளும்

நபி (ஸல்) அவர்களால் மணமுடிக்கப்பட்ட, அன்னவர்களுடன் இணைந்து இஸ்லாத்திற்கான அர்ப்பணிப்புக்களை மேற்கொண்ட அவர்களது மனைவியரை, அல்குர்ஆன் மு.ஃமின்களின் தாய்மார்களாக பிரகடனப்படுத்துகின்றது. இதனால் ஒரு தனிமனிதன் தனது தாய்மீது எவ்வாறு அன்பும் பற்றும் கொண்டிருப்பானோ அவ்வாறே நபிகளாரின் மனைவியர் மீதும் பற்றுக்கொள்ளவேண்டும். அதேபோல் ஒவ்வொருவரும் தத்தமது தாய்மார்களில் எத்தகைய கௌரவமும் மதிப்பும் உறவும் கொண்டிருப்பரோ அதே வகையான உறவும் மதிப்பும் அக்கறையும் அவர்கள் மீதும் கொண்டிருப்பது கடமையாகும். இது பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது:

> " நபி (ஸல்) அவர்களுக்குத் தங்களை விடவும் முக்கியத்துவம் கொடுப்பது மு.ஃமின்கள் மீது கடமையாகும், அவ்வாறே அன்னவரது மனைவியர் அவர்களுக்குத் தாய்மார்களாகும்…"
> (அல் அஹ்ஸாப் : 06)

இஸ்லாத்தின் எதிரிகள், நபிகளாரின் பலதார மணத்தினை தத்தமது சூழலுக்கும் சிந்தனைக்கும் ஏற்ப தப்பாக சித்தரிப்பதும் விமர்சிப்பதும் வழக்கமாக இருந்து வருகின்ற போதிலும் அது அவர்களது அத்துமீறிய நியாயமற்ற கருத்துக் களுக்கப்பால், உயரிய நோக்கமும், சிறந்த பின்னணியும் கொண்டது என்பதை முஸ்லிம்களும், நடுநிலையான சிந்தனையாளர்களும் தயக்கமின்றி ஏற்றுக் கொள்வர்.

நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களான மு.ஃமின்களின் தாய்மார்களை சுருக்கமாக அறிந்து கொள்வோம்:

### 1. அன்னை கதீஜா (றழி அன்ஹா) அவர்கள்

கதீஜா பின்த் குவைலித் எனும் பெயர் கொண்டழைக்கப்பட்ட அன்னை அவர்கள், குறைஷிக் குடும்பத்தைச் சேர்ந்தவரும் செல்வந்தரும் ஆவார். கணவர் அபீஹாலா அத்தமீமி அவர்கள் மரணித்ததைத் தொடர்ந்து விதவையாகிய அவர், நபி (ஸல்) அவர்களின் முதல் தாரமானார்கள். ஒருவரையொருவர் நன்கு

நேசித்த இவர்களுக்கு ஆறு குழந்தைகள் கிடைக்கப்பெற்றன. இவர்கள் வபாத்தாகும் வரை நபி (ஸல்) அவர்கள் வேறெந்தப் பெண்ணையும் திருமணம் செய்யவில்லை என்பது இவர்கள் பெற்ற விசேட பேறாகும். ஒரு முறை அன்னை ஆயிஷா (றழி) அவர்கள் "நபி (ஸல்) அவர்களின் ஏனைய மனைவிமார்களுள் கதீஜா (றழி) அவர்கள் மீது எனக்கேற்பட்ட உரோஷம் போன்று வேறெவர் மீதும் ஏற்படவில்லை, ஏனெனில் அந்தளவுக்கு நபியவர்கள் அவர் பற்றிப் புகழ்பவர்களாகவும் நினைவுகூர்பவர்களாகவும் இருந்தார்கள்" எனக் குறிப்பிட்டார்கள்.

வஹி இறங்கிய முதன் நாளிலேயே அதனை உளப்பூர்வமாக ஏற்ற முதல் மனிதராக அன்னை கதீஜா அவர்கள் திகழ்கிறார்கள். தனது சொத்து செல்வங்களை இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக தாம் விரும்பியவாறு செலவிடுவதற்கு நபி (ஸல்) அவர்களுக்குப் பூரண சுதந்திரமளித்தார்கள். அத்துடன் தனது சக்திக்குட்பட்ட அனைத்து உதவி ஒத்தாசைகளையும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக வழங்கினார்கள். நுபுவ்வத்தின் பத்தாம் வருடம் இவ்வுலகைப் பிரிந்த அன்னையவர்களின் மரணம் நபி (ஸல்) அவர்களுக்கு மிகப் பெரும் துக்கத்தையும் இடைவெளியையும் விட்டுச் சென்றது. அதனால் அவர்கள் பின்வந்த நாட்களில் பல்வேறு சோதனைகளை எதிர்கொள்ள நேரிட்டது.

### 2. உம்முல் மூமினீன் ஸவ்தா (றழி) அவர்கள்

ஸவ்தா பின்த் ஸம்ஆ என்று அழைக்கப்படும் அன்னை ஸவ்தா அவர்களும் குறைஷிக் குலத்திற் பிறந்த ஒருவராவார். நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்வின் போதே இஸ்லாத்தில் இணைந்து கொண்ட இவர்கள் தமது கணவரான ஸக்ரான் இப்னு அம்று என்பவருடன் சேர்ந்து ஹபஷா ஹிஜ்றத்தில் கலந்து கொண்டார்கள். அங்கு அவர்களது கணவன் வபாத்தாகிவிட்டதால் விதவையாக மாறினார்கள். அன்னை கதீஜா (றழி) அவர்களது வபாத்தின் பின், நபி (ஸல்) மணந்து கொண்ட முதற் பெண்மணி இவர்களேயாவார்.

முதிர்ந்த வயதில் நபி (ஸல்) அவர்களுடன் குடும்ப பந்தத்தில் இணைந்த இவர்கள், அன்னை கதீஜா மூலம் நபி (ஸல்) அவர்களுக்குக் கிடைத்திருந்த குழந்தைச் செல்வங்களை வளர்ப்பதிற் பங்கேற்றார்கள். மரணம் வரை தான் நபி (ஸல்) அவர்களின் மனைவி என்ற பேற்றில் இருக்க வேண்டும் என்பதில் ஆவலாயிருந்தார்கள். அதனை நபி (ஸல்) அவர்களும் அங்கீகரித்துத் தனது மரணம் வரை அன்னவர்களைத் தனது மனைவியருள் ஒருவராக வைத்திருந்தார்கள். தனது வயோதிபத்தின் காரணமாக ஆண்களின் பக்கம் தனக்கு எவ்வித நாட்டமுமில்லை என்று கூறி தனக்கொதுக்கப்பட்ட நாளைக்கூட

ஆயிஷா (றழி) அவர்களுக்காக விட்டுக்கொடுத்தார்கள். இவ்வாறு சிறந்த புரிந்துணர்வும் முன்மாதிரியும் கொண்டிருந்த அன்னை ஸவ்தா (றழி) அவர்கள், கலீபா உமர் (றழி) அவர்களது கிலாபத்தின் இறுதிப் பகுதியில் இறையடி சேர்ந்தார்கள்.

### 3. உம்முல் மூமினீன் ஆயிஷா (றழி)

குறைஷிக் குலத்தில் தமீமிக் கிளையைச் சேர்ந்த இவர், அபூபக்ர் ஸித்தீக் (றழி) அவர்களின் மகளாவார். நுபுத்துவத்தில் நான்காம் வருடத்தில் பிறந்த இவர் தனது ஆறாம் வயதில் நபி (ஸல்) அவர்களுக்கு மணமுடித்து வைக்கப்பட்டு ஒன்பதாம் வயதில் குடும்ப வாழ்வில் இணைந்தார்கள். நபி (ஸல்) அவர்களால் மணந்து கொள்ளப்பட்ட மனைவியரில் இவர் மாத்திரமே கன்னிப் பெண் ஆவார்.

இயல்பிலேயே பல திறமைகளைக் கொண்டிருந்த இவர்கள், மார்க்க விளக்கங்கள் வழங்குவதிலும், ஹதீஸ் மனனம் செய்வதிலும் முன்னணியில் இருந்தார்கள். மிக அதிகமான ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்து ஹதிஸ்கலையின் வளர்ச்சிக்கும் பங்காற்றியுள்ளார்கள். அன்னை கதீஜா (றழி) அவர்களையடுத்து நபி (ஸல்) அவர்களின் மிக விருப்பத்திற்குரிய மனைவியாகக் காணப்பட்டார்.

நயவஞ்சகர்கள், அவர்கள் மீது படுதூறு கூறிய போது அவர்களது தூய்மையை அல்லாஹ் வஹி மூலம் உறுதி செய்தான். இறுதி வரை நபி (ஸல்) அவர்களது அன்பையும் நம்பிக்கையையும் பெற்றிருந்த அவர்கள் சுவர்க்கத்திற்கான வாக்குறுதியைப் பெற்றிருந்தார்கள், மட்டுமல்லாது நபியவர்களூடாக இவர்களுக்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஸலாமுரைத்து முள்ளார்கள். பல சந்தர்ப்பங்களில் நபி (ஸல்) அவர்கள் அன்னையவர்களின் மடியில் சாய்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது வஹி அருளப்பெற்றுள்ளது. அத்துடன் இறுதியாக நபி (ஸல்) அவர்கள் தன் வாயினால் மென்ற மிஸ்வாக்கினால் பல்துலக்கியுள்ளார். அவரது மடியிலேயே நபிகளாரின் இறுதி மூச்சும் வெளியாகியது; அவர்களது அறையிலேயே நல்லடக்கமும் செய்யப்பட்டார்கள்.

இவ்வாறு பல சிறப்பம்சங்களைப் பெற்றிருந்த உம்முல் மூமினீன் ஆஇஷா (றழி) அவர்கள் ஹிஜ்ரி ஐம்பத்தெட்டாம் வருடம் றமழான் மாதம் பிறை பதினேழில் இவ்வுலகைப் பிரிந்தார்கள். ஸெய்யிதினா அபூஹுறைறா (றழி) அவர்களால் தொழுகை நடாத்தப் பெற்று ஜன்னதுல் பகீஇல் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

**4. ஹப்ஸா பின்தி உமர் இப்னுல் கத்தாப் (றழி)**

இரண்டாம் கலீபா உமர் (றழி) அவர்களின் மகளான இவர்கள் நுபுவ்வத் வழங்கப்படுவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மக்காவிற் பிறந்தார்கள். அப்துல்லாஹிப்னு உமர் (றழி) அவர்களுக்கு தகப்பன் வழி சகோதரியான இவர்கள், அதிகமதிகம் நோன்பு நோற்பவராகவும் நின்று வணங்குபவராகவும் காணப்பட்டார்கள். மதீனாவில் அவர்களது கணவரான ஹுனைஸ் (றழி) வபாத்தாகி விட்டதால் விதவையான அவருக்கு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி மூன்றில் மறுவாழ்வளித்தார்கள். இதனால் இவர்களும் உம்மஹாத்துல் மூமினீன்களின் பட்டியலில் இடம் பிடித்துக் கொண்டார்கள்.

சுவனத்திலும் நபி (ஸல்) அவர்களின் மனைவியாக இருப்பார் எனும் சிறப்பினைப் பெற்ற இவர்கள், மதீனா ஹிஜ்றத்தில் பங்கேற்றார்கள், அல்குர்ஆன் மூலப் பிரதியைப் பாதுகாத்து வந்தார்கள். அதிகமாக நோன்பு நோற்றும், நின்று வணங்கியும் அல்லாஹ்வை நெருங்கும் தகைமையைப் பெற்றார்கள். இவ்வாறு இஸ்லாத்திற்காக வாழ்ந்த அன்னை அவர்கள் தமது 63 ஆம் வயதில் ஹிஜ்ரி 45 ஆம் வருடம் இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

**5. ஸைனப் பின்தி ஹுஸைமா (றழி) அவர்கள்**

ஏழைகளின் தாய் - "உம்முல் மஸாகீன்" எனும் சிறப்புப் பெயர் பெற்ற இவர்கள் அதிகமதிகம் ஏழைகளுக்கு உணவளிப்பவர்களாகக் காணப்பட்டார்கள். அவர் களுக்கு இவ்வாறான சிறப்புப் பெயர் கூறப்படுவதற்கு இதுவே காரண மாயமைந்தது.

உஹத் போரின் போது அவர்களது கணவர் அப்துல்லாஹ் இப்னு ஜஹ்ஷ் (றழி) ஷஹீதாக்கப்பட்டு விட்டதால், விதவையான அவர்களை நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்து, அவர்களுக்கு மறுவாழ்வளித்தார்கள்.

சுமார் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் எனும் குறுகிய காலமே நபி (ஸல்) அவர்களுடன் வாழும் வாய்ப்பினைப் பெற்ற அவர்கள், ஹிஜ்ரி நான்காம் வருடம் வபாத்தாகிவிட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் உயிருடனிருக்கும் போது மரணித்த இரு மனைவியருள் இவர்கள் இரண்டாமவராகும். இதனால் நபி (ஸல்) அவர்களாலேயே ஜனாஸாத் தொழுகை நடாத்தப்படும் பேறினையும் பெற்றுக்கொண்டார்கள்.



9-CM 14795

**6. உம்மு ஸலமா ஹின்த் பின்தி அபீ உமைய்யா (றழி) அவர்கள்**

“மூமின்களின் தாய்” எனும் அந்தஸ்துப் பெற்ற உம்மு ஸலமா (றழி) அவர்கள் ஒரு குறைஷிக் குலப் பெண்ணாகும். அழகிய பெண்களில் ஒருவராக வர்ணிக்கப்படும் இவர்கள் தமது கணவர் அபூ ஸலமா (றழி) அவர்களுடன் ஹபஷா, மதீனா ஹிஜ்றத்களில் பங்கேற்றுள்ளார்கள். மதீனாவில் அவர்களது கணவர் வபாத்தாகிவிட்டதால் விதவையாகி விட்ட அவரை நபி (ஸல்) அவர்கள் மறுமணம் செய்து வாழ்வளித்தார்கள்.

நபி (ஸல்) அவர்களுடன் உம்றா வணக்கத்திற்காகச் சென்று ஹுதைபிய்யாவில் நிறுத்தி வைக்கப்பட்டோரில் இவர்களும் ஒருவர். தமது உம்றா ஆசை நிறைவேற முடியாது போய்விட்டதால் ஸஹாபாக்கள் மனமுடைந்து காணப்பட்ட அந்த வேளையில் நபி (ஸல்) அவர்களது பணிப்புரையை செவிமடுப்பதில் தயக்கம் காட்டினர். இதனால் வேதனையுடன் வந்த நபி (ஸல்) அவர்களுக்கு, காத்திரமான ஆலோசனை கூறி, விவேகத்துடன் அன்றைய பிரச்சினைக்குத் தீர்வினை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

சுமார் முந்நூறுக்கும் அதிகமான நபிமொழிகளை அறிவித்துள்ள அன்னையவர்கள், மார்க்கப் பற்றிலும், தர்மம் செய்வதிலும் மிகவும் சிறந்து விளங்கியுள்ளார்கள். இவர்கள் ஹி. 61 ஆம் ஆண்டு யெஸீதின் ஆட்சிக்காலத்தில் கர்பலா நிகழ்வின் பின் மிகக்குறுகிய இடைவெளிக்குள் மதீனாவில் வபாத்தாகி, ஜன்னத்துல் பகீஉவில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

**7. ஸைனப் பின்தி ஜஹ்ஷ் (றழி) அவர்கள்**

அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த தந்தைக்கும் குறைஷிப் பரம்பரையைச் சேர்ந்த தாய்க்கும் பிறந்த ஸைனப் (றழி) அவர்கள் முதலில் நபியவர்களின் வளர்ப்புப் பிள்ளையாயிருந்த ஸைத் (றழி) அவர்களை மணந்திருந்தார்கள். பின்னர் ஸைத் அவர்களிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொண்டமையால் ஹிஜ்ரி ஐந்தில் அவரது 35 ஆம் வயதில் நபி (ஸல்) அவர்கள் இவரைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

நேரடியாக அல்லாஹ்வின் உத்தரவின் பேரிலேயே இவர்களது திருமணம் நடைபெற்றதால் இறைவனால் மணமுடித்து வைக்கப்பட்டவர் என்ற பெருமையைப் பெற்றதோடு அவர்களது திருமண நிகழ்வினை ஒட்டியதாகவே ஹிஜாப் சம்பந்தமான அல் குர்ஆன் கட்டளையும் அருளப் பெற்றது. அதிகமதிகம் தர்மம் செய்பவராகவும் மிக்க நேர்மையானவராகவும் காணப்பட்டார்.

உங்களில் நீண்ட கரங்களையுடையவரே (அதிகம் தர்மம் செய்பவர்) மறுமைப் பயணத்தில் என்னுடன் முதலில் இணைந்து கொள்வார் என மனைவியரைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கேற்ப அன்னை அவர்களே நபி (ஸல்) அவர்களை அடுத்து முதன் முதலில் ஹிஜ்ரி 20 இல் வபாத்தானார்கள்.

**8. ஜுவைரிய்யா பின்தி ஹாரித் (றழி) அவர்கள்**
குஸாஆ கோத்திரத்தினைச் சேர்ந்த இவர்கள் பனூ முஸ்தலிக் கிளையினருடனான போரில் கைது செய்யப்பட்டு தாபித் பின் கைஸ் என்ற ஸஹாபியின் கனீமத் பங்கில் இடம் பெற்றார்கள். இவரை விடுதலை செய்வதற்கு அந்த ஸஹாபியால் கேட்கப்பட்ட தொகையைத் தன்னால் கொடுக்க வழியில்லை என்றும் தான் அக்கிளையினரின் தலைவரின் மகள் என்றும் தனக்குச் சலுகைவேண்டுமென்றும் நபி (ஸல்) அவர்களிடம் முறையீடு செய்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் அத்தொகையினை வழங்கி அவருக்கு உரிமை வழங்கியதோடு அவரை மணந்து கொள்வதற்கான தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்கள். அதனை, மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட அவர்கள் இந்நிகழ்வுக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் மதீனாவிலிருந்து வெளிப்பட்ட ஒரு சந்திரன் தனது மடியினுள் விழுவது போன்று தான் கண்ட கனவு நனவாகிவிட்டதாகப் பெருமையடைந்தார்கள்.

ஹிஜ்ரி 5ம் வருடம் தமது 20ம் வயதில் உம்மஹாத்துல் மூ∴மினீன் பட்டியலில் இணைந்து கொண்ட அன்னை அவர்கள் வணக்க வழிபாடுகளில் மிக ஆர்வத்துடன் ஈடுபட்டார்கள். சுமார் 65 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்த அவர்கள், ஹிஜ்ரி 50 ஆம் வருடம் இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

**9. உம்மு ஹபீபா றம்லா பின்தி அபீ ஸுஃப்யான் (றழி) அவர்கள்**
உமைய்யாப் பரம்பரையைச் சேர்ந்த அபூஸுஃப்யான் (றழி) அவர்களின் மகளான இவர்கள், இஸ்லாத்தின் ஆரம்ப கட்டத்திலேயே தனது கணவரான உபைதில்லாஹ் இப்னு ஜஹ்ஷ் என்பவருடன் சேர்ந்து முஸ்லிமாகியிருந்தார்கள். ஹபஷாவுக்கான ஹிஜ்றத்களில் தனது கணவருடன் பங்கேற்றார்கள். இறுதியில் அங்கு கணவன் கிறிஸ்தவனாக மதம் மாறியதால் அவரிடமிருந்து பிரிந்து இஸ்லாத்தில் மிக்க உறுதியுடன் வாழ்ந்தார்கள், இதனால் அல்லாஹ்வின் அருளால் மதம் மாறிய கணவனைவிடவும் பன்மடங்கு சிறப்புமிக்க நபி (ஸல்) அவர்களின் மனைவியருள் ஒருவராக வாழவும் மு∴மின்களின் தாய் எனும் சிறப்பினைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பு கிட்டியது.

அவரது தந்தை, சகோதரர்களெல்லாம் குறைஷிக்காபிர்களின் முன்னணித் தலைவர்களாகவும் செல்வாக்கு மிக்கவர்களாகவுமிருந்த போதும் இஸ்லாத்தின் மீதும் நபி (ஸல்) அவர்கள் மீதும் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள். அபிஸீனியாவுக்கு மேற்கொண்ட இரு ஹிஜ்றத்களிலும் பங்கேற்றார்கள். மற்றும் அபூஸுஃப்யான் இஸ்லாமாவதற்கு முன் சமாதான ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ள மதீனா வந்த வேளை, தனது மகளான ரம்லா அவர்களையும்

பார்ப்பதற்காக வீட்டுக்கு வந்தார். அவ்வேளை, நபி (ஸல்) அவர்கள் அமரும் விரிப்பில் அவர் உட்கார முனைந்த போது, அவசரமாக அதனை எடுத்துவிட்டு காபிரான நீங்கள் அல்லாஹ்வின் தூதரின் விரிப்பில் அமருவதற்கு தகுதியற்றவர் எனக் கூறினார். இங்கு தந்தைப் பாசத்தை விடவும், இஸ்லாமும் அதன் தூதரும் அவரில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அன்னை உம்மு ஹபீபா (றழி) அவர்கள் ஹிஜ்ரி 44 ஆம் வருடம் இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

### 10. ஸபிய்யா பின்தி ஹுயைய் (றழி) அவர்கள்

கைபர் யுத்தத்தில் யூதர்கள் தோல்வியைத் தழுவிய போது, அவர்களிற் பலர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். அவ்வேளை, கணவன் போரிற் கொல்லப்பட்டிருந்த நிலையில் இவர்களும் பிடிக்கப்பட்டிருந்தார்கள். திஹ்யதுல் கலபீ என்ற ஸஹாபியின் கனீமத்தாக கிடைக்கப் பெற்றிருந்த ஸபிய்யா அவர்களை உரிமையளித்து விடுதலை செய்வதற்கு அவர் ஒரு தொகைப் பணத்தினை நிர்ணயம் செய்திருந்தார். அதனைச் செலுத்தி உரிமை பெற்றுக் கொடுத்த நபி (ஸல்) அவர்கள் பின்னர் யூதர்களை ஆற்றுப்படுத்துவதற்காக இவர்களைத் திருமணம் செய்துகொண்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் மீது அதீத பாசம் வைத்திருந்த இவர்கள், நபியவர்கள் இறுதிக் காலத்தில் பிணியினால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து சகிக்கமுடியாதவராக "யாறஸூலல்லாஹ் உங்களைப் பீடித்திருக்கும் இவ்வேதனை எனக்கே வந்திருக்கக் கூடாதா" என ஆதங்கப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் இவர்களுக்கு ஸபிய்யா - உண்மையுரைப்பவர் எனும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார்கள். அத்துடன், நபிமார்களின் பரம்பரையிற் தோன்றி ஒரு நபியினைத் திருமணம் செய்து கொண்டவர் என்ற வகையில் இவர்கள் ஏனையவர்களை விடவும் விசேட சிறப்பினைப் பெற்றிருக்கிறார் என நபி (ஸல்) அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறு சிறப்புக்களையும் விசேட பண்பாடுகளையும் கொண்டிருந்த அன்னை அவர்கள் ஹிஜ்ரி 52ம் வருடம் இவ்வுலக வாழ்வைப் பிரிந்தார்கள்.

### 11. மைமூனா பின்த் ஹாரித் (றழி) அவர்கள்

நபி (ஸல்) அவர்களைத் திருமணம் செய்வதற்கு முன்னர் ஒருவர் பின் ஒருவராய் இருவரைத் திருமணம் செய்திருந்த இவர்கள், இரண்டாம் கணவர் மரணித்த பின், அப்பாஸ் (றழி) அவர்கள் மூலமாக நபி (ஸல்) அவர்களுக்கு மணமுடித்து வைக்கப்பட்டார்கள்.

நபி (ஸல்) அவர்களால் மணக்கப்பட்ட இறுதித் தாய் இவர்களே ஆவார். ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு நபி (ஸல்) அவர்கள் தமது உம்றாப் பயணத்தின் போது மக்காவை அண்மிய ஓர் இடத்தில் வைத்தே இவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

உம்மஹாதுல் மூமினீன்களாகிய ஏனையவர்களிடம் காணப்பட்ட சிறப்புக்களும் அந்தஸ்துகளும் இவர்களிடமும் காணப்பட்டன. நபி (ஸல்) அவர்களால் இவர்களுக்கு பெயர்மாற்றம் செய்யப்பட்டதோடு இவர்களது உறுதியான ஈமான் பற்றியும் சிலாகிக்கப்பட்டது.

ஹிஜ்ரி 51ல் தனது 81ம் வயதில் இறையடி சேர்ந்த அன்னையவர்கள் நபி (ஸல்) அவர்களால் மணமுடிக்கப்பட்டு, இல்லறவாழ்வை ஆரம்பித்த அதே இடத்திலேயே வபாத்தாகி நல்லடக்கமும் செய்யப்பட்டார்கள்.

இவ்வாறு நபி (ஸல்) அவர்களை மணமுடித்துக் கொள்ளும் அரிய வாய்ப்பினைப் பெற்றதால் மனிதகுலத்தின் ஏக தலைவரை மணந்து கொண்ட பேறினையும், அனைத்து மூமின்களதும் தாய்மார் எனும் சிறப்பு அந்தஸ்தினையும் பெற்றிருக்கிறார்கள். இதனாலேயே நபி (ஸல்) அவர்களது வபாத்தின் பின்னர் அவர்களது மனைவிமார்களை வேறெவரும் மணமுடிக்கக் கூடாது என அல்-குர்ஆன் மிகத் தெளிவாகக் கூறிவிட்டது. அவ்வாறே அவர்களும் பேணிக் கொண்டார்கள்.

## அல்-குலபாஉர்-றாஷிதூன் பணிகளும் முன்மாதிரிகளும்

இறுதி நபி என்ற வகையில் நபி (ஸல்) அவர்கள் தனது காலத்திலேயே மனித வாழ்வுடன் தொடர்புடைய அத்தனை நடைமுறைகளுக்கும் வஹியின் ஒளியில் வழிகாட்டினார்கள். தமக்கு வழங்கப்பட்ட பாரிய பொறுப்பினை மிகக் குறுகிய காலமாகிய இருபத்துமூன்று வருட எல்லைக்குள்ளேயே செவ்வனே நிறைவேற்றி முடித்தார்கள். தனக்குப் பின்னால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்கிவிட்ட திருப்தியுடன் தனது மறுமைப் பயணத்தினுள் பிரவேசித்தார்கள்.

மிகக் குறுகிய காலத்தினுள் ஏற்பட்ட சடுதியான இந்நிகழ்வு, இஸ்லாமிய சமூகத்தைச் சூழவிருந்த மிகப் பலம் பொருந்திய சவால்களை வெற்றிகொண்டு இறைவேதத்தையும் அதன் தொண்டர்களையும் நபியவர்கள் விட்டுச்சென்ற இடத்திலிருந்து அழைத்துச் செல்லும் மாபெரும் சுமையை நபியவர்களின் பாசறையில் பயிற்சி பெற்ற உத்தமத் தோழர்களின் தோள்களுக்கு மாற்றிவிட்டது. வெளிச் சவால்கள் மட்டுமன்றி சொந்த மண்ணும் சுற்றுச்சூழலும் கூட குழப்பமேற்படுத்தத் தொடங்கியிருந்தன. இந்நிலையில் தம்மைச் செம்மைப்படுத்திய தலைவரையும் அவர்விட்டுச் சென்ற பணியையும் உளமாற நேசித்த அந்த உத்தமத் தோழர்கள் தம்முன்னாலுள்ள பொறுப்புக்களை சரிவர அடையாளங் கண்டு, தம்மை அதற்காகவே அர்ப்பணித்தனர். அவர்களில் முன்னணி வகிப்பவர்கள் இந்த குலபாஉர்றாஷிதூன்களே.

இந்த வரிசையில் அனைத்து ஸஹாபாக்கள் மத்தியிலும் அதிவிசேடம் பெற்றிருந்த முதல் நான்கு கலீபாக்களின் சமய, சமூக, அரசியற் பங்களிப்புக்களை முன்மாதிரியாகக் கொள்வது முஸ்லிம்களாகிய எம்மனைவரதும் இன்றியமையாத கடமையாகும்.

### 1. முதற் கலீபா அபூபக்ர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்களது இஸ்லாத்திற்கும் கிலாபத்துக்குமான பணிகள்

ஜாஹிலிய்யாக் காலத்தில் ஒரு சிறந்த வர்த்தகரும் செல்வந்தருமான அபூபக்ர் (றழி) அவர்கள் தனது சமூகத்தில் மதிக்கப்படும் தலைவர்களுள் ஒருவராகக் காணப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறியபோது, சமூகத்தில் தனக்கிருக்கும் அந்தஸ்தையும் தனது இஸ்லாமியப் பிரவேசத்தால் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியேற்படும் என்ற அச்சத்தையும் பற்றி

சற்றேனும் சிந்திக்காது அதே நொடியில் நபியவர்களின் கரம் பற்றி அவர்களின் தூதுத்துவத்தை உறுதி செய்தார்கள், இந்த வகையில் இவர் சுதந்திர ஆண்களுள் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்பது வரலாற்றாசிரியர்கள் அனைவரதும் ஏகோபித்த கருத்தாகும்.

வரலாற்றாசிரியர் இப்னு ஹிஷாம் தனது நூலில்: "நான் இஸ்லாத்தின் பால் அழைக்கும் வேளை எல்லோருமே ஒரு வகைத் தயக்கம் அச்சம் தடுமாற்றம் என்பவற்றுடனேயே அதனை எதிர் கொண்டனர். ஆனால், அபூபக்ரைத் தவிர" என நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் குறிப்பிடுகின்றார். மற்றுமொரு சந்தர்ப்பந்தத்தில், உமர், அபூபக்ர் (றழி) ஆகிய இருவருக்குமிடையில் ஏற்பட்ட ஒரு சிறிய தகராறில் இருவரும் நபி (ஸல்) அவர்கள் முன்னிலையில் ஆஜரான போது நபியவர்களின் முகம் கோபத்தால் சிவந்தது. இதனை அவதானித்த அபூபக்ர் (றழி) அவர்கள் அச்சத்தால் அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்து, "நபியே நான்தான் அவருக்கு அநியாயம் செய்தேன்" எனக் கூறினார்கள். அப்போது அங்கிருந்தவர்களை விளித்த நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் என்னைத் தூதராக உங்களிடம் அனுப்பிய வேளை எல்லோருமே என்னைப் பொய்யன் என்றார்கள். ஆனால், அபூபக்ர் என்னை உண்மைப்படுத்தினார். அவரது உயிரையும் பொருளையும் எனக்காக அர்ப்பணித்தார். அவ்வாறிருக்க, எனது நண்பரை என்னிலிருந்து பிரித்து நோக்குகின்றீர்களா? என இருமுறை வினவினார்கள். இந்நிகழ்வின் பின்னர் யாருமே அவர் புண்படுமளவு நடந்து கொள்வதில்லை என அபுத்தர்தா (றழி) அவர்கள் குறிப்பிட்ட ஸஹீஹான அறிவிப்பு பிதாயா வந்நிஹாயாவில் இடம்பெற்றுள்ளது.

## இஸ்லாத்திற்காக அபூபக்ர் (றழி) அவர்கள் ஆற்றிய பணிகள்

இஸ்லாத்தின் அறிமுக தினத்துடனேயே தன்னை அதனுள் இணைத்துக் கொண்ட அபூபக்ர் (றழி) அவர்கள், அன்று முதலே தனது பணிகளையும் ஆரம்பித்து விட்டார்கள். அன்று மாலையாவதற்குள்ளேயே தனக்கு மிக விசுவாசமான சமூக அந்தஸ்துக் கொண்ட சிலரை நபியவர்களிடம் அழைத்து வந்து இஸ்லாமிய நீரோட்டத்தினுள் இணைத்துவிட்டார்கள். இவர்கள் முஸ்லிமாகிய செய்தியறிந்த அன்றைய பிரபலங்களுள் பலர் தாமாகவே இஸ்லாத்தினுள் நுழைந்து கொண்டனர். அவ்வாறான வர்களுள் உஸ்மான், தல்ஹா, ஸுபைர், ஸஃத் இப்னு அபீ வக்காஸ், அப்துர்றஹ்மானிப்னு அவ்ப் (றழியல்லாஹு அன்ஹும்) போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

இஸ்லாத்தை ஏற்றது முதல், நபியவர்களுடனான தனது தொடர்புகளையும் சந்திப்புக்களையும் அபூபக்ர் ஸித்தீக் (றழி) அதிகரித்துக் கொண்டார்கள். அவர்களுக்கிருந்த சமூக அந்தஸ்து பாதிக்கப்படுமளவுக்கு குறைஷியர்களால் இம்சிக்கப்பட்டார்கள். ஆயினும், அவர்களது இஸ்லாமியப் பற்றும் நபியுடனான உறவும் நாளுக்கு நாள் வலுவடைந்தே சென்றன. நபி (ஸல்) அவர்களுடன் அடிக்கடி தனிமையில் அமர்ந்து இந்த சத்தியத் தூதை எவ்வாறு மக்களுக்கு எடுத்தியம்புவது என்பது பற்றி ஆழமாக சிந்தித்தார்கள். நபியவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் கூடவே சென்றார்கள். இஸ்லாத்தினதும் அதன் தூதரதும் பரம வைரியான அபூஜஹ்ல் சந்தர்ப்பம் கிடைத்தால் நபியைக் கொன்றுவிடக் கூடும் எனும் அச்சம் அபூபக்ர் (றழி) அவர்களிடம், எப்போதும் குடிகொண்டிருந்தது. அதனால், அபூஜஹ்லின் நடவடிக்கைகளில் அவதானமாகவே இருந்து வந்தார்கள். அதன் விளைவாக நினைவிழக்குமளவு அபூஜஹ்லாலும் அவனது தோழர்களாலும் நையப் புடைக்கப்பட்ட நிகழ்வுகளும் நடந்தேறின.

இஸ்லாமும் அதன் தூதரும் உயிர் வாழவேண்டுமாயின், குறைஷியரிடமிருந்து தப்பித்து மக்காவை விட்டு வெளியேற வேண்டும் என்ற நிலை உருவானது. அக்கணம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு எட்டும் நபியவர்களதும் உடனிருப்போரதும் உயிர்களுக்கு ஆபத்து சூழ்ந்திருப்பதை உணர்த்திய வண்ணமிருந்தது. ஆயினும், தனது உயிரிலும் மேலாக மதித்த நபியை பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் சொந்தச் செல்வத்திலிருந்து செய்து முடித்ததோடு, அத்தனை இரகசியங்களையும் தனக்குள் மட்டும் காத்து வந்தார்கள்.

ஹிஜ்றத்தின் போது நபி (ஸல்) அவர்களது முழுமையான நம்பிக்கை யைப் பெற்றவராக உடன்சென்றார்கள். அங்கும், இஸ்லாத்தின் தூதருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக ஆபத்தான சந்தர்ப்பங்கள் அனைத்திலும் தன்னையே முற்படுத்தினார்கள். அதன் வெளிப்பாடுகளில் ஒன்றே அன்னார் விஷநாகத்தின் தீண்டலுக்குட்பட்டதாகும்.

சுமார் நாற்பதாயிரம் திர்ஹம்களுடன் இஸ்லாத்தை ஏற்ற அவர்கள், தனது கையிலுள்ள அனைத்தையும் இஸ்லாத்திற்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் செலவிடுவதில் முன்னிலை வகிததார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காக கொடுமைகளுக்குள்ளாகிய பல அடிமைச் சகோதரர்களை தனது சொந்த நிதியிலிருந்து செலவு செய்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார்கள். அதனால் அதீக் எனும் சிறப்புப் பெயர் கூட அவர்களுக்கு

வழங்கப்பட்டது. ஹிஜ்றத்தின் போது பயணத்திற்கான செலவினங்கள் போக மீதமிருந்த செல்வத்தையும் ஏனைய முஹாஜிர்களின் தேவையைக் கவனிப்பதற்காக எடுத்துச் சென்றார்கள்.

தபூக் போருக்கு நபியவர்கள் படை தயார் செய்தபோது பொருளாதார நிலை மிக இறுக்கமாகக் காணப்பட்டதால் பலத்த சிரமங்களுக்கு மத்தியிலேயே படை தயார்படுத்தல் இடம்பெற்றது. அவ்வேளை தன்னிடமிருந்த செல்வம் அனைத்தையும் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் கொண்டுவந்து வைத்தார்கள். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் அபூபக்கருடைய செல்வம் எனக்குப் பயனளித்தது போல் வேறு யாருடைய செல்வமும் பயனளிக்கவில்லை எனக்கூறினார்கள். (புகாரி), மற்றுமோரிடத்தில் அவரது உயிரையும் பொருளையும் எனக்காக அர்ப்பணம் செய்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அவ்வாறே நபி (ஸல்) அவர்கள் காலத்துப் படை நடவடிக்கைகள் அனைத்திலும் அவர் முழுமையாகக் கலந்து கொண்டதோடு தம்மாலான அனைத்துப் பங்களிப்புக்களையும் வழங்கியுள்ளார்கள்.

### அபூபக்ர் (றழி) அவர்கள் கிலாபத்துக்கு ஆற்றிய பணிகள்

நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னர் தமது கலீபா எனக் குறிப்பிட்டு, யாரையும் நியமிக்காத போதிலும், முஸ்லிம்களின் தலைமைப் பொறுப்பை ஏற்று அவர்களை வழிநடாத்தும் பணிக்கு அபூபக்ர் (றழி) அவர்களே மிகத் தகுதிவாய்ந்தவர் என்பதைத் நடைமுறைச் சான்றுகள்மூலம் உறுதி செய்து விட்டே இவ்வுலகைப் பிரிந்தார்கள் என்பதனைப் பின்வரும் நிகழ்வுகள் இயம்பிக்கொண்டிருக்கின்றன.

1. நபி (ஸல்) அவர்கள் வபாத்தாவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் ஸஹாபாக்களை அழைத்து ஓர் உபதேசம் செய்தார்கள். அப்போது மஸ்ஜிதுன் நபவியை சுட்டிக்காட்டி இதிலுள்ள அனைத்து வாயில்களையும் அடைத்து விடுங்கள், அபூபக்ர் (ரழி) அவர்களின் வீட்டிலிருந்து வருவதைத்தவிர. ஏனெனில் அவரைவிட மிகச்சிறந்த ஒரு தோழரை நான் கண்டதில்லை எனக்கூறினார்கள். (பைஹகீ)

2. அப்துல்லாஹிப்னு ஸம்து என்ற ஸஹாபி அறிவிக்கிறார்கள் : நபி (ஸல்) அவர்களின் இறுதிக் காலத்தில் நோய் அதிகமாகி எழுந்து நிற்பதற்கேனும் அவர்களால் முடியாமலிருந்த வேளை, நான் சில ஸஹாபாக்களுடன் அங்கிருந்தேன். அப்போது தொழுகைக்காக அதான் சொல்லப்பட்டதும் ஒருவரை தொழுகையை நடாத்தும்படி கூறுமாறு

நபியவர்கள் என்னைப் பணித்தார்கள். நான் வெளியே சென்று பார்த்த போது அபூபக்ர் (றழி) அவர்கள் அங்கு சமுகமளித்திருக்கவில்லை. உமறைக் கண்டதும் அவரைத் தொழுவிக்குமாறு கூறினேன், அதனையேற்ற உமர் (றழி) அவர்கள், தொழுகைக்குத் தயாராகி தக்பீர் சொன்னதைச் செவியுற்றதும், எங்கே அபூபக்ர்? அவரைத்தவிர வேறெவரையும் அல்லாஹ்வோ, முஸ்லிம்களோ அங்கீகரிக்கமாட்டார்கள் என இரு தடவை கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் பின்னர் அபூபக்ர் (றழி) அவர்கள் அத்தொழுகையை தொழுவித்தார்கள். விடயத்தைப் புரிந்து கொண்ட உமர் (றழி) அவர்கள்," அப்துல்லாஹ்வே உனக் கென்ன நடந்து விட்டது, ஏன் இவ்வாறு செய்தீர்? நபியவர்கள் தான் சொல்லியிருக்கிறார்கள் என்றெண்ணியல்லவா நான் தொழுவித்தேன். இல்லையென்றால் நான் செய்திருக்க மாட்டேனே எனக் கூறினார்கள். அதற்கு நான், உண்மையில் நபியவர்கள் குறிப்பிட்டுச் சொல்லவில்லை தான். இருப்பினும், அபூபக்ர்(றழி) அங்கு இல்லாமையால் குழுமியிருந்த வர்களில் மிகத் தகுதியானவராக உங்களைக் கண்டேன். அதனாற்தான் கூறினேன்" எனக்கூறியதாகக் குறிப்பிடுகின்றார்கள். (அஹ்மத்)

3. மற்றுமோர் அறிவிப்பில் நபியவர்கள் தனது இறுதி நாளில் அப்பாஸ் (றழி), அலீ (றழி) ஆகிய இருவரது தோள்களிலும் தாங்கியவாறு தொழுகைக்கு வந்தார்கள். அப்போது தொழுகை நடாத்திக் கொண்டிருந்த அபூபக்ர் (றழி) அவர்கள் நபியவர்களுக்கு விட்டுக் கொடுத்து ஸப்பில் சேர முற்பட்டார்கள். நபியவர்கள் அதனைத் தடுத்து அவர்களும் உட்கார்ந்து பின்தொடர்ந்து தொழுதார்கள். (புகாரி, முஸ்லிம், அஹ்மத்)

4. ஒரு முறை நபி(ஸல்) அவர்கள், எனக்குப் பின்னால் அடுத்தடுத்துவரும் அபூபக்ர், உமர் ஆகிய இருவரையும் உங்களுக்கு வழிக்காட்டிகளாக எடுத்துக் கொள்ளுங்கள் எனக் கூறியதாக ஹுதைபதுப்னுல் யமான் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

5. ஒருதடவை ஒரு பெண்மணி நபியவர்களிடம் (தமது பிரச்சினைகளை முறையிட) வந்தார், நபியவர்கள் அவரை வேறொரு சந்தர்ப்பத்தில் வருமாறு கூறினார்கள். அதற்கு அப்பெண்மணி நான் வரும்போது நீங்கள் இல்லாது (மரணித்து)விட்டால் என்ன செய்வது என வினவியபோது, நான் இல்லாவிட்டர்ல் அபூபக்கர் அவர்களை வந்து சந்திக்கலாம் எனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டுக்கள் அபூபக்ர் (றழி) அவர்களே கலீபாவாக தெரிவு செய்யப்பட வேண்டியவர் என நபிகள் (ஸல்) அவர்கள் விரும்பினார்கள் என்பதைக் காட்டுகின்றன. அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட முதற் கலீபா தனது குறுகிய கால கிலாபத் பணியின்போது மறைந்து விட்ட தனது தலைவருக்குரிய உண்மை விசுவாசத்தை வெளிப்படுத்தினார்கள். அதாவது நபி (ஸல்) எந்த இடத்தில் விட்டுச் சென்றார்களோ அந்த இடத்திலிருந்து தொடர்வதையே தனது பணியாகக் கொண்டார்கள். தவிர, தனது விருப்புக்கேற்ப அதிகாரத்தை பயன்படுத்த வில்லை.

நபியவர்களின் மறைவால் நிலைகொள்ளத் தடுமாறிய அந்த சமூகத்தின் தலைமைப் பொறுப்பை தன்மீது சுமத்தப்பட்டுள்ள தவிர்க்க முடியாத அமானிதமாக ஏற்றமையை அவர்கள் கிலாபத்துக்குச் செய்த முதற்பெரும் பணியாகக் கருத முடியும்.

தனது சேவையின் முதற் கட்டமாக நபி (ஸல்) அவர்களை அடக்கம் செய்யும் பணியினை வழி நடாத்திய கலீபா அவர்கள், இஸ்லாமிய அரசின் ஸ்திரத்தன்மையை காக்கும் சிந்தனையில் ஈடுபட்டார்கள். முதலில் அன்றிருந்த அனைத்து ஸஹாபாக்களையும் அழைத்து, அவர்களது சிந்தனைகளில் தெளிவேற்படுத்திய பின்னர், நபியவர்களின் வபாத்தோடு இஸ்லாமும் அதன் சக்திகளும் முடங்கி விட்டதாக எண்ணிக் கொண்ட உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளுக்கு இஸ்லாமிய அரசு பலமிழக்கவில்லை என்பதை நிரூபித்தார்கள்.

முதற்கட்டமாக உரோமர்களுக்கெதிராக தயார்படுத்தப்பட்ட உஸாமா (றழி) அவர்கள் தலைமையிலான படையினை பல்வேறு மாறுபட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் நபியவர்களின் விருப்பை ஒரு வஸிய்யத் போன்று ஏற்று அதனை அனுப்பி வைத்தார்கள். இந்நிகழ்வு, இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை அற்பமாகக் கருதி இலகுவில் அழித்தொழித்து விடலாமென கனவுகண்ட எதிர்ச் சக்திகளுக்கு பேரடியாக அமைந்தது.

மறுபுறம், ஸகாத்தை மறுத்தும் இஸ்லாமிய கட்டுக்கோப்பை மீறியும் குழப்பம் விளைவித்த நாட்டுப்புறத்தவர்கள், பொய் நபிமார்கள் என பல சவால்கள் உள்நாட்டில் உருவெடுத்த போது கிஞ்சிற்றும் தளம்பாது அனுபவமிக்க தளபதிகள் தலைமையில் பல படைப் பிரிவுகளை அனுப்பி, அவர்களது சவால்களை முறியடித்து இஸ்லாமிய கிலாபத்தின் பலத்தை நிரூபித்துக் காட்டினார்கள்.

அரசியல் அனுபவமிக்க பல கவர்னர்களை நியமித்து ஆட்சியை உறுதிப்படுத்தினார்கள். அத்துடன் இஸ்லாத்தின் தூதை பரவச்செய்யவும், இறைநிராகரிப்பாளர்களான ஆட்சியாளர்களால் அவர்களது சொந்த மக்களுக்கே இழைக்கப்பட்டுக் கொண்டிருந்த அநியாயங்களை ஒழிக்கவும் அவர்களால் இஸ்லாமிய உலகின் எல்லைப் புறங்களுக்கிருந்த அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்புப் பெறவும் வேறுபல நியாயமான காரணங்களுக்காகவும் படை நகர்வுளை மேற்கொண்டார்கள்.

இவை தவிர அன்னார் இஸ்லாத்திற்கு செய்த மகத்தான பணிகளுள் மிக முக்கியமானது, அல்-குர்ஆனை நூலுருவில் கொண்டு வந்து அதன் தூய்மை யையும் நம்பகத்தன்மையையும் பாதுகாப்பையும் உறுதி செய்ததாகும். இவ்வாறு இஸ்லாத்தின் தோற்றம், வளர்ச்சி, பரம்பல் என எக்கோணத்தில் ஆராயப்பட்டாலும், அபூபக்ர் (றழி) அவர்களது பணி ஏனைய அனைவரது பணிகளையும் மிஞ்சியே திகழ்கின்றதென்பதைக் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு இஸ்லாமிய கிலாபத்தைக் கட்டிக்காக்கப் பல முன்னெடுப்புக்களை துணிகரமாகவும் இறையருளால் வெற்றிகரமாகவும் மேற்கொண்ட முதற்கலீபா, சுமார் இரண்டரை வருடங்களுக்குட்பட்ட குறுகிய காலப்பகுதியில் தனது இறுதிக் கட்டம் நெருங்கி விட்டதை உணர்ந்ததும் இஸ்லாமிய கிலாபத்தைப் பாதுகாக்க மேலுமொரு மகத்தான பணியினை மேற்கொண்டார்கள். அதுவே, நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கள் மற்றும் அன்றைய சமூகத்தின் உயர்மட்ட புத்திஜீவிகளுடனான கலந்துரையாடல்களினூடாக உமறிப்னுல் கத்தாப் (றழி) அவர்களைத் தான் மரணிக்கு முன்பதாகவே கலீபாவாக நியமித்து இஸ்லாமிய கிலாபத்தின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தமையாகும்.

அரியதும் சிறப்புமிக்கதுமான இவ்வாறான பணிகளே ஏனைய ஸஹாபாப் பெருமக்கள் அவர்களைப் பின்வருமாறு மதிப்பீடு செய்யக் காரணமாயிருந்தன.

இப்னு உமர் (றழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்: நாங்கள் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் மனிதர்களில் சிறந்தவர்களை மதிப்பீடு செய்வோம். அப்போது அபூபக்கரே மிக சிறந்தவராகத் தெரிவு செய்யப்படுவார். பின்பு உமர், அதன் பின் உஸ்மான் (றழி) எனக் கூறினார்கள்.

அவ்வாறே அலீ (றழி) அவர்களின் மகனாகிய முஹம்மதிப்னுல் ஹனபிய்யா கூறுகின்றார்: நான் எனது தந்தை(அலீ)யிடம் அல்லாஹ்வின் தூதருக்கடுத்து யார் சிறந்த மனிதர் எனக் கேட்டேன். அதற்கவர் அபூபக்ர் எனக்கூறினார் என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு முதற்கலீபாவின் சிறப்புக்களை அடுகிக்கொண்டே செல்லலாம்.

## 2. கலீபா உமர் இப்னுல் கத்தாப் (றழி) அவர்களது சமய, சமூக, அரசியற் பங்களிப்புக்கள்

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் நேர்வழி பெற்ற கலீபாக்களில் இரண்டாமவரான உமர் (றழி) அவர்கள், இஸ்லாத்திற் பிரவேசித்த காலம் தொட்டுத் தனது இறுதி மூச்சு வரை கலிமாவின் கொடி மேலோங்க வேண்டுமென்பதில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார்கள். "அதீ" குலத்தைச் சேர்ந்த உமர் (றழி) அவர்கள் ஜாஹிலியக் காலத்தில் குறைஷிக் கோத்திரத்தின் கௌரவ அடையாளமாகவும் இராஜதந்திரி யாகவும் கணிக்கப்பட்டார்கள். அவர்களது ஆலோசனை முன்மொழிவுகளுக்கு எப்போதும் முன்னுரிமை வழங்கப்பட்டது. மல்யுத்த வீரராகவும் எழுத வாசிக்கத் தெரிந்தவராகவுமிருந்த உமர் அவர்கள், நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் தூதை பெற்றுக் கொண்ட காலம் முதல் அதன் முன்னணி விரோதிகளில் ஒருவராகக் காணப்பட்டார். இறுதியில் நபியவர்களைக் கொல்வதுதான் பொருத்தமான ஒரேயொரு தீர்வு என ஜாஹிலியர்கள் முடிவு செய்த போது, ஆபத்து நிறைந்த அப்பணியை தயக்கமின்றி ஏற்றுச் சென்றவர் இந்த உமரே ஆவார். ஆயினும், அல்லாஹ் நபியவர்களின் பிரார்த்தனையை ஏற்று உமரை இஸ்லாத்தினுள் நுழைவித்தான்.

நபி(ஸல்) அவர்களின் கரம் பற்றி இஸ்லாத்தினுள் பிரவேசித்த உமர்(றழி) அடுத்த கணமே வெளிப்பட்டுச் சென்று ஒவ்வொரு குறைஷித் தலைவரது வீட்டுக்கதவினையும் தட்டித்திறந்து தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செய்தியைச் சொல்லிவிட்டு க.்பாவில் வந்து பகிரங்கமாகத் தனது இஸ்லாத்தை வெளிப்படுத்தினார்கள். மக்கத்து முஷ்ரிக்குகளுக்கு எவ்வளவுதான் ஆக்ரோஷம் வந்த போதிலும் உமரை எதிர்ப்பதற்கோ ஏனைய முஸ்லிம்களோடு நடப்பது போன்று நடந்து கொள்வதற்கோ தைரியம் ஏற்படவில்லை. இதுவே, உமர் (றழி) அவர்களின் முக்கியத்துவத்தை உணர்த்தப் போதிய சான்றாகும்.

மீண்டும் நபி (ஸல்) அவர்களிடம் வந்த உமர் (றழி), "யாறஸூலல்லாஹ் நாம் இருப்பது நேர்வழியில் தானே! அவ்வாறாயின் ஏன் நாம் பயந்து ஒழிந்து அடைபட்டுக் கொண்டிருக்க வேண்டும்" என்றவாறு நபி (ஸல்) அவர்களுடன் சுமார் நாற்பதுக்குட்பட்ட சிறுதொகை முஸ்லிம்களையும் அணியாகக் கொண்டு வந்து க.்பாவில் தொழவைத்தார்கள். ஆத்திரம் தாங்க முடியாது கொதித்தாலும் கூட உமர் இருக்கும் போது எதுவும் செய்து விட முடியாது என்ற அச்ச உணர்வால் தள்ளி நின்றனர் முஷ்ரிகுகள். இந்நிகழ்விலிருந்தே உண்மையையும் பொய்யையும் பிரித்து வெளிப்படுத்தியவர் எனும் பொருள்பட "பாறூக்" என்ற சிறப்புப் பட்டத்தை நபியவர்கள் அவர்களுக்கு வழங்கினார்கள்.

இவ்வாறு புரட்சிகரமான ஆரம்பத்தைக் கொண்ட உமர் (றழி) அவர்களின் வாழ்வு இஸ்லாத்தின் சேவைக்காகவே அர்ப்பணம் செய்யப்பட்டது. இப்னு அப்பாஸ் (றழி) அவர்களுடைய ஓர் அறிவிப்பில், உமர்(றழி) அவர்களை அடக்கம் செய்த தினத்தில் அலீ(றழி) அவர்கள் உமர் (றழி) அவர்களுக்கு றஹ்மத் வேண்டி நின்றவண்ணம் பிரார்த்தித்தார்கள். அதன்போது : நான் பின்பற்றி யொழுகக்கூடிய, உங்களைவிட சிறந்த ஒருவரை உங்களுக்குப் பின்னால் என்னால் காணமுடியவில்லை. நிச்சயமாக அல்லாஹ் உம்மை உமது இரு தோழர்களுடனும் சேர்த்து வைப்பான் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் அடிக்கடி நானும் அபூபக்கரும் உமறும் போனோம். நானும் அபூபக்ரும் உமறும் நுழைந்தோம். நானும் அபூபக்ரும் உமறும் புறப்பட்டோம். என பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நீங்கள் மூவரும் இணை பிரியாதிருந்ததைக் குறிப்பிடக் கேட்டிருக்கிறேன் என்று கூறிக் கொண்டிருந்தார்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

மதீனா ஹிஜ்றத்தின் போது பகிரங்கமாக வாளை ஏந்திக் கொண்டு முஷ்ரிக்குகள் அனைவருக்கும் முன்னாலேயே தனது பயணத்தை ஆரம்பித்த அவர் மதீனா சென்றதிலிருந்து இஸ்லாத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து படையெடுப்புக்களிலும் பங்கு கொண்டு மகத்தான தொண்டு புரிந்தார்கள். நபி (ஸல்) அவர்களது கண்ணையும் காதையும் போன்று அவர்களுக்கருகிலிருந்து ஒத்தாசை புரிந்தார்கள். அல்குர்ஆனையும் நபி மொழிகளையும் கற்றலிலும் மனனமிடலிலும் கூடுதல் கவனம் செலுத்திய அவர்கள், அவற்றைப் பாதுகாத்து பின்வருவோருக்கு ஒப்படைப்பதிலும் சிறந்து விளங்கினார்கள். தூர நோக்கும் நிர்வாகத் திறனும் ஒருங்கே அமையப் பெற்றிருந்ததால் அவர்களது ஆலோசனைகள் இஸ்லாமிய சமூகத்திற்கு மிகப் பொருத்தமானவையாகக் காணப்பட்டன. பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களது ஆலோசனையை ஆமோதித்து இறை வசனங்களே அருளப்பெற்றுள்ளன. அவை நான்கு எனவும் ஏழு எனவும் இருபதுக்கு மேற்பட்டவை எனவும் குறிப்பிடப்படுகின்றன.

முர்தத்களுடன் நடைபெற்ற போர்களில் அல்குர்ஆனை மனனமிட்ட ஹாபிழ்கள் பெருமளவில் ஷஹீதான போது உமர் (றழி) அவர்கள் கலீபா அபூபக்கர் (றழி) அவர்களுக்கு அழுத்தம் கொடுத்து அல்குர்ஆனை ஒன்று திரட்டி நூல் வடிவம் கொடுக்க பெரும் முயற்சி செய்தார்கள். முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் பள்ளிவாயல்களை நிர்மாணிப்பதில் உமர் (றழி) அவர்கள் பெரும் அக்கறை காட்டினார்கள். சில வரலாற்றுக் குறிப்புக்களில் உமர் (றழி) அவர்கள் காலத்தில் சுமார் 4000 பள்ளிவாயல்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது ஹரம் எல்லையை விஸ்தரிப்பு செய்வதற்காக அதனை அண்மியிருந்த சில வீடுகளையும் நிலங்களையும் விலைகொடுத்து வாங்கி விஸ்தீரணப்படுத்தினார்கள். அதேபோல் மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியையும் விஸ்தரிப்புச் செய்தார்கள்.

கடிதப் போக்குவரத்துக்களின் போது அவற்றில் திகதிகள் குறிக்கப்படாமை பல்வேறு சிக்கல்களை தோற்றுவித்தமையால் அவற்றைப் போக்குவதற்காக இஸ்லாமிய ஹிஜ்ரி நாளேட்டினை அறிமுகம் செய்தார்கள். அடிமைகள் விவகாரத்திலும் கூடிய கவனம் செலுத்திய உமர் (றழி) அவர்கள், அடிமைத் தளையை பெருமளவில் ஒழித்தார்கள். மேலும் சமூக ஒழுக்க விவகாரங்களில் கூடுதல் செல்வாக்குச் செலுத்தும் குடும்ப உறவு, விவாகம், விவாகரத்து, திருமண விடயங்கள் போன்றவற்றில் இஸ்லாமிய நடைமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்றச் செய்தார்கள். மீறுவோர் மீது சில ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற் கொண்டார்கள்.

திம்மிகளின் சுதந்திரம், பாதுகாப்பு விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்திய கலீபா உமர் (றழி), அவர்களது விடயத்தில் நீதமாகவும் கருணையோடும் நடந்து கொண்டார்கள். அத்துடன் பைத்துல்மால் நிதியிலிருந்து முஸ்லிம்கள் எல்லோருக்கும் அவரவர் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கும் அவர்கள் இஸ்லாத்திற்கு ஆற்றிய சேவைக்கும் ஏற்ப உதவித் தொகைகளை நிர்ணயித்து ஒழுங்காக விநியோகிக்கப்பட ஏற்பாடு செய்தார்கள்.

மதீனாவில் வரட்சியும் உணவுப் பற்றாக்குறையும் ஏற்பட்ட போது, கலீபா உமர் (றழி) அவர்கள் வெளி மாகாணங்களிலிருந்து உணவுப் பொருட்களை வரவழைத்து மக்கள் வறுமையைப் போக்கியதோடு சோதனைகளிலிருந்து விடுபடுவதற்காக மக்களை மார்க்கத்தின் வழியொழுகப் பயிற்சியளித்தார்கள்.

இவ்வாறு, கிலாபத் பொறுப்பினை சுமக்கு முன்னரும் சுமத்தப்பட்ட பின்னரும் சமய சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அவர்கள், இஸ்லாமிய சமூகத்தின் மத்தியில் அபூபக்கர் (ரழி) அவர்களுக்கு அடுத்த அந்தஸ்தில் நோக்கப்பட்டார்கள் என்பதற்கு பல எண்ணிக்கையிலான சான்றுகளை முன்வைக்கலாம். இதனாலேயே முதற் கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் தனது மரணத்தின் முன்னதாகவே அவரை கலீபாவாகப் பிரகடனப்படுத்திவிட்டுச் சென்றார்கள். மக்களும் ஏகோபித்து அதனை அங்கீகரித்தார்கள். ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இஸ்லாமிய கிலாபத்தைப் பொறுப்பேற்ற கலீபா உமர் (ரழி) அவர்கள் அதனை ஸ்திரப்படுத்தி அதன் புனிதத்துவத்தைப் பாதுகாப்பதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார்கள். மாகாணங் களுக்கான கவர்னர்களை நியமிப்பதில் கடினமான போக்கைக் கையாண்டார்கள். சிறிதோ, பெரிதோ எவ்வாறான முடிவுகளாயினும் கலீபாவின் ஒப்புதலின்றி அமுல்படுத்தக்கூடாது என்பதில் மிக உறுதியாகக் காணப்பட்டதோடு பொதுமக்கள் விடயத்தில் அதீத அக்கறை காட்டினார்கள். பொது மக்களின் நலன் நாடி கவர்னர்களை மாற்றுதல், தண்டித்தல் போன்றவற்றில் எவ்வித தயக்கமும் காட்டவில்லை. மாறுவேடங்களில் தாமாகவே சென்று மக்கள் குறைகளை அறிந்து உடனுக்குடன் தீர்த்து வைத்தார்கள். இவ்வாறு கிலாபத்திற்கு மெருகூட்டிய கலீபா அவர்கள் அதனை விஸ்தரிக்க அளப்பரிய பங்களிப்புச் செய்தார்கள்.

(1) இஸ்லாமிய இராச்சியத்தின் எல்லைகளை விரிவுபடுத்தி எதிரிகளின் அச்சுறுத்தல்களிலிருந்து முஸ்லிம் தேசத்தைப் பாதுகாப்பதோடு இஸ்லாத்தின் சுபீட்சத்தை ஏனைய மக்களும் அனுபவிக்க வேண்டும் எனும் நோக்கில் நபி (ஸல்) அவர்களால் துவங்கப்பட்டு, கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களால் தொடரப்பட்ட விரிவாக்கல் நடவடிக்கையை மிகச் சிறப்பாக மேற்கொண்டார்கள். அதற்காக இஸ்லாமியப் படையை மூன்று அணிகளாகப் பிரித்து தெளிவான அறிவுறுத்தல்களோடு அனுப்பி வைத்தார்கள், அவற்றில்:-

1. பாரசீக வல்லரசின் கீழிருந்த பகுதிகளை சீர் செய்யும் நோக்கில் அபூமூஸா அல்அஷ்அரீ (ரழி) என்ற ஸஹாபியின் தலைமையின் கீழ் ஒரு படைப்பிரிவு சென்றது. அவர்களுக்கு தளமாக கூபா, பஸறா ஆகிய இருநகரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இங்கிருந்து நகர்ந்த படையணிகள் ஒன்றன் பின் ஒன்றாக பாரசீக வல்லரசின் நிலபுலங்களை இஸ்லாமிய கிலாபத்தின் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்தன.

2. மறுமுனையில் அபூ உபைதா, காலித் இப்னுல் வலீத் (றழி) ஆகியவர்களின் தலைமையிற் சென்ற படையணிகள் உரோம வல்லரசின் ஆள்புலங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்து அங்கு நிலவி வந்த அடக்குமுறைகளிலிருந்து அம்மக்களை மீட்டெடுத்தன. இதன் மூலம் விடுதலையும் விமோசனமும் பெற்ற அவர்கள் தாமாகவே சாரை சாரையாக இஸ்லாத்தினுட் பிரவேசித்தனர். அவ்வாறே, ஷாம் தேசத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்த முஸ்லிம்கள் அங்கு நகரங்களை ஒழுங்குபடுத்தி இஸ்லாமிய ஆட்சியை நிறுவி மக்களுக்கு நீதி செலுத்தினார்கள்.

3. மூன்றாம் முனையாக அம்றுப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் தலைமை யிலான படை அணி, எகிப்திலும் அதனை அண்டியதுமான ஆபிரிக்கப் பிரதேசங்களிலும் இஸ்லாமிய கிலாபத்தின் சுபீட்சங்களை எட்டச் செய்தது. அங்கு தமது நிலையினை உறுதி செய்த முஸ்லிம்கள் தளபதி அம்றிப்னுல் ஆஸ் (ரழி) அவர்களின் வழிகாட்டலோடு "புஸ்தாத்" நகரை நிறுவி பள்ளிவாசலையும் நிர்மாணித்தார்கள்.

இவ்வாறு மிக வேகமாக வியாபித்துச் சென்ற இஸ்லாமிய கிலாபத், கலீபா அவர்களின் துல்லியமானதும் இறுக்கமானதுமான நிர்வாக முறைமையால் நீதிதவறாது வலிமை பெற்றுக் காணப்பட்டது. அந்நிய பிரதேசத்து மக்களும் இஸ்லாமிய கிலாபத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிப்பதற்கு முனைப்புக் காட்டுமளவு சௌஜன்யம் நிரம்பப் பெற்றிருந்தது.

(2) நபி (ஸல்), அபூபக்ர் ஸித்தீக் (ரழி) ஆகியோர் காலப்பகுதி களிலான இஸ்லாமிய நிர்வாகத்தின் எல்லைகளைப் பார்க்கிலும் இரண்டாம் கலீபாவின் காலத்தில் அதன் எல்லைகள் பன்மடங்கு விஸ்தீரணமடைந்ததால், நிர்வாகத்தை சிறப்புற மேற்கொள்வதற்கு பல முன்னேற்றகரமான அடிப்படைகளை இஸ்லாமிய கிலாபத்திற்கு அறிமுகம் செய்ய வேண்டிய அவசியம் கலீபா உமர் (ரழி) அவர்களுக்கு ஏற்பட்டது. அதனை நிவர்த்திக்கு முகமாக நிர்வாக ரீதியாகப் பல்வேறு ஒழுங்குகளை அறிமுகம் செய்தார்கள்.

I. நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு கலீபாவிற்கான உரிமைகள், கடமைகள், மக்களோடு அவருக்கிருக்க வேண்டிய உறவுமுறை போன்றவற்றிற்கு ஒழுங்குகளையும் வரையறைகளையும் ஏற்படுத்தினார். அதனடிப்படையில் :

- கலீபா: "இமாமத்", "இமாறத்" ஆகிய, சமய உலக விவகாரங்களுக்கான அதிகாரம் பெற்ற தலைவராகக் காணப்படுவார்.

- கலீபாவின் அதிகாரங்கள் மக்கள் மூலமாகவே கிடைக்கப் பெறுவதால் மக்களது அங்கீகாரம், விசுவாசப் பிரமாணம் ஊடாகப் பெறப்படல் வேண்டும். அதேநேரம் கலீபாவின் தவறுகளை சுட்டிக்காட்டவும் தெளிவுபடுத்தவும் மக்களுக்கு உரிமையுண்டு. மறுபுறம் மக்களின் ஆலோசனைகளை ஷூறாவின் வாயிலாகப் பெற்றுக்கொள்வதும் கலீபாவின் கடமையாகும்.

- கலீபாப் பதவி வாரிசுரிமையல்ல. எனவே மக்களுக்கும் மார்க்கத்திற்கும் மிகப் பொருத்தமானோரும் தகுதி வாய்ந்தோருமே தெரிவு செய்யப்படல் வேண்டும். எனும் அடிப்படைகளை வரையறை செய்தார்.

II. **ஆளுநர் நியமனம்**

- கலீபா உமர் (றழி) அவர்கள் மாகாண ஆளுநர் நியமனத்திற்கான திட்டவட்டமான ஒழுங்குகளையும் விதிமுறைகளையும் அறிமுகம் செய்தார்கள். அதனடிப்படையில் மாகாண ஆளுநர்களின் அதிகாரங்களை வரையறை செய்தார்கள். நீதித்துறைக்கு தனித்தனியான நீதிபதிகளை நியமனம் செய்தார்கள். அதேபோல், ஸகாத் ஏனைய இறைவரிகளை வசூலித்தல் என்பவற்றிற்கு பிரத்தியேக அதிகாரிகளை நியமித்ததோடு, இவ்வனைத்துப்

பதவிகளுக்குமான நியமனங்கள், பதவி நீக்கல் போன்ற விடயங்கள், மற்றும் அனைத்து முக்கிய தீர்மானங்களும் சூறாவின் அடிப்படையில் நேரடியாக கலீபாவினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமென வரையறுத்தார்கள்.

- ஆளுநர் நியமனங்களின் போது அவர்களது சொத்து விவகாரங்களைத் தெளிவாக அடையாளங்கண்டு பொது மக்களுடனான அவர்களது உறவுகள், தனிப்பட்ட நடவடிக்கைகளில் அவர்களது அணுகுமுறைகள் போன்றவற்றை மிக நுணுகி ஆராய்ந்ததன் பின்னரே நியமனங்களை வழங்கினார்கள். அத்தோடு பதவி வழங்கும்போது, தனது அல்லது நபி (ஸல்) அவர்களது நெருங்கிய உறவினர்கள் போன்றவர்களை நியமிப்பதைத் தவிர்த்துக் கொண்டார்கள்.

- நிர்வாக வேலைகளை இலகுபடுத்துவதற்காக மாகாணங்கள், மாவட்டங்கள் என பல அலகுகளாகப் பிராந்தியங்களைப் பிரித்துப் பொறுப்பு வாய்ந்தவர்களை நியமனம் செய்தார்கள். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஆளுனர் நியமிக்கப்பட்டனர். துறைசார் அதிகாரிகளும் பிரத்தியேகமாக நியமனம் செய்யப்பட்டனர். கலீபா உமர் (ரழி) அவர்கள் கால தலைமை அதிகாரிகளையும் பதவிகளையும் பின்வருமாறு நிரற்படுத்தலாம் :

1. (காதிப்) தலைமைச் செயலாளர்
2. (காதிபுத் தீவான்) இராணுவ செயலாளர்
3. (ஸாஹிபுல் கறாஜ்) இறைவரி வசூலுக்கான அதிகாரி
4. (ஸாஹிபுல் அஹ்தாத்) பொலிஸ் அதிகாரி
5. (ஸாஹிபு பைதில் மால்) திறைசேரி செயலாளர்
6. (காழீ) தலைமை நீதிபதி

மேற்கூறப்பட்டுள்ள அதிகாரிகளை கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், வழிநடாத்தல் போன்ற பணிகள் ஆளுநரைச் சார்ந்ததாகும்.

### III **திறைசேரி**

- முஸ்லிம்கள் வரலாற்றில் முதன்முதலாக திறைசேரியை நிறுவிய பெருமை கலீபா உமர் (ரழி) அவர்களையே சாரும். இதற்கு ஸகாத், ஜிஸ்யா, கனீமத், கறாஜ், வாரிசுகளற்றவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கள் போன்ற வற்றினூடாக வருமானங்கள் கிடைக்கப்பெற்றன. இவ்வாறான வரவுகள் பொருத்தமானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காகவும், நெறிப்படுத்து வதற்காகவும் மதிப்பீடு செய்தல், ஆவணப்படுத்தல் போன்ற விடயங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

- **காணி நிர்வாகம் :**

இஸ்லாமியப் படைகளால் தொடரப்பட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகளால் மிக நீண்ட நிலப் பரப்புக்கள் கிலாபத்தின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இத்தகைய நிலப்பரப்பில் விவசாயக் காணிகளும் பெருமளவிற் காணப்பட்டன. பொதுவாக படை நடவடிக்கைகளின் போது கையாளப்படும் வெற்றியாளர்கள் வெற்றிகொள்ளப்பட்ட நிலங்களைத் தமக்கிடையே பகிர்ந்து கொள்ளும் மரபினை கலீபா உமர் (ரழி) அவர்கள் மாற்றியமைத்தார்கள். அதில் தனிநபர்களுக்கு சொந்தமில்லாதவற்றை அரச உடமையாக்கியும், தனியாருக்குச் சொந்தமானவற்றை அதன் உரித்தாளிகளே தொடர்ந்து பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்கியதோடு அதன் வருமானத்திலிருந்து ஒரு சிறு தொகையை திறைசேரிக்கான வரியாக செலுத்தவும் உத்தரவிட்டார்கள்.

- **<u>இராணுவம்:</u>**

இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவம் உருவாக்கப்பட்டது கலீபா உமர் (ரழி) அவர்களது காலத்திலேயாகும். இஸ்லாமிய நிர்வாகத்திலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் இராணுவ சேவை கடமை என்பதைக் கொள்கையாகக் கொண்ட கலீபா, இராணுவத்தை நிரந்தர இராணுவம், தொண்டர் (நிரந்தரமற்ற) படை என இரு பிரிவுகளாகப் பிரித்து முதற் பிரிவினரை சுமார் எட்டு வகையாக வகைப்படுத்தி, அதற்கேற்ப சம்பளத் தொகைகளையும் நிர்ணயம் செய்தார்கள். இரண்டாம் பிரிவினர் அவசியம் ஏற்படும் போது மட்டும் சேவைக்கழைக்கப்பட்டனர்.

இராணுவத்தினரை நிர்வகிக்க "தீவானுல் ஜுன்த்" எனும் திணைக்களத்தை உருவாக்கி, அவற்றின் கிளைகளை அனைத்து முக்கிய நகர்களிலும் நிறுவினார்கள், அத்துடன் படையினருக்கான தங்குமிடங்களைக் கட்டுவித்ததோடு குடியிருப்புக்களையும் நிறுவினார்கள். இவை தவிர சுமார் நான்காயிரம் குதிரைகளுக்கான பராமரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு எந்நேரமும் யுத்த நடவடிக்கைகளுக்குப் பொருத்தமாகப் பராமரிக்கப்பட்டன.

- **<u>நீதி நிர்வாகம்</u> :**

வரலாற்றில் முதன் முதலாக நீதித் துறையை பொது நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்தி தனியாகவும், சுதந்திரமாகவும் இயங்கச் செய்த பெருமை கலீபா உமறவர்களையே சாரும். ஷரீஆ சட்டங்களில் தேர்ந்தவர்களை நீதிபதிகளாகத் தெரிவு செய்த கலீபா, இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையிலேயே

தீர்ப்புக்களை வழங்குமாறு பணித்ததோடு ஊழல் மோசடிகளைத் தவிர்ப்ப தற்காக நீதிபதிகளுக்கு மிக உயர்ந்த சம்பளத்தையும் வழங்கினார்கள்.

- **திறைசேரியும் நாணயமும் :**

முன்னைய இரு தலைவர்களது காலப் பிரிவிலும் இல்லாதவாறு இஸ்லாமிய ஆட்சி விரிவடைந்து வரவு செலவுகளும் அதிகரித்தன. ஆயினும், செலவினங்களைப் பார்க்கிலும் வரவு அதிகரித்தமையால் மேலதிக செல்வத்தை எவ்வாறு கையாளலாம் என்பதை ஆலோசனை சபையில் விட்டு, இறுதியில் திறைசேரி ஒன்றை நிறுவும் முடிவிற்கு வந்தார். அந்த வகையில் இஸ்லாமிய உலகில் முதற் திறைசேரி கலீபா அவர்களின் ஆட்சியிலேயே நிறுவப்பட்டு, அதற்கான உத்தியோகத்தரும், உதவியாளர்களும், கணக்காளர்களும் நியமனம் செய்யப்பட்டனர். காலப்போக்கில் மேலும் விரிவடைந்த இந்நிறுவனம் மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு அங்கும் இதன் பணிகள் முன்னெடுக்கப் பட்டன. கிளைகளில் மேலதிகமாகத் திரளும் செல்வம் மத்திய நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனால் இராணுவம், நீதிபதிகள் மற்றும் ஏனைய அரச ஊழியர்களுக்கான ஊதியங்கள் வழங்குவது இலகுவானதுடன் பொது மக்களுக்கு உதவுத் தொகை தொடராக வழங்கவும் இலகுவான வழிகிடைத்தது.

அது மட்டுமல்லாது இஸ்லாமிய வரலாற்றில் முதன்முதலாக தனித்துவமான நாணயமொன்றினை அச்சிட்டு வெளியிட்ட பெருமையும் கலீபா உமர் (ரழி) அவர்களையே சாரும்.

iv. **பொதுப் பணிகள் :**

- கலீபா உமர் (ரழி) அவர்கள் காலத்தில் பல பொதுப் பணிகள் இடம் பெற்றன. அவற்றுள் பாதைகள் அமைத்தல், செப்பனிடல், பொது தங்குமிடங்கள், பொதுக் குளியலறைகள், மலசலகூடங்கள், பொதுக் கிணறுகள் போன்றன அமைக்கப்பட்டன. அத்துடன், கலீபா உமர் (ரழி) அவர்கள் காலத்திலேயே குற்றம் சுமத்தப்பட்ட கைதிகளை நெறிப்படுத்துவதற்காக சிறைச்சாலைகளும் முதன் முதலில் உருவாக்கப்பட்டது. அங்கு கைதிகள் தடுத்து வைக்கப்பட்டு அவர்களை நல்வழிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- கலீபா அவர்களது காலத்தில் பல முக்கிய நகரங்கள் உருவாக்கப்பட்டதோடு, அவை நன்கு திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டன. அத்துடன், முஸ்லிம்கள் வாழும் எல்லாப் பிரதேசங்களிலும் பள்ளிவாயல்கள் நிர்மாணிக்கப்பட்டன. மேலும், எல்லா நகர்களிலும் அரச சேவைகளுக்காகக் கட்டிடங்கள்

நிர்மாணிக்கப்பட்டதோடு அரச அதிகாரிகளுக்காக வதிவிடங்களும் ஒழுங்கு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

- குடி நீருக்காகக் கிணறுகள் தோண்டப்பட்டதோடு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஓடைகள், கால்வாய்கள், அணைக் கட்டுக்கள், குளங்கள் போன்றனவும் அமைக்கப்பட்டன.

இவ்வாறு அரிய பல பணிகளையும் சேவைகளையும் ஆற்றிய கலீபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சி இஸ்லாமியர் வரலாற்றில் சிறந்த முன்னுதாரணமாகும்.

### 3. கலீபா உஸ்மான் (ரழி) அவர்களது சமூக சமய அரசியற் பங்களிப்புக்கள் :

குறைஷிக் குலத்தில் உமையாப் பரம்பரையில் பிறந்த உஸ்மான் (ரழி) அவர்கள், முப்பத்து நான்காம் வயதில் அபூபக்கர் (ரழி) அவர்களது தூண்டுதலால் இஸ்லாம் அறிமுகமான ஆரம்ப நாட்களிலேயே அதிற் பிரவேசித்தார்கள். இதன் மூலம் இஸ்லாத்திற் பிரவேசித்த முதல் பத்துப் பேரில் ஒருவராக கணிக்கப்படுகிறார்கள். அன்று தொடக்கம் அதனைப் பாதுகாத்தல், பரவச் செய்தல் போன்றவற்றில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்கள். அவர்கள் வர்த்தகராகவும் செல்வந்தராகவுமிருந்ததால் அவர்களின் செல்வத்தில் பெரும் பகுதி இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவே செலவிடப்பட்டது. மலக்குகளே நாணத்துடன் நடந்து கொள்வதாக நபி (ஸல்) அவர்கள் கூறுமளவு, வெட்க சுபாவமுடைய அவர்கள் முழு ஸஹாபாக்கள் மத்தியிலும் அபூபக்ர், உமர் (ரழி) ஆகியோருக் கடுத்த அந்தஸ்தில் நோக்கப்படுமளவு சிறப்பு வாய்ந்தவர்களாக மதிக்கப்பட்டார்கள்.

இஸ்லாத்திற்காகத் தன்னை அர்ப்பணித்த அவர்களுக்கு குறைஷிக் காபிர்களும் மதிப்பளித்துள்ளனர் என்பதனைப் பின்வரும் நிகழ்வு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அதாவது ஹிஜ்ரி ஆறாம் ஆண்டில் நபி (ஸல்) அவர்களும், ஸஹாபாக்களும் மக்காவுக்கு உம்றாவுக்காகச் சென்றனர். அதனைக் குறைஷியர் தடுத்து நிறுத்தியபோது, உண்மையை எடுத்து விளக்கி, சமரசம் ஏற்படுத்த அன்னாரையே நபி (ஸல்) அனுப்பி வைத்தார்கள். குறைஷிக் காபிர்கள் எவ்வேளையும் எந்த ஆபத்தையும் விளைவிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவிய சூழலிற்கூட தனது உயிருக்கு முக்கியத்துவம் கொடுக்காது இஸ்லாத்தையே முதன்மைப்படுத்தி அப்பணியைப் பொறுப்பேற்றார்கள்.

தனது செல்வத்தை இஸ்லாத்திற்காக வாரி இறைப்பதில் ஆர்வமுடன் காணப்பட்ட உஸ்மான் (றழி) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது பங்களிப்பினை வழங்கியுள்ளார்கள். உதாரணமாக பொருளாதாரம் மிக நெருக்கடி நிலையிலிருந்த போது நபியவர்களால் மேற்கொள்ளப்பட்ட "கஷ்டப்படை" எனப் பெயரிடப்பட்ட தபூக் யுத்தத்துக்கான படையைத் தயார் செய்வதற்கு ஆயிரம் தீனார்களையும், யுத்தத்திற்கு தயார்செய்யப்பட்ட தொள்ளாயிரத்து ஐம்பது ஒட்டகங்கள் மற்றும் ஐம்பது குதிரைகள் ஆகியவற்றையும் வேறு பல பொருட்களையும் கொடுத்துதவினார்கள். சில அறிவிப்புக்களின் பிரகாரம் அப்படையின் செலவினங்களில் மூன்றிலொரு பகுதியை உஸ்மான் (ரழி) அவர்கள் மட்டுமே பொறுப்பேற்றார்கள் எனத் தெரியவருகிறது. அது மட்டுமல்லாது மதீனாவில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு யூதர்கள் அதனைச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டவேளை பெருந்தொகைப் பணம் கொடுத்து "பி.்.ரு றூமா" என்ற கிணற்றினை வாங்கி முஸ்லிம்களுக்காக அன்பளிப்பு செய்தார்கள்.

அவ்வாறே மஸ்ஜிதுன் நபவியை ஏனைய இரு கலீபாக்களும் விஸ்தரித்ததை விட பெரிதாக விஸ்தரித்ததோடு, அதன் கட்டிட பொருட்களாக பெறுமதிமிக்கதும் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதுமானவைகளாக தேர்ந்தெடுத்தார்கள்.

இவை தவிர, இஸ்லாத்தைப் பாதுகாக்கும் பணியில் பல்வேறு மட்டங்களிற் பங்களிப்புச் செய்த அவர்கள், நபி (ஸல்) அவர்களுக்குப் பக்கத்திலிருந்து வஹீ எழுதும் பணியிலும் ஈடுபட்டுள்ளதுடன் பிற்காலத்தில் அல்-குர்ஆனை ஓதுவதில் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காக, அபூபக்ர் (ரழி) அவர்கள் காலத்துத் தொகுப்பின் அடிப்படையிற் பல பிரதிகள் செய்து முழு முஸ்லிம் தேசங்களுக்கும் அனுப்பிவைத்து அந்த குழப்பநிலையை இல்லாமல் செய்தார்கள்.

அதுமட்டுமல்லாது இஸ்லாத்தைக் கடல்கடந்து கொண்டு செல்வதற்கு கப்பற்படை தேவை என்பதை கவர்னர் முஆவியா (ரழி) அவர்கள் எடுத்துரைத்த போது அதற்கான முழு அங்கீகாரமும் ஒத்தாசையும் வழங்கினார்கள். இந்நடவடிக்கையே இஸ்லாம் மத்திய தரைக்கடலையும் கடந்து ஐரோப்பாக் கண்டத்தினுட் பிரவேசிக்கவும், பிற்காலத்தில் கொன்ஸ்தான்துநோப்பிள் கைப்பற்றப்படவும் அத்திவாரமாக அமைந்தது எனலாம்.

கலீபா உமர் (ரழி) அவர்கள் நயவஞ்சகப் பாதகனால் தாக்கப்பட்டு இறுதி நிலையை எய்திய போது, முஸ்லிம் சமூகம் தனக்குப் பின்னால் பிளவுபட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் கரிசனையுடன் செயல்பட்டார்கள். அந்த வகையில் அன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் மத்தியில் செல்வாக்குப் பெற்றும், நபி (ஸல்) அவர்களால் சுவர்க்க வாக்குறுதி வழங்கப்பெற்றவர்களுமான உஸ்மான் (ரழி), அலீ (ரழி), தல்ஹா (ரழி), ஸுபைர் (ரழி), அப்துர்றஹ்மானிப்னு அவ்ப் (ரழி), ஸ.்.த் இப்னு அபீவக்காஸ் (ரழி) ஆகிய அறுவரையும் தெரிவு

செய்து அவ்வறுவரும் கலந்தாலோசித்து அவர்களுள் ஒருவரை கலீபாவாகத் தெரிவுசெய்யுமாறு வஸிய்யத் செய்து விட்டு தனது உலக வாழ்விலிருந்து விடைபெற்றார்கள். பல கட்ட ஆலோசனைகளின் பின் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்ட உஸ்மான் (ரழி) அவர்கள், முன்னைய இரு கலீபாக்களாலும் முன்னெடுக்கப்பட்ட அரசியற் பணிகளுடன் இஸ்லாமிய விரிவாக்கற் பணிகளையும் மிகச் சிறப்பாக தொடர்ந்தார்கள். அந்த வகையில் அலெக்சாந்திரியா, எகிப்தின் தென்பகுதிகள், துனீஸிய்யா, மொரோக்கோ போன்ற வட ஆபிரிக்கப் பகுதிகளையும் வெற்றி கொண்டு இஸ்லாமிய நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வந்தார்கள். இது தவிர மத்திய தரைக்கடல் நாடாகிய ஸைப்ரஸும் கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் காலத்திலேயே இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இவை தவிர இன்னும் பல பாரசீக பிராந்தியங்களையும் கலீபாவின் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமியப் படையணியினர் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

இவ்வாறு பரந்து விரிந்ததொரு சாம்ராஜ்யத்தை தனது நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வந்திருந்த கலீபா அவர்கள் காலத்தின் தேவைக்கேற்ப சில மாற்றங்களை நிர்வாகத்தில் ஏற்படுத்தினார்கள். அதன் மூலம் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் நன்மை செய்வதே கலீபாவின் எண்ணமாயிருந்தது. எனினும், இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் தொடரான காழ்ப்புணர்வு கொண்டிருந்த யூதர்கள், இதனை தமக்கு சாதகமாக மாற்றி தமது சதித்திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள வழி கண்டார்கள்.

முஸ்லிம் வேடம் பூண்டு இஸ்லாமிய உலகின் தூரப் பகுதிகளில் தனது விஷமப் பிரச்சாரத்தை மேற்கொண்ட அப்துல்லாஹிப்னு ஸப.். என்ற யூத நயவஞ்சகன் விரித்த சதி வலையில், அடிப்படை தெரியாத நாட்டுப்புற புதிய முஸ்லிம்கள் சிக்கிக் கொண்டனர். அவர்களைப் பகடைகளாகப் பயன்படுத்திய இப்னு ஸப.். கலீபாவை கொலை செய்து விடுவதில் வெற்றி கண்டான்.

கலீபா, கிளர்ச்சியாளர்களின் நிபந்தனைகளை ஏற்றுத் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்பிருந்தும் அவ்வாறு செய்யவில்லை. நபி (ஸல்) அவர்கள் முன்கூட்டியே கூறிய - “அநியாயக்காரர்கள் அல்லாஹ்வால் உமக்கு அணிவிக்கப்பட்ட ஓர் ஆடையைக் கழற்றி விடுமாறு உம்மைக் கோரினால் நீர் அதற்கு உடன்பட்டு விடாதீர், என்னுடன் வந்து சேர்ந்து கொள்ளும் வரை பொறுமையைக் கடைப்பிடிப்பீராக!” - என்ற போதனையை கண்டிப்பாகப் பின்பற்றினார்கள்.

இதனால், தான் ஷஹீதாக்கப்படும் வரை நபியவர்களின் வாக்கில் அசையா நம்பிக்கையுடன் இருந்து ஹிஜ்ரி 35 ஆம் வருடம் இஸ்லாத்திற்காக தமதுயிரைத் தியாகம் செய்தார்கள்.

**4. அலீ (ரழி) அவர்களின் சமய சமூக பங்களிப்புகள் :**

நபி (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர்களில் ஒருவரான அபூதாலிப் என்பவருக்கு இளைய மகனாகப் பிறந்த அலீ (ரழி) அவர்கள், பால்ய வயதிலிருந்தே நபியவர்களின் அரவணைப்பில் வளர்ந்து வந்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத் பொறுப்பு வழங்கப்பட்ட போது அலீ (ரழி) அவர்கள் பத்து வயது சிறுவனாயிருந்தார்கள். ஆயினும், தனது சகோதரர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அளவில்லாத மதிப்பும், பாசமும் கொண்டிருந்த அவர்கள் எவ்வித தயக்கமுமின்றி முதற்கணத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். இதன் மூலம் இஸ்லாத்தில் நுழைந்த முதற் சிறுவன் எனும் சிறப்பினைப் பெறுகிறார்கள்.

சிறுபிராயம் முதலே நபி (ஸல்) அவர்களோடு ஒன்றாக வாழ்ந்த காரணத்தால் ஆரம்ப முதலே இஸ்லாமியப் பணியிலும் சமூகப் பணியிலும் நபி (ஸல்) அவர்களுடன் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்றார்கள்.

ஹிஜ்ரத்திற்கு முன்னர் மக்காவில் நபி (ஸல்) அவர்களது பிரச்சாரப் பணிகளுக்கு ஒத்தாசை புரிந்த அலீ (ரழி) அவர்கள், ஹிஜ்ரத்தின்போது மாபெரும் தியாகமொன்றினை மேற்கொண்டார்கள். அதாவது பெரும் எண்ணிக்கையான குறைஷிக் காபிர்கள் நபி (ஸல்) அவர்களைத் தீர்த்துக்கட்டிவிடும் தீர்மானத்துடன் நபி (ஸல்) அவர்களது வீட்டை முற்றுகையிட்டபோது, நபியவர்களுக்குப் பதிலாக அவர்களது படுக்கையில் உறங்குவதற்கு எவ்விதத் தயக்கமுமின்றி முன்வந்தார்கள். குறைஷியர் எவ்வேளையும் வீட்டினுட் புகுந்து கண்மூடித்தனமாக ஒருமித்துத் தாக்கினால் பல துண்டங்களாக தான் வெட்டப்பட நேரிடும் என்ற ஆபத்தான கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அவர்களின் துணிச்சலான இம்முடிவு இஸ்லாத்தின் பாலும், அதன் தூதர் பாலும் அவர் கொண்டிருந்த அதீத பற்றினை எடுத்துக்காட்டுகின்றது.

மிகுந்த பலசாலியாகவும் சிறந்த குதிரை வீரராகவும் காணப்பட்ட ஸெய்யிதினா அலீ (ரழி) அவர்கள் ஹிஜ்ரத்தின் பின்னர் இஸ்லாத்திற்கு எதிரான அனைத்துப் போர்களிலும் கலந்து தனது ஒப்பற்ற ஆற்றல்களை நிரூபித்துள்ளார்கள். எத்தகைய பலமிக்க எதிரியினதும் சவாலை ஏற்று களமிறங்கினார்கள். அல்லாஹ்வின் சிங்கம் என நபி (ஸல்) அவர்களால் புகழப்படுமளவு தனது ஆற்றல்களை இஸ்லாமியப் போராட்டங்களில் வெளிப்படுத்தினார்கள்.

அறிவில் சிறந்து விளங்கிய அலீ (ரழி) அவர்கள் தமது விவேகத்தையும் ஞானத்தையும் இஸ்லாத்திற்காக செலவிட்டார்கள். சிறந்த மார்க்கத்தீர்ப்புக்களை வழங்கிய இவர்கள் நீதிபதியாகவும் செயற்பட்டுள்ளார்கள். தனக்கு முன் ஆட்சியிலிருந்த அனைத்து கலீபாக்களதும் ஆலோசனை சபைகளில் முக்கிய உறுப்பினாராகப் பணியாற்றிய அவர்கள், மிகத் துல்லியமாகவும் பொறுப்புடனும் ஆலோசனைகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி இஸ்லாத்தைப் பாதுகாப்பதிலும் நல்லாட்சி புரிவதிலும் உறுதுணையாய் செயலாற்றியுள்ளார்கள்.

மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம் சமூகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அலீ (ரழி) அவர்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இஸ்லாத்தையும் அதன் பணியாளர்களையும் போஷித்துப் பாதுகாத்து, சுபீட்சமும் வழங்குவதிற் பின் நிற்கவில்லை.

# 06. உமைய்ய, அப்பாஸிய ஆட்சிகள்

**உமையாக்கள் (ஹிஜ்ரி 41 - 132)**

ஆரம்பத்தில் க.்.பாவைப் பரிபாலித்து வந்த நபி இஸ்மாஈல் (அலை) அவர்களின் பரம்பரையில் தோன்றிய குசை இப்னு கிலாப் என்பவர் மக்காவில் முதன் முதலில் நகர அரசொன்றை (City State) உருவாக்கியிருந்தார். அவரது மரணத்தைத் தொடர்ந்து அவரது வாரிசுகளான அப்துத்-தார், அப்துஷ்-ஷம்ஸ் முதலானோர் இப்பொறுப்பை வகித்து வந்தனர்.

குஸையின் வாரிசுகளில் ஒருவரான அப்துஷ்-ஷம்ஸுக்கு ஹாஷிம், நெள.்.பல், அப்துல் முத்தலிப் என மூன்று சகோதரர்கள் இருந்தனர். இவர்களுள் அப்துஷ்-ஷம்ஸின் மகனே உமையா என்பவர். ஒரு சமயம் அப்துஷ்-ஷம்ஸியரின் குடும்பத்தினருக்கும் அவரது சகோதரர் குடும்பத்தினரான ஹாஷிமீக்களுக்கும் இடையில் க.்.பாவின் பரிபாலனத்தைப் பகிர்ந்து கொள்ளும் விடயத்தில் தோன்றிய முரண்பாடுகள் சர்ச்சையில் முடிந்தன. ஈற்றில் ஸிகாயா, ரிபாதா போன்ற பொறுப்புக்கள் ஹாஷிமீக்களின் கீழ் வந்தன. இதனால் ஹாஷிமீக்களின் செல்வாக்கு அதிகரித்தது மட்டுமன்றி அப்துஷ்-ஷம்ஸியர் செல்வாக்கிழக்க வேண்டிய நிலையும் உருவாகியது.

இது கண்டு புழுங்கிய அப்துஷ்-ஷம்ஸின் புத்திரன் உமையா ஹாஷிமிக்களுடன் தகராறு செய்யத் தொடங்கினார். க.்.பா தொடர்பில் ஹாஷிமீக்களுக்குக் கிடைத்த துறைகள் தமக்கே கிடைக்க வேண்டுமென உமையா வாதாடினார். இப்போராட்டத்தில் மக்கள் மன்றத்தின் தீர்ப்பு ஹாஷிமீக்களுக்கே சாதகமாக அமைந்தது.

உமையாவுக்கு இரு ஆண் மக்கள் இருந்தனர். அவ்விருவருள் ஒருவரான ஹர்பின் வழியில் அபூசுபியான் தோன்றினார். இந்த அபூ சுபியான் தான் பிற்காலத்தில் உமையா கிலாபத்தைத் தோற்றுவித்த முஆவியாவின் தந்தையாவார். முஆவியாவின் மகனான யசீதுக்கு முஆவியா எனவும், காலித் எனவும் இரு ஆண் மக்கள் இருந்தனர். அவர்களுள் காலித் என்பவர்தான் அறேபியாவில் அல்கீமியா (Chemistry) எனும் கலையை அறிமுகம் செய்தார்.

உமையாவின் மற்றொரு மகனான அபுல் ஆஸுக்கு ஹகம் எனும் பெயரில் ஒரு மகன் இருந்தார். இவரது மகன் மர்வான் என்பவர்தான் உமைய ஆட்சியின் பிறிதொரு பிரிவான மர்வானிய ஆட்சிக்கு வித்திட்டார்.

## உமைய ஆட்சியின் தோற்றமும் ஆட்சியைக் கையேற்றலும்

நபியவர்கள் பனூ ஹாஷிம் குலத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில், இஸ்லாத்தின் வருகைக்குப் பின்னர் ஹாஷிமீக்களின் செல்வாக்கு அதிகரித்த அதேவேளை உமையாக்களின் மதிப்பு சரிந்து செல்லலாயிற்று. உமையாக்களில் ஒருவரான நபித் தோழர் உஸ்மான் (ரழி) கலீபாவாக வந்தபோது உமையாக்கள் தாமிழந்த செல்வாக்கை மீண்டும் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வைப் பெற்றனர். ஹிஜ்ரி 35ல் கலீபா உஸ்மான் கொலை செய்யப்பட்டமையானது, உமையாக்களின் உள்ளங்களில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த இந்த உணர்வுக்கு எண்ணெய் வார்ப்பதாய் அமைந்தது. உமையாக்களிடமிருந்த ஆட்சிபீடத்தைத் தமதாக்க வேண்டும் என்ற உணர்வும் ஸிரியாவின் மாகாண ஆளுனராகக் கடமையாற்றிய நபித் தோழர் முஆவியாவின் ஆட்சித் திறனும் உமையா ஆட்சியின் தோற்றத்துக்கான முக்கிய பின்னணிகளாயின.

கலீபா உஸ்மானின் காலத்தில் உமையாக்கள் படிப்படியாக தம்மைப் பலப்படுத்திக் கொண்டனர். கலீபாவின் அந்தரங்கச் செயலாளர் மர்வான் தனக்கிருந்த அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி திரை மறைவில் நின்று உதவினார். இதனால் உமையாக்கள் உயர் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வுகள் கலீபாவுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படக் காரணமாயின. கலீபா கொலையுண்ட போது, கொலையைச் சாதகமாகப் பயன்படுத்திய உமையாக்கள், முஆவியாவின் தலைமையில் கிளர்ச்சி செய்து, தமது இழந்து போன செல்வாக்கைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் தலைமைத்துவத்துக்காகப் போராடினர். இப்போராட்ட முயற்சியே உமையாக்களை அடுத்த ஒரு நூற்றாண்டுக்கான ஆட்சி நாயகர்களாக ஆக்கியதெனலாம்.

## ஆட்சி கைமாறிய பின்னணி

கலீபா உஸ்மான் மீது குற்றம் சுமத்தியோர் ஒரு குழுவாக வந்து கலீபாவின் வீட்டை முற்றுகையிட்டனர். பல நாள் முற்றுகையின் பின் ஒரு நாள் வீட்டினுள் பலவந்தமாக நுழைந்து கலீபாவைக் கொலை செய்தனர். அடுத்து வந்த கலீபா அலி (ரழி) அவர்கள் கொலையாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதில் பெரிதும் சிரமப்பட்டார். இந்நிலைக்குக் காரணம்:

1. கொலையாளிகள் மதீனாவில் திரண்டு நின்று நபித்தோழர்களைப் பயமுறுத்தியமை.
2. ஹஜ்ஜுக்காக மக்கா சென்றிருந்தவர்கள், கொலையாளிகளாகச் சந்தேகப்பட்டவர்களைக் கொலை செய்தமை.
3. பஸராவில் கலீபாவுக்கு எதிராகப் போராட ஒரு குழு தயாராக இருந்தமை.
4. நபித்தோழர் முஆவியா கலீபாவுக்கு பைஅத் செய்யாமல் ஷாமில் அவருக்கு எதிராகச் செயற்பட்டமை.

கலீபா அலிக்கு முஆவியா பைஅத் செய்யாதிருந்தமை கிலாபத்தில் பெரும் புரளி ஏற்பட காரணமாயிற்று. உண்மையில் கலீபாவுக்கு முஆவியா பைஅத் செய்து கலீபாவுக்கு ஒத்துழைப்பும் வழங்கியிருந்தால் கொலையாளிகளை இலகுவாக கண்டுபிடிக்க முடிந்திருக்கும்.

இந்நிலையில் கலீபாவுக்கும் முஆவியாவுக்கும் இடையில் ஸிப்பீன் போர் மூண்டது. இந்த யுத்தத்துக்கு பின்வருவன காரணங்களாக அமைந்தன.

1. முஆவியா அலியை கலீபாவாக ஏற்று பைஅத் செய்யாமை.
2. கிலாபத் சிதைவதை கலீபாவால் அங்கீகரிக்க முடியாமை.

ஸிப்பீன் போர் முஸ்லிம் சமூகத்தில் வேண்டாத பல விளைவுகள் தோன்றக் காரணமாகியது.

1. முஸ்லிம் சமூகம் பிளவுபட்டமை.
2. காரிஜீக்களின் தோற்றம்.
3. தொடரான உள்நாட்டுப் போர்கள்.
4. கலீபா அலி கொலையுண்டமை.
5. கிலாபதுர் றாஷிதா வீழ்ச்சியடைந்தமை.

காரிஜ்களின் எழுச்சியின் காரணமாக கலீபா அலி இரு முனைகளில் நின்று போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார். உள்நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக அலியின் படைப்பலம் குன்றிப்போயிற்று. இந்நிலை முஆவியாவுக்குச் சாதகமாக அமைந்தது. பின்னர் ஆட்சிக்கு வந்த அலியின் புதல்வர் ஹஸன் (ரழி) முஆவியாவுடன் ஒப்பந்தம் செய்து ஆட்சியை விட்டுக்கொடுத்தார். அது முதல் முஆவியா முழு முஸ்லிம் சாம்ராஜ்யத்தினது தனிப் பெரும் கலீபாவானார்.

**உமையா கலீபாக்கள்**

1. முஆவியா (661 - 680)
2. முதலாம் யஸீத் (680 - 683)
3. இரண்டாம் முஆவியா (683 - 684)
4. முதலாம் மர்வான் (684 - 685)
5. அப்துல் மலிக் (685 - 705)
6. வலீத் இப்னு அப்துல் மலிக் (705 - 715)
7. சுலைமான் இப்னு அப்துல் மலிக் (715 - 717)
8. உமர் இப்னு அப்துல் அஸீஸ் (717 - 720)
9. இரண்டாம் யஸீத் (720 - 724)
10. ஹிஷாம் (724 - 743)
11. இரண்டாம் வலீத் (743 - 744)
12. மூன்றாம் யஸீத் (743 - 744)
13. இப்றாஹீம் (743 - 744)
14. இரண்டாம் மர்வான் (745 - 750)

## உமையாக் காலத்து நிர்வாக அமைப்பு

### சட்டவாக்க உரிமை

இஸ்லாத்தின் இக்கருத்தியலை குலபாஉர் ராஷிதூன்கள் காலத்தைப் போல உமையாக்கள் காலத்தின் ஆட்சியாளர்கள் ஏற்று நடாத்தவில்லை இஜ்திஹாதும் மேற்கொள்ளப்பட்டாலும் கிலாபதுர் ராஷிதாவில் போன்று மஜ்லிஸ் - அஷ்ஷூரா மூலமன்றி தனிப்பட்ட முறையிலேயே தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### கலீபா நியமனம்

பரம்பரைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆட்சியாளர்களை வாரிசுரிமை கோட்பாட்டின் வழி நியமனம் செய்து கொண்ட அவர்கள் கலீபாவுக்கு அரசியல், இராணுவ, நிர்வாக, நிதி, நீதித் துறைகளின் தலைமை அதிகாரி அந்தஸ்தை வழங்கினர். மஜ்லிஸ் - அஷ்ஷூரா பெயரளவிலேயே இயங்கியது. வாரிசு நியமன அடிப்படையில் தெரிவாகும் அடுத்த கலீபாவுக்கு நடப்பு கலீபா தலைநகரிலுள்ள பொது மக்களிடமும் உயர் அதிகாரிகளிடமும் பைஅத் பெற்றார். வெளிப் பிரதேச மக்களிடம் மாகாண கவர்னர்கள் மூலமாக விசுவாச பிரமாணம் பெறப்பட்டது. மொத்தத்தில் உமையா ஆட்சி முடியாட்சிக்கு இணையானதாகவே இருந்தது.

டமஸ்கஸ் நகரைத் தலைநகராகக் கொண்டு உமையாக்கள் ஆட்சி செய்தனர். உமர் இப்னு அப்துல் அஸீஸைத் தவிர ஏனைய அனைத்து கலீபாக்களும் தமக்கென நிர்மாணிக்கப்பட்ட தனி மாளிகையிலேயே தங்கினர். பெரும்பாலும் தலைநகரிலேயே வாழ்ந்த கலீபாக்களுக்கு மஸ்ஜித்களில் மக்ஸூரா எனப்பட்ட பாதுகாப்பு அறைகள் அமைக்கப்பட்டதோடு அவர்கள் தொழுது முடியும் வரை மெய்க் காவலர்களால் பாதுகாக்கப்பட்டும் வந்தனர்.

தலைநகரையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் கலீபாக்களே நேரடியாகக் கண்காணித்து வந்தனர். ஏனைய பகுதிகளைக் கவனிக்கவென கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர். உள்நாட்டு அலுவல்கள் அனைத்தும் அவர்களது பொறுப்பில் விடப்பட்டிருந்தன.

### உமையாக் கால மாகாணங்கள்

1. இறாக் : கிழக்கில் இருந்த சகல பகுதிகளும் இதன் கீழ் இருந்தது. (Babilonia, கார்தியா, ஈரான், சிந்து.......) தலைநகர் கூஃபா.
2. எகிப்து : இதன் மேற்கு, கிழக்குப் பகுதிகள்.
3. ஹிஜாஸ் : பஹ்ரைன், ஓமான் தவிர்ந்த முழு அரேபியாவும்.

4. ஜஸீரா : மொசப்பத்தேமியா, ஆர்மீனியா, அஸர்பைஜான், சின்னாசியா.
5. ஆபிரிக்கா : வட ஆபிரிக்கா, ஸ்பெய்ன், சிஸிலி, போல்டிக் தீவுகள்.

வாலி எனப்பட்ட மாகாண கவர்னர்கள் தமது தேவைக்கு ஏற்ப உதவி மாகாண அதிபதிகளையும் ஆமில் எனப்பட்ட இணைப்பு அதிகாரிகளையும் நியமித்துக் கொண்டனர். வெளிநாட்டு அலுவல்களில் கலீபாவின் அனுமதியைப் பெற வேண்டியிருந்த வாலிகள் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றல், இராணுவத்துக்குத் தலைமை தாங்குதல், நீதி நிர்வாகம் என்பனவற்றுக்குப் பொறுப்பாக இருந்தனர்.

மாகாண, நிதி நிர்வாகத்தைக் கவனிப்பதற்கென ஸாஹிபுல் கராஜ் எனப்பட்ட நிதித்துறை அதிகாரிகளும் ஒழுங்கு, கட்டுப்பாடு முதலானவற்றை நிலைநாட்ட ஸாஹிபுஷ்ஷுர்தா எனப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். நீதி நிர்வாகத்தைப் பேணவென காழிகள் நியமிக்கப்பட்டனர். உயர் நீதியரசரை கலீபா நியமிக்க மாகாணங்களுக்கான தலைமை நீதிபதிகளை உயர் நீதியரசரே நியமித்து வந்தார். மாகாண நீதிபதிகளுக்கு தமக்குக் கீழ் துணை நீதிபதிகளை நியமித்துக் கொள்வதற்கான உரிமை இருந்தது. இவர்கள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

1. தர்மச் சொத்துக்கள், அநாதைகளின் சொத்துக்களைப் பராமரித்தல்.
2. வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தல்.
3. சமயக் கடமைகள் தொடர்பான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தல்.

உமையாக்கள் தமது நிர்வாகத்தைத் திறன்பட செய்யும் நோக்கில் நிர்வாகத்தை 5 பகுதிகளாகப் பிரித்தனர்.

1. தீவானுல் கராஜ் - நிதி திணைக்களம்
2. தீவானுல் ஜுன்த் - இராணுவத் திணைக்களம்
3. தீவானுல் ரஸாஇல் - ஆவணத் திணைக்களம்
4. தீவானுல் காதம் - பதிவுத் திணைக்களம்
5. தீவானுல் பரீத் - தபாற் திணைக்களம்

பின்வருவன உமைய்ய ஆட்சியில் வருமான வழிமுறைகளாகும்.

1. முஸ்லிமல்லாதோரிடம் இருந்து அவர்களது வருமான ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப அறவிடப்பட்ட ஜிஸ்யா வரி.
2. கராஜ் எனப்பட்ட நிலவரி.
3. கனீமா.
4. முஸ்லிம் படை, போருக்குச் செல்லும் போது சண்டை நிகழாத நிலையில் கிடைக்கும் பொருட்கள்.

5. உஷ்ர் - சுங்க வரி.
6. ஸதகா.
7. தண்டப் பணம்.
8. பரம்பரை சொத்துக்கள்.
9. ஸகாத்

இப்படிக் கிடந்த வருவாய்களில் ஸகாத் மூலம் கிடைத்தவற்றை அல் குர்ஆன் குறிப்பிடும் எட்டுப் பிரிவினருக்கு வழங்கினர். ஏனைய வருவாய்கள் நிர்வாக, நீதி, சமூக, இராணுவ, சமூக நலப் பணி களுக்குப் பயன்படுத்தப்பட்டன.

### கலீபா முஆவியா (ரழி)

பொதுவாக உமைய ஆட்சியின் தாபகராகக் கருதப்படுகின்ற இவர், உமைய ஆட்சியை அலங்கரித்த 14 ஆட்சியாளர்களுள் முதன்மையானவர் ஆவார்.

இஸ்லாத்தின் ஆரம்ப கால எதிரியும் அப்போதைய குறைஷியரின் தலைவராகவும் விளங்கிய அபூ சுபியான் என்பவரின் மகனே முஆவியா (ரழி) ஆவார். ஹிஜ்ரத்துக்கு 15 வருடங்களுக்கு முன் மக்காவில் பிறந்த இவர் ஹிஜ்ரி 8ல் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். இவருடனே இவரது தந்தையும் குடும்பத்தினரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முஆவியா ஆராம்பத்தில் நபியவர்களின் எழுத்தாளர்களில் (secretary) ஒருவராக கடமையாற்றினார். இவரின் சகோதரிகளில் ஒருவரான உம்மு ஹபீபா என்பவரை நபியவர்கள் மணந்து கொண்டதன் மூலம் நபியவர்களுக்கு மைத்துனராக ஆகும் பாக்கியமும் அவருக்குக் கிடைத்தது.

கலீபா உமரின் ஆட்சிக் காலத்தில் பலஸ்தீனின் ஆளுநராக முஆவியாவின் சகோதரர் யஸீத் கடமையாற்றிய போது இவர் அப்பகுதிக்கான நிர்வாக உதவியாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் கவர்னராக்கப்பட்டார்.

இவர், மூன்றாவது கலீபா புரட்சிக்காரர்களால் கொலை செய்யப்பட்ட பின்னர் அந்தக் கொலைக்குக் காரணமாக இருந்த கொலையாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தகுந்த தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனும் விடயத்தில் முனைப்புக் காட்டியது மாத்திரமன்றி, அதற்காகக் குரல் கொடுக்கவும் செய்தார். இந்நிலையில் ஆட்சிக்கு வந்த அலிக்கு பைஅத் செய்ய மறுத்த முஆவியா, ஸிப்பீன் போரில் கலீபாவுக்கெதிராகக் களமிறங்கினார்.

கலீபா அலியின் மரணத்தின் பின் அவரது மூத்த மகன் ஹஸன் அடுத்த கலீபாவாக மக்களால் தெரிவு செய்யப்பட்டார். எனினும், இயல்பிலேயே சமாதான நாட்டம் கொண்டிருந்த ஹஸன் (றழி) முஆவியாவுடன் போரில் ஈடுபட விரும்பாது ஆட்சிப் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டார். இவ்வாறு ஹி.41ல் இமாம் ஹஸன் (ரழி) பதவி துறந்ததைத் தொடர்ந்து முஆவியா முழு இஸ்லாமிய சாம்ராஜ்யத்தினதும் தனிப்பெரும் கலீபாவானார்.

ஆட்சிக்கு வந்த முஆவியா முதல் நடவடிக்கையாக அதுவரை கூபாவில் இருந்து வந்த தலைநகரை டமஸ்கஸுக்கு மாற்றினார். நிர்வாகத்தோடு தொடர்பான விடயங்களுக்கு தகுதி வாய்ந்தவர்களைத் தெரிவு செய்து அதிகாரிகளாக்கினார். உதாரணத்துக்காகப் பின்வருவோரைக் குறிப்பிடலாம்.

1. அம்ர் பின் ஆஸ் - எகிப்தின் கவர்னர்.
2. முகீராபின் ஷுஃபா - கூபா கவர்னர்.
3. ஸியாத் பின் ஸுமையா - பஸரா கவர்னர்.

இதனால் சுதேச, விதேச அரசியல் நடவடிக்கைகள் சீர்பெற்றதோடு நில்லாது உள்நாட்டு அலுவல்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முக்கியமான பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அவ்வாறான நடவடிக்கைகளுக்குப் பின்வருவன உதாரணங்களாகும்.

1. தபாற் சேவையைத் சீர்திருத்தும் வகையில் தீவானுல் பரீத் எனும் பெயரில் தபாற் திணைக்களம் ஒன்று உருவாக்கப்பட்டது.
2. தீவானுல் காதம் என்ற பெயரில் பதிவேட்டுத் திணைக்களம் ஒன்றை உருவாக்கி அதனூடாக அரச ஆவணங்களையும் கட்டளைகளையும் முத்திரையிட்டுப் பாதுகாக்கும் நடைமுறையை அறிமுகப்படுத்தினார்.
3. பலம் மிக்க இராணுவப் பிரிவொன்றை உருவாக்கிய கலீபா முஆவியா, அதற்குப் பல்வேறு கோத்திரங்கள், பிரிவுகளில் இருந்தும் வீரர்களைத் திரட்டி மாதாந்த சம்பளம் ஒன்றை வழங்கவும் ஏற்பாடு செய்தார்.
4. நாட்டின் விவசாய, வர்த்தக முயற்சிகள் பெருக வழி செய்தார்.

கூபாவில் இருந்த தலைநகர் டமஸ்கஸுக்கு மாற்றப்பட்டதால் அங்கு பரவலாக வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்களோடு கலீபாவுக்கு நெருக்கமான உறவு ஏற்பட்டது. இவர் கிறிஸ்தவப் பெண் ஒருவரை மணந்திருந்தார் என்றும் அவரது அரசவை வைத்தியராகவும் புலவராகவும் கிறிஸ்தவர்களே பணியாற்றினர் எனவும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

## கலீபா முஆவியா காலத்து இராச்சிய விஸ்தரிப்பு

### ஆபிரிக்க வெற்றி

கலீபா உமர் காலத்தில் வட ஆபிரிக்காவின் ஒரு சிறு பகுதி முஸ்லிம்கள் வசம் வந்தது. இப்பகுதி மக்கள் முஸ்லிம் ஆட்சிக்கு திறை செலுத்த இணக்கம் தெரிவித்தனர். இதன் பேரில் ஒரு சிறிய முஸ்லிம் படை கோட்டை (garrison) வாயில்களில் மாத்திரம் நிறுத்தி வைத்துவிட்டு பிரதேசத்தை விட்டுச்சென்றது. கலீபா அலிக்கும் முஆவியாவுக்கும் இடையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது பைசாந்தியர் மீண்டும் வட ஆபிரிக்கப் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இதனால் முஸ்லிம்கள் வட ஆபிரிக்காவை இழந்தனர்.

முஆவியா ஆட்சிக்கு வந்தபோது பைசாந்தியரிடம் இழந்த பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவர தீர்மானித்தார். கி.பி. 670ல் உக்பாவின் தலைமையில் வட ஆபிரிக்கா நோக்கிச் சென்ற படை அங்கு பலவெற்றிகளைப் பெற்றதுடன் கைருவான் எனும் நகரை நிறுவியது. அதுவே, வட ஆபிரிக்காவின் தலைநகரமாக அமைந்தது. இந்நகர நிர்மாணம் கடல் வழியாக நடைபெற்ற ரோமர்களின் தாக்குதல்களை முறியடிக்க வசதியாயமைந்தது.

### கிழக்கு நாடுகளின் வெற்றி

கலீபா முஆவியா காலத்தில் பாரசீகர் குழப்பம் விளைவித்த போது குழப்பத்தை அடக்குவதற்காக தளபதி முஹல்லப் தலைமையில் ஒரு படை அனுப்பப்பட்டது. குழப்பங்களை அடக்கிய இப்படை கி.பி. 663 - 671 காலப்பகுதியில் குராஸானை முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது. கி.பி. 674ல் Oxus நதியைக் கடந்து சென்று, அதுவரை Qubq அரசியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த துருக்கியரைத் தோற்கடித்தது. இதனைத் தொடர்ந்து கி.பி. 675ல் புகாராவையும் 677ல் ஸமர்க்கந்து, திர்மிஸ் போன்ற நகரங்களையும் முஸ்லிம் படை தனது அதிகாரத்திற்குட்படுத்தியது.

### கொன்ஸ்தாந்துநோபிள் முற்றுகை

இஸ்லாமிய கிலாபத்தின் வட மேற்கு எல்லையான கொன்ஸ்தாந்து நோபிளில் வாழ்ந்த ரோமர்கள் இஸ்லாமிய அரசின் எல்லைப்புறங்களை ஆக்கிரமித்த போது அவர்களது கொட்டத்தை அடக்குவதற்கென மிகப் பெரும் கடற்படை



11-CM 14795

ஒன்று உருவாக்கப்பட்டது. கொன்ஸ்தாந்துநோபிளை நோக்கியதான இப்படையெடுப்புப் பற்றி நபியவர்களும் முன்னறிவிப்புச் செய்திருந்ததால் இப்படையெடுப்பில் ஏராளமான நபித்தோழர்கள் கலந்து கொண்டனர். கலீபாவின் மகன் யஸீதினதும் அலியின் மகன் ஹுஸைனினதும் தலைமையில் தயார் செய்யப்பட்ட இப்படை தரை மார்க்கமாகக் கொன்ஸ்தாந்து நோபிள் நோக்கிச் சென்றது. போகும் வழியில் ஸைப்ரஸ், ரோட்ஸ் போன்ற தீவுகளைக் கைப்பற்றிக் கொண்ட முஸ்லிம் வீரர்கள், தமது கடற்படை நடவடிக்கைகளுக்கான முக்கிய தளமாக - Naval Base ஸைப்ரஸைப் பயன்படுத்தினர். சுமார் 7 மாதங்கள் வரை முற்றுகை நீடித்தது.

முற்றுகைக் காலத்தில் எதிரிகள் பயன்படுத்திய ஒரு வகை நச்சுப்பதார்த்தம் காரணமாக முஸ்லிம்கள் பெரும் இழப்புக்களைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டதால், முற்றுகையைக் கைவிட்டு விட்டு முஸ்லிம் படை தலைநகர் திரும்பியது. இப்படையெடுப்பில் கலந்துகொண்ட மூத்த ஸஹாபியான அபூ அய்யூபுல் அன்ஸாரி முற்றுகைக் காலத்தில் மரணமான போது, கொன்ஸ்தாந்திநோபிள் மதிலுக்கருகே நல்லடக்கம் செய்யப்பட்டார்.

இவ்வாறு சுமார் 20 வருடங்கள் ஆட்சி செய்த கலீபா முஆவியா தனக்குப் பின்னர் ஆட்சி செய்யக்கூடிய அடுத்த கலீபாவாக தனது மகன் யஸீதை நியமித்தார். கிலாபத்தின் பல்வேறு பகுதியைச் சேர்ந்தவர்களும் யஸீதின் நியமனத்தை ஏற்றுக் கொண்டனர். புனித நகர்களான மக்கா, மதீனாவுக்கு கலீபா முஆவியாவே நேரில் சென்று அப்பிரதேச மக்களைச் சந்தித்து தனது மகனின் நியமனத்தை ஏற்றுக்கொள்ள வழி செய்தார். ஆனால், நபித்தோழர்களான கலீபா அலி (றழி) யின் மகன் ஹுஸைன், கலீபா உமரின் மகன் அப்துல்லாஹ், கலீபா அபூபக்ரின் மகன் அப்துர் ரஹ்மான் முதலானோர் கலீபாவின் வாரிசு நியமனத்தை ஏற்க மறுத்தனர். முஆவியாவின் இப்புதிய நடைமுறை கிலாபதுர் ராஷிதாவின் நடைமுறைக்கும் இஸ்லாமிய நெறிமுறைகளுக்கும் முரணாகவே அமைந்திருந்தது. இக்காலை யஸீதை விட மிகவும் திறமை வாய்ந்த பல நபித்தோழர்கள் இருந்ததனால் அவர்களுக்கு மத்தியில் முரண்பாடுகள் தோன்றுவதைத் தடுப்பதற்காகவே, முஆவியா யஸீதை நியமித்தார் எனக் கூறுவோரும் உள்ளனர்.

இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய அரசியல் ஞானம் மிக்க ஆட்சியாளர்களில் குறிப்பிடத்தக்கவராகக் கருதப்படும் முஆவியா, சாந்தம், அடக்கம் முதலாம் பண்புகளின் உறைவிடமாகவும் திகழ்ந்தார். கலீபா முஆவியா அடிக்கடி பின்வருமாறு கூறுபவராக இருந்தார். "ஒரு பிரச்சினையை எனது கசையால் தீர்க்க முடியுமாயின் அங்கு நான் வாளைப் பிரயோகிக்கமாட்டேன். குறித்த அதே பிரச்சினைக்கு எனது நாவினால் தீர்வு வழங்க முடியுமாயின் அப்போது

எனக்கு கசையும் அவசியப்படாது.” கி.பி. 680 (ஹி.60)ல் கலீபா முஆவியா காலமானார். இவரைப் பற்றிய பேராசிரியர் ஹிட்டியின் பின்வரும் கருத்து நோக்கத்தக்கது. "He was not only the first but also the best of the Arab Kings" (History of the Arabs)

## கலீபா யஸீத்

கலீபா முஆவியாவைத் தொடர்ந்து ஹி.60ல் ஆட்சிக்கு வந்த அவரது மகன் யஸீதுடைய ஆட்சியுடன், இஸ்லாமிய கிலாபத் வரலாற்றில் பரம்பரை ஆட்சி ஆரம்பமாகியது. அந்த வகையில் வாரிசு நியமனத்துக்கு வித்திட்டவராக கலீபா முஆவியா கருதப்படுகிறார். கிலாபதுர் ராஷிதாவில் இருந்து உமைய ஆட்சியை வேறுபடுத்திக் காட்டும் பிரதான அம்சமாகவும் பிரிகோடாகவும் இந்த வாரிசு நியமனம் அமைந்தது.

கலீபா முஆவியா இளைஞன் யஸீதின் தலைமையில் கொன்ஸ் தாந்திநோபிளை வெற்றிகொள்ள ஒரு பெரும் படையை அனுப்பி வைத்தார். ஒரு சமயம் நபியவர்கள் இப்படையெடுப்பு பற்றி முன்னறிவிப்புச் செய்திருந்ததுடன் அதில் கலந்து கொள்வோருக்கு நன்மாராயமும் கூறியிருந்தார்கள்.

கலீபா யஸீத் இயல்பிலேயே இரு வேறுபட்ட குணவியல்புகளைக் கொண்டிருந்தார். அன்பு, இரக்கம், வீரம் நிறைந்தவராகவும் நிர்வாகம், ஆட்சி முதலாம் அம்சங்களில் உறுதியானவராகவும் திகழ்ந்த அவரிடம் தவறிழைத்தல், பாவம் செய்தல் போன்ற அம்சங்களும் காணப்படவே செய்தன. உயரமாகவும் ஒல்லியாகவும் இருந்த இவர் அன்னையைப் போலவே ஒரு கவிஞராகவும் இருந்தார். பாரசீக கவிஞன் ஹாபிஸ் தனது தொகுப்பான தீவானின் முதல், இறுதி அடிகளை யஸீதின் கவிதை வரிகளாலேயே அலங்கரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இவரிடம் காணப்பட்ட சில தீய நடத்தைகள் காரணமாக இவரது ஆட்சி பற்றி திருப்தி கொள்ளாதவர்களும் உமைய கிலாபத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களும் கலீபா யஸீத் பற்றிப் பல குற்றச் சாட்டுக்களை கூறி வருகின்றனர்.

## கர்பலாச் சம்பவம்

கலீபா யஸீதின் நியமனத்தை ஹுஸைன் (றழி) மாத்திரமன்றி கூஃபா வாசிகளும் எதிர்த்து நின்றனர். எனவே, கூபாவுக்கு வந்தால் ஹுஸைனுக்கு ஆதரவு நல்குவதாகக் கூறி அவரை வருமாறு அழைப்பு விடுத்தனர் கூபா வாசிகளின்

ஒரு சாரார். இதனை நம்பி ஹுஸைன் கூஃபா செல்ல முற்பட்ட போது அங்கு செல்ல வேண்டாமென்றும் அப்பிரதேச மக்கள் அடிக்கடி மனம் மாறக்கூடிய உறுதியற்ற உள்ளத்தைக் கொண்டவர்கள் என்றும் கூறி ஹுஸைனின் ஆதரவாளர்கள் அவரைத் தடுக்க முற்பட்டனர். ஈற்றில், கூஃபா வாசிகளின் ஆசை வார்த்தைகளில் நம்பிக்கை கொண்ட ஹுஸைன் (றழி) தனது ஆதரவாளர்கள் சிலர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் கூஃபா செல்லத் தீர்மானித்தார்.

சுமார் 100 பேர் கொண்ட தனது பரிவாரங்களுடன் கூஃபா சென்ற ஹுஸைன் (றழி) ஸிபாலா எனும் இடத்தை அடைந்த போது, கூஃபா வாசிகள் யஸீதினால் புதிதாக நியமிக்கப்பட்ட உபைதுல்லாஹ் பின் ஸியாதின் கொடுரங்களுக்கு அஞ்சி யஸீதிற்கு ஆதரவாக நிற்கிறார்கள் என்ற அதிர்ச்சி தரும் செய்தியை அறிந்து கொண்டார். கூஃபாவின் நிலவரம் பற்றி அறிந்து வர ஹுஸைனினால் அனுப்பப்பட்ட முக்கியமான சிலரும் உபைதுல்லாஹ்வின் வேட்டைக்குப் பலியாகியிருந்தனர். இந்நிலையிலும் ஹுஸைன் கூஃபா சென்றார். இடையில் கர்பலா எனும் இடத்தை அடைந்த போது உமையாப் படைக்குத் தலைமை தாங்கி வந்த அம்ர் இப்னு ஸஅத் தன்னிடம் சரணடையுமறு இமாம் ஹுஸைனைப் பணித்தார்.

இமாம் ஹுஸைனுக்கும் அம்ருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஹுஸைன் பின்வரும் வகையிலான மூன்று நிபந்தனைகளை முன்வைத்தார்.

1. தன்னையும் தனது பரிவாரங்களையும் மக்காவுக்கு அல்லது மதீனாவுக்கு திரும்பிச் செல்ல அனுமதியுங்கள் அல்லது
2. டமஸ்கஸ் சென்று யஸீதைக் கண்டு பேச அனுமதியுங்கள் அல்லது
3. எல்லையில் நடைபெறும் ஜிஹாத் போரில் பங்கு கொள்வதற்காக அனுப்பிவையுங்கள்.

இந்த நிபந்தனைகளை அம்ர் கூஃபா கவர்னர் உபைதுல்லாஹ்விடம் முன்வைத்தார். நிபந்தனையை ஏற்றுக்கொள்ள மறுத்த உபைதுல்லாஹ் நிபந்தனையின்றிச் சரணடையுமாறும் யஸீதை கலீபாவாக ஏற்றுக் கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

சரணடைய மறுத்த இமாம் ஹுஸைனையும் அவரது பரிவாரங்களையும் எதிரணியினர் சுற்றி வளைத்துக் கொண்டனர். யூப்ரடீஸ் நதியிலிருந்து நீர் அருந்தவும் தடை விதிக்கப்பட்டது. முஹர்ரம் 10ம் நாள் ஹுஸைனுக்கு எதிரான படையினரின் அழுத்தம் அதிகரித்தது. ஒரு பக்கம் இமாம் ஹுஸைனின் யுத்தப் பயிற்சி கூட இல்லாத சிறு படையும் மறுபுறம் இரணுவப் பயிற்சி பெற்ற பெரும் எண்ணிக்கையான உமையாப் படையினரும் கர்பலாப் பாலையில் சமபலமற்ற

நிலையில் மோதிக் கொண்டனர். இந்த யுத்தத்தில் ஹுஸைனின் படையினருக்கு தமது உயிர்களைத் தியாகம் செய்வதை விட வேறு ஒரு தெரிவு இருக்கவில்லை.

கொலை வெறியர்கள் ஹுஸைனின் தலையை வேறாகத் துண்டித்தனர். தலையற்ற முண்டத்தை சிதைத்து உருக்குலைத்தனர். எஞ்சியோர் மிகக் கடுமையாக நடாத்தப்பட்டனர். ஹுஸைனின் அணியில் இருந்த ஆண்களனைவரும் கொன்றொழிக்கப்பட்டனர். இச்சம்பவம் கர்பலா மைதானத்தில் மட்டுமன்றி இஸ்லாமிய வரலாற்றிலும் கறை படிந்த ஓர் அத்தியாயத்தையே தோற்றுவித்தது. கண்களைக் குளமாக்கும் இக்கொடூர நிகழ்வில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இளவல் அலி பின் ஹுசைன் மாத்திரமே உயிர் தப்பினார். இவர் பிற்காலத்தில் ஸைனுல் ஆப்தீன் எனும் பெயரில் மக்கள் மத்தியில் புகழ் பெற்றிருந்தார்.

உள்ளத்தை உறுத்தும் இத்துயர நிகழ்வு அன்றைய முழு முஸ்லிம் உலகையே ஆறாத்துயரில் ஆழ்த்தியிருந்தது. மட்டுமன்றி கடந்த 14 நூற்றாண்டுகளாக இப்பயங்கரச் சம்பவத்தின் நினைவுகள் இஸ்லாமிய வரலாற்றினைக் கறை படியச் செய்யும் வகையில் நிழலாய்த் தொடர்ந்தும் வந்து கொண்டிருக்கின்றது. "For the last 14 hundred years, this trim tragedy has continued to cast the dismal shadow our. " (History of Islam) இதனையே பேராசிரியர் ஹிட்டி, "கர்பலாவில் ஹுஸைன் சிந்திய இரத்தம் தான் ஷீஆக்களின் தோற்றத்துக்கான வித்தாக அமைந்தது." எனக் குறிப்பிடுகிறார். (History of the Arabs) கர்பலாவில் உமையாக்கள் இழைத்த கொடூரங்களும் பின்னாளில் உமையாக்களின் வீழ்ச்சிக்கும் காரணமாய் அமைந்தன.

கர்பலாச் சம்பவம் பற்றிய Gibbon இன் கூற்றும் குறிப்பிடத்தக்கது. "கர்பலாவின் கொடூரம் பல யுகங்கள் கடந்த நிலையிலும் பல தேசங்களிலும் கவலையோடு நினைவுபடுத்தப்படும் ஓர் அம்சமாகத் திகழும்." (Decline and fall of the Roman Empire)

ஹிஜ்ரி 61ல் இடம்பெற்ற இந்த யுத்தத்தின் போது துண்டிக்கப்பட்ட இமாம் ஹுஸைனின் தலை கூஃபாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எஞ்சியோர் டமஸ்கசுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர், ஹுஸைனின் தலையையும், அவலமான தோற்றங்களில் அவரது குடும்பப் பெண்களையும் கண்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்த யஸீத் கண்ணீர் சிந்தியவராக "நான் இவ்வாறு செய்யுமாறு உத்தரவிட வில்லையே. இதற்கு உடந்தையாக இருந்த உபைதுல்லாஹ்வுக்கு அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்" எனக் கூறினார். இத்தோடு நில்லாது, ஹுஸைனின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி தன்னோடு சில நாட்கள் தங்கச் செய்து தனது அனுதாபத்தையும் வெளிப்படுத்தி பல நன்கொடைகளையும் கொடுத்து அவர்களை மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்.

### கர்பலாவின் விளைவுகள்

கர்பலாச் சம்பவம் முஸ்லிம் சமூகத்தில் பல அரசியல், சமயப் பிரிவுகள் தோற்றம் பெறவும், இஸ்லாத்துக்கெதிராக பல சூழ்ச்சிகள் முடுக்கிவிடப்படுவதற்கும் காரணமாக அமைந்தது. கர்பலாவைத் தொடர்ந்து மக்காவிலும், மதீனாவிலும் ஏற்பட்ட பதற்ற நிலையால் மக்கள் கலீபா யஸீதுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த யஸீதின் படை மக்கா, மதீனா நகர்களை முற்றுகையிட்டது. சுமார் மூன்று மாதங்கள் நீடித்த இம்முற்றுகையால் இந்நகர மக்களின் இயல்பு நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இவ்வேளையில் இரு முக்கிய அம்சங்கள் இடம்பெற்றன.

1. ஹிஜாஸ் மக்களின் ஆதரவுடன் அப்துல்லாஹ் பின் ஸுபைர் தன்னைக் கலீபாவாகப் பிரகடனப்பத்தினார்.

2. ஹிஜ்ரி 64ல் கலீபா யஸீத் மரணமடைந்தார்.

கலீபா யஸீதின் காலத்தில் பேராசிரியர் ஹிட்டி குறிப்பிடுவதைப்போல முஸ்லிம் சமூகத்தினதும் இஸ்லாமிய அரசியல் வரலாற்றினதும் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்தகோரமும் துயரமும் மிகுந்த கர்பலாச் சம்பவத்தைத் தவிர குறிப்பிடத்தக்க வேறு எந்தவொரு நிகழ்வும் இடம் பெறவில்லை. சுமார் மூன்றாண்டுகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட நிலையில் ஆட்சி புரிந்த இவர், தனது 38வது வயதில் காலமானார்.

யஸீதின் மரணத்தைத் தொடர்ந்து அவரது புதல்வர் 2ம் முஆவியா தனது 21ம் வயதில் ஆட்சியாளராக்கப்பட்டார். இக்காலப்பகுதியில் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் மக்கா, மதீனா பிரதேசங்களை உள்ளடக்கிய ஹிஜாஸின் ஆளுனராகத் தன்னைப் பிரகடனம் செய்து ஆட்சி புரிந்து வந்தார். இவ்வேளையில், மிகக் குறுகிய காலத்தினுள் 2 ஆம் முஆவியா மரணிக்கவே ஹகமியர் எனப்பட்ட உமையாக் கோத்திரத்தின் பிறிதொரு பிரிவினர் சிரியாவில் மர்வானின் தலைமையில் தமது ஆட்சியை நிறுவினர். ஹகமியரில் முதலாமவரான மர்வான் இப்னு ஹகமின் ஆட்சியோடு ஹர்பியர் எனப்பட்ட முஆவியா வழி வந்த ஆட்சி மரபு முடிவுக்கு வந்தது. ஹிஜ்ரி 64ல் மர்வான் மக்களின் பைஅத்தைப் பெற்று கலீபாவானார். இவர் உமையாவின் இரண்டாவது மகன் அபுல் ஆஸின் புதல்வர் ஹகம் என்பவரின் புத்திரராவார்.

யஸீதின் காலத்தில் காணப்பட்ட குழப்பங்களும் உட்பூசல்களும் இவரது காலத்திலும் தொடர்ந்தன. இவர் தனதாட்சிக் காலத்தில் பின்வரும் முக்கிய சவால்களுக்கு முகம்கொடுத்தது மாத்திரமின்றி அவற்றை வெற்றிகரமாக முறியடிக்கவும் செய்தார்.

1. கிலாபத்தின் முக்கிய சில பகுதிகளை அப்துல்லாஹ் பின் ஸுபைர் கைப்பற்றியிருந்தமை.
2. ஷீஆக்களும், காரிஜ்களும் உமையாக்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தமை
3. தவ்வாபீன்கள் கிளர்ச்சி செய்தமை.

தனது ஆட்சிக்காலத்தில் தோன்றிய பிரச்சினைகளுக்கு முடிவுகட்டிய மர்வான் தனக்குப் பின்னர் தனது மகன் அப்துல் மலிக்கை அடுத்த வாரிசாக நியமனம் செய்தார். தனது மகனை அடுத்த வாரிசாக நியமிப்பதாக அளித்த வாக்குறுதியை மீறியதால் ஆத்திரமடைந்த யஸீதின் விதவை மனைவி தன்னை மறுமணம் செய்த கணவனான மர்வானை கி.பி.685ல் மூச்சுத்திணறடித்து (Smother) கொலை செய்தார். ஒரு வருடம் மாத்திரமே மர்வான் ஆட்சி செய்தார்.

**கலீபா அப்துல் மலிக்**

மர்வானுக்குப் பின்னர் ஹி. 65 இல் அவரது மகன் அப்துல் மலிக் உமையாக்களின் அடுத்த கலீபாவானார். இவர், நீண்ட காலம் உமையா கிலாபத்தை ஆட்சி செய்த மூன்று கலீபாக்களுள் ஒருவராவார். ஹி. 26 இல் பிறந்த இவர் ஓர் ஆட்சியாளருக்கு இருக்க வேண்டிய தகைமைகளைப் பெற்றவராகவும், உமையாக்கள் மத்தியில் தனிச் சிறப்பும், பரந்த அறிவும் உடையவராகவும் விளங்கினார். அப்துல் மலிக்கின் நான்கு புதல்வர்கள் இவரையடுத்து ஒருவர் பின் ஒருவராக ஆட்சி பீடமேறியதால் "அரசர்களின் தந்தை" என்ற சிறப்புப் பெயர் கொண்டும் இவர் அழைக்கப்பட்டார். இவர் ஆட்சிக்கு வந்த வேளை இஸ்லாமியப் பேரரசானது அடித்தளம் தளர்ந்து ஆட்டம் காணும் கட்டடம் ஒன்றைப் போல காட்சியளித்தது. அதனை வீழ்ந்து விடாமல் நிலைப்படுத்திக் கட்டிக் காத்ததனால் “உமையாக் கிலாபத்தின் இரண்டாவது நிர்மாணி” என்றதொரு சிறப்புப் பெயரும் இவருக்குண்டு.

முஸ்லிம் கிலாபத் பல்கோணச் சிக்கலொன்றில் சிக்கித்தவித்த ஓர் இக்கட்டான நிலையிலேயே அப்துல் மலிக் ஆட்சிக்கு வந்தார். அவ்வகையில் அவர் எதிர்நோக்கிய சவால்களை பின்வருமாறு நோக்கலாம்.

1. அவருக்கு சிரிய மக்களினதோ அல்லது உமையாக்களினதோ முழுமையான ஆதரவோ, ஒத்துழைப்போ கிடைக்கவில்லை. உமை யாக்களில் தோன்றியிருந்த சுபியானிய, மர்வானிய பிரிவினையே இதற்குக் காரணமாய் அமைந்தது. இந்நிலை உமையாக் கோத்திரத்துக் குள்ளேயே அவருக்குப் பலத்த எதிர்ப்பை உருவாக்கியது. காலித் பின் யஸீதும் தளபதி அம்ர் பின் ஸஈத் பின் ஆஸும் இவரின் அரசியல் எதிரிகளாக மாறினர்.

2. அப்துல்லாஹ் பின் ஸுபைர் அரேபியாவிலும் இராக்கிலும் தனது ஆட்சியை நிலைப்படுத்தி இருந்தார். உமைய ஆட்சிக்கு மிகப் பெரும் சவாலாக விளங்கிய இவர், அப்துல் மலிக்கின் ஆட்சிப் பிரதேசத்தை விட விசாலமான பகுதிக்கு ஆட்சியாளராக விளங்கினார். அரேபியா, இராக், மொசபதேமியா, குராஸான், எகிப்து, கூ∴பா, பஸரா முதலாம் பிரதேசங்கள் இவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.

3. முக்தார் என்பவர் கூ∴பாவில் வாழ்ந்த தவ்வாபீன்களையும், ஷீஆக்களையும் ஒன்று சேர்த்து ஹுஸைன் (ரழி) அவர்களை கொலை செய்தோரைப் பழிவாங்கும் நடவடிக்கையில் முனைப்புக் காட்டியதோடு தொடர்ந்து - புரட்சி செய்தார்.

4. தீவிர சிந்தனை கொண்ட காரிஜ்களும் பிறிதொரு புறமாக நின்று குழப்பங்களை விளைவித்துக் கொண்டிருந்தனர்.

5. இவ்வாறு உள்நாட்டில் தோன்றிக்கொண்டிருந்த குழப்பங் களையெல்லாம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முனைந்த ரோமர், முஸ்லிம் பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்யும் முயற்சியில் ஈடுபாடு காட்டினர்.

**சவால்களை எதிர்கொண்ட விதம்**

1. காலித் பின் யஸீதின் பகைமையைச் சாதுரியமான முறையில் தீர்த்துக்கொண்ட அப்துல் மலிக் தனது அடுத்த எதிரியான தளபதி அம்ர் பின் ஸஈதை மாளிகைக்கு அழைத்து தனது கரத்தினாலேயே வெட்டிக் கொன்றார்.

2. அப்துல்லாஹ் பின் ஸுபைருக்குப் பாதகமான ஒரு சூழ்நிலை உருவான போது, அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய அப்துல் மலிக் முதலில் ஸுபைரின் மாகாண அதிகாரிகளுள் ஒருவராக இருந்த முஸ்அபை எதிர்க்க ஒரு படையை அனுப்பினார். நடந்த யுத்தத்தில் முஸ்அப் கொல்லப்பட்டதோடு முழு இறாக்கும் அப்துல் மலிக் வசமாகியது.

3. இந்நிலையில் ஸுபைரை எதிர்ப்பதற்காக ஹஜ்ஜாஜின் தலைமையில் ஹி.72ல் (கி.பி.692) ஹிஜாஸுக்கு ஒரு படை அனுப்பப்பட்டது. ஹிஜாஸை மிக இலகுவாகக் கைப்பற்றிக் கொண்ட இப்படை அடுத்தகட்ட நடவடிக்கையாக கஃபாவை முற்றுகையிட்டது. கஃபாவைச் சூழவுள்ள பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டதோடு பெரும் எண்ணிக்கையான மக்களையும் ஆயுதங்களுக்கு இரையாக்கியது.

4. பயங்கரமான இந்நிலைமையில் இருந்து மக்காவை காப்பாற்றும் வகையில் குதித்தார் அப்துல்லாஹ் பின் ஸுபைர். இப்போரில் அவர் உயிர் நீத்தார். இவரின் மரணத்தோடு இஸ்லாமிய சாம்ரஜ்யம் முழுவதற்குமான தனிப் பெரும் கலீபா என்ற ஸ்தானத்தை கலீபா அப்துல் மலிக் அடைந்தார்.

5. முக்தாரின் தலைமையில் கிளம்பிய புரட்சியை முறியடிப்பதற்காக அப்துல் மலிக், கசாப்புப் கடை வீரன் எனப்பட்ட உபைதுல்லாஹ் பின் ஸியாதின் தலைமையில் ஒரு படையை ஆயத்தம் செய்தார். இதை அறிந்த முக்தாரும் இப்றாஹீம் அல் அஷ்தர் என்பவரின் தலைமையில் ஒரு படையைத் திரட்டி அனுப்பினார். யுத்தத்தில் வெற்றி பெற்ற முக்தாரின் படை உபை துல்லாஹ்வை துண்டம் துண்டமாக வெட்டிக் கொன்றது.

6. உமையாக்களையும் அவர்களது மாகாண அதிபதிகளையும் குற்றம் சுமத்திக் குழப்பம் விளைவித்த காரிஜ்கள் தாருல் இஸ்லாம் எனப்பட்ட இஸ்லாமிய நாட்டை எதிர்த்து நிற்பது கடமை என்றும் கூறி வந்தனர். சிலவேளைகளில் அவர்கள் தமக்குள்ளேயும் பிளவுபட்டுக் கொண்டனர். காரிஜ்களால் ஏற்பட்ட தலையிடியைப் போக்கும் வகையில் தளபதி முஹல்லபின் தலைமையில் ஒரு படையை அனுப்பி அவர்களின் கொட்டத்தை அடக்கினார்.

7. ரோமர்கள் எல்லைப்புறங்களில் குழப்பம் விளைவித்தபோது அவர்களையும் வெற்றிகரமாக முறியடித்தது மட்டுமன்றி அவர்களது சில பிரதேசங்களையும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தோடு இணைத்துக் கொண்டனர்.

வட மேற்காபிரிக்காவில் அட்லஸ் மலைப் பகுதியில் வாழ்ந்த Berber இனத்தவர்களின் தலைவியாக Kahina எனும் அபார சக்தி கொண்ட ஒரு பெண் இருந்து வந்தாள். அவள் தனது மாயாஜால வித்தைகளால் அப்பகுதி மக்களை தன் பக்கம் கவர்ந்திருந்தாள். இவள் மர்வானின் காலத்திலேயே முஸ்லிம் பிரதேசங்களில் சிலவற்றைக் கைப்பற்றிக் குழப்பம் செய்து வந்தாள். அப்துல் மலிக்கின் காலத்தில் இவள் முஸ்லிம்களை வலிந்து போருக்கழைத்தாள். இதனை ஏற்றுக்கொண்ட கலீபா கி.பி. 702ல் ஹஸ்ஸான் இப்னு நு.ஃமானின் தலைமையில் காஹினாவின் கொட்டத்தை அடக்குவதற்காக வட ஆபிரிக்காவை நோக்கி படையொன்றினை அனுப்பிவைத்தார். முதல் கட்டமாக பறிபோயிருந்த கைருவானைக் கைப்பற்றிய பின் காஹினா வாழ்ந்த அட்லஸ் மலைத்தொடரை நோக்கி தன் படையை வழி நடத்தினார் ஹஸ்ஸான், காஹினாவுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடைபெற்ற யுத்ததில் காஹினா, பிஃருல் காஹினா (Kahina's Well) எனுமிடத்தில் கொல்லப்பட்டதோடு அவளது தலையும் துண்டிக்கப்பட்டு அப்துல் மலிக்கின் பார்வைக்காக டமஸ்கஸ் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அபார வெற்றிதான் முஸ்லிம்களை வட ஆபிரிக்காவின் வெற்றி மிக்க நாயகர்களாக மாற்றியது. அப்துல் மலிக்கின் காலத்தில் கிழக்குப் பிரதேச நகர்களான குவாரிஸ்ம், சமர்க்கந்த், குஷ், என்பனவும் ரோம வல்லரசின் சில பகுதிகளும் வெற்றி கொள்ளப்பட்டன.

### அப்துல் மலிக்கின் சேவைகள்

1. இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்ததால் கவிதைகளையும் கவிஞர்களையும் ஆதரித்த இவர் தனது அரசவையில் ஃபரஸ்தக் என்ற உலகப் புகழ் பெற்ற கவிஞரை அரசவைக் கவிஞராக நியமித்தார். அத்துடன் ஜாஹிலிய்யாக்கால இலக்கியங்களையும் தொகுக்கச் செய்தார்.

2. கட்டடக் கலையில் இருந்த ஆர்வத்துக்கு எடுத்துக்காட்டாக ஜெரூஸலத்தில் அமைந்துள்ள புனித கற்பாறை மீது அவரால் நிறுவப்பட்ட குப்பத்துஸ்ஸஹ்றா கும்மட்டம் திகழ்ந்து வருகின்றது.

3. இவர் அறிமுகப்படுத்திய புதிய தேசியமயமாக்கல் கொள்கையின் அடிப்படையில் அரபு மொழியை உத்தியோக மொழியாக பிரகடனம் செய்தார். இதற்கு முன்னர் அந்தந்தப் பிரதேச மொழிகளிலேயே நிர்வாக

விடயங்கள் எழுதப்பட்டு வந்தன. நிர்வாக விடயங்களை இலகுபடுத்தும் வகையில் அறபு மொழிக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்தை வழங்கினார். இதனால் பிற இன மக்களும் இம்மொழியைக் கற்பதற்கும், அதன் செல்வாக்கு ஏனைய நாடுகளில் பரவுவதற்கும் வழி பிறந்தது.

4. நாணயங்களில் அறபு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு இஸ்லாமிய நாணயங்களை வெளியிட்டு வைத்தார். இதற்கு முன்னர் நாணயங்களில் வேற்று மொழி எழுத்துக்களே பொறிக்கப்பட்டிருந்தன.

5. நாணய வெளியீட்டுக்காக முதன் முதலில் நாணயம் அச்சிடும் நாணயச் சாலை ஒன்றையும் நிறுவினார். இந்த அருங்காரியத்தை இஸ்லாமிய கிலாபத் வரலாற்றில் சாதித்த முதல்வராக இவர் கருதப்படுகிறார்.

6. கலீபா முஆவியா காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த தபாற் சேவையைச் சிர்திருத்திய கலீபா அப்துல் மலிக் குதிரைகளையும், பயிற்றப்பட்ட புறாக்களையும் தபால்களை எடுத்துச் செல்ல வழி செய்தார். இதன் காரணமாக நாட்டு நடப்புக்கள் யாவும் உடனுக்குடன் ஆட்சியாளர்களுக்குக் கிடைத்தன.

7. இவரது காலத்து நீதித்துறைச் சீர்திருத்தமும் முக்கியமானதாகும். இவர் ஆட்சிக்கு வருமுன் நீதித் துறையின் முழுப் பொறுப்பும் காழிகள் எனப்பட்ட நீதிபதிகளிடமே இருந்து வந்தது. இத்துறையில் விஷேட கவனம் செலுத்திய அப்துல் மலிக், நீதி நிர்வாகத்துக்கு உதவியாக நீதிபதிகளை நியமித்ததோடு தானே பிரதம நீதியரசராகவும் கடமையாற்றிக் குறித்த தினத்தில் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பும் வழங்கி வந்தார். நீதித் துறை தொடர்பான விடயங்களின் பதிவுகளைப் பாதுகாப்பதற்கெனத் தனிச் சபை ஒன்றும் இவரால் நிறுவப்பட்டது. தனியான நீதிமன்றங்களும் முதன் முதலில் இவராலேயே நிறுவப்பட்டன.

8. கிலாபத்தில் ஏற்பட்ட அமைதியைத் தொடர்ந்து தேவைக்கு மேலதிகமான இராணுவ வீரர்களைச் சேவையிலிருந்து நீக்கினார். இவர்கள் விவசாயம், வியாபாரம் முதலாம் தொழில்களில் ஈடுபட வழி செய்யப்பட்டதால் ஸகாத், கராஜ் போன்ற வரிகளை அரசுக்குச் செலுத்தும் அளவுக்கு அவர்கள் மாறினர். இதனால், நாட்டில் நிதித் துறையில் ஏற்பட்ட நெருக்கடி ஓரளவுக்கு நீங்கியது.

கலீபா மலிக் கடைப்பிடித்த அறபு மயம் அல்லது அறபுத் தேசிய மயமாக்கல் கொள்கை கிலாபத்தின் நிர்வாக அலுவல்களை இலகுபடுத்திய போதிலும்

உமையாக்களின் வளர்ச்சிக்கு அது பெரும் தடையாகவே அமைந்தது. அறபியரல்லாத மவாலிகள் உமையாக்கள் மீது அதிருப்தி கொண்டனர். குறிப்பாக ஈரான், இராக் பகுதிகளில் வாழ்ந்த மவாலிகள் இந்த நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உமையாக்களின் வீழ்ச்சிக்குக்கூட இது ஒரு காரணமாக அமைந்தது.

இவ்வறு உமைய்ய கிலாபத்தை மீண்டும் உயிர்ப்பித்து சுமார் 20 வருடங்கள் வெற்றிகரமாக ஆட்சி செய்த கலீபா அப்துல் மலிக் கி. பி. 705 ல் மரணமானார். இவரைத் தொடர்ந்து இவரது மூத்த மகன் அல்-வலீத், உமையாக்களின் அடுத்த கலீபாவாக வாரிசு நியமன அடிப்படையில் தெரிவானார்.

**வலீத் இப்னு அப்துல் மலிக் (105 - 715 - 86 - 96)**

உமையா வம்ச கலீபாக்களில் குழப்பங்கள் ஏதுமின்றிப் பதவி வகித்த ஒரே ஒரு கலீபா இவரேயாவார். இவரது தந்தையின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட சகல குழப்பங்களையும் அவர் வெற்றிகரமாக முறியடித்தமையே இதற்குக் காரணம் எனலாம். உள்நாட்டில் அமைதி நிலவியமையால் நாட்டின் அபிவிருத்தியில் அதிகம் கவனம் செலுத்தினார்.

இவரது ஆட்சியின்போது உமையாக்களது ஆட்சி உச்ச நிலையை எய்தியது. கலீபா உமர் (ரழி) அவர்களின் கிலாபத்துக்குப் பின்னர் இவரது ஆட்சியில் தவிர வேறு எவரது ஆட்சியிலும் இஸ்லாமியப் பேரரசு இத்துணை வேகமாக விரிவடையவில்லை.

சிந்து, ஸ்பானியா, மத்தியாசியா பிரதேச நாடுகள் இவரது கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. தளபதி தாரிக் பின் ஸியாத் ஸ்பானியாவை முஸ்லிம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். தளபதி குதைபா மத்தியாசியப் பகுதிகளை கைப்பற்றி உமையா ஆட்சியை விரிவுபடுத்தினார். மூஸா பின் நுஸைர் வட ஆபிரிக்கப் பிரதேசங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். தளபதி மஸ்லமா தலைமையில் சென்ற படை மூலம் ஆர்மீனியா, கஸ்பியன் கடல் பிரதேசங்கள் முதலாம் பகுதிகளை தனதாட்சியோடு இணைத்துக் கொண்டார். முஹம்மது பின் காஸிமின் தலைமையில் சென்றபடை தற்போதைய பாகிஸ்தான் பகுதியை கைப்பற்றியது.

வலீதின் காலத்தில் கிலாபத் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி கண்டது. நெடுஞ்சாலைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் நிறுவப்பட்டன. கிணறுகள் வெட்டப்பட்டன. விதவைகள், அநாதைகள், ஏழைகள், நோயாளிகளுக்கு சகாய

நிதி வழங்கப்பட்டது. குருடர், செவிடர், அநாதைகள், மனநோயாளர் முதலானவர்களுக்கு விடுதி வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.

கிலாபத் முழுவதும் ஏராளமான கட்டடங்களை நிறுவினார். உலகப் புகழ் வாய்ந்ததும் கட்டடக்கலை அம்சங்கள் பொருந்தியதுமான டமஸ்கஸ் ஜாமிஆ மஸ்ஜித் இவராலேயே நிறுவப்பட்டது. க.்.பா, மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மஸ்ஜித்களைத் திருத்தியமைத்ததோடு நகர்கள் தோறும் மஸ்ஜித்களைக் கட்டுவித்தார்.

கலீபாவே நேரடியாக சந்தைகளுக்குச் சென்று விலையை அவதானித்து நியாய விலையமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார். கைத்தொழிற்துறை விருத்தி அடைவதற்கு வழி செய்த அதேவேளை கலை, கலாசார, இலக்கிய வளர்ச்சிக்கும் அனுசரணை வழங்கினார்.

உமையாக் கலீபா வலீதுடைய ஆட்சிக் காலம் சிறப்புற்றோங்கியது என்றால் அதற்குக் காரணம் அவரின் கீழ் பணியாற்றிய மூஸா, தாரிக், குதைபா முதலான தளபதிகளதும் ஹஜ்ஜாஜ், உமர் பின் அப்துல் அஸீஸ் போன்ற திறன்மிக்க ஆளுநர்களதும் ஒத்துழைப்பே எனலாம்.

ஹிஜ்ரி 96 இல் கலீபா வலீத் காலமானார். மேற்குலகில் இஸ்லாம் அறிமுகமாவதற்கும் அதன் கலாசாரப் பண்பாடுகள் அங்கு சென்றடைவதற்கும் இவர் காலத்து வெற்றியே காரணமாக அமைந்தது எனலாம்.

கி. பி. 715ல் கலீபா வலீதின் மரணத்தைத் தொடர்ந்து அவரது சகோதரர்களுள் ஒருவரான ஸுலைமான் இப்னு அப்துல் மலிக் கலீபாவானார். இரண்டு வருட குறுகிய கால ஆட்சியின் பின்னர் கி. பி. 717ல் கலீபா ஸுலைமான் மரணமானார். இவர் தனது மரணத்தறுவாயில் தனக்குப் பின் அடுத்த கலீபாவாக தனது தந்தையின் சகோதரரான அப்துல் அஸீஸின் மகன் உமரை நியமிப்பதாக நியமனப் பத்திரமொன்றை எழுதி வைத்திருந்தார். வகை வகையாய் உணவு சமைத்து உண்பதில் (Glutton) பிரியராக இருந்த இவர் செய்த ஒரே ஒரு சிறப்பு மிக்க பணியாகவும் இந்-நியமனப் பத்திரம் அமைந்தது.

### கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) ஹி: (99 - 101, 717 - 720)

கலீபா ஸுலைமானையடுத்து அவர் எழுதி வைத்திருந்த நியமனப் பத்திரத்தின் பிரகாரம் உமைய வம்சத்தின் அடுத்த கலீபாவக உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஆட்சிக்கு வந்தார். இவரது தந்தை அப்துல் அஸீஸ், கலீபா மர்வானின் மகனும் கலீபா அப்துல் மலிக்கின் சகோதரருமாவார்.

வலீதின் ஆட்சிக்காலத்தில் உமர் ஹிஜாஸின் ஆளுனராகச் செயல்பட்டார். இஸ்லாமிய நெறிமுறைகளைப் பேணியதாகவே அவரது நிர்வாகச் செயற்பாடுகள் அமைந்திருந்ததால் அப்பிராந்திய மக்களால் அவர் பெரிதும் மதிக்கப்பட்டார். இதனால் அவரது பெயரும் புகழும் பிரபல்யமடைந்தன. ஹிஜாஸில் இவரது நல்லாட்சியால் உண்டான அமைதியும், மகிழ்ச்சியும் கண்டு, அதுவரை ஹஜ்ஜாஜின் கெடுபிடிகளுக்கு உள்ளாகி அவரது ஆட்சியில் அதிருப்தி அடைந்திருந்த மக்கள் அதிக எண்ணிக்கையில் மதீனாவில் வந்து குடியேறினர். தனது மாகாணத்திலிருந்து வெளியேறும் தேச துரோகிகளுக்கு கவர்னர் உமர் அடைக்கலம் அளிப்பதாக ஹஜ்ஜாஜ் கலீபாவிடம் முறையிடவே கலீபா வலீத், உமரைப் பதவி நீக்கம் செய்தார்.

வலீதின் பின் ஆட்சிக்கு வந்த ஸுலைமான் உமரை உற்ற துணையாகவும் பிரதம ஆலோசகராகவும் ஆக்கிக்கொண்டார். அத்துடன் நில்லாது தனக்குப் பின்னர் கலீபாவாக வரும் உரிமையையும் உமருக்கே வழங்கினார். கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் கலீபா அப்துல் மலிக்கின் மகள் பாத்திமாவைத் திருமணம் செய்தார். இவரது தாயார் இரண்டாவது கலீபா உமர் (ரழி) யின் பேத்தியாவார். கலீபா ஸுலைமான் தன்னையே அவரின் வாரிசாக நியமனம் செய்துவிட்டுச் சென்றுள்ளார் என்ற செய்தியை அறிந்த உமர் மக்களை நோக்கி, “கலீபா ஸுலைமான் என்னைக் கலந்தாலோசிக்காமல் இந்நியமனத்தைச் செய்துள்ளார். எனவே நீங்கள் விரும்பும் ஒருவரைக் கலீபாவாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு அவகாம் தருகின்றேன்” எனக்கூறிய போது, “நீங்கள்தான் எமது கலீபா” என மக்கள் யாவரும் ஒருமித்துக் குரலெழுப்பினர். அப்போது உமர், அவர்களை நோக்கி, “நான் இறைவனுடைய கட்டளைக்கு அடிபணிந்து நடக்கும் வரை என்னைப் பின்பற்றுங்கள்” எனக் கூறி பதவியை ஏற்றுக்கொண்டார். பதவிக்கு வந்த உமர் தனது ஆட்சியை கிலாபதுர் ராஷிதாவைப் போன்று இஸ்லாமிய நெறிமுறைகளைப் பேணி நடக்கக்கூடிய ஆட்சியாக அமைத்துக் கொண்டார்.

ஆட்சிக்கு வந்த உமர் தன்னை கலீபா ஸுலைமானின் வாரிசாகக் கருதாமல் கலீபா உமரின் வாரிசாகவே எண்ணிச் செயற்படத் தொடங்கினார். கலீபாவின் பயணத்தேவைக்காக அரச குதிரை அவர்களுக்கு அளிக்கப்பட்ட போது அதனை ஏற்க மறுத்து தனது கோவேறு கழுதையை பயன்படுத்தலானார். கலீபாவுக்கென இருந்த அரச மாளிகைக்குச் செல்லாது தனது சிறு வீட்டிலேயே குடியிருந்தார். இதுவே கலீபாவின் உறைவிடமாகவும், அலுவலகமாகவும் இருந்தது. தனது பாதுகாப்புக்கென்று வழங்கப்பட்ட காவலர்களையும் ஏற்க மறுத்தது மட்டுமன்றி தனக்கு அல்லாஹ்வின் பாதுகாப்பே போதுமானது எனவும் கூறினார். உண்மையில் இத்தகைய பண்புகள் கலீபா உமர் பின் அப்துல் அஸிஸ் மீண்டும் கிலாபதுர் ராஷிதாவின் நிழலாட்சி ஒன்றையே ஸ்தாபிக்க நாடியிருக்கிறார் என்பதைத்

தெளிவாகக் காண்பிக்கின்றன. இவரது ஆட்சி சிறந்து விளங்கியதற்கு முக்கிய காரணங்களாக இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம்.

1. உமரிடம் காணப்பட்ட மார்க்க ஞானம்.
2. கவர்னராகப் பணிபுரிந்தபோது பெற்றுக்கொண்ட அனுபவங்கள்.

கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் தனதாட்சியில் பல மாற்றங்களைச் செய்தார். மக்கள் குறை கேட்டு அவற்றைத் தீர்க்க ஆவன செய்தார். தனது உடைமைகள் அனைத்தையும் 23000 திர்ஹம்களுக்கு விற்று, அப்பணத்தைப் பொது நிதியில் சேர்ப்பித்தார். கலீபா உஸ்மான் காலத்தில் நபியவர்களின் குடும்பத்தாரிடமிருந்து மர்வானால் அபகரிக்கப்பட்ட நிலத்துண்டுகளை மீண்டும் அவர்களிடமே பகிர்ந்தளித்தார். இது கண்டு உமையாக்கள் இவர் மீது வெறுப்பும், விரோதமும் கொள்ளலாயினர்.

இவருக்கு முன்பிருந்த உமைய கலீபாக்கள் அஜமிகளை அல்லது மவாலிகளை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே கருதி வந்தனர். ஆனால், இவர்கள் உமரிப்னு அப்துல் அஸீஸின் காலத்தில் அரபிகளுடன் சரிசமமாகக் கணிக்கப் பட்டனர். பிற சமுதாயத்தினரான திம்மிகள் விடயத்தில் இவர் நீதியாக நடந்து கொண்டார். அவர்களுக்குத் தாராளமாக மதச் சுதந்திரம் வழங்கப்பட்டது. அவர்களது நலன்கள் நன்கு பாதுகாக்கப்பட்டதுடன் அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகளையும் மீள் பரிசீலனை செய்தார். பைத்துல் மாலின் நிதி விவகாரத்தில் மிகவும் கண்டிப்புக் காட்டிய கலீபா, பொது மக்களை வருத்தி வரி வசூலிப்பதைத் தடுத்து நிறுத்தினார்.

கலீபா உமருக்கு முந்திய காலத்தில் நீதிதுறையில் கவர்னர்களுக்கிருந்த எதேச்சதிகாரப்போக்கு நீக்கப்பட்டு, அத்துறை சார்ந்த பொறுப்புக்கள் நீதிபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. திம்மிகளது மதாலயங்கள் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டன. கலீபா முஆவியாவின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் அலி (ரழி) அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் வெள்ளிக் கிழமை குத்பாக்களில் சபித்து வந்த மோசமான வழக்கை நிறுத்தினார். இஸ்லாமிய அழைப்புப் பணி புரிவதைத் தனது இலட்சியமாகக் கொண்ட கலீபா, அதனை அரச ஆதரவில் உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளவும் வழிசெய்தார்.

கிலாபத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரசாரகர்களை அனுப்பி வைத்தார். சில போது அவரே நேரில் சென்று பிரசாரம் செய்தார். இஸ்லாமிய சட்டங்களையும் ஒழுக்கவியல் பெறுமானங்களையும் பாதுகாத்து அடுத்த பரம்பரைக்கு அளிக்கும் வகையில் ஹதீஸ்களைத் தொகுக்கும் பணியை உத்தியோக ரீதியாக ஆரம்பித்து

வைத்தார். இக்காலத்தில் வாழ்ந்த இமாம் ஸுஹ்ரி, இப்னு ஹஸ்ம் போன்ற மேதைகள் இத்துறையில் கலீபாவுக்கு உறுதுணையாக இருந்தனர். இவரது காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகளுள் ஒன்றாக இது கருதப்படுகிறது.

இவற்றுக்கு மேலாக நாட்டின் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தினார். கிலாபத் பிரதேசங்கள் முழுவதும் கிணறுகளும் வீடுகளும் மருத்துவமனைகளும் கட்டப்பட்டன. கைத்தொழில், விவசாயம் என்பன ஊக்குவிக்கப்பட்டன. திட்டமிட்ட அடிப்படையில் ஸகாத்தைத் திரட்டி பைத்துல் மாலூடாக வழங்க வழிசெய்யப் பட்டது.

கண்டிப்புக்காட்ட வேண்டிய இடத்தில் கண்டிப்பாக நடந்து கொண்டார். ஒழுக்கவீனத்தை அவர் எச்சமயத்திலும் அனுமதிக்கவில்லை. ஜிஹாதின் போது இஸ்லாத்தின் வரையறைகளை மீறக்கூடாதென வலியுறுத்தினார். சிறைக்கைதிகள் நல்ல முறையில் நடத்தப்பட்டனர். அவர்களுக்கு அன்பையும், அறத்தையும் போதிக்கவென விஷேட சிறை அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு சாதனைக்கு மேல் சாதனை செய்த இஸ்லாமிய சீர்திருத்தவாதிகளில் ஒருவராகவும் குலபாஉர்ராசிதூன்கள் வரிசையில் ஐந்தாமவராகக் கருதப்படுகின்ற கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் ஹி. 101ல் மரணமானார். இவர் நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இவருக்குப் பின்வந்த ஆட்சியாளர்கள் பலவினமானவர்களாக இருந்தனர். அரசு எதிர்நோக்கி அரசியல், சமூக பொருளாதார பிரச்சினைகளை அவர்களால் எதிர்கொள்ள முடியாது போனதால் உமைய அரசு கி. பி. 750 இல் வீழ்ச்சிகண்டது.

# அப்பாஸியர்

**அறிமுகம்**

நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தையான அப்பாஸ் (றழி) அவர்களின் பரம்பரையில் தோன்றிய அப்பாஸிய ஆட்சியாளர்கள் உமையா வம்ச ஆட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இஸ்லாமியப் பேரரசின் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றனர். இவர்களது எழுச்சி இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் பல புதிய திருப்பங்களை ஏற்படுத்தியது. உமையாக் காலத்தில் டமஸ்கஸில் இருந்த தலைநகர் பக்தாதுக்கு மாற்றப்பட்டது. இதனால், அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் சிரியா நாட்டு அரேபியர் வகித்து வந்த செல்வாக்கு சரியத் தொடங்கியது. அதுவரை மேற்குப் பிராந்தியம் பெற்று வந்த அபிவிருத்தி முன்னேற்றமெல்லாம் கிழக்கு நோக்கித் திரும்பலாயின. உமையாக் காலம் வரை ஏதோ ஒரு வகையில் பேணப்பட்டு வந்த கிலாபத் ஒருமைப்பாடு சிதைந்து போனது மட்டுமன்றி, தனித்தனி ஆட்சியாளர்களின் கீழ் பல சிற்றரசுகளும் தோற்றம் பெற்றன. காலப்போக்கில் சிற்றரசுகளின் ஆதிக்கம் மிகைத்ததனால் கலீபாக்கள் செல்வாக்கிழந்தனர்.

இவர்களது ஆட்சியில் கலை, கலாசார, நாகரிக, அறிவியல் துறைகளில் வியக்கத்தக்க வகையில் விருத்தி ஏற்பட்டது. இந்த முன்னேற்றம் சம கால ஐரோப்பியரின் அசாதாரண வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது என்றால் அது மிகையல்ல.

இந்த முன்னேற்றம் விருத்தி என்பனவெல்லாம் ஒரு சில நூற்றாண்டுகள் வரையே நீடித்தன. சுமார் ஐந்து நூற்றாண்டுகள் வரை நீடித்த இவர்களது ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் வந்த கலீபாக்களின் பலவீனங்களாலும், அடுத்தடுத்து தோற்றம் பெற்ற சிற்றரசுகளின் ஒற்றுமையீனம் காரணமாகவும் சிலுவைப் போர்கள், மங்கோலியப் படையெடுப்புக்களிலும் அந்த முன்னேற்றத்தை அவர்களால் கட்டிக்காக்க முடியவில்லை. ஈற்றில் கி. பி. 1258 இல் மங்கோலியரின் படையெடுப்போடு அப்பாஸிய கிலாபத் மறைந்து போனது.

## அப்பாஸியரின் எழுச்சி

ஐந்து நூற்றாண்டுகளுக்கும் அதிகமான காலம் இஸ்லாமிய உலகை நிர்வகித்த அப்பாஸியர் ஆட்சிக்கு ஆரம்பகால திறமைமிக்க கலீபாக்கள் இட்டுச் சென்ற உறுதிமிக்க அடித்தளமே முக்கிய காரணி என்றால் அது மிகையல்ல. அந்த வகையில் முன்னணி கலீபாக்கள் சிலரின் வரலாற்றுச் சுருக்கத்தை அறிந்து கொள்வது பயன்மிக்கதாகும்.

### அல் மன்ஸூர்

அப்பாஸியரின் முதல் கலீபா அபுல் அப்பாஸ் அஸ்ஸப்பாஹ் மரணித்ததைத் தொடர்ந்து அவரது சகோதரர் அபூ ஜ.்.பர் அல் மன்ஸூர் கி.பி 754 ஆம் ஆண்டு அப்பாஸிய வம்சத்தின் இரண்டாவது கலீபாவாகப் பதவியேற்றார். சுமார் 22 ஆண்டுகள் ஆட்சி செய்த மன்ஸூரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த வீரம், தாராள மனப்பான்மை, புத்திக்கூர்மை, ஆழ்ந்த அவதானம் முதலான ஆளுமைப் பண்புகளால் ஏனைய அப்பாஸிய கலீபாக்களை விட சிறந்தவராகக் இவர் கருதப்படுகிறார்.

கலீபா மன்ஸூரின் பதவியேற்பு இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் மிக முக்கியம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். இவரது ஆட்சி முறை அரேபியரின் அரசியல் வரலாற்றில் கீர்த்தி மிகுந்த சகாப்தமொன்றைத் தோற்றுவித்தது. அசாதாரண திறமை வாய்ந்த மன்ஸூரின் பண்புகள் பின்னால் வந்த அப்பாஸிய கலீபாக்களால் கூட சில தலைமுறைகள் வரை பின்பற்றப்பட்டன. இவர் தனது திறமையால் அப்பாஸிய ஆட்சியைப் பலப்படுத்தியமையால் அவருக்குப் பின்னரும் நீண்ட காலம் வரை அப்பாஸிய ஆட்சியாளர்கள் பலருக்கு ஆட்சிபீடமேற வாய்ப்புக் கிட்டியது. அபுல் அப்பாஸ் அஸ்ஸப்பாஹ் அப்பாஸிய கிலாபத்தின் முதல் கலீபாவாக இருந்த போதும், மிகக் குறுகிய காலத்தில் அப்பாஸிய கிலாபத்தை அவரால் பலப்படுத்த முடியவில்லை. அஸ்ஸப்பாஹ்வினால் முடியாமல் போன இப்பணியை மன்ஸூர் பூர்த்தி செய்தமையால், மன்ஸூரே அப்பாஸிய கிலாபத்தின் உண்மையான நிர்மாணி எனக் கருதப்படுகின்றார்.

கலீபா மன்ஸூர், அப்பாஸிய அரசைப் பாதுகாக்கும் வகையில், ஆட்சிக் கெதிராகத் தோன்றிய அனைத்துச் சவால்களையும் வெற்றிகரமாக முறியடித்தார். அவர் அறிமுகம் செய்து வைத்த ஆட்சிக் கொள்கையே சுமார் ஐந்து

நூற்றாண்டுகளாக அப்பாஸியர் இஸ்லாமியப் பேரரசைக் கட்டியாள வழிவகுத்தது எனலாம்.

சுதந்திரமான நிர்வாக முறையொன்றை அறிமுகப்படுத்திய மன்ஸூர், இராச்சியத்தை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தி மக்கள் நலனை மேம்படுத்துவதற்காக கடுமையாக உழைத்தார். கைவசம் இருக்கும் நிலப்பரப்பை சிறப்பான முறையில் ஆட்சி செய்தால் போதுமானது என்ற நிலைப்பாட்டிலேயே அவர் என்றும் இருந்தார். அந்த வகையில் நாட்டு மக்களின் நலன் கருதி கால்வாய்கள், நெடுஞ்சாலைகள், கிணறுகள் முதலானவற்றை அமைத்துக் கொடுத்தார். கல்வியில் நாட்டமும் பெருவிருப்பும் கொண்டிருந்த அவர் தனது பேரரசின் முக்கிய நகரங்களிளெல்லாம் கல்லூரிகளையும் மருத்துவ மனைகளையும் நிர்மாணித்தார். "தாருல் ஹிக்மா" எனும் பெயரில் மொழிபெயர்ப்புக் கூடமொன்றை நிறுவி அதனூடாக கிரேக்க, இந்திய, சிரிய மொழிகளிலிருந்த பண்டைய அறிவு நூல்களை அறபு மொழிக்கு மொழிமாற்றம் செய்ய வழிசெய்தார். அறிஞர்களை வெகுவாக ஆதரித்ததோடு நில்லாது அவர்களை ஆய்வுப்பணிகளில் ஈடுபாடு காட்டுமாறும் தூண்டுதல் வழங்கினார். இதற்கென அறிஞர்களுக்கு ஆர்வமும் உற்சாகமும் ஊட்டினார். மன்ஸூரின் அரசவையில் அறிஞர்களே உயர் பதவிகளை வகித்தனர் என்பதும் நோக்கத்தக்கது.

இவ்வாறு கலீபா மன்ஸூர், பிற்காலத்தில் பண்பாட்டு விருத்தியும் அறிவியல் முன்னேற்றமும் ஏற்படத்தக்க வகையில் உறுதிமிக்கதோர் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார்.

கலீபா மன்ஸூரின் மரணத்தைத் தொடர்ந்து அவரது புதல்வர் மஹ்தி அடுத்த கலீபாவானார். ஹிஜ்ரி 169 இல் மஹ்தி காலமாகவே அவரது மூத்த புதல்வர் ஹாதி அப்பாஸிய ஆட்சிபீடத்தின் அடுத்த கலீபாவாக பதவியேற்றார். இவர் ஹிஜ்ரி 170 வரை ஆட்சி செய்தார்.

### ஹாரூன் அல் றஷீத்

கலீபா ஹாதியின் மரணத்தைத் தொடர்ந்து தந்தை மஹ்தியின் ஏற்பாட்டின் பிரகாரம் அவரது சகோதரன் ஹாரூன் அல் றஷீத் அடுத்த கலீபாவாக பதவியேற்றார்.

இவர் அப்பாஸியக் கலீபாக்களில் முக்கியமான ஒருவராவார். இவரது ஆட்சிக்காலத்தை அப்பாஸிய ஆட்சியின் உச்ச காலமென வர்ணிப்பர். சுமார் 23 வருட காலம் கிலாபத்தை கட்டிக்காத்த இவர் தனது பண்புகளாலும் ஆற்றிய

சேவைகளாலும் வரலாறு கண்ட உன்னத ஆட்சியாளர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார். இவரிடம் அறிவும், ஆன்மீகப் பக்குவமும் காணப்பட்டன. இறைவனுடனான நெருக்கத்திலும் மக்களுக்கு தர்மம் செய்வதிலும் அறிஞர்களிடம் உபதேசம் பெறுவதிலும் முன்மாதிரிமிக்கவராக விளங்குகிறார். மக்கள் நலனில் ஆர்வம் காட்டிய கலீபா மக்களின் குறைகளை அறிவதற்காக மாறுவேடம் பூண்டு இரவு வேளைகளில் பக்தாத் தெருக்களில் உலா வந்தார். கிலாபத் முழுவதிலும் கடுமையான பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தார். மற்றும் மக்கள் நலன் கருதி பாடசாலைகள், விடுதிகள், மருத்துவ மனைகள், மஸ்ஜித்கள் முதலியவற்றை நிறுவினார்.

பொதுவாக அப்பாஸியரதும் குறிப்பாக ஹாரூனினதும் சிறப்புக்கும் பின்புலத்தில் இருந்து செயற்பட்டவர்கள் பர்மகிகளாவர். ஹாரூனின் ஆசானாக இருந்த யஹ்யா பர்மகி, ஹாருனை ஆட்சியில் அமர்த்துவதற்கு பக்கபலமாக நின்றதனால், யஹ்யாவின் புதல்வர்களான பழ்ல், ஜ.ஃபர், மூஸா போன்றோர் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். இவர்களது அறிவுத்துறை பங்களிப்பு காரணமாக பக்தாத் நகரம் ஓர் அறிவியல் நகராக பரிணாமம் அடைந்தது. காலப்போக்கில் பர்மகிகளின் செல்வாக்கு மிகைத்தபோது, அது தனது செல்வாக்குக்குச் சவாலாக அமைந்துவிடும் என அஞ்சிய ஹாரூன், ஈற்றில் அவர்களை, ஒழித்துக் கட்டினார்.

இவரது காலத்தில் நிறுவப்பட்ட “தாருல் ஹிக்மா” இக்காலத்து அறிவியல் முன்னேற்றத்தில் காத்திரமான பங்களிப்புச் செய்தது. பிறமொழிகளிலான அறிவியல் நூல்களை மொழி மாற்றம் செய்வதற்கென்றே தாருல் ஹிக்மாவில் தனியான ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கு யஹ்யா பின் பத்ரீக், யஹ்யா இப்னு முஆவியா முதலானோர் முக்கிய மொழி பெயர்ப்பாளர்களாக கடமை புரிந்தனர். இவரது காலத்து அரசியல் நிலை மிகவும் சிறப்பாக அமைந்திருந்ததால், சீனச்சக்கரவர்த்தியும் பிரான்ஸிய மன்னன் சார்லமேனும் தமது தூதுவர்களையும் அன்பளிப்புப் பொருட்களையும் அனுப்பி இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்திக்கொண்டனர்.

கலீபா ஹாரூன் தனது காலத்தில் உருவான குழப்பங்களை வெற்றிகரமாக எதிர்கொண்டார். புரட்சிக்காரர்களோடு போராடுவதைத் தவிர்த்து அவர்களோடு சமரசம் அல்லது ஒப்பந்தம் செய்துகொள்ளும் புதிய உத்தியை கையாண்டார். இந்நிலைதான் உண்மையில் பிற்காலத்தில் சிற்றரசுகளின் தோற்றத்துக்கு ஒரு காரணமாக அமைந்தது என்பர்.

கலீபா ஹாரூன் தனது மூத்த மகன் அமினையும் இளைய மகன் மாமூனையும் அடுத்தடுத்து பதவியேற்கும்படி வாரிசுகளாக நியமித்திருந்தார். ஹாரூன் இறந்ததும்

அமின் கலீபாவாக பதவியேற்றார். மாமூன் அமீனை வாழ்த்தி ஆட்சியில் அவருக்குத் துணையாக இருப்பதாகவும் வாக்களித்தார். எனினும் அமீனின் பிரதம அமைச்சராக செயற்பட்ட பஸ்ல் பின் ரபிஆ இவ்விருவரிடையே பகைமையை மூட்டிவிட்டார். மாமூனை வாரிசுரிமையில் இருந்து நீக்குவதற்கும் ஏற்பாடு செய்தார். இதனால் சகோதரர் இருவருக்கும் இடையே போர்மூண்டது. அதில் அமீன் கொல்லப்பட்டார். அதனால் மாமூன் கி. பி. 813 இல் கலீபா பதவியேற்றார். எனினும் அவர் பக்தாதுக்கு வராது மர்வு நகரில் தங்கி தான் மிகவும் விரும்பிய தத்துவயியல் பற்றி அத்துறை சார்ந்த அறிஞர்களுடன் கலந்துரையாடுவதில் அதிக இன்பம் கண்டார். அவரது பிரதம அமைச்சர் பஸல் பின்ஸஹ்ல் தலைநகர் பக்தாதில் இருந்து நாட்டைப் பரிபாலித்தார். அவருக்குப் பதவியில் அதிக ஆசை இருந்தபோதும் நாட்டை நிர்வகிக்கக் கூடிய போதிய திறமை இருக்கவில்லை. அதனால் நாடளாவிய ரீதியில் குழப்பம் ஏற்பட்டது. அதுபற்றி மாமூனுக்கு பிரதமர் பஸ்ல் அறிவிக்கவும் இல்லை. நாட்டின் பலபாகங்களிலும் ஏற்பட்டுள்ள குழப்பநிலை பற்றி கேள்விப்பட்ட கலீபா கி. பி. 819 இல் பக்தாதுக்கு வந்தபோது பிரதம அமைச்சர் கொலை செய்யப்பட்டிருந்தார். மாமூன் நேரடியாக நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டமையால் நாட்டில் அமைதி நிலவியது.

கலீபா மாமூன் மிகச் சிறந்த அப்பாஸிய ஆட்சியாளராவார். இவருடைய ஆட்சி அப்பாஸியர் வரலாற்றில் புகழ்பூத்த பொற்காலமாகக் கருதப்படுகின்றது. வெற்றியும் சிறப்பும் வாய்க்கப் பெற்ற ஓர் ஆட்சியாளருக்கு இருக்க வேண்டிய அத்தனை பண்புகளும் அவரிடம் காணப்பட்டன. இவரிடம் இயல்பாக அமைந்திருந்த முன்யோசனை, விவேகம், இரக்கம், திடஉறுதி, பெருந்தன்மை முதலாம் ஆளுமைப்பண்புகள் இவரை ஏனைய அப்பாஸிய கலீபாக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டின.

கி. பி. 827இல் மு.ஃ.தஸிலாக் கொள்கையை அரச கொள்கையாக இவர் பிரகடனம் செய்தார். இதனால் மக்களினதும் இஸ்லாமிய அறிஞர்களதும் அதிருப்திக்கு உள்ளானார். இக்கொள்கைக்கு எதிராகப் போராடிய அக்காலத்தைய சட்ட அறிஞர் இமாம் அஹ்மத் பின் ஹன்பலை சிறையிலிட்டுத் தண்டித்தார்.

மாமூனின் காலத்தில் அனைத்து விதமான அறிவியல் கலைகளும் பெருவளர்ச்சி கண்டன. கலீபா ஹாரூன் நிறுவிய “பைத்துல் ஹிக்மா” எனும் கல்வி நிலையத்தை விரிவுபடுத்தினார். இங்கு மொழிபெயர்க்கப்பட்ட பல மொழி நூல்களையும் பிரதிகள் எடுப்பதற்கென “வர்ராக்” எனப்பட்ட ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர். மேற்கிலிருந்து மாத்திரம் ஐந்து ஒட்டகைகள் சுமக்கும் அளவுக்கு நூல்கள் வருவிக்கப்பட்டன. ஒரு பகுதி ஆய்வுக்கூடமாகவும் மறுபகுதி

நூலகமாகவும் செயல்பட்ட இவரது காலத்து பைத்துல் ஹிக்மாவுக்கு ஹுனைன் பின் இஸ்ஹாக், அல்கிந்தி ஆகிய இருவரும் பொறுப்பாளர்களாக நியமிக்கப் பட்டிருந்தனர். மாமூன் நிறுவிய வானாராய்ச்சிக் கூடத்தில் அல்குவாரிஸ்மி முதலானவர்கள் கடமை புரிந்தனர். மத்திய கால அறிவியல் வளர்ச்சியில் கூடிய பங்களிப்புச் செய்த ஓர் அறிவியல் கலைக்கூடமாக இந்நிலையம் கருதப்படுகிறது.

மாமூனைத் தொடர்ந்து மு.ஃ.தஸிம், வாஸிக், முதவக்கில் முதலான ஆட்சியாளர்கள் ஆட்சி செய்தனர். அப்பாஸிய ஆட்சியைப் பொறுத்தவரை, மேற்குறித்த ஆட்சியாளர்களின் காலப்பகுதியான முதல் ஒரு நூற்றாண்டு காலமுமே அப்பாஸிய ஆட்சியின் பொற்காலமாக விளங்கியதெனலாம்.

**பைத்துல் முகத்தஸ் வரலாறு**

யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களையும் பின்பற்றுபவர்கள் புனிதப்படுத்தும் ஒரு தளமாக பைத்துல் முகத்தஸ் காணப்படுகின்றது. ஏனெனில், இம்மூன்று சமூகங்களது தூதுவர்களுக்கும் இதனுடன் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

**பைத்துல் முகத்தஸின் தோற்றமும் அமைவிடமும்**

"பைத்துல் முகத்தஸ்" என்றால் "புனிதப்படுத்தப்பட்ட இல்லம்" என்பது பொருளாகும். இது மஸ்ஜிதுல் அக்ஸா என்றும் அழைக்கப்படுகின்றது. இப்புனித இல்லம் ஷாம் (சிரியா) எனும் தேசத்தில், பலஸ்தீனமெனும் புனித நாட்டில், குத்ஸ் எனும் புனித பூமியினுள் அமையப்பெற்றுள்ளது.

பைத்துல் முகத்தஸ்ஸைக் கட்டியவர் இப்றாஹீம் (அலை) என்ற வகையில் அவரிலிருந்தே பைத்துல் முகத்தஸின் வரலாறு ஆரம்பமாகின்றது.

ஈராக்கிலிருந்து அல்லாஹ்வின் கட்டளைப்படி பலஸ்தீனை நோக்கி வந்த இப்றாஹீம் (அலை) அவர்கள் அப்பூமியில் தன் மனைவி ஸாராவை குடியமர்த்திவிட்டு இன்னொரு மனைவியாகிய ஹாஜராவையும் அவரது மகன் இஸ்மாயீலையும் மக்காவில் குடியமரச் செய்தார்கள். மகன் இஸ்மாயீல் வாலிபத்தை அடைந்த போது அவருடன் சேர்ந்து க.்.பதுல்லாவைக் கட்டினார்கள். அதைக்கட்டி 40 வருடங்களின் பின் பலஸ்தீனில் பைத்துல் முகத்தஸைக் கட்டினார்கள். அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதற்கான வழிபாட்டிடமாகவே இவற்றைக் கட்டினார்கள்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நான் நபியவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே! பூமியில் முதன் முதலாக கட்டப்பட்ட பள்ளி எது எனக் கேட்டேன். அதற்கு மஸ்ஜிதுல் ஹராம் என்றார்கள். பின்னர் எது எனக் கேட்டேன். மஸ்ஜிதுல் அக்ஸா என்றார்கள். இவ்விரண்டிற்கும் இடையில் உள்ள கால இடைவெளி என்ன எனக் கேட்டதற்கு 40 வருடங்கள் எனக் கூறிவிட்டு, எந்த இடத்தில் உங்களுக்கு தொழுகை நேரம் வருகின்றதோ அங்கே தொழுது கொள்ளுங்கள். ஏனெனில் அவ்விடம் ஸுஜூத் செய்ய ஏற்ற இடமாகும்" என்றார்கள்.

இவ்விரு மஸ்ஜிதுகளினதும் அருகே இப்றாஹீம் (அலை) அவர்களது, இரு மனைவியரது குடும்பமும் அல்லாஹ்வை வணங்கி வழிபட்டவர்களாக வாழ்ந்து வந்தனர்.

### பைத்துல் முகத்தஸின் வளர்ச்சிக் கால கட்டங்கள்

கி. மு. 12 ம் நூற்றாண்டிலிருந்தே, வரலாற்றில் பைத்துல் முகத்தஸ் முக்கியத்துவம் பெற ஆரம்பிக்கின்றது. அன்று முதல் வரலாற்றில் அதன் வளர்ச்சிக் கால கட்டங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**1ம் கால கட்டம்**

- கி. மு. 1250 முதல் கி. பி. 1ம் ஆண்டு வரை

**2ம் கால கட்டம்**

- கி. பி. 1ம் ஆண்டு முதல் கி. பி. 620ம் ஆண்டு வரை

**3ம் கால கட்டம்**

- கி. பி. 620ம் ஆண்டு முதல் 1924ம் ஆண்டு வரை.

### முதலாம் கால கட்டம்

யூஸுப் (அலை) எகிப்தில் பதவி வகித்த போது பலஸ்தீனை விட்டு எகிப்திற்குச் சென்ற யஃகூப் (அலை) அவர்களின் புதல்வர்களான பனூ இஸ்ரவேலர்கள், அல்லாஹ்வின் கட்டளைப்படி பலஸ்தீனத்தில் குடியமர்ந்தார்கள். இஸ்ரவேலர்களின் நடத்தைகள் காலப்போக்கில் அல்லாஹ்வை கோபமூட்டுபவையாக அமையவே சினாய் பாலை நிலத்தில் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

கி.மு 1000 ஆம் ஆண்டில் தாலூத் மன்னனின் தலைமையில் போராடிய பனூ இஸ்ரவேலர்கள் பலஸ்தீனை வெற்றிக் கொள்கின்றனர். தாலூத் மன்னனைத் தொடர்ந்து பலஸ்தீனை ஆட்சி செய்த நபிமார்களான தாவூத் (அலை), ஸுலைமான் (அலை) ஆகியோரது காலங்கள் பலஸ்தீன வரலாற்றின் பொற்காலமாகும். இக்காலத்தில் ஸுலைமான் (அலை) அவர்கள் பைதுல் முகத்தஸை அதன் அத்திவாரத்தின் மேல் அழகுறக் கட்டியெழுப்பினார்கள்.

கி. மு. 740 முதல் கி. மு. 586 வரையான காலப்பபகுதியினுள் பலஸ்தீனம் அஸுரியர்களினதும் பபிலோனியர்களினதும் படையெடுப்புகளுக்கு உள்ளானதால் பைத்துல் முகத்தஸ் பாரிய அளவில் சேதமாக்கப்பட்டது.

கி. மு. 539 இல் பபிலோனியர்களை வெற்றிக் கொண்ட இரண்டாம் கௌரிய மன்னன் காலத்தில் இஸ்ரவேலர்கள் பைதுல் முகத்தஸை புனர்நிர்மாணம் செய்து விசாலமாக்கினர்.

கி.மு 443 முதல் கி. மு. 332 வரையான காலத்தில் கிரேக்கர்,ரோமர், பாரசீகர் என்போர் மாறி மாறி பலஸ்தீனை கைப்பற்ற முயற்சித்தமையினால் பைதுல் முகத்தஸ் மீண்டும் இடிபாடுகளுக்குள்ளாகியது.

கி. மு. 43 இல் ரோமர்களின் பிரதிநிதியாக பலஸ்தீனில் நியமிக்கப்பட்ட ஏரோது மன்னன், யூத மதத்தை ஏற்று பைதுல் முகத்தஸை மேலும் விரிவு படுத்தி நுட்பமான அழகிய கட்டடக்கலைகளைப் பயன்படுத்தி மீளக்கட்டியெழுப்பினான். இம்மன்னனே யஹ்யா (அலை), ஸகரிய்யா (அலை) ஆகியோரை கொலை செய்தவனுமாகும்.

இம்முதலாம் காலகட்டத்தை, தவ்ராத்தை பின்பற்றிய பனூ இஸ்ரவேலர்களின் காலமென்றும் கூற முடியும். இக்காலத்தில் மூஸா (அலை) கொண்டுவந்த தௌராத்தின் சட்டதிட்டங்களை போதனை செய்வதற்காகவும், அவர்களை சீர்திருத்துவதற்காகவும் அனுப்பப்பட்ட நபிமார்களுள் ஹாறூன் (அலை) யூஷ.ஃ. பின் நூன் (அலை), ஸம்வேல் (அலை), தாவூத் (அலை), ஸுலைமான் (அலை), ஆர்மியா (அலை) ஸகரிய்யா (அலை), யஹ்யா (அலை) ஆகியோரே பைதுல் முகத்தஸ் வரலாற்றுடன் அதிகமாக தொடர்புபடுத்தப்படுகின்றனர்.

### இரண்டாம் கால கட்டம்

ஏகத்துவத்தை பாதுகாத்து அல்லாஹ்வின் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் பைதுல் முகத்தஸை நிர்வகிப்பதற்கும் பனூ இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ் வழங்கிய சந்தர்ப்பங்களை அவர்கள் துஷ்பிரயோகம் செய்து கொண்டிருந்தனர். வேதம் வழங்கப்பட்டவர்கள் என்ற வகையில் மக்களை சீர் திருத்த வேண்டிய அவர்கள் சீர்கெடுத்துக் கொண்டிருந்தனர். பைதுல் முகத்தஸை வியாபாரத்திற் காகவும், சூது விளையாடுவதற்காகவும் பயன்படுத்தினர். இந்நிலையில் தௌராத்தை உண்மைப்படுத்தி அதில் பல மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரத்தையும் இன்ஜீல் வேதத்தையும் பெற்றவர்களாக ஈஸா (அலை) றஸூலாக அனுப்பப்படுகின்றார்.

பைதுல் முகத்தஸை தூய்மைப்படுத்தி அதை வணக்கஸ்தலமாக மாற்றுவதற்கு அவரெடுத்த தீவிர நடவடிக்கைகள் காரணமாக யூதர்கள் அவரை கொலை செய்ய முயற்சித்த போது மிகப் பெரும் அடையாளம் ஒன்றிற்காக அல்லாஹ் அவரை வானத்திற்கு உயர்த்தினான்.

அவரது மறைவைத் தொடர்ந்து அவரது சீடர்கள் தீவிரமாக இன்ஜீல் வேதத்தை பரப்பலாயினர். இதனால், கோபமுற்ற யூதர்கள் அவர்களுக்கு வஞ்சனை செய்தனர். உரோமர்களுக்கெதிராகவும் பலஸ்தீனத்தினுள் கிளர்ச்சிகள் செய்தனர். முதலாவது கிளர்ச்சியை அடக்குவதற்காக கி. பி. 70ல் வந்த உரோமத் தளபதி

டைடஸ் பலஸ்தீனத்தினுள் நுழைந்து மேற்கொண்ட நாசகார வேலைகளினால் பைதுல் முகத்தஸ் முற்றாக சேதமாக்கப்பட்டது.

இரண்டாவது கிளர்ச்சியை அடக்குவதற்காக கி.பி 132ல் பலஸ்தீனத்தினுள் நுழைந்த ரோம மன்னன் பைதுல் முகத்தஸ்ஸை முற்றாக அழித்து அதன் மேல் ரோமர்களின் கடவுளான "ஜூபிட்டர்" இற்காக தேவாலயம் ஒன்றை எழுப்பி அதற்கு 'ஈலியா' எனப் பெயரிட்டான்.

கி. பி. 324ல் ரோமப் பேரரசன் கிறிஸ்தவ சமயத்தை தழுவியதைத் தொடர்ந்து பலஸ்தீனில் கிறிஸ்தவர்களின் பொற்காலம் ஆரம்பமாகின்றது. ரோம மன்னனின் தாய் பலஸ்தீனத்திற்கு வந்து, ஈஸா (அலை) சிலுவையில் ஏற்றப்பட்டதாக நம்பப்படும் இடத்தில் பெரும் தேவாலயம் ஒன்றை அமைத்தார். அந்த தேவாலயம் 'கனிசதுல் கியாமா' எனப்படுகின்றது.

காலப் போக்கில் கிறிஸ்தவர்களும் நெறி பிறழ்கின்றனர். அவர்கள் மத்தியில் மூடநம்பிக்கைகளும் சிலை வணக்கமும் பரவுகின்றன. யூதர்கள் மீது கொண்ட வெறுப்பினால் பைதுல் முகத்தஸ் இருந்த இடத்தைக் குப்பை கூழங்களை எறியப் பயன்படுத்தினர். இக்கால கட்டத்தில் ஈஸா (அலை) முன்னறிவுப்புச் செய்த இஸ்மாயீல் (அலை) அவர்களின் பரம்பரையில் வந்த இறுதி நபி மக்காவில் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஏகத்துவப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

**மூன்றாம் கால கட்டம்.**

கி.பி 620ல் முஹம்மத் (ஸல்) அவர்கள் விண்ணுலக யாத்திரையின் போது பைத்துல் முகத்தஸிற்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து, பைதுல் முகத்தஸின் மூன்றாம் கால கட்டம் ஆரம்பமாகின்றது. இந்நிகழ்வு பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

"ஓர் இரவில், தனது அடியானை மஸ்ஜிதுல் ஹராமில் இருந்து சூழவும் அருள் புரியப்பட்ட மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு, தனது அத்தாட்சிகளைக் காண்பிப்பதற்காக அழைத்து வந்தவன் மிகவும் தூய்மையானவான்." (17 : 1)

மிஃராஜைத் தொடர்ந்து பைதுல் முகத்தஸ் முஸ்லிம்களின் முதல் கிப்லாவாக மாறுகின்றது.

உமர் (ரழி) அவர்கள் கலீபாவாக இருந்த போது கி.பி 636ல் நிகழ்ந்த யர்மூக் யுத்தத்தில் ரோமர்கள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பலஸ்தீனம் முஸ்லிம்கள் வசமாகியது. குத்ஸ் நகரை முஸ்லிம்கள் முற்றுகையிட்டிருந்த போது கிறிஸ்தவர்கள் சமாதானத்திற்கு இணங்கிய போதும், நகரின் திறவுகோலை நேரடியாக கலீபாவிடமே ஒப்படைப்பதாக நிபந்தனை விதித்தனர். தளபதி அபூ உபைதா (ரழி) இதை கலீபாவிற்கு எத்திவைத்தார்.

குத்ஸை வந்தடைந்த கலீபா உமர் (ரழி) அவர்கள் பைதுல் முகத்தஸின் இடத்தை தனது கைகளாலேயே சுத்தப்படுத்தி அவ்விடத்தில் தனது மேலங்கியை விரித்து இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். இஸ்ராவின் போது அவ்விடத்தில் நபியவர்கள் தொழுத பின் முதலாவதாகத் தொழுத முஸ்லிம், உமர் (ரழி) அவர்களாவார். அதன் பின் அவரது பணிப்புரையில் ஏறத்தாழ 3000 பேர் நின்று தொழும் விதத்தில் பைதுல் முகத்தஸ் பலகையினால் கட்டப்பட்டது.

கி.பி 685ல் அப்துல் மலிக் பின் மர்வான் பைதுல் முகத்தஸை பூரணமாக கட்டியதுடன் குப்பதுஸ் ஸஹ்றா எனும் அழகிய கும்மட்டத்தையும் (கும்மட்டம் - dome) எழுப்பினார்.

கி.பி 747ல் பைதுல் முகத்தஸ் பூகம்பத்தினால் சேதமடைந்த பின் 750ல் அப்பாஸிய கலீபா மன்ஸூர் அதை முழுமையாக புனர்நிர்மாணம் செய்தார். இருப்பினும், அடிக்கடி நிகழ்ந்த பூகம்பங்களினால் பைதுல் முகத்தஸ் மீண்டும் பாரிய அளவில் சேதமடையவே கலீபா மஹ்தி அதை விசாலமாகவும் முழுமையாகவும் கட்டி முடித்தார்.

கி. பி. 996ல் மீண்டும் பைதுல் முகத்தஸ் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டது. குப்பதுஸ் ஸஹ்றாவின் சில பகுதிகளும் உடைந்து விழுந்தன. அப்போது பாதிமிய மன்னன் ‘ஹாக்கிம் பிஅம்ரில்லாஹ்’ வின் மகன் லாஹிர் அதை புனர்நிர்மாணம் செய்து அழகுபடுத்தினார்.

கி. பி. 10ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் அரசியல், சமய ரீதியாக பல்வேறு சிற்றரசுகளாகப் பிளவுபட்டு ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருந்த சூழ்நிலையிலேயே சிலுவை யுத்தங்கள் ஆரம்பமாகின்றன.

கி.பி 1095ல் பாப்பரசர் 2ம் ஏர்பன் (urban 2 ) கிறிஸ்தவர் மத்தியில் புனிதப் போருக்காக பெரும் படையொன்றை தயார் செய்தார். முஸ்லிம்களிடமிருந்து பலஸ்தீன் உள்ளடங்கிய புனிதப் பூமியை மீட்பதே இவர்களது பிரதான நோக்கமாக இருந்தது. இதில் கலந்து கொண்ட வீரர்கள் சிலுவையை அணிந்து போரிட முடிவு செய்து கொண்டமையினால் இவர்கள் தொடுத்த யுத்தம் சிலுவை யுத்தம் எனப்படுகின்றது. கி.பி 1096ல் ஆரம்பித்து 1270 வரை 8 சிலுவை யுத்தங்கள் நிகழ்ந்தன.

கி. பி 1099ல் குத்ஸை வெற்றிக் கொண்ட சிலுவை வீரர்கள் பைதுல் முகத்தஸை பல பகுதிகளாக பிரித்து தேவாலயமாகவும், குதிரை வீரர்களின் ஓய்வறையாகவும், களஞ்சியசாலையாகவும், குதிரைத் தொழுவமாகவும் பயன்படுத்தினர்.

கி. பி 1187ல் ஸுல்தான் ஸலாஹுத்தீன் தலைமையில் முஸ்லிம்கள் ஹித்தீன் யுத்தத்தில் சிலுவை வீரர்களை வெற்றி கொண்டதன் மூலம் பைதுல் முகத்தஸ் மீண்டும் முஸ்லிம்கள் வசமாகியது. முஸ்லிம்கள் உடனடியாக அதை சுத்திகரித்து அங்கிருந்த சிலுவைகளை அகற்றி குப்பாவையும் புனர் நிர்மாணம் செய்தனர். ஸுல்தான் நூருத்தீன் ஸன்கி வபாத்தாகு முன் பைதுல் முகத்தஸுக்கென தயார்படுத்தி வைத்திருந்த மிம்பர் மேடை பள்ளியினுள் வைக்கப்பட்டது. அன்று வெள்ளிக்கிழமை ஸுல்தான் ஸலாஹுத்தீனின் வேண்டுதலின் பிரகாரம் இமாம் முஹ்யித்தீன் பின் ஸகிய்யுத்தீன் அம்மேடையில் ஏறி முதல் பிரசங்கம் நிகழ்த்தினார்.

சிலுவை வீரர்கள் ஜெரூஸலத்தை இழந்த பின்னரும் மீண்டும், மீண்டும் பல சிலுவை யுத்தங்களைத் தொடுத்த போது அவற்றை முஸ்லிம்கள் முறியடித்தனர்.

கி. பி. 1300ல் மலர்ந்த உஸ்மானிய கிலாபத்தில் பைதுல் முகத்தஸும் நன்கு பராமரிக்கப்பட்டது. இருப்பினும் 18ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கிலாபத் பலவீனமுறவே யூத சாம்ராஜ்யத்தை உருவாக்க வேண்டும் என்ற கனவுடன் பலஸ்தீனை விலை கொடுத்து வாங்க முயற்சித்தனர். அப்போது இருந்த உஸ்மானிய கலீபா ஸுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் யூதர்களின் முயற்சிக்கெதிராக மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளினால் அவர்கள் கிலாபத்திற்கெதிராக சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தனர்.

1924ல் உஸ்மானிய கிலாபத் வீழ்த்தப்பட்டதுடன் முஸ்லிம்களின் பல பிரதேசங்கள் ஐரோப்பியர் வசமாகின. இதனால் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் பலஸ்தீனத்திலும் அதைச் சூழ உள்ள பகுதிகளிலும் வந்து குடியேறினர்.

2 ஆம் உலக மகா யுத்தத்தில் பிரித்தானிய கூட்டுப் படைகளுக்குக் கிடைத்த வெற்றியின் பின் பிரித்தானியாவும், அமெரிக்காவும் இணைந்து 1948.05.15 ஆம் திகதி குத்ஸை (ஜெரூஸலம்) தலை நகராகக் கொண்ட இஸ்ரவேல் என்ற புதிய நாட்டை யூதர்களின் தனி நாடாக பிரகடனப்படுத்தின.

இஸ்ரவேல் அரசாங்கம் பைதுல் முகத்தஸை உடைத்து அவ்விடத்தில் தமது மரபு ரீதியான நம்பிக்கையின் படி ‘ஸுலைமான் ஆலயம்’ கட்டுவதற்காக பலமாக முயற்சித்து வருகின்றது. அதன் முதற் கட்டமாக பைதுல் முகத்தஸை தீக்கிரையாக்கினர். எனினும் அவர்களது முயற்சி வெற்றியளிக்கவில்லை. எனவே இன்னொரு முயற்சியாக பைதுல் முகத்தஸை நிர்மூலமாக்கும் நோக்கில் அதன் கீழால் சுரங்கப் பாதையொன்றை அமைத்து வருகின்றனர் முஸ்லிம்களின் கடும் எதிர்ப்பினால் அம்முயற்சி அவ்வப்போது தடைப்பட்டு வருகின்றது.

பைதுல் முகத்தஸ் ஏகத்துவத்தை நிலைநிறுத்துவதற்காகவே கட்டப்பட்து. மூஸா (அலை), ஈஸா (அலை), முஹம்மத் நபி (ஸல்) உட்பட அனைத்து நபிமார்களும் ஒரே ஏகத்துவத்தையே போதனை செய்தார்கள். எனவே யார் எல்லா நபிமார்களுக்கும் மதிப்பளித்து இன, மொழி, வேற்றுமைகளை மறந்து ஏகத்துவத்தை நிலைநிறுத்த முயற்சிக்கின்றனரோ அவர்களுக்கே பைதுல் முகத்தஸ் சொந்தமாகும்.

'பைதுல் முகத்தஸ்' வரலாற்றில் நிகழ்ந்த மிகப் பெரும் மர்மம் ஈஸா (அலை) அவர்களின் மறைவாகும். அவரது மீள் வருகையைப் பற்றி பலமான நம்பிக்கை யூதர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் ஆகியோரிடம் இருந்து வருகின்றது. இந்நம்பிக்கையே பைதுல் முகத்தஸின் எதிர் காலத்தை தீர்மானிக்கும் முக்கிய நிகழ்வாக இருக்கின்றது.

அபூ ஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார் : "நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உயிர் எவன் கையில் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக உங்கள் மத்தியில் மர்யமின் மகன் நேர்மை மிகு ஆட்சியாளராக வர இருக்கின்றார். அவர் சிலுவையை உடைப்பார். பன்றிகளைக் கொலை செய்வார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவார். அப்போது செல்வம் பெருகும். ஆனால் அதை எவரும் எதிர்பார்க்கமாட்டார்கள். அக்காலத்தில் ஒரு ஸஜதா; உலகம், உலகிலுள்ள அனைத்தை விடவும் சிறந்ததாகும்."

# 07. இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம்

இந்தியத் துணைக் கண்டத்துக்கு தெற்கே இந்து சமுத்திரத்தின் கிழக்கு-மேற்கு வர்த்தகப் பாதையின் நடுவாக இலங்கை அமைந்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே இலங்கை சர்வதேச உலகில் அறியப்பட்டிருந்தமைக்கு இதுவே பிரதான காரணியாக அமைந்தது. அவ்வாறே இலங்கையின் இயற்கைச் சூழலும், பௌதீக நிலக்கட்டமைப்பும், இயற்கையாக அமைந்த துறைமுகங்களும் இலாபம் தரும் வணிகப் பொருட்களும் பிறநாட்டவர்களை இலங்கையை நோக்கி ஈர்க்கும் அம்சங்களாக அமைந்தன.

பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தை ஆட்சிபுரிந்த காலப்பிரிவில், அராபியர்கள் வணிகர்கள் என்ற வகையில் இலங்கையில் அறிமுகமாயிருந்தனர். பண்டுகாபய மன்னன் தலைநகரான அநுராதபுரியில், பல்வேறு வணிகர்களுக்குமாக சில குறிப்பிட்ட பகுதிகளை ஒதுக்கியிருந்தான். அநுராதபுரத்தின் மேற்குவாயில் பகுதி யவன வணிகர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. யவனர் என்ற பதம் மிக ஆரம்ப காலத்தில் கிரேக்கர்களைக் குறித்தாலும், இது பிற்காலத்தில் அராபியரையும் குறித்ததாக மகாவம்சத்தை மொழிபெயர்த்த கலாநிதி ஆனந்த குருகே கருத்துத் தெரிவிக்கின்றார். மகாவம்சம் குறிப்பிடும் பண்டுகாபய மன்னரின் காலப்பிரிவில் காணப்பட்ட யோனர்கள் (Yonas) அரபு வணிகர்களே என மகாவம்சத்தை மொழிபெயர்த்த Willeym Geiger கருதுகின்றார்.

இவ்வாறு இலங்கையில் கி. பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து அறபு வணிகர்கள். இந்திய கரையோர நகர்களுடனான வர்த்தகத்தில் பெரும்பங்குவகித்தனர். இஸ்லாம் அறபு தீபகற்பத்தில் அறிமுகமான கி. பி. 610 ஆம் ஆண்டுகளில் இந்தியத் துணைக் கண்ட கடற்கரையோரங்களில் வலிமை மிக்க வணிகர்களாக அறேபியர் நிலைபெற்றிருந்தனர். அறபு தீபகற்பத்தில் மிகப்பெரும் சக்தியாக இஸ்லாம் வளர்ச்சியடைந்த போது கீழைத்தேய நாடுகளில் வாழ்ந்த அறபு வணிகர்களும் இஸ்லாத்தை தமது நெறியாக ஏற்றுக்கொண்டனர்.

இலங்கையில் இஸ்லாம் எப்போது அறிமுகமானது என்பது குறித்து தெளிவான சான்றுகள் காணப்படவில்லை. எனினும், இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான காலப்பிரிவு பற்றி பின்வரும் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. நபி (ஸல்) அவர்களது காலப் பிரிவில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமானது.
2. கலீபா உமர் (றழி) அவர்களது காலப்பிரிவில் அறிமுகமானது.
3. உமையாக்கள் காலப் பிரிவில் இடம்பெற்ற ஹாஷிமியர் புலம்பெயர்வுகள் மூலம் அறிமுகமானது.

நபி (ஸல்) அவர்களின் தூதுவராக சீனாவுக்குச் சென்ற வஹப் இப்னு அபீ ஹப்ஸா (றழி) இலங்கைக்கும் வந்ததாகவும் இலங்கை அரசனுக்கு இஸ்லாத்தின் அழைப்பை விடுத்ததாகவும் அறிஞர் சித்திலெவ்வை “அல்கியா அல்பாக்கரி” எனும் நூலை ஆதாரம் காட்டி முஸ்லிம் நேசனில் குறிப்பிடுகிறார். இவ்வழைப்புக்கு கௌரவமளித்த இலங்கை மன்னன் இஸ்லாத்தை அறிமுகப்படுத்துவதற்கும், விரும்பியோர் அதனை ஏற்கவும், பள்ளி (மஸ்ஜித்) ஒன்றை நிர்மாணிக்கவும் அனுமதித்ததாக அக்குறிப்பு தெரிவிக்கின்றது. நபித்தோழர் ஏற்கனவே இங்கு குடியேறி வாழ்ந்த அறபியருக்கு இஸ்லாத்தைப் போதித்து அறிமுகப்படுத்திய பின் கி. பி. 632ல் / ஹி. 10 ஆம் ஆண்டு அறேபியாவுக்குத் திரும்பிச் சென்றார் என அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த தகவல் ஊர்ஜிதப் படுத்தப்பட வேண்டியதாகும்.

நபி (ஸல்) அவர்களது காலப்பிரிவில் இஸ்லாத்தின் அழைப்பு உலகின் பல நாடுகளுக்கும் விடுக்கப்பட்டது. உரோம, பாரசீக ஆட்சியாளர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் எழுதிய கடிதங்கள் இதற்கு ஆதாரமாக அமைகின்றன. அவ்வாறே கீழைத்தேய நாடுகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன என்ற கருத்தை சில வரலாற்றாசிரியர்கள் முன்வைத்துள்ளனர். இவ்வகையில் கி. பி. 628 ஆம் ஆண்டு சீனாவுக்கு நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை வஹப் இப்னு அபீ ஹப்ஸா (றழி) அவர்கள் எடுத்துச் சென்றார்கள் என சேர் தோமஸ் ஆர்னல்ட் தனது The Preaching of Islam எனும் நூலின் முதற் பதிப்பில் குறிப்பிடுவதாக கலாநிதி ஹமீதுல்லா தனது Foreign Relations of the Prophet Mohamad எனும் நூலில் குறிப்பிடுகிறார். மார்சல் புரூம்ஹால் என்பவர் “சீனாவில் இஸ்லாம்” எனும் தனது நூலில் சீனாவில் இஸ்லாத்தின் பரவல் பற்றி எழுதும் போது அங்கு வழக்கில் உள்ள மரபு வழிக்கதை ஒன்றைக் குறிப்பிடுகிறார். கி. பி. 628 இல் அல்லது 629 இல் வஹாப் இப்னு அபீ ஹம்சா என்பவர் கடல் வழியாகக் கன்டன் துறைமுகத்தை அடைந்து தலைநகர் செயின் பூவில் வைத்து இஸ்லாமியப் பிரசாரம் செய்யவும் கன்டனில் மஸ்ஜித் ஒன்றைக்கட்டவும் அனுமதி பெற்றபின் கி. பி. 632 இல் மதினாவுக்கு மீண்டார். இச்செய்தி சித்திலெப்பை தரும் தகவல் பற்றி சாதகமாக சிந்திக்க உதவுகிறது எனலாம்.

கி. பி. 7 ஆம் நூற்றாண்டுகளில் அநுராதபுர ஆட்சியாளர்களின் முக்கிய துறைமுக நகரமாக மாந்தை விளங்கியது. இத்துறைமுக நகரம் கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையிலான வணிகத்தில் ஒரு மத்திய நிலையமாக விளங்கியது. இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளும் கண்டெடுக்கப்பட்ட அறபு கல்வெட்டுகளும் அறபுக் குடியிருப்புகள் காணப்பட்டமைக்கான சான்றுகளாக அமைவதாக கலாநிதி ஷுக்ரி குறிப்பிடுகிறார். “மாந்தையிலும், அதனைச் சூழ உள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின்போது கண்டெடுக்கப் பட்ட கி. பி. 8 ஆம் - 11 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையிலான மத்திய கிழக்கு நாடுகளைச் சார்ந்த மட்பாண்டங்களும் சீனாவைச் சார்ந்த மட்பாண்டங்களும்

இவ்வணிகத்தில் அறேபியா, சீனா (ஆகிய நாடுகள்) வகித்த பங்கை விளக்குகின்றன.” எனவே இக்காலப் பகுதியில் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியிருக்கலாம் எனக் கொள்ளலாம். கலீபா உமர் (ரழி) அவர்களின் காலப்பகுதியில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமானது என்ற கருத்தை கி. பி. 10ம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்னு ஷஹ்ரயார் தாம் எழுதிய ‘அஜாஇபுல் ஹின்த்’ எனும் நூலில் தருகிறார். இலங்கை மக்கள் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி கேள்வியுற்றனர். அது பற்றிய சரியான தகவல்களை அறிந்துவர இலங்கை மன்னன் (அக்ரபோதி III) ஒரு தூதுவரை அனுப்பினார் என்ற தகவலை கலாநிதி சிறிமா கிரிபமுன Muslims of Sri Lanka Avenues to Antiquity எனும் நூலில் சுட்டிக் காட்டுகிறார். மன்னனால் அனுப்பப்பட்ட அத்தூதர் அங்கு சென்றடைந்த போது நபி (ஸல்) அவர்களும், கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களும், காலஞ்சென்று கலீபா உமர் (ரழி) அவரக்ள் (கி. பி. 634 - 644) ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவரிடமிருந்து இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொண்டு இலங்கைக்கு மீண்டார். அவர் வரும் வழியில் இன்றைய பாகிஸ்தானில் உள்ள மக்ரான் கரையில் காலமானார். அவருடன் வந்த பணியாள் இலங்கையை அடைந்து இஸ்லாம் பற்றிய செய்திகளை வழங்கினார்.

கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய கிலாபத்தில் ஆட்சியாளர்களாக இருந்த உமையா கலீபா அப்துல் மலிக் பின் மர்வான், வலீத் இப்னு அப்துல் மலிக் ஆகியோரது ஆட்சிக் காலத்தில் ஈராக்கின் கவர்னராக இருந்த ஹஜ்ஜாஜ் பின் யூசுபின் கொடுமைக்கு அஞ்சி உமையாக்களின் அரசியல் எதிரிகளாக இருந்த ஹாஷிம் கிளையினர் தென்னிந்திய இலங்கைக் கரையோர நகரங்களில் குடியேறினர். வரலாற்றாசிரியர் James Tannant தனது "Ceylon" எனும் நூலில் இவ்வாறு புலம் பெயர்ந்து வந்த பனூ ஹாஷிம் கிளையினர் இலங்கையில் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், கொழும்பு, காலி, பேருவளை ஆகிய இடங்களில் குடியமர்ந்ததாகக் குறிப்பிடுகிறார்.

இதே காலப்பிரிவில் நடைபெற்ற இன்னொரு நிகழ்வையும் வரலாற்றாசிரியர் அல் பலாதரி தமது "புதுஹுல் புல்தான்" எனும் நூலில் தருகிறார். 8ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையை ஆண்ட மன்னான மாணவம்மன் (கி. பி. 684-719) இலங்கையில் காலஞ்சென்ற அறேபிய வர்த்தகர்கள் சிலரின் விதவைகளையும், பெண் மக்களையும் அறேபியாவுக்கு அனுப்பி வைத்தான். இவர்கள் பிரயாணம் செய்த கப்பலை இந்தியாவின் தேபல் (தற்போதைய கராச்சி) எனும் இடத்தில் கடற் கொள்ளைக்காரர்கள் தாக்கி கைப்பற்றிக் கொண்டனர். பெண்கள் அனைரும் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்களில் பனூ யர்பூ குழுவைச் சேர்ந்த ஒரு பெண் "யா ஹஜ்ஜாஜ்" என சப்தமிட்டாள். இவ்விடயத்தை ஈராக்கின் ஆட்சியாளராக இருந்த ஹஜ்ஜாஜ் பின் யூசுப் கேள்வியுற்றதும் சிறைப்பிடிக்கப்பட்ட பெண்களை விடுவிக்குமாறு சிந்தின் அப்போதைய ஆட்சியாளரான ராஜா தாஹிருக்கு செய்தி அனுப்பினார். இதற்கு எத்தகைய பதிலும் கிடைக்காததால் முஹம்மத் பின் காஸிமின் தலைமையில் பெரும் படையொன்று அனுப்பப்பட்டு கி. பி. 711 இல் சிந்து வெற்றி கொள்ளப்பட்டது.

இது ஹி. 1 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு சமூகமாக வாழ்ந்தார்கள் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இலங்கை மன்னர் இந்த அநாதைப் பெண்களை அவர்களின் தாய் நாட்டிற்கு அனுப்பியமையை உமைய மாகாண அதிபரான ஹஜ்ஜாஜுடன் நல்லுறவை வளர்க்க எடுத்த முயற்சியாகவும் கருத முடியும்.

இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான காலப் பிரிவு பற்றிய மேற்குறித்த தகவல்கள் இஸ்லாம் அறபுத் தீபகத்தில் அறிமுகமான அதே காலப்பிரிவில் இலங்கைக்கும் அறிமுகமானது என்பதில் ஒன்றுபடுகின்றன.

## இலங்கையில் முஸ்லிம்களின் பரவல்

கி. பி. 9 ஆம் 10 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் முஸ்லிம் குடியிருப்புகள் காணப்பட்டன. அநுராதபுர ராஜதானியின் முக்கிய துறைமுகமாக மாந்தையிலும் அதை அண்டிய பிரதேசங்களான திருக்கேதீஸ்வரம், எல்லுப்பிட்டிய, புளியந்தீவு ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட அறபு சிலாசனங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன என்று கலாநிதி எம். ஏ. எம். ஷுக்ரி தனது இலங்கை முஸ்லிம்கள் எனும் நூலில் (பக். 08) சுட்டிக்காட்டுகிறார்.

கி. பி. 9 ஆம், 10 ஆம் நூற்றாண்டுகளில் இக்குடியிருப்புகள் படிப்படியாக இலங்கையின் உள்ளக நகரங்களை நோக்கி நகர்ந்த அமைப்பினைக் காணலாம். இஸ்லாமிய உலகைப் பொறுத்த வரையில் இது அப்பாஸியரின் பொற்காலமாக அமைந்தது. இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் அப்பாஸிய கலீபாக்களுடன் தொடர்புள்ளவர்களாக விளங்கினர். இலங்கை முஸ்லிம்களின் சமய அறிவை மேம்படுத்த அப்பாஸிய கலீபா, காலித் இப்னு பகாயா என்ற மார்க்க அறிஞரை அனுப்பி வைத்தார். இது இலங்கையில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தவும், போதிக்கவும் எடுக்கப்பட்ட நிறுவன ரீதியான முதல் முயற்சியாக அமைந்தது. இலங்கை வந்த அவர் இங்கு தங்கி இஸ்லாமிய வாழ்க்கை முறையையும் ஷரீஆவையும் போதித்து வந்தார். இங்கேயே வாழ்ந்து கி. பி. 950 இல் (ஹிஜ்ரி 317) காலஞ்சென்ற இவரது கல்லறை நடுகல் இன்றும் கணப்படுவது இவ்வரலாற்று உண்மையை நிறுவுவதற்கான சான்றாக அமைகின்றது.

கி. பி. 10, 12ம் நூற்றாண்டுகளில் இலங்கையின் உள்ளக நகரங்களில் பல முஸ்லிம் குடியிருப்புக்கள் காணப்பட்டமையை இலங்கையின் உள்ளக நகரங்களான கம்பொள, கலகெதர, சப்ரகமுவ பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட உமைய, அப்பாசிய கால நாணயங்கள் உணர்த்துகின்றன. அவ்வாறே, இலங்கையின் அரசியல் வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படுகின்ற பொலனறுவைக் காலப் பகுதியில் முஸ்லிம்களின் பரவல் கணிசமாக இருந்திருக்க வேண்டுமென்பதற்கான சான்றுகளை நாம் காணமுடிகின்றது.



13-CM 14795

பொலனறுவைக் கால மன்னர்களுள் சிறப்பிடம் பெறும் மகா பராக்கிரபாகு (1156-1186) வின் காலப்பிரிவில் தேசிய வர்த்தகத்தில் முக்கியத்துவம் மிக்கவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். இதுவே, ஏற்றுமதி வர்த்தகத்தை மேம்படுத்த மன்னன் உருவாக்கியிருந்த "அந்தரங்கதுர" என்ற மேல் சபையில் நான்கு முஸ்லிம்கள் இடம்பெற்றிருந்தமைக்கு காரணமாக இருந்திருக்கலாம். அறபுப் புவியியலாளரான அல் இத்ரீஸி தரும் இத்தகவலை இலங்கையின் தொல்பொருளியல் துறைப் பேராசிரியராக இருந்த எஸ். பரனவிதாரன History of Ceylon எனும் நூலில் Civilization of Polonnaruwa Period எனும் பகுதியில் குறிப்பிடும் இக்கருத்தை கலாநிதி வஸன்தரா மோகன தனது Muslims in Sri Lanka எனும் நூலில் பக்கம் எட்டில் குறிப்பிட்டுள்ளார். இத்தகவல் பொலனறுவை ராஜதானியில் செல்வாக்குள்ள வர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர் என்பதற்கும் அவர்கள் நாட்டின் பல பாகங்களிலும் குடியமர்ந்துள்ளனர் என்பதற்கும் சான்றாக அமைகின்றது. பொலனறுவையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி.1232ல் தம்பதெனிய இலங்கையின் தலை நகராகியது. இக்காலப் பகுதியில் தம்பதெனிய அரசுக்கு வலுவூட்டும் வளம்மிக்க சமூகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்தது. கி.பி.1270ல் தம்பதெனிய அரசின் மன்னனாக முடிசூடிய 4ம் விஜயபாகு அவரது இராணுவத் தளபதியாக இருந்த "மித்த" என்பவனால் கொலை செய்யப்பட்ட போது அந்த இராணுவத்தின் இன்னொரு பிரிவுக்கு தலைமை தாங்கிய "தாகூர்" எனும் முஸ்லிம் இராணுவ வீரர் "மித்த" வைக் கொன்று அரசைப் பாதுகாத்ததோடு 1272இல் யாப்பஹுவையை தலைநகராகக் கொண்டு புவனேகுபாகு ஆட்சியமைப்பதற்கும் காரணமாக இருந்தார் என ஆய்வாளர் என். ஜே. கருணாதிலக தனது வயம்பலங்காவெ ராஜதானி எனும் நூலில் குறிப்பிடுகிறார். இது இலங்கையின் உள்ளக நகரங்களில் முஸ்லிம்கள் வலுவான சமூகமாக பரவி வாழ்ந்தனர் என்பதைக் காட்டுகின்றது.

யாப்பகுவை அரசியலில் முஸ்லிம்கள் பெற்றிருந்த உயர் இடமே 1283இல் எகிப்துக்குச் சென்ற வர்த்தக தூதுக்குழுவின் தலைமைப் பதவி அபூ உஸ்மான் என்ற முஸ்லிம் பிரதானிக்கு கிடைப்பதற்கு காரணமாகியது.

தம்பதெனிய, யாப்பகுவை அரசியல் காலப்பிரிவில் நடைபெற்ற மேற்குறித்த நிகழ்வுகள் முஸ்லிம்களின் உள்நாட்டுப் பரவலுக்கான சான்றுகளாக அமைகின்றன. இக்கருத்துகள் இக்காலப் பிரிவில் உள்நாட்டில் காணப்பட்ட முஸ்லிம்கள் அரசர்களோடு சமதரத்தில் உறவாடக்கூடிய பிரதானிகளின் அந்தஸ்தைப் பெற்றிருந்தமையைக் காட்டுகின்றன.

13 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியலில் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்துமளவுக்கு வலிமை மிக்க சமூகமாக வளர்ச்சி பெற்றிருந்தனர். 13ம் நூற்றாண்டின் இறுதிக் கூறில் குருநாகலை இலங்கையின் தலைநகராகியது. 2ம் புவனேகபாகு குருநாகலையைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 1287-1293

வரை ஆட்சி செய்தான். இம்மன்னன் குருநாகலை அஸ்வத்தும பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல பிரபுவாக விளங்கிய அதினாவிதின வீர விக்கிரமசிங்க என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட முஸ்லிம் பிரமுகரின் மகளாகிய மெதகெடிய குமாரி என்ற யுவதியைத் திருமணம் செய்தான். இருவருக்கும் பிறந்த முஸ்லிம் மகனே "வஸ்த்துஹிமி" என்ற பெயரில் இலங்கையின் வரலாற்றில் குறிக்கப்படுகிறார். இத்தகவலை ஆய்வாளர் என். ஜே. கருணாதிலக தனது "வயம்ப லங்காவே ராஜதானி" என்ற நூலில் தருகிறார்.

2ம் புவனேகபாகுவின் பின் அவரே குருநாகலையில் இலங்கையின் மன்னனாக முடிசூட்டப்பட்டார். எனினும் சூழ்ச்சியாளர்கள் சதி செய்து இவரைக் கொலை செய்தனர். அரசனின் சிங்கள மனைவிக்குப் பிறந்த மகனை 4ஆம் பராக்கிரமாகு என்ற பெயரில் மன்னராக முடிசூட்டினர்.

குருநாகலை ராஜதானியாக மாற்றப்பட்டமைக்கான காரணிகள் பல கூறப்பட்டாலும் கூட 2ம் புவனேகபாகுவின் அரசியல் வாழ்வை உற்று நோக்கும் போது அங்கு குடியேறி வாழ்ந்த பொருளாதார பலம் மிக்க சமூகமாக இருந்த முஸ்லிம்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் தனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையும், உறுதியும் அதற்கான ஒரு காரணியாக இருந்திருக்கலாம் எனக் கருத முடிகின்றது.

கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் இலங்கையின் உள்ளகப் பகுதிகளில் பெருமளவில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான சான்றுகள் பல காணப்படுகின்றன. இவ்வகையில் கி.பி.1344ல் இலங்கையைத் தரிசித்த இப்னு பதூதா விட்டுச் சென்றுள்ள குறிப்புக்கள் முக்கியம் பெறுகின்றன. அவர் புத்தளத்திலிருந்து சிலாபம், குருநாகல், கம்பொள வழியாக ஆதம் மலையைத் தரிசித்து இரத்தினபுரி, தெவுந்தர, காலி, கொழும்பு வழியாக புத்தளம் நோக்கித் திரும்பிச் சென்றுள்ளார். இப்பயணப் பாதையில் தான் சந்தித்த பல முஸ்லிம் பெரியார்களைப் பற்றியும் அவர்களைச் சூழ இருந்த பள்ளிவாயில்கள், குடியிருப்புகள் பற்றியும் குறிப்பிடுகிறார். இந்தவகையில் பார்க்கும் போது இலங்கையின் கரையோர நகரங்களில் போலவே உள்ளக நகரங்களிலும் முஸ்லிம்கள் இக்காலப் பிரிவில் வாழ்ந்துள்ளனர் எனலாம்.

கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் அரசியலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாக போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டமையைக் குறிப்பிடலாம். கி. பி. 1505 ஆம் ஆண்டு சீனாவிலிருந்து பாரசீகக் குடாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓர் அறபுக் கப்பல் கூட்டத்தை தாக்கி கைப்பற்றுவதற்காக கோவாவிலிருந்து புறப்பட்ட டொன் லோரன்ஸோ டீ அல்மெய்டா கடும் புயலில் சிக்குண்டு திசைமாறி இலங்கையின் காலிக்

கரையை வந்தடைந்தான். இவனது இவ்வருகை இலங்கையின் வரலாற்றுப் போக்கையே மாற்றியமைத்துவிட்டது. போர்த்துக்கேயர் இலங்கையை அடைந்த நேரத்தில் இலங்கையின் கரையோர நகரங்களில் வர்த்தக வலிமை பெற்ற சமூகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்தது. பொதுவாக முஸ்லிம்களை தமது வர்த்தகப் போட்டியாளராகக் கண்ட போர்த்துக்கேயர்கள் அவர்களைத் தமது எதிரிகளாகவே கருதினர். முஸ்லிம் ஸ்பெய்னில் முஸ்லிம்களுக்கு எதிராக மிகக் கடுமையான போக்கைக் கடைப்பிடித்ததைப் போலவே போர்த்துக்கேயர்கள் இலங்கையிலும் முஸ்லிம்களுக்கு எதிரான போக்கையே தமது எல்லா நடவடிக்கைகளிலும் கடைப்பிடித்தனர். கோட்டை இராச்சியத்தில் உருவான அரசியல் பிரச்சினைகளும், அது துண்டாடப்பட்டமையும் போர்த்துக்கேயர் இலங்கையில் நிரந்தரமாகக் காலூன்றுவதற்கு காரணமாகியது.

ஆரம்பத்தில் முஸ்லிம்கள் விடயத்தில் ஓரளவு நெகிழ்வுத் தன்மையோடு நடந்துகொண்ட போர்த்துக்கேயர்கள் 1597ம் ஆண்டில் கோட்டை அரசின் கடைசி மன்னனான டொன்ஜுவான் தர்மபால வாரிசின்றி இறக்க அவன் எழுதி வைத்திருந்த சாசனத்தின்படி போர்த்துக்கேய மன்னனே கோட்டை அரசுக்கும் அதிபதியானவுடன் கடும் போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கினான். இதன் விளைவாக கி.பி. 1575ஆம் ஆண்டு முதல் கரையோர நகரங்களில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாண்டில், வெலிகம பிரதேசத்தில் செல்வாக்குடன் வாழ்ந்த முஸ்லிம்களின் செல்வங்களைக் கொள்ளையடித்ததோடு பலரை கொலையும் செய்தனர். கி.பி.1626ம் ஆண்டில் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த எல்லாப் பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு கண்டி மன்னன் செனரத் (கி.பி. 1604-1635) கண்டியின் உட்புறங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் புகலிடமளித்து குடியமர்த்தினான். மட்டக்களப்பில் மட்டும் நாலாயிரம் பேர் குடியமர்த்தப்பட்டனர். கி.பி.1642ல் மாத்தறையில் 200-300 வரையிலான முஸ்லிம் ஆண்கள் போர்த்துக்கேயரால் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களது பெண்களையும், பிள்ளைகளையும் கைது செய்து கொழும்புக்கு கொண்டு சென்றனர். இதுவும் முஸ்லிம்கள் புலம்பெயரத் தூண்டியது.

எனவே கி. பி. 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை முஸ்லிம்கள் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் குடியேறியிருந்தனர் என்ற முடிவுக்கு வரலாம். பாணகமுவ, கண்டி, கம்பளை போன்ற உள்ளக நகரங்களில் கணிசமான அளவு முஸ்லிம்கள் குடியேறி இருந்தனர்.

கி. பி. 1656 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை போர்த்துக்கே யரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றிக் கொண்டனர். இவர்களின் ஆட்சியிலும் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. முஸ்லிம்களின் வர்த்தக முயற்சியில்

ஒல்லாந்தர் தலையிட்டனர். குறித்த சில தொழில்களை மட்டுமே முஸ்லிம்கள் செய்ய வேண்டுமென்றும் ஏற்றிறக்குமதி வர்த்தகத்தில் ஒல்லாந்தர்களுடன் சேர்ந்தே செயற்பட வேண்டுமென்றும் சட்டமியற்றினர்.

ஒல்லாந்தர் சுதேச முஸ்லிம்களுடன் முரண்பாடு கொண்டிருந்த போதிலும் தமது சுய தேவைகளுக்காக இந்தோனேசிய முஸ்லிம்களை இலங்கைக்கு அழைத்து வந்தனர். அவ்வாறே அங்கு ஒல்லாந்தருக்கு எதிராக கிளர்ச்சி செய்த இளவரசர்கள், பிரதானிகள், மார்க்க அறிஞர்கள் முதலானோர் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டனர். இதனால் இலங்கை முஸ்லிம்களுக்கிடையே மலாய் சமூகம் தோற்றம் பெற்றது. இது முதல் அறேபிய, பாரசீக, இந்திய சுதேச முஸ்லிம்களை உள்ளடக்கியிருந்த இலங்கை முஸ்லிம் சமூகத்தில் மலாய் சமூகமும் ஓர் அங்கமாகியது. ஒல்லாந்தர்கள் சுதேச முஸ்லிம்களுக்கு இழைத்த கொடுமைகளைப் போன்று இவர்களுக்கு கொடுமைகள் எதுவும் செய்யவில்லை.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல், சமூக கலாசார வாழ்வில் 18ம், 19ம் நூற்றாண்டு வரையான காலப் பிரிவு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தர்களாலும் இன்னல்களுக்குள்ளான முஸ்லிம்கள் கண்டி மன்னர்களின் ஆதரவைப் பெற்று கண்டி அரசியலிலும் முக்கியத்துவம் மிக்கவர்களாகினர். மலையக ராஜதானியின் பல்வேறு பகுதிகளிலும் குடியதமர்ந்த முஸ்லிம்கள் பொறுப்புவாய்ந்த அரச பதவிகளையும் வகித்தனர்.

கண்டி அரசியலில் உள்நாட்டு நிர்வாகம் மிகத் திட்டமிட்ட அடிப்படையில் வகுக்கப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்டு அரசனின் நிர்வாகம் கிராமிய மக்கள் வரைக்கும் சென்றமை இக்காலப் பிரிவின் சிறப்பியல்பாகும். ஒழுங்கான சமூக, பொருளியல், தொழிநுட்ப முறையொன்று சமகால திணைக்கள முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த திணைக்களங்கள் ஒவ்வொன்றும் குறித்த சில நிர்வாகப் பணிகளுக்கு பொறுப்பாக இருந்தது.

இத்திணைக்களங்கள் சிலவற்றின் பொறுப்பாளர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். கீர்த்தி சிறி ராஜசிங்கனின் (1747-1781) காலப்பிரிவில் மீன்பிடித்தலுக்கும் தவளம் வியாபார முறைக்குமான திணைக்களமாக இருந்த "மடிகே பத்த" திணைக்களத்தின் தலைமைப் பதவியான "மடிகே பத்த நிலமே" பதவியை ஷேக் ஆலிம் எனும் முஸ்லிம் வகித்துள்ளார். இவரது மறைவுக்குப் பிறகு இவரது பேரப்பிள்ளையான ஷேக் அப்துல் காதர் என்பவரும் ஏழுகோறளையில் இப்பதவியை மௌலா முஹாந்திரம் என்பவரும் வகித்துள்ளனர். இவை தவிர மிகக் குறைவான அளவினராக சிங்கள மக்களுக்கு மத்தியில் வாழ்ந்து கிராமத்தின் தலைமைப் பொறுப்புக்குரிய "லேகம்", "முஹாந்திரம்" போன்ற பதவிகளையும் முஸ்லிம்கள் வகித்துள்ளனர் என கலாநிதி லோனா தேவராஜா தனது நூலில் குறிப்பிடுகிறார்.

நாம் இதுவரை நோக்கிய கருத்துக்களைத் தொகுத்து நோக்கும் போது அநுராததபுர ராஜதானியின் தோற்றம் முதல் கண்டி அரசின் வீழ்ச்சி வரையான மிக நீண்ட இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆரம்பகால முதலேயே அறிமுகமாகி கடைசி வரைக்கும் நிலைத்து நின்ற வரலாறு முஸ்லிம்களுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறோம். பெரும்பான்மை சமூகத்தோடு ஒரு சிறுபான்மை சமூகம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தனது தனித்துவத்தைப் பேணிக் கொண்டே இணைந்து சுமுகமாக வாழ்ந்த வரலாறு இலங்கை முஸ்லிம்களின் சிறப்புக்கு சான்றாகின்றது.

## முஸ்லிம்களின் சமூக, பண்பாட்டுப் பங்களிப்புகள்

ஒரு சமூகத்தின் சமூக, பண்பாட்டுப் பங்களிப்புகள் பற்றிய ஆய்வுகள் அனைத்தும் அதன் நம்பிக்கைகள், விசுவாசக் கோட்பாடுகள், பழக்க வழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பனவற்றின் பின் புலத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். இலங்கை முஸ்லிம்களின் சமூக, பண்பாட்டு பங்களிப்புகள் பற்றிய ஆராய்வுக்கும் இக்கருத்து ஏற்புடையதாகவே அமைகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் தோற்றமும், பரவலும் வணிக முயற்சிகளினடியாக நடைபெற்ற போதிலும், இலங்கை மக்களோடு நல்லுறவைப் பேணி நம்பிக்கையை பெற்றுக் கொண்டவர்களாக வாழ்ந்தனர். எனினும், முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ இயல்புகளையோ அல்லது பண்பாட்டுக் கூறுகளையோ இழந்து இரண்டறக் கலந்த நிலையை வரலாற்றில் எங்கும் காணமுடியவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் முஸ்லிம்கள் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்த போதிலும், எக்குழுவினருக்கு மத்தியில் இருந்த போதிலும் தமது வாழ்க்கைக்கும், நம்பிக்கைகளுக்கும் அடிப்படையாக அமைகின்ற அல்குர்ஆன், சுன்னா என்பவற்றின் போதனைகளுக்கு அமைய நடந்துகொள்வதாகும். இலங்கை முஸ்லிம்களும், ஐரோப்பியரின் வருகை வரை குறிப்பாக ஆங்கிலேயரின் அரசியல் யாப்பு, சீர்திருத்தங்கள் முன்வைக்கப்படும் வரை சிங்கள சமூகத்தோடு தமது தனித்துவத்தைப் பேணிக்கொண்டே இணைந்து வாழ்ந்தனர். ஐரோப்பியர் தமது அரசியல் நோக்கங்களுக்காக இரு சமூகங்களுக்குமிடையே முரண்பாடுகளைத் தோற்று வித்ததாக கலாநிதி லோனா தேவராஜா குறிப்பிடுகிறார்.

இலங்கையின் பிரதான சமூகக் குழுவாக வாழ்ந்த முஸ்லிம்களின் சமூக பண்பாட்டுப் பங்களிப்புகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் நோக்கலாம்.

1. பொருளியல் பங்களிப்புகள்
2. அரசியல் பங்களிப்புகள்
3. தேசிய பாதுகாப்புப் பங்களிப்புகள்
4. மருத்துவத் துறைப் பங்களிப்புகள்
5. கலாசார பண்பாட்டுப் பங்களிப்புகள்

## பொருளியல் பங்களிப்புகள்

இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் வரலாற்றில் முஸ்லிம்கள் வகித்த பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அநுராதபுர ஆட்சிகாலம் முதல் இலங்கையின் சர்வதேச வணிகத்தை இலங்கை முஸ்லிம்களே பிரதிநிதித்துவப்படுத்தினர். இலங்கையை ஊடறுத்துச் சென்ற சர்வதேச வணிகப் பாதைகளில் அவர்களுக்கிருந்த பரிச்சயம், உள்நாட்டு வணிகத்தை சர்வதேச மயப்படுத்துவதற்கு உதவியது. அநுராதபுர ஆட்சிக்காலப் பிரிவின் முக்கிய துறைமுகமாக விளங்கிய மாந்தையில் மேற்கொளள்ப்பட்ட அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

அநுராதபுர ஆட்சிக்காலப் பகுதிகளில் நடைபெற்ற படையெடுப்புக்களின் போது பாதிக்கப்பட்ட கால்வாய்கள், குளங்கள் என்பவற்றை புனர்நிர்மாணம் செய்யவும், சிதைந்து போன விவசாய நடவடிக்கைகளை மீளமைக்கவும் பயன்படுத்தப்பட்ட நிதி வெளிநாட்டு வணிகத்தின் மூலமாகவே பெறப்பட்டது. இலங்கையின் நீர்ப்பாசன நாகரிகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் ஆர். ஓ. எல். எச். குணவர்தன தரும் இத்தகவல் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்கள் வகித்த பங்கிற்கு ஆதாரமாகின்றது.

பொலனறுவைக் காலப்பிரிவில், கொழும்பு வளர்ச்சியடைந்த ஒரு துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. கி.பி.10ம் நூற்றாண்டில் கொழும்பில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்துள்ளனர் என்பதைக் கொழும்பு சிலாசனம் உணர்த்துகின்றது. பொலனறுவையின் பொற்காலத்துக்கு உரிமை கோரும் மன்னனான மகா பராக்கிரமபாகு (கி.பி.1156-1186)வின் காலப்பிரிவில் முஸ்லிம்கள் வணிகத்துறையின் அபிவிருத்திக்காக உருவாகியிருந்த "அந்தரங்கதுர" என்ற மேல்சபையில் அங்கம் வகித்தமை வணிகத்துறையில் அவர்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கு சான்றாகின்றது.

இலங்கை மாணிக்கக் கற்களுக்கு பிரபல்யம் பெற்றிருந்தது. இலங்கையில் இரத்தினக் கற்களை சர்வதேச வர்த்தக உலகுக்கு முஸ்லிம்கள்தான் அறிமுகப்படுத்தினர். கி.பி.10ம் நூற்றாண்டில் அல் பெரூனி எழுதிய "கிதாபுல் ஜமாஹிர் பீ ம.்.ரிபதில் ஜவாஹிர்" என்ற நூலில் இலங்கையின் இரத்தினக் கல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இது, அக்காலப் பகுதியில் இலங்கையின் இரத்தினக்கற்கள் பற்றிய அறிமுகம் முஸ்லிம் உலகுக்கு இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றும் காலப்பிரிவுகளிலும் தேசிய வர்த்தகத்தில் முஸ்லிம்களே முன்னணி வகித்தனர். கரையோரப் பகுதிகளில் இருந்து முஸ்லிம்கள் துரத்தப்படுவதற்கும் அவர்கள் பெற்றிருந்த வர்த்தக வலிமையே பிரதான காரணமாகியது. 19ம் நூற்றாண்டில் பெருந்தோட்டத்துறை அறிமுகமாகிய போது குறிப்பிடத்தக்களவு முஸ்லிம்களும் பெருந்தோட்டத்துறை உரிமையாளர்களாகக் காணப்பட்டனர். இது தவிர ஏற்கனவே இருந்த இரத்தினக்கல் வியாபாரத்திலும், நகை வியாபாரம், புடைவை வியாபாரம் என்பவற்றிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டனர். எனினும், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் முஸ்லிம்களின் வணிக வலிமை படிப்படியாகக் குறையத் தொடங்கி யதைக் காணலாம். இன்று இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகர்களின் வரிசையில் முன்னணி வகிக்கும் முஸ்லிம் தொழிலதிபர்கள் மிகக் கணிசமாகக் குறைந்துள்ளனர்.

**அரசியல் பங்களிப்புகள்**

இலங்கையின் அரசியலிலும் முஸ்லிம்கள் அநுராதபுர ஆட்சிக்காலம் முதல் கண்டி அரசின் வீழ்ச்சி வரைக்கும் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். சுதந்திர இலங்கையின் பாராளுமன்றங்களிலும், அமைச்சரவைகளிலும் முஸ்லிம்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர். இது முஸ்லிம்கள் இலங்கை வரலாற்றின் ஆரம்பகாலம் முதல் இன்று வரை தேசிய அரசியலில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் இனமாக வாழ்ந்தமைக்கான சான்றாகும்.

அநுராதபுர, பொலனறுவைக் காலங்களில் துறைமுக நகரங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் நாட்டின் வணிகத்துறை பகுதிக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளனர்.

பொலனறுவையின் முதல் மன்னனான விஜயபாகு (கி.பி.1055-1070) மன்னனின் முடிசூட்டு விழாவுக்கு ஒத்துழைப்பு வழங்கி, மன்னனின் வலது கரமாக செயற்பட்ட முஸ்லிம் பிரமுகர் ஒருவர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. பெரிய தம்பி மரிக்கார் என அழைக்கப்பட்ட இவர் அரசனது விசுவாசத்துக்குரியவராகவும், வணிகத்துறை தொடர்பான இணைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். அவ்வாறே, பராக்கிரமபாகு மன்னனின் காலப்பிரிவிலும் தாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு அரசனின் நிதித்துறை ஆலோசகர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர்.

இலங்கையின் தலைநகரங்கள் இடம் விட்டு இடம் நோக்கி நகர்ந்து சென்ற வேளைகளில் குறித்த தலைநகரங்களில் முஸ்லிம்களும் குடியேறி வாழ்ந்துள்ளனர்.

இக்காலப் பிரிவுகளில் அரசனின் ஆலோசகர்களாக, வெளிநாட்டுத் தூதுவர்களாகப் பணிபுரிந்த முஸ்லிம் பிரதானிகளை இலங்கையின் வரலாற்றில் காணலாம். கி. பி. 1282 இல் புவனேகபாகுவின் தூதுவராக எகிப்துக்குச் சென்ற அபூ உஸ்மான், குருனாகலை அரசில் மன்னனாக முடிசூடிய வஸ்துஹிமி போன்றவர்கள் இதற்கான வரலாற்று உதாரணங்களாவர்.

கண்டிய அரசியலில் முஸ்லிம்கள் வகித்த பங்கு மகத்தானதாகும். அரச திணைக்களங்களின் தலைவர்களாக, அரச தூதுவர்களாக, உயர் நீதிமன்ற நீதிபதிகளாக முஸ்லிம்கள் இருந்துள்ளமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. கி. பி. 1762ல் இலங்கை வந்த ஆங்கிலேயத் தூதுவரான ஜோன் பைபஸை வரவேற்று அழைத்துவர மன்னனால் அனுப்பப்பட்ட உதுமான் லெப்பை, மடிகேபத்த நிலமே பதவியை வகித்த ஷேக் ஆலிம், ஷேக் அப்துல் காதர், கர்நாடக நவாப் முஹம்மத் அலியிடம் தூதுவராகச் சென்ற உதுமான் லெப்பை ஆகியோர் கண்டி அரசியலில் முஸ்லிம்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கான ஆதாரங்களாக அமைகின்றனர்.

அவ்வாறே கண்டியின் இறுதி மன்னனான சிறி விக்ரம ராஜசிங்கனின் (கி.பி.1798-1815) காலப் பிரிவில் பிரதம அமைச்சராக இருந்த பிலிமதாலாவை திசாவையுடனும், எஹலேபொல திசாவையுடனும் இணைந்து பிரதம நீதிபதியாக ராஜகருண கோபால் முதியான்ஸே ராலகாமி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்த முஸ்லிம் பிரமுகர் கடமையாற்றினார் என கலாநிதி லோனா தேவராஜா குறிப்பிடுகிறார். சுதந்திர இலங்கையிலும் முஸ்லிம்கள் அமைச்சர்களாகவும் வெளிநாட்டு தூதுவர்களாகவும் அரச துறைகளில் முக்கிய பங்காற்றியுள்ளனர். பாராளுமன்ற சபாநாயகர் பதவியைக்கூட முஸ்லிம்கள் வகித்துள்ளனர். இவை அனைத்தும் முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்புக்கான சான்றுகளாகும்.

### தேசிய பாதுகாப்பு பங்களிப்புகள்

இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கும், பந்தோபஸ்துக்கும் முஸ்லிம்கள் பங்காற்றியுள்ளனர். தம்பதெனிய அரசியலில் கி.பி.1270ல் இராணுவத் தளபதியாகப் பணிபுரிந்த முஸ்லிம் தளபதி தாஹோர் அவ்வாண்டு உருவாகிய கிளர்ச்சியை அடக்கி 1272 இல் 1 ஆம் புவனேகபாகு யாப்பகுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சியமைப்பதற்கு காரணமாக அமைந்தார்.

கோட்டை அரசிலும், கண்டி அரசிலும் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு பங்களிப்பு நல்கிய முஸ்லிம்களின் பெயர்கள் பதியப்பட்டுள்ளன. சீதாவக்கை

இராச்சியத்தின் மன்னனான மாயாதுன்னை (கி.பி.1521-1581)யின் காலப்பிரிவில் போர்த்துக்கேயருக்கு எதிராக மாயாதுன்னையின் இராணுவத்தில் இணைந்து போராடினர். அத்தோடு கள்ளிக் கோட்டை மன்னனாக இருந்த ஸமோரினின் கடற்படை உதவியைப் பெற்றுக்கொடுக்கும் பணியிலும் ஈடுபட்டனர். இம்மன்னனது புதல்வாரன 1ம் இராஜசிங்கன் (கி.பி.1582-1592) காலத்திலும் அரச படையில் இணைந்து போராடினர். போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் Queyroz தரும் தகவல்களின் படி மேற்குறித்த இராணுவ நடவடிக்கைகளில் துப்பாக்கிப் படைப் பிரிவாக முஸ்லிம்களே செயற்பட்டுள்ளனர்.

கண்டி மன்னனான 1 ஆம் விமலதர்மசூரியனின் ஆட்சிக்காலத்தில் கரையோரப் பாதுகாப்புக்கான தளபதியாகவும், பிரதான கட்டளையிடும் அதிகாரியாகவும் ஒரு முஸ்லிம் பணி புரிந்தார். இவர் போர்த்துக்கேயரால் கைது செய்யப்பட்ட போது இவரை விடுவிக்க மன்னன் 5000 வெள்ளி நாணயங்களைக்கூட வழங்கத் தயாரானமை இவர் மீது மன்னனுக்கிருந்த நம்பிக்கைக்கு ஆதாரமாகும். அவ்வாறே, 2 ஆம் இராஜசிங்கனின் காலப்பிரிவில் (கி.பி.1634-1684) நடைபெற்ற வெள்ளவாயப் போரில் "ஒடுபந்திய" என அழைக்கப்பட்ட முஸ்லிம்களின் ஒட்டகப் படை மிக முக்கிய பங்காற்றியது. இப்போரில் தானடைந்த வெற்றியை நினைவு கூறும் வகையில் ஹங்குரன்கெட்ட மகாதேவாலயத்துக்கு வழங்கிய அன்பளிப்புப் புடைவையில் இந்த ஒட்டகப் படையை மன்னன் ஓவியமாக சித்தரித்து வைத்துள்ளான். கண்டியின் இறுதி மன்னன் வரை முஸ்லிம்கள் தேசிய இராணுவத்தில் முக்கிய பங்காற்றியுள்ளனர். கி. பி. 1810 ஆம் ஆண்டு தேசிய இராணுவத்தில் 850 முஸ்லிம் வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

### மருத்துவத்துறைப் பங்களிப்புகள்

இலங்கைக்கு யூனானி மருத்துவ முறையை அறிமுகப்படுத்தி அதனை ஒரு தனிப்பெரும் துறையாக விருத்தி செய்த பெருமை முஸ்லிம்களையே சாரும். இது இலங்கைக்கு எக்காலப் பிரிவில் அறிமுகமானது என்பது பற்றி உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. கி.பி. 10ம் நூற்றாண்டளவில் சின்னாசியாவிலுள்ள கோன்யாவின் ஸுல்தானின் புதல்வரான இளவரசர் ஜமாலுத்தீன் ஒரு மருத்துவராக விளங்கினார் என்றும் பேருவலையில் குடியேறிய இவரும், இவரது புதல்வர்களுமே யூனானி மருத்துவத்தை அறிமுகப்படுத்தியதாகவும் ஒரு வரலாற்றுக் குறிப்பு உள்ளது. கி.பி.7-9ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த மருந்துகளை சேமித்து வைப்பதற்கான ஸாஸானிய இஸ்லாமிய மட்பாண்டங்கள் அநுராதபுரம், மிகிந்தலை

ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளின் போது புராதன மருத்துவமனையொன்றின் இடிபாடுகளுக்கிடையில் கண்டெடுக்கப்பட்டன. இது யூனானி மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

வரலாற்றாசிரியர் கலாநிதி லோனா தேவராஜா தரும் தகவலொன்றின் படி தம்பதெனிய மன்னனான 2ம் பராக்கிரபாகு (கி.பி.1236-1270) தனது 22வது ஆட்சியாண்டில் பேசமுடியாத நிலைக்குள்ளான போது, அரசனின் வேண்டுகோளின் பேரில் டில்லி சுல்தான் வட இந்திய மாநிலமான சிந்து பிரதேசத்தின் "புழி" பகுதியில் இருந்து ஸ்பெயின் வழிவந்த ஒரு மருத்துவரை இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும் அவரே, இலங்கையில் யூனானி மருத்துவத்தை அறிமுகப்படுத்தி வளர்த்ததாகவும் அறியமுடிகின்றது. வைத்தியரத்ன கோபால முதலிகே அன்சார் இப்னு துபைல் உடையார் என்ற பெயரை உடைய இம்மருத்துவரது சந்ததியினரே பிற்கால இலங்கையின் அரச மருத்துவர்களாக பணிபுரிந்ததாக அவர் குறிப்பிடுகிறார்.

கண்டிய அரசில் யூனானி மருத்துவத்துறை சிறப்புற்று விளங்கியது. பல யூனானி மருத்துவர்கள் கண்டிய மன்னர்களுக்கு மிக நெருக்கமானவர்களாக இருந்துள்ளனர். கீர்த்தி சிறி ராஜசிங்கன் (1749-1781) காலப்பிரிவிலும் அதனைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் "பெஹேத்கே முஹாந்திரம் நிலமே" பதவியை வகித்து வந்த பல முஸ்லிம் மருத்துவர்களைக் காணமுடிகின்றது. இவர்கள் கண்டி மாவட்டத்தில் உடுநுவரைத் தொகுதியில் அரசனால் நிலங்கள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். இத்தகைய மருத்துவர்கள் "ராஜபக்ஷ வைத்தியதிலாகே கோபால முதலி" "ராஜகருண வைத்திய திலக கோபால முதலி" எனும் பெயர்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இக்காலப் பிரிவில் கண்டியில் மட்டுமல்லாது இலங்கையின் கரையோர நகரங்களான கொழும்பு, காலி, மாத்தறை முதலிய பிரதேசங்களில் ஒல்லாந்தர்கள் நிறுவியிருந்த வைத்தியசாலைகளிலும் முஸ்லிம் மருத்துவர்கள் பணிபுரிந்தனர். கி. பி. 1791 ஆம் ஆண்டு மீராலெப்பை மேஸ்தியார், சேக் மரிக்கார், சேக் லெப்பே ஆகியோர் இவ்வைத்தியசாலைகளில் பிரதம மருத்துவர்களாக இருந்தனர். இன்று யூனானி மருத்துவம் இலங்கையில் பல்கலைக்கழக அந்தஸ்து பெற்ற ஒரு துறையாகவும் சுதேச மருத்துவத்துறையின் ஒரு கூறாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## கலாசார பண்பாட்டு பங்களிப்புகள்

இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பண்பாட்டு பங்களிப்புகள் சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் பங்களிப்புகளோடு ஒப்பு நோக்கி ஆராயப்பட முடியாத ஒன்றாகவே விளங்குகின்றது. எந்த ஒரு சமூகத்தின் கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களும் அந்த சமூகம் ஆட்சி பீடத்தில் அமர்ந்த நாடுகளிலும், நகரங்களிலுமே வளர்ச்சி பெறும். ஆட்சியாளர்களின் அனுசரணையின்றி இவை வளர்ச்சி பெற முடியாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜித்கள் ஓரளவுக்கு தனித்துவமான கட்டிடக்கலைப் பாரம்பரியமொன்றைக் கொண்டுள்ளது. முஸ்லிம்களின் பொதுவான கட்டிடக்கலை அம்சங்களான கும்மட்டம், அறபு எழுத்தணி மரபுகள் ஆரம்பகால மஸ்ஜித்களில் காணப்படவில்லை. ஏனைய நாடுகளில் காணப்படாத "ஹவ்ள்" உட்பள்ளி, வெளிப்பள்ளி என்பன இங்கு காணப்பட்டன. எனினும் இன்று நிர்மாணிக்கப்படும் பெரும்பாலான மஸ்ஜித்கள் முன்பைவிட அதிகமாக மத்திய கிழக்கு கட்டிடக்கலையின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

இலங்கை முஸ்லிம்கள் ஆரம்ப கால முதலேயே இஸ்லாமிய பண்பாடுகளைப் பேணிக்காக்கும் இயல்புள்ளவர்களாக இருந்தமையால் சுதேசிகளின் வாழ்விலும் அதன் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருந்துள்ளனர்.

ஆங்கிலேயர் காலப்பிரிவில் தமது பண்பாட்டுச் சின்னமாக அமைந்த துருக்கித் தொப்பியை நீதிமன்றத்தில் அணிய அனுமதி தரப்படல் வேண்டுமென சட்டத்தரணி எம். ஸி. அப்துல் காதர் ஆரம்பித்து வைத்த உரிமைப் போராட்டம் ஆங்கிலேயருக்கு எதிரான நிறுவனமயப்படுத்தப்பட்ட அறிவுபூர்வமான போராட்டமாக அமைந்தது. இது சிங்களத் தலைவர்களுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான தூண்டுதலில் ஒன்றாக விளங்கியது.

இவ்வகையில் பார்க்கும் போது, இலங்கையின் வரலாற்றில் அதன் ஆரம்ப கட்டங்களிலேயே அறிமுகமாகும் அறபிகளின் வழித்தோன்றல்களாக அமைந்த முஸ்லிம்கள் இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இரண்டறக்கலந்து வாழ்ந்த ஒரு சமூகமாக அமைகின்றனர். அநுராதபுர அரசு முதல் சுதந்திர இலங்கை வரைக்கும் அதற்குப் பின்னும் தேசத்தைக் கட்டியெழுப்புவதிலும், பாதுகாப்பதிலும், முஸ்லிம்கள் ஆற்றியுள்ள பங்கு குறிப்பிடத்தக்கதாகும். மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமொன்றின் பங்குதாரர்கள் என்ற வகையில் இனி வரும் காலங்களிலும் எம்மால் ஆற்ற முடியுமான எல்லாப் பணிகளூடாகவும் இத்தேசத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயலாற்ற திடசங்கற்பம் பூணுவோம்.

# 08. முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்புகள்

## மருத்துவம்

மருத்துவத் துறையில் முஸ்லிம்கள் அடைந்த முன்னேற்றத்திற்கு குர்ஆனினதும், ஹதீஸினதும் போதனைகளே தூண்டுகோலாய் அமைந்தன. தேனின் மருத்துவக் குணம் பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது. "அதனுடைய வயிற்றில் இருந்து (தேனி) பல நிறங்களுடைய ஒரு பானம் (தேன்) பெறப்படுகிறது. அதில் மனிதர்களுக்கு நோய் நிவாரணி உண்டு. சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு நிச்சயமாக இதில் ஓர் அத்தாட்சி இருக்கின்றது". (16:69)

தேனில் மனித உடலைக் குணப்படுத்தும் மருத்துவக் குணம் அடங்கியுள்ளது. நச்சுக் கிருமிகளைத் தடை செய்யும் சக்தி அதற்குண்டு. தேனின் அடர்த்தித் தன்மையால் உடற் காயத்தில் பக்டீரியா போன்ற நச்சுக் கிருமிகளோ, காளான்களோ வளரமாட்டாது.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்வின் அடியார்களே, நீங்கள் மருந்துகளைக் கொண்டு நோய்களுக்குப் பரிகாரம் தேடிக்கொள்ளுங்கள். மரணத்தைத் தவிர மற்றைய எல்லா நோய்களுக்கும் அல்லாஹ் மருந்துகளைப் படைத்துள்ளான். ஆனால், மனிதர்கள் அவற்றை அறியாமல் இருப்பதுண்டு" என்று கூறினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் பல நோய்களுக்கான நிவாரணங்களை விளக்கி யுள்ளார்கள். அவர்களின் நோய் நிவாரணி பற்றிய ஹதீஸ்களை அறிஞர்கள் "அத்திப்புந் நபவிய்யி (நபிகளாரின் மருத்துவம்)" எனும் தலைப்பில் தொகுத்திருக்கிறார்கள். நபி(ஸல்) அவர்களின் காலப்பிரிவில் 'ஹாரிஸ் பின் கல்தா' என்ற யூத அறிஞர் மருத்துவத்துறையில் புகழ் பெற்று விளங்கினார். நபி(ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் பின்னர் ஸஅத் பின் அபி வக்காஸ் (றழி) அவர்கள் சுகவீனம் அடைந்த போது நபியவர்கள் ஸஅதுக்கு சிகிச்சை செய்யும்படி ஹாரிஸைப் பணித்தார்கள். இவர்களது காலப்பிரிவில் பாரசீக மன்னன் நபியவர்களுக்கு வைத்தியம் செய்வதற்காக பாரசீக வைத்தியர் ஒருவரை அனுப்பி வைத்தான்.

குலபாஉர்ராசிதீன்கள் காலத்தில் மருத்துவத்துறை ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட துறையாக வள்ர்ச்சியடைந்திருக்கவில்லை. இஸ்லாமிய உலகில் முதன்முதலாக வைத்திய சாலைகளை நிறுவிய பெருமை உமைய்ய கலீபா வலீதையே சாரும். இவரால் நிறுவப்பட்ட அங்கவீனர்களுக்கான வைத்தியசாலையில் குருடர், செவிடர் போன்ற நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இவரது முன்மாதிரியைப்

பின்பற்றி ஏனைய உமையா கலீபாக்களும் ஆங்காங்கே வைத்தியசாலைகளை நிறுவிய போதிலும் அவை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் இருக்கவில்லை. அப்பாசியர் ஆட்சியிலேயே ஒழுங்கு படுத்தப்பட்ட மருத்துவ மனைகள் தோன்ற ஆரம்பித்தன. முதன்முதலாக சகல வசதிகளையும் கொண்ட பொது வைத்தியசாலையை நிறுவிய பெருமை கலீபா ஹாரூன் அர்றஷீதையே சாரும். பக்தாதில் நிறுவப்பட்ட இவ்வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் இருந்ததோடு மருத்துவம் பயில விரும்பிய மாணவர்களுக்கு இங்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறான "வார்ட்கள்" அமைக்கப் பட்டிருந்தன. அதே போல் தொற்றுநோய்களுக்கு தனித்தனி "வார்ட்கள்" இருந்தன. ஆண்களுக்கான வார்ட்களில் ஆண் தாதிகளும், பெண்களுக்கான வார்ட்களில் பெண் தாதிகளும் கடமையாற்றினர். வெளி நோயாளர்களுக்கான மருத்துவப் பரிசோதனை, குறித்த தினங்களில், குறித்த இடத்தில் இடம் பெற்றது. மருத்துவ மனையில் தங்குவோருக்கான பிரத்தியேக உடைகள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டன. நோயாளியின் உடைகள், உடமைகளை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நோயாளிகளைப் பார்க்க வருவோருக்கும் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. மருந்துகளை தயாரிக்கவும், நிர்வாக தேவைகளுக்காகவும் சமயலறைக்காகவும் தனித்தனி இடங்களை ஒதுக்கப்பட்டிருந்தன.

வைத்தியசாலைகளில் கடமையாற்றுவோர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்பட்டது. தமது கடமை நேரத்தில் அவர்கள் வைத்தியசாலையில் இருப்பது அவசியமாகியது. பிரபல வைத்தியர்கள் தினந்தோறும் நோயாளிகளைப் பரிசோதித்தனர். நோயாளிகளுக்கான மருந்துகள், உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்பட்டன.

வைத்தியசாலைகளோடு இணைந்ததாக மருத்துவக் கல்லூரிகள் இயங்கின. பத்தாத், டமஸ்கஸ், கெய்ரோ, மக்கா, ஜெரூசலம், அலெப்போ, ஹர்ரான் ஆகிய பகுதிகளில் பல மருத்துவக் கல்லூரிகள் செயற்பட்டன. இதற்காக, வைத்திய சாலைகளில் விரிவுரை மண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்தன. வைத்தியசாலை களினதும் வைத்திய மாணவர்களினதும் நலன்கருதி அங்கு நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. குறிப்பு எடுக்கும் மாணவர்களுக்கு தாளும், பேனாவும் இலவசமாக வழங்கப்பட்டன.

மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு உணவும், தங்குமிட வசதியும் வழங்கப்பட்டன. ஏழை மாணவர்களுக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டது. இக்கல்லூரிகளில் பயின்ற மாணவர்களுக்குப் பரீட்சை நடாத்துவதற்கு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வழக்கமும் இருந்தது.

கலீபா ம.்.மூன் 'பைத்துல் ஹிக்மா' எனும் நிறுவனத்தை நிறுவி 'ஹுனைன் இப்னு இஸ்ஹாக்' என்பவரை அதன் பிரதான மொழி பெயர்ப்பாளராக நியமித்தார். ஈஸா பின் யஹ்யா, தாபித் பின் குர்றா, அலி அத் தபரீ, யுஹன்னா பின் மஸாவேஹ் என்போர் மொழிபெயர்ப்பாளர் குழுவில் அடங்கியிருந்த ஏனையோராகும். இவர்கள் கிரேக்க அறிஞர்களான கெலன், ஹிப்போகிரட்டிஸ், போல் முதலானோரின் மருத்துவ நூல்களை மொழி பெயர்த்தனர். கிரேக்க மருத்துவ நூல்கள் கால ஓட்டத்தில் அழியாது பாதுகாக்கப்பட மொழிபெயர்ப்புப் பணி பெரிதும் உதவியது. கிரேக்க மருத்துவ அறிவியல் நூல்களை மொழிபெயர்த்ததன் மூலம் அவற்றை அழியாது பாதுகாத்த பெருமை முஸ்லிம்களையே சாரும். முஸ்லிம்கள் கிரேக்க மருத்துவ நூல்களை மொழிபெயர்த்தது மட்டுமன்றி, கிரேக்க மருத்துவ மேதைகளின் தவறுகளை விமர்சித்து, அவற்றை சுட்டிக்காட்டியதோடு மருத்துவத் துறையில் பரிசோதனை முறையை அறிமுகப்படுத்தியும் பல கோட்பாடுகளை நிறுவியும் மருத்துவத் துறையின் வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை வழங்கினர். கிரேக்கரின் மருத்துவ முறையான யூனானி மருத்துவத்தைப் பாதுகாத்து இன்றைய உலகிற்கு அளித்த பெருமை அறேபிய முஸ்லிம்களையே சாரும். போர்க் காலங்களில் வைத்திய சிகிச்சை அளிப்பதற்காக முஸ்லிம்களால் இராணுவ வைத்தியசாலைகளும் நிறுவப்பட்டன. படுக்கைகள் இணைக்கப்பட்ட ஒட்டகங்கள் அம்பியுலன்ஸ் வண்டிகளாகப் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறே முஸ்லிம்கள் மருந்துக் கடைகளையும் நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.

மருந்து உற்பத்தித் துறையில் முஸ்லிம்களின் பங்களிப்பு மகத்தானதாகும். இதனை மேற்குலகம் ஏற்றுக்கொண்டுள்ளது எனலாம். கி.பி. 1618ல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்ட மருந்தியல் நூலில் கிரேக்க அறிஞர்களான ஹிப்போகிரட்ஸ், கலன் எனும் இருவரது படங்களுடன் முஸ்லிம் மருத்துவரான அபூ அலி ஸீனா, அபூ ஸகரிய்யா, யுஹன்னா பின் மஸாவிஹ் எனும் இருவரது படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

முஸ்லிம் மருத்துவ அறிஞர்கள் எழுதிய நூல்கள் ஐரோப்பிய மொழிகள் பலவற்றிற்கு மொழி பெயர்க்கப்பட்டமையும், முஸ்லிம் மருத்துவர்கள் கையாண்ட வழி முறைகள் நீண்ட காலம் ஐரோப்பிய மருத்துவர்களால் பின்பற்றப்பட்டமையும் இன்றும் அக்கலையில் அறபு மருத்துவத்தின் செல்வாக்கு இருக்கின்றமையும் மேற்குலக மருத்துவத்தின் மீது முஸ்லிம்களின் செல்வாக்கு யாது என்பதை மதிப்பிட உதவுவன எனலாம்.

மருத்துவத் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முஸ்லிம் மருத்துவ மேதைகளுள் அர்ராஸி, இப்னு ஸீனா, இப்னு நபீஸ், அஸ்ஸஹ்ராவி, ஹுனைன் இப்னு இஸ்ஹாக் ஆகியோர் சிறப்புற்று விளங்கினர்.

**அர்ராஸி**

மேற்குலகத்தால் "ராஸஸ்" என அழைக்கப்பட்ட இவர் இளம் வயதிலேயே இரச வாதத்தில் ALCHEMY (அல் கெமி) ஈடுபாடு காட்டியவராவார். இவர் மருத்துவம் செய்யும் திறமையைப் பெற்ற பிறகு, பக்தாத் நகருக்குச் சென்று அங்கிருந்த பிரதான வைத்திய சாலையில் பிரதம மருத்துவ அதிகாரியாகக் கடமையாற்றினார். பின்னர் அப்பாஸிய கலீபாக்களுள் ஒருவரான முக்தபி பில்லாஹ் (கி.பி.902 - 907) என்பவரின் ஆட்சிக் காலத்தில் இராச்சியம் முழுவதிலும் நிறுவப்பட்டிருந்த வைத்தியசாலைகளின் தலைவராகக் கடமையாற்றினார். இவர் எழுதிய 220க்கும் அதிகமான நூல்களில் 140 நூல்கள் மருத்துவம் சார்ந்த நூல்களாகும். அவற்றுள் அல்ஹாவி, அல் ஜாதரி வல் ஹஸ்பா, கிதாபு திப்பில் மன்சூரி, கிதாபுல் அஸ்ரார் ஆகியவை தவிர ஏனையவை மிகச் சிறியவையாகும்.

அர்ராஸி மகப்பேற்று மருத்துவம், பெண் மருத்துவம், கண் மருத்துவம், சத்திர சிகிச்சை போன்ற துறைகளிலும் திவிர ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார். அறுவைச் சிகிச்சையின் போது தையல் போடுவதற்காக முதன் முதலில் மிருகங்களின் குடல் இழைகளைப் பயன்படுத்தியதும் இவரேயாவார்.

அர்ராஸி கி. பி 925 ஆம் ஆண்டில் கண் பார்வை இழந்த நிலையில் மரணமானார். இவரின் உருவப் படம் பாரிஸ் பல்கலைக்கழத்தின் மருத்துவ பீடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இவரது நினைவாக 1964 ஆம் ஆண்டு ஈரானில் தபால் முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டது.

அர்ராஸியை அடுத்து மத்தியகால மருத்துவத் துறையின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தவர் "அவிசென்னா" என ஐரோப்பியர்களால் அழைக்கப்பட்ட அபூ அல் ஹுஸைன் இப்னு அப்துல்லாஹ் இப்னு ஸீனா (கி. பி. 980 - 1037) ஆவார். இவர் தனது 17வது வயதில் திறமை படைத்த மருத்துவராக விளங்கினார். 21 ஆவது வயதில் நூல்கள் எழுத ஆரம்பித்தார். இவர் எழுதிய 99 நூல்களுள் 17 நூல்கள் மருத்துவம் சார்ந்தவையாகும். இவற்றுள் “கெனன்” என ஐரோப்பியர்களால் அழைக்கப்பட்ட ‘கானூன் பித்திப்பி’ (மருத்துவ விதிகள்) ஐரோப்பியரிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றதுடன் மருத்துவத்துறையின் பைபிளாகவும் மதிக்கப்பட்டது. இந்நூல் 5 பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

இந்நூலில் 760 வகையான மருந்துகள் தொடர்பான விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல் பல ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் மருத்துவ பாடநூலாகவும் பயன்படுத்தப்பட்டது.

அலி இப்னு ஸீனா, கானூன் பித்திப்பி தவிர அர்ஜுஸா பித்திப்பி, அத்வியதுல் காலிபா, அஷ்ஷிபா முதலிய மருத்துவ நூல்களையும் எழுதியுள்ளார். தொற்று நோய் பற்றி உலகிற்கு அறிமுகம் செய்த இவர் சில நோய்களின் பரம்பலுக்கு

மண்ணும், நீரும் காரணமாகின்றன என்றும் நிறுவினார். மருத்துவத் துறைக்கு ஆற்றிய பணிகள் காரணமாகவே ‘நவீன மருத்துவத்தின் தந்தை (father of the modern medicine)’ என அழைக்கப்படுகிறார்.

அப்பாஸிய கலிபாக்களான அல் மஃமூன், அல் முதவக்கில் ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் புகழ் பெற்று விளங்கிய மற்றுமொரு மருத்துவ மேதை “ஹுனைன் இப்னு இஸ்ஹாக்” ஆவார். கலீபா மஃமூனின் காலத்தில் அரசாங்க மொழி பெயர்ப்பாளராகவும் பைத்துல் ஹிக்மாவின் மேற்பார்வையாளராகவும் கடமையாற்றினார். கிரேக்க மருத்துவ நூல்களை சேகரிப்பதற்காக சிரியா, பலஸ்தீன், அலெக்சாந்திரியா போன்ற நாடுகளுக்குப் பிரயாணம் செய்தார். கிரேக்க மருத்துவ மேதையான கெலனால் எழுதப்பட்ட மருத்துவ நூல்கள் யாவும் இவரால் மொழி பெயர்க்கப்பட்டன.

இவர் மொழி பெயர்ப்பு நூல்கள் மட்டுமன்றி சொந்தமாகவும் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் சொந்தமாக எழுதிய நூல்களுள் ‘மருத்துவத்தின் கேள்விகள்’ எனும் நூல் பிரசித்தி வாய்ந்தது. இதில் மருத்துவக் கலை பற்றிய விளக்கங்கள் வினாவிடை முறையில் கூறப்பட்டுள்ளன.

கி.பி 10ம் நூற்றாணடில் வாழ்ந்த முஸ்லிம் மருத்துவ மேதைகளுள் அஸ்ஸஹ்ராவி ஒருவராவார். குர்துபாவுக்கு அருகில் உள்ள ‘ஸஹ்ரா’ எனும் ஊரில் பிறந்த காரணத்தினால் ‘ஸஹ்ராவி’ என அழைக்கப்படுகின்றார். இவரது முழுப்பெயர் அபுல் காஸிம் கலப் பின் அப்பாஸ் அஸ்ஸஹ்ராவி என்பதாகும். குரங்குகளைப் பயன்படுத்தி மனித உடல் உறுப்புக்களைப் பற்றி மிகுந்த ஆய்வுகள் செய்து வெற்றி கண்ட இவர் அறுவைச் சிகிச்சை முறையில் பல நவீன முறைகளையும் கண்டுபிடித்தார். இவரால் எழுதப்பட்ட ‘அத்தஸ்ரீப்’ எனும் 30 பாகங்களைக் கொண்ட நூல் மருத்துவத்துறையில் எழுதப்பட்ட ஓர் ஒப்பற்ற மருத்துவக் கலைக் களஞ்சியமாகும்.

கி.பி 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்னு அந்நபீஸ் மருத்துவக் கலை பற்றி பல நூல்களை எழுதினார். கண்நோய்கள், உணவியல் சம்பந்தமான நூல்களை எழுதிய இவர் ஹிப்போகிரட்டீஸ், ஹுனைன் இப்னு இஸ்ஹாக், இப்னு ஸீனா ஆகியோரின் நூல்களுக்கு விரிவுரைகளும் எழுதியுள்ளார். இவர் எழுதிய விரிவுரை நூல்களுள் கிதாப் அல் முஃஜிஸ், அத்தஷ்ரீஹ் என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

அலி இப்னு அப்பாஸ் அல் மஜூஸி மயிர்த்துளைக் குழாய்களின் அமைப்பு, தொழிற்பாடு, குழந்தை பிரசவமாகும் விதம் என்பன பற்றி ஆராய்ந்து மிகச்சரியாக விளக்கமளித்த முதல் மருத்துவராவார். இவர் எழுதிய "கிதாபுல் மாலிக்கி" எனும் நூலில் வில்லியம் ஹார்வேக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே குருதிச் சுற்றோட்டம் பற்றி விளக்கப்பட்டது.



14-CM 14795

## வானவியல்

வானவியல் என்பது சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அவற்றின் பருமன், நகர்வு முதலான அம்சங்கள் பற்றி பேசும் துறையாகும். வானுலகின் அமைப்பு, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் என்பவற்றின் வடிவமைப்பு, அவற்றின் பருமன், நட்சத்திரங்களின் எண்ணிக்கை, அவற்றின் நகர்வு, அவற்றுக்கிடையிலான தூரம், சூரிய குடும்பம், பால்வெளி வீதி, வானவியல் அட்டவணை முதலான பல அம்சங்கள் வானவியற் கலைப் பரப்பு எல்லையுள் அடங்கும்.

இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அறேபியர் வாழ்வு வானவியலுடன் தொடர்பு கொண்டிருந்தது. அறேபியாவின் மப்பும் மந்தாரமும் இல்லாத தெளிவான வானம், வானவியல் பற்றிய சரியான அவதானங்களைப் பெற அறேபியர்க்குப் பெரிதும் உதவியது. பாலைவனத்தினூடாகச் சென்ற வர்த்தகப் பாதைகளை அடையாளங்காண நட்சத்திரங்களே அவர்களுக்குப் பெரிதும் உதவின. நட்சத்திரங்களுடன் அவர்களுக்கு இருந்த நெருக்கமான உறவின் காரணமாக அவர்களில் சிலர் நட்சத்திரங்களை வணங்கினர். அவர்களின் வாழ்க்கையுடன் நட்சத்திரம் கொண்டிருந்த இத்தகைய தொடர்பு வானவியல் பற்றிய சில தகவல்களை இஸ்லாத்துக்கு முன்பிருந்தே அறிந்து வைத்திருக்க உதவியது.

## வானியல் துறையில் முஸ்லிம்கள் ஈடுபட்டமைக்கான காரணங்கள்

1. சர்வதேச வர்த்தகத்திலும் கடல் பிரயாணத்திலும் புகழ் பெற்று விளங்கிய அறேபியர் காலநிலை பற்றி அறிந்து தமது கடல் பிரயாணத்தை மேற்கொள்வதற்கும் காலத்தைக் கணித்து தமது வர்த்தகத்தைத் திறம்பட மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு வானியல் அறிவு அவசியப்பட்டமை.

2. வானத்தைப் பற்றியும், நட்சத்திரங்கள், கோள்கள், மேகங்கள் பற்றியும் கூறப்பட்ட குர்ஆனின் கருத்துக்களால் அவர்கள் தூண்டப்பட்டமை.

3. பள்ளிவாயில்களை அமைப்பதற்கென க.்.பா இருக்கும் திசையை அறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டமை.

4. ஐங்காலத் தொழுகையை நிறைவேற்ற வேண்டிய நேரங்கள், நோன்பு நோற்பதற்கும் பெருநாள் கொண்டாடுவதற்குமான தலைப்பிறையை அறிய வேண்டியிருந்தமை, ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்ற வேண்டிய காலம் என்பவற்றை அறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டமை.

**வானவியல் துறையின் வளர்ச்சி**

குலபாஉர் ராஷிதூன்கள் காலத்திலும் உமையாக்கள் காலத்திலும் நாட்டின் நிர்வாகம், சமூக வாழ்வு போன்ற துறைகளில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டியேற்பட்டதால் விரல் விட்டு எண்ணக்கூடிய சில முஸ்லிம்களே விஞ்ஞானக் கலைகளில் ஆர்வம் காட்டினர். உமையா ஆட்சியின் இறுதிக் காலப் பகுதியில் அறிவு ஆராய்ச்சித் துறையில் அதிக கவனம் செலுத்தப்பட்டதால் அப்பாஸியர் காலத்தில் நிறுவப்பட்ட பைத்துல் ஹிக்மாவின் துணையுடன் முஸ்லிம்கள் துரிதமாக முன்னேறினர். பிற மொழி நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டதால் பாரசீக, கிரேக்க, இந்திய வானியல் கருத்துக்கள் அவர்களுக்குக் கிடைத்தன. அத்துடன் அப்பாஸிய கலீபாக்களும் வானியல் துறைக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தனர். இதனால், பைத்துல் ஹிக்மாவின் ஓர் அம்சமாக இருந்து அரச ஆதரவுடன் இத்துறை வளர்ச்சி கண்டது. முஸ்லிம்கள் முன்னைய வானிலை ஆராய்ச்சி யாளர்களது கருத்துக்களை நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றில் காணப்பட்ட பிழைகளைச் சுட்டிக்காட்டி திருத்திவிட்டதுடன் புதிய கருத்துக்களையும் வெளியிட்டனர்.

கலீபா மன்சூரின் காலத்தில் இந்திய வானியல் அரேபிய முஸ்லிம்களுக்கு முதன் முறையாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. கி.பி 770இல் ‘மங்கா’ எனும் பெயர் கொண்ட இந்திய வானியல் அறிஞரை ‘யாகூப் அல் பஸாரி’ என்பவர் கலிபா மன்சூருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இந்த அறிஞர் தம்மோடு கொண்டு வந்திருந்த ‘சித்தாந்த’ எனும் சமஸ்கிருத வானியல் நூல் ‘முஹம்மத் இப்னு இப்றாஹிம் அல் பஸாரி’ என்பவரால் அரபியில் மொழி பெயர்க்கப்பட்டது. அந்த மொழி பெயர்ப்பைத் தொடர்ந்து இஸ்லாத்தில் விஞ்ஞான அடிப்படையிலான வானியல் ஆராய்ச்சி ஆரம்பமானது. இம்மொழி பெயர்ப்பு முஸ்லிம்களின் வானவியற் கலையின் வளர்ச்சிக்குப் பெருந் துணையாகியது.

மன்சூருக்கு அடுத்து வந்த அப்பாஸிய கலீபாக்களும் வானியல் துறை வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தினர். வானியல் துறை அறிஞர்களுக்கு சமூக மட்டத்தில் அதிக மதிப்பு இருந்தது. அவர்களுக்கு சம்பளம், உணவு, மற்றும் வசதிகள் அரச செலவில் வழங்கப்பட்டன.

கலீபா ஹாரூன் ரஷீதீன் காலத்தில் ஈரானிய வானியல் அரேபிய முஸ்லிம்களுக்கு முதன் முறையாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. கலீபாவின் நூலகராகக் கடமையாற்றிய ‘அல் பழல் இப்னு நௌபக்த்’ ஈரானிய வானியல் நூல்களை கலீபாவுக்கு அறேபியில் மொழி பெயர்த்துக் கொடுத்தார்.

கலிபா ம.்.மூனின் காலத்தில் ஏராளமான கிரேக்க வானியல் நூல்கள் அரபியில் மொழிபெயர்க்கப்பட்டன. பைத்துல் ஹிக்மாவில் மொழி

பெயர்ப்புகளுக்காகவும் வானிலை அவதானத்துக்காகவும் தனித்தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தனி நபர்கள் சிலரும் மொழி பெயர்ப்பில் ஆர்வம் காட்டினர். தொலமியின் "அல் மஜெஸ்ட்" அரபு மொழியில் பல முறை மொழி பெயர்க்கப்பட்டது. இவற்றுள் ஹஜ்ஜாஜ் இப்னு மாதரினதும், ஹுனைன் இப்னு இஸ்ஹாக்கினதும் மொழி பெயர்ப்புக்கள் பிரபல்யம் வாய்ந்தவை. அத்துடன், கலிபாவும் செல்வம் படைத்த சில தனி நபர்களும் முக்கிய நகர்களில் பல வானியல் அவதான நிலையங்களை நிறுவினர். பக்தாத், டமஸ்கஸ், இஸ்பஹான் முதலிய நகர்களில் இவ்வாறான வானியல் அவதான நிலையங்கள் நிறுவப்பட்டன.

மிகச் சரியாக அவதானிப்பதிலும், மிகச் சரியான முடிவுகளை எடுப்பதிலும் முஸ்லிம் வானவியலாளர்கள் அதிக கவனம் செலுத்தினர். அதனால், தொடர்ந்து நீண்ட அவதானங்களை மேற்கொண்டனர். சில அவதானங்கள் தொடர்ந்து நாற்பது வருடங்கள் வரை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கிரேக்க அறிஞர்களின் அவதானங்களை மறுபரிசீலனை செய்தே ஏற்றனர். இதனால், கிரேக்க அறிஞரான தொலமி உட்பட பலரது அவதானங்கள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன. பைத்துல் ஹிக்மாவின் வானிலை அவதான நிலையத்தில் சூரிய கிரகணத்தின் சரிவு, சூரிய வருடத்தின் மொத்த நாட்கள், சூரியன் பூமத்திய ரேகையைத் தாண்டும் நாள் போன்றன அவதானிக்கப்பட்டன.

கலீபா ம.்.மூன் போன்ற ஆட்சியாளர்களும் பின் வந்தவர்களும் அளித்த ஊக்கம் காரணமாக பல விஞ்ஞானிகள் உருவாகினர். அவர்கள் தாம் திரட்டிய வானவியற் தகவல்களைத் தொகுத்து நூல் வடிவில் தந்துள்ளனர்.

வானியல் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்த அறிஞர்களுள் இப்றாஹீம் அல்பஸாரி, அல் பர்ஹானி, அல்பத்தானி, அபுல் வபா, அல்பிரூனி, உமர் கையாம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இப்றாஹீம் அல் பஸாரி ‘சிந்தாந்த’ என்ற வானியல் நூலை மொழி பெயர்த்ததோடு அந்நூலைத் தழுவி, ‘ஸிந்து ஹிந்து அல்கபீர்’ என்ற நூலை எழுதினார். "அஸ்ட்ரோலோப்" வானோக்கு கருவியை முதன் முதலில் இவரே திருத்தியமைத்தார். முதன் முதலில் கிரேக்கர்களால் கண்டுபிடிக்கப்பட்டு தொலமியினால் திருத்தியமைக்கப்பட்ட இக்கருவியை இவர் பல திருத்தங்களோடு சீர்படுத்தினார். மேற்கு நாட்டவர்கள் 17ஆம் நூற்றாண்டுவரை இக்கருவியை கடற் பிரயாண அவதானங்களுக்காகப் பயன்படுத்தினர். இக்கருவியைப் பயன்படுத்தும் விதம் பற்றி ‘கிதாப் பில் அமல் அல் உஸ்துர்லாப்’ என்ற நூலை எழுதியுள்ளார். ‘ஸிஜ்ல்’ என்ற வானவியல் அட்டவணை ஒன்றையும் அவர் தயாரித்துள்ளார்.

**அல்பர்ஹானி** : கி.பி 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ் பெற்ற வானியல் அறிஞராவார். கலீபா முதவக்கிலின் ஆணையின் பேரில் 'புஸ்தாத்' எனும் இடத்தில் நைலோ மீற்றர் (நைல் நதி பொங்கி எழும் உயரத்தை அறிய உதவும் கருவி) அமைக்கப்பட்ட பொழுது அதனை மேற்பார்வை செய்தார். 'அல் மத்கல் இலா இல்மி ஹயாத்தில் அப்லாக்' (வானியல் விஞ்ஞானத்தின் மூலகங்கள்) எனும் பெயரில் நூல் ஒன்றை எழுதினார்.

**அல் பதானி :** ஐரோப்பியரிடையே "அல் படனியஸ்" எனும் பெயரில் அறிமுகமாயிருந்த முஸ்லிம் உலகம் தோற்றுவித்த மிகப் பெரும் வானியல் அறிஞர்களுள் ஒருவராவார். அல் பதானியும் அல் பர்ஹானியும் "ஐரோப்பியர்களின் ஆசிரியர்கள்" என மதிக்கப்பட்டவர்கள். இவரது பிரசித்தி பெற்ற நூல் "கிதாப் மஉரிபத் மதாலி இல் புரூஜ் பி மா பைன அறப் அல் பலக்" என்பதாகும். இவரது மற்றொரு நூல் "றிஸாலா பி தஹ்கீக் மிக்தாரில் இத்திஸாலா" என்பதாகும். இவர் தனது அவதானங்கள் மூலம் பெற்ற தகவல்களை மையமாக வைத்தே நூல்களை ஆக்கியுள்ளார். 30 வருடங்களுக்கு மேலாக கோள்களையும் நட்சத்திரங்களையும் அவதானித்து அவற்றின் இயக்கங்களை ஆராய்ச்சி செய்து அதனடிப்படையில் புகழ் பெற்ற அல் பதானி அட்டவணைகளை தயாரித்தார். ஒரு வருடம் என்பது 365 நாட்கள், 3 மணித்தியாலங்கள், 46 நிமிடங்கள், 24 வினாடிகள் என்று நிறுவினார். "சிஜ்லுல் ஹபி" என்ற பெயரில் வானியல் நூல் ஒன்றையும் எழுதினார்.

**அபுல் வபா** : அல் பதானிக்குப் பின்னர் கி.பி 10ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்ற வானியலாளராக விளங்கியவராவார். வானியல் துறையில் மட்டுமன்றி கணிதத் துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் தொலமியின் சந்திரன் பற்றிய கொள்கையில் பல குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியதோடு சரியான கருத்துக்களையும் விளக்கினார். "சிஜ்லுஷ் ஷாமில்" எனும் வானியல் அட்டவணைகளைக் கொண்ட நூல் இவரது விடாமுயற்சிக்கும் கூர்மையான அவதானத்திற்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றது.

**அல்பிரூனி** : அபூ றய்ஹான் முஹம்மத் அல்பிரூனி ஒரு சிறந்த வானவியலாளராவார். இவர் இக்கலையில் 'உஸ்தாத்' என்று பாராட்டப்பட்டார். அவர் ஒரு சிறந்த கணிதவியலாளரும் ஆவார். 'கானூன் அல் மஸ்ஊதி பில் ஹயா வன் நுஜூம்' என்ற அவரது வானவியல் நூல் மிகப் பிரசித்தமானது. பல்வேறு துறை சார்ந்த சுமார் 180 நூல்களை அவர் எழுதியுள்ளார்.

**உமர் கையாம்** : பிரபல கணிதவியலாளரும் கவிஞரும் ஒரு சிறந்த வானவியலாளருமாவார். செல்ஜூக்கிய ஆட்சியாளரான ஜலாலுத்தீன் மலிக் ஷாஹ்வும் அவரது பிரதம அமைச்சரான நிழாமுல் முல்க் என்பவரும் 'றை' எனும் நகரில் அமைக்கப்பட்டிருந்த வானிலை அவதான நிலையத்தில் பணி புரியுமாறு அவரை அழைத்தனர். உமர் கையாம் அவ்வவதான நிலையத்தில் பணி புரிந்து பெற்ற அவதானங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு கலண்டரைத் தயார் செய்தார். அக் கலண்டருக்கு தன்னைப் போசித்த ஆட்சியாளரின் (மலிக்ஷாவின்) பெயரைச் சூட்ட விரும்பிய அவர் அதற்கு 'அத்தாரிக் அல் ஜலாலி' எனப் பெயரிட்டார். அக்கலண்டர் இதற்கு முன்னரோ, அல்லது சம காலத்திலோ வழக்கிலிருந்த ஏனைய கலண்டர்களை விட மிகச் சரியானதாக இருந்தது.

சர்வதேச வானவியலாளர் சங்கத்தினர் 1935இல் ஒன்றுகூடி சந்திரனின் வடிவமைப்பை 672 அலகுகளாக வகுத்தனர். அவற்றில் 609 அலகுகளுக்கு இத்துறையின் வளர்ச்சிக்கு உதவிய வானவியலாளர்களின் பெயர்களைச் சூட்டியுள்ளனர். சந்திரனின் முகப்பு 25 அலகுகளாக வகுக்கப்பட்டுள்ளது. அதில் 13 அலகுகளுக்கு முஸ்லிம்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

முஸ்லிம் அறிஞர்கள் வானவியற் துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினை சர்வதேச வானவியலாளர்கள் அங்கீகரித்துள்ளனர் என்பதையே இவை காண்பிக்கின்றன.

## புவியியல் துறை

புவியின் மேற்பரப்பு, உருவம், பௌதிக உறுப்புக்கள், எல்லைகள், காலநிலை, உற்பத்திகள், குடிமக்கள் போன்றவற்றை விரிவாக ஆராயும் ஒரு துறையே புவியியல் ஆகும்.

இஸ்லாமிய தூதை நிறுவுவதற்காக புவியியல் பற்றியும் புவியில் வாழ்ந்து அழிந்து போன பல சமூகங்கள் பற்றியும் அல்குர்ஆன் எடுத்துக்காட்டியும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகள் இடம் பெற்ற தளங்களைச் சுட்டிக்காட்டியும் அவ்விடங்களைத் தேடிப்பார்க்கும் ஆவலை மனிதர்களிடத்தில் தோற்றுவிக்கின்றது.

> "அவர்கள் பூமியில் சுற்றித் திரிந்து இவைகளைப் பார்க்க வில்லையா? அவ்வாறு பார்ப்பார்களாயின் உணர்ந்து கொள்ளக்கூடிய இருதயங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்." (22:46)

இவ்வாறு அல் குர்ஆனில் புவியியலுடன் தொடர்புடைய மலைகள், ஆறுகள், மணல் மேடுகள், மழை மேகங்கள், உஷ்ண, குளிர் சுவாத்தியங்கள், ஆழ் கடல்கள், கனிப் பொருட்கள், தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள், தாவரங்கள், குடிசனப் பரம்பல், விவசாயப் பயிர்ச் செய்கை, அணைக் கட்டுக்கள் முதலான பல அம்சங்கள் பற்றிக் குறிப்பிட்டு அவற்றை ஆராய்ந்து பார்க்குமாறு தூண்டுகின்றது.

முஸ்லிம்கள் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்கு, தூரப் பிரதேசங்களில் இருந்தெல்லாம் மக்காவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இஸ்லாமிய சாம்ராச்சியத்தின் நாலா புறங்களில் இருந்தும் மக்கா நோக்கி வரும் பிரதான பாதைகள் ஊடறுத்துச் செல்லும் பிரதேசங்கள் அங்குள்ள தட்ப வெப்பநிலை, தங்குமிட வசதிகள் என்பன பற்றி பிரயாணிகளும், வர்த்தகர்களும் வழங்கும் தகவல்களை மையமாக வைத்து வழிகாட்டி நூல்கள் தொகுக்கப்பட்டன. ஹஜ்ஜுக்காக மக்காவில் ஒன்று கூடியர்கள் முஸ்லிம் உலகின் அரசியல், பொருளாதார, சமூகவியல் பற்றி கலந்துரையாடவும் தமது பிரயாண அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் அது வாய்ப்பை அளித்தது. இவ்வகையில் ஹஜ்ஜுக் கடமை மக்களின் புவியியல் அறிவைத் தூண்டவும் விருத்தியாக்கவும் வழிகோலியது.

தொழுகையை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு முஸ்லிமும் தான் வாழ்கினற இடங்களில் இருந்து கஃபா இருக்கும் திசையை அறிய வேண்டியிருந்தது. இதற்காக புவியின் நீள அகல கோடுகள் பற்றியும், பூமத்திய ரேகையில் இருந்து எவ்வளவு தூரத்தில் நாம் இருக்கிறோம் என்பது போன்ற தகவல்களை அறிய வேண்டி ஏற்பட்டதால் முஸ்லிம்கள் புவியியல் கலையில் ஆர்வம் காட்டினர்.

உலகில் பரந்துபட்ட இஸ்லாமிய பேரரசு ஒன்றைப் பரிபாலிப்பதற்கு நாடுகளைப் பற்றிய புவியியல் அறிவு அரேபிய முஸ்லிம்களுக்குத் தேவைப்பட்டது. முஸ்லிம் ஆட்சியாளர்கள் பிற ஆட்சியாளர்கள் மீது படையெடுத்துச் செல்வதற்கு முன் திரட்டிய புவியியல் விபரங்கள் ஆராச்சியாளர்களை அத்துறையில் மேலும் மேலும் ஆய்வுகள் செய்யத் தூண்டின.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அரேபியர்கள் வர்த்தகத்தில் ஈடுபாடு உடையவர்களாக இருந்தனர். ஆழ் கடலும் அகன்ற நிலமும் அவர்களின் பிரயாணப் பாதைகளாக விளங்கின. இத்தகைய வர்த்தக ஈடுபாடு முஸ்லிம் நாடுகளைப் பற்றிய புவியியல் விபரங்களை அறிந்து கொள்ள அவர்களுக்குப் பெரிதும் உதவியது.

பாலைவனப் பிரதேசங்களில் வாழ்ந்த அரேபிய முஸ்லிம்கள் விண்மீன்களைப் பற்றியும் காலநிலை மாறுபாடுகள் பற்றியும் ஆராய்வதற்கு இயற்கைச் சூழல் வசதியாக அமைந்தது. பெரும்பாலும் மந்தை மேய்ப்பவர்களாக தொழில் செய்த அவர்கள் தம் மந்தைகளுக்குத் தேவையான புதிய புல்வெளிகளைத் தேடி அறிந்தமையால் பல்வேறுபட்ட நிலப்பகுதிகளை ஆராய வசதியேற்பட்டது.

**புவியியல் வளர்ச்சிக்கு முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பு**

முஸ்லிம்கள் புவியியல் நூல்களை மொழி பெயர்ப்பதுடன் நில்லாது உலகின் நாலா பக்கங்களுக்கும் பிரயாணங்களை மேற்கொண்டு ஆய்வு செய்தனர். இதனால் கிரேக்க, பாரசீக, இந்திய கருத்துக்களில் காணப்பட்ட பிழைகளைச் சுட்டிக்காட்டி நியாயமானதும் உண்மையானதுமான கருத்துக்களை ஆதாரபூர்வமாக முன் வைத்தனர். அவர்களது கருத்துக்கள் நூலுருவில் பதிக்கப்பட்டமையால் அவை நவீன சமூகத்திற்கும் வழிகாட்டிகளாக அமைந்தன.

அப்பாஸிய கலீபாக்கள் ஏனைய அறிவியல் துறைகளின் வளர்ச்சிக்கு உதவியது போல புவியியல் துறையின் வளர்ச்சிக்கும் உதவியதால் இக்காலப்பகுதியில் புவியியல் துறை மேலும் முன்னேற்றமடைந்தது. புவியியல் துறையின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய முஸ்லிம் அறிஞர்களுள் ஹிஷாம் அல் கல்பி, அல்குவாரிஸ்மி, சுலைமான் தாஜிர், இப்னு கர்தா தப்பாஷ், அல்ய.்கூபி, இப்னு ஷஹ்ரயார், அல் மஸ்ஊதி, அல் முகத்தஸி, அல் பிரூனி, அல் இத்ரீஸி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

மத்திய காலத்தில் புவியியல் வளர்ச்சிக்குப் பங்காற்றிய முஸ்லிம் அறிஞர்களுள் மிகப் பழைமை வாய்ந்தவர் ஹிஷாம் அல்கல்பி ஆவார். இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அரேபியாவின் வரலாற்றைத் தொகுத்துத் தந்துள்ளார். அவரால் எழுதப்பட்ட பத்து நூல்களுள் சில பகுதிகளே இன்று கிடைக்கக் கூடியனவாக உள்ளன.

‘அல் கோரித்ம்’ என்ற இலத்தீன் பெயரில் ஐரோப்பியருக்கு அறிமுகமான அல் குவாரிஸ்மி அரேபிய புவியியல் விஞ்ஞானத்துக்கு பலமான அத்திவாரம் அமைத்தவராவார். இவரால் எழுதப்பட்ட ‘கிதாபு சூறதுல் அர்ழ்’ (புவியின் அமைப்பு) எனும் நூல் 14 ஆம் நூற்றாண்டு வரை முஸ்லிம் புவியியல் அறிஞர்களுக்கு உதவக் கூடிய ஒரு வழிகாட்டி நூலாக விளங்கியது. இந்நூலில் இவர் பூமியை ஏழு வலயங்களாகப் பிரித்துள்ளார். இவ்வாறான பிரிப்பு முறை

தொலமியின் நூல்களில் கூட காணப்படவில்லை. கலீபா ம.்.மூனின் வேண்டுகோளுக்கிணங்க 70க்கு மேற்பட்ட அறிஞர்களால் தயாரிக்கப்பட்ட உலகப் படம் ஒன்றும் இந்நூலுடன் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தப் படத்தை இன்று அந்த நூலுடன் பெற முடியாதுள்ளது.

இந்நூலை வாசித்த பின்பே 'கொலம்பஸ்' பூமி கோள வடிவமானதாக இருந்தால் மேற்குப் புறமாகச் சென்று கிழக்கை அடைய ஒரு பாதை இருக்க வேண்டும் எனக் கருதிப் புறப்பட்டு கி.பி. 1492 ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சென்றடைந்தார்.

நபித் தோழர்களுள் ஒருவரான மஸ்ஊத் (றழி) அவர்களின் சந்ததியில் தோன்றிய அல் மஸ்ஊதி புவியியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு புவியியல் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஓர் அறிஞராவார். மிகச் சிறு வயது முதலே உலகைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் இளம் வயதிலேயே உலக யாத்திரையை ஆரம்பித்துவிட்டார். இலங்கை, இந்தியா, சீனா, மடகாஸ்கர், துருக்கி, சிரியா, பலஸ்தீன், எகிப்து போன்ற பல்வேறு நாடுகளுக்குப் பிரயாணம் செய்துள்ளார். "முஸ்லிம் உலகின் பூகோளக் குதிரை", "அரேபியரின் ஹிரதோதஸ்", "அரேபியரின் பிளினி" போன்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் இவர் ஏழு நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் 'முரூஜுத் தஹப்' (பொன் வயல்கள்), "கிதாபுத் தன்பீஹ் வல் இஷ்ராப்" ஆகிய இரு நூல்களே இன்று கிடைக்கக் கூடியனவாக உள்ளன.

**அல் பிரூனி** : புவியியலில் மட்டுமன்றி, வரலாறு, கணிதம், வானியல், தாவரவியல், மருத்துவம் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்கினார். இவரால் எழுதப்பட்ட 'கிதாபுல் ஹிந்த்' இந்தியா பற்றிய ஒரு பிரதேசப் புவியியல் நூல் ஆகும். இந்தியாவின் மத்திய கால புவியியல் வரலாற்றை அறிவதற்கு இந்நூல் மிகவும் துணை புரிகின்றது.

கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அல் முகத்தஸி என்பவரும் சிறந்த புவியியல் அறிஞர்களுள் ஒருவராவார். பைத்துல் முகத்தஸ் அமைந்திருக்கும் ஜெரூஸலத்தில் இவர் பிறந்தமையால் 'அல் முகத்தஸி' அல்லது 'அல் மக்திஸி' என்று அழைக்கப்பட்டார். சுமார் இருபது ஆண்டுகளைப் பிரயாணங்களிலேயே கழித்த இவர் பிரயாணங்களுக்காக மாத்திரம் சுமார் 10,000 திர்ஹம்களைச் செலவிட்டுள்ளார். இவர் தான் எழுதிய 'அஹ்ஸனுத் தகாஸிம்' எனும் நூலில் இஸ்லாமிய நாடுகளை 14 மாகாணங்களாகப் பிரித்து ஆராய்ந்துள்ளதுடன்

ஒவ்வொரு மாகாணத்தைப் பற்றியும் எளிதாக விளக்கும் பொருட்டு தேசப் படங்களையும் இணைத்துள்ளார். தேசப்படங்களில் பாதைகள் சிவப்பினாலும், மணற்றரைகள் மஞ்சளினாலும், கடல்கள் பச்சையினாலும், நதிகள் நீலத்தினாலும், மலைகள் சாம்பலினாலும் நிறந் தீட்டப்பட்டிருந்தன.

சிறந்த யாத்திரிகராகவும் திறமை வாய்ந்த கப்பலோட்டியாகவும் மதிக்கப்படும் இப்னு ஷஹ்ரயார் என்பவரும் குறிப்பிடத்தக்க புவியியல் எழுத்தாளர்களுள் ஒருவராவார். இவர், இலங்கை, இந்தியா, சீனா போன்ற நாடுகள் உட்பட இந்து சமுத்திரத்திலுள்ள பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்த தனது பிரயாண அனுபவங்களைத் தொகுத்து, ‘அஜாயிபுல் ஹிந்த்’ (இந்தியாவின் அற்புதங்கள்) என்ற பெயரில் ஒரு நூலை எழுதியுள்ளார்.

புவியியல் அறிவிலும் ஆராய்ச்சியிலும் தனித்துவம் வாய்ந்த ஒருவராக விளங்கிய அல் இத்ரீஸி, முதன் முதலில் முறையான உலகப் படத்தை வரைந்த பெருமையைப் பெறுகிறார். இப்படம் இன்று லண்டன் நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப கால முஸ்லிம் புவியியல் அறிஞர்களுள் ஒருவரான இப்னு கர்தா தப்பாஹ் பக்தாத் நகரில் பிரதம தபால் அதிகாரியாகக் கடமையாற்றிய காலத்தில் புவியியல் துறையில் ஆர்வம் கொண்டார்.இவர் எழுதிய ‘கிதாபுல் மஸாலிக் வல் மமாலிக்’ (பாதைகளும் இராச்சியங்களும் பற்றிய நூல்) அறபு உலகின் முக்கிய வர்த்தகப் பாதைகளைப் பற்றிக் கூறுவதுடன் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற தூரப் பிரதேசங்களைப் பற்றிய விபரங்களையும் பல்வேறுபட்ட இஸ்லாமிய நாடுகளின் நிருவாக அமைப்பு, தபால் விநியோக முறை, பிரயாணம் செய்வதற்கான பாதைகள், வரி விதிப்பு முறைகள் போன்ற விபரங்களையும் தருகின்றது. இந்நூலில் உண்மைக்குப் புறம்பான சில அம்சங்கள் இடம்பெற்றிருந்த போதிலும், இந்நூல் பிற்காலப் புவியியல் ஆராய்ச்சியாளர் களுக்குப் பெரிதும் உதவியதை மறுப்பதற்கில்லை.

## வரலாறு

இஸ்லாத்தில் வரலாற்றுக் கலையானது, இஸ்லாமியக் கருத்துக்கள், உணர்வுகளின் தூண்டுதலின் அடிப்படையிலேயே தோன்றி வளர்ந்தது. வரலாற்றுக் கலையில் முஸ்லிம்கள் ஆர்வம் செலுத்தியமைக்குப் பின்வரும் அம்சங்கள் தூண்டுதல்களாக அமைந்தன.

இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னர் அரேபியர் வரலாற்றுடன் தொடர்புடைய பல தகவல்களை நினைவில் வைத்திருந்தனர். குறிப்பாக தமது பரம்பரை பற்றிய தகவல், வம்சாவழிக் குறிப்புகளை அவர்கள் பாதுகாத்து வந்தனர்.

இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னர் நபி (ஸல்) அவர்களின் வாக்குகள், வாழ்க்கையின் நிகழ்வுகள், அவர்கள் பங்கு பற்றிய போர்கள் பற்றிய தொகுப்புகளே ஒழுங்கான வரலாற்று நூல்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தன. ஹிஜ்ரி 2 ஆம் நூற்றாண்டில் வரலாற்று நூல்கள் எழுதப்பட்டன. அவை வம்சாவழிக் குறிப்புகள், மரபு வழிக் கதைகள், கவிதைகள், கடிதங்கள், உடன்படிக்கைகள், குர்ஆன், ஸுன்னா தரும் தகவல்கள் முதலானவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டன. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இடம் பெற்ற நிகழ்வுகளைப் பற்றிய பதிவேடுகள் போல குர்ஆனும் ஸுன்னாவும் அமைந்திருந்தன. எனவே, நபி (ஸல்) அவர்களை மையமாக வைத்து குர்ஆன் ஸுன்னாவின் துணையுடன் முதலில் வரலாற்று நூல்கள் எழுதப்பட்டன. நபியவர்கள் பங்குபற்றிய போர்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்து 'மகாஸி' எனும் தலைப்பிலும் அவர்களின் வாழ்க்கைத் தகவல்களைத் தொகுத்து 'ஸீரா' எனும் தலைப்பிலும் எழுதினர். 'ஸீரா' என்று அழைக்கப்பட்ட வரலாற்றுத் துறை ஆய்வே பின்பு தாரீக் எனப்பட்ட வரலாற்றுக் கலையாக வளர்ச்சியுற்றது. எனவே, நபியவர்களின் வாழ்வை மையமாக வைத்து அரபு வரலாற்றுக் கலை தோற்றம் பெற்றதால், மதீனா நகர் ஆரம்பகால வரலாற்றுக் கலையின் மையமாக விளங்கியது.

ஆரம்ப காலத்தில் ஹதீஸ், தப்ஸீர் போன்ற இஸ்லாமியக் கலைகளுடன் இணைந்தே வரலாற்றுக் கலை வளர்ச்சியடைந்தது. ஹிஜ்ரி 02ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஏனைய கலைகள் போல வரலாறும் ஒரு தனிக் கலையாக வளர்ச்சி கண்டது.

வரலாற்று நூல்கள் எழுத்து வடிவு பெறுவதற்கு முன் வரலாற்றுத் தகவல்கள் வாய்மொழி மூலமாகவே வழங்கப்பட்டன. **'அவனாபின் அல்ஹகம்'** வாய்மொழி

மூலம் வரலாற்றுத் தகவல்களை வழங்கியவர்களில் முக்கியமானவர் ஆவார். எழுத்து வடிவில் வரலாற்று நூல்களைத் தந்தவர்களுள் **அலி பின் முஹம்மது பின் அப்துல்லாஹ்** மதாயினி குறிப்பிடத்தக்கவர். மதாயினியின் வரலாற்று ஆக்கங்கள் பிற்கால எழுத்தாளர்கள் பலரில் செல்வாக்கைப் பதித்துள்ளன. ஸ்பானிய எழுத்தாளரான இப்னு அப்து ரப்பிஹி, கூபா வாசியான ஹிஷாம் பின் முஹம்மத் கல்பி என்பவர்களின் ஆக்கங்களில் மதாயினியின் தாக்கம் காணப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களுள் இப்னு இஸ்ஹாக் என்பவர் எழுதிய 'ஸீரதுன் நபி' என்றழைக்கப்பட்ட நபி (ஸல்) அவர்களின் வரலாற்று நூல் வாசகர்களுக்குக் கிடைப்பதில்லை. நபியவர்கள் பற்றி எழுதப்பட்ட நூல்களுள் இன்று வாசகர்களுக்குக் கிடைக்கக் கூடிய மிகப்பழைய நூல் **'இப்னு ஹிஷாம்'** என்பவரால் எழதப்பட்ட 'ஸீரதுன் நபி' என்ற நூலாகும். நபியவர்கள் பங்கு கொண்ட போர்கள் பற்றிய நூல் ஒன்றை வாகிதி என்பவர் 'கிதாபுல் மகாஸி' என்ற பெயரில் எழுதினார். மகாஸி நூல்களை விட ஸீரா நூல்களிலேயே அதிகமான தகவல்கள் அமைந்திருந்தன.

ஹிஜ்ரி 02 ஆம் நூற்றாண்டைத் தாண்டிய வரலாற்று ஆசிரியர்களில் இப்னு ஹிஷாம், மதாயினி, ஹிஷாம் பின் முஹம்மத் கல்பி, முஹம்மத் பின் உமர் அல் வாகிதி முஹம்மத் பக்கீர் அத்தபவி, அல் மஸ்ஊதி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

சமூகவியலின் தந்தையாகவும் மனித வரலாற்றை அறிவியல் நோக்கில் அணுகி பகுப்பாய்வு செய்த வரலாற்று மேதையாகவும், **இப்னு கல்தூன்** விளங்குகிறார். தனது வரலாற்று நூலுக்கு அவர் எழுதிய 'முகத்திமா' என்றழைக்கப்படும் முன்னுரையில் வரலாற்றுத் தத்துவம் ஒன்றை விளக்கியுள்ளார். ஆதலால், வரலாற்றுத் தத்துவம் ஒன்றைத் தந்த முதலாமவர் என்று அவர் கருதப்படுகிறார்.

இப்னு கல்தூனின் பார்வையில் வரலாறு என்பது நாகரிகத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையுமே குறிக்கிறது. சமூகம் அதன் இயல்பிலேயே மாறும் தன்மை கொண்டது. மனித சமூகம் ஒவ்வொன்றும் முதற்கட்டத்தில் நாடோடி வாழ்வையும் பின் மந்தை மேய்ப்பு வாழ்வையும், அடுத்து விவசாய வாழ்வையும் பின் நகர்ப்புற வாழ்வையும் கொண்டு நான்கு கட்டங்களைக் கொண்டதாகவே வளர்கிறது என இப்னு கல்தூன் கருதுகிறார்.

## விஞ்ஞானம்

முஸ்லிம்கள் அறிவு பெற வேண்டும் என்பதற்கான தூண்டுதல்களை அல்குர்ஆனும் ஸுன்னாவும் வழங்கியிருக்கின்றன. அல்குர்ஆனின் போதனைகளும் நபி (ஸல்) அவர்களின் பொன்மொழிகளின் செல்வாக்குமே பௌதிக விஞ்ஞானங்களைப் பயில்வதற்கும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் பின்புலமாக உள்ள பிரதான சக்திகளாகும்.

அல் குர்ஆன் வேதநூலாகவே அருளப்பட்டது. எனினும், சமய சிந்தனைக்கும் விஞ்ஞான சிந்தனைக்கும் இடையே வேற்றுமையை அந்நூலில் காணமுடியாது. மாறாக அவ்விரண்டிற்கும் இடையே நெருக்கான உறவு இருப்பதையே காணலாம். சமயமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்ல. சமய உண்மைகளை விஞ்ஞானம் நிறுவுவதையே காணமுடிகிறது. இதனால், அல் குர்ஆனில் விரவி வந்துள்ள விஞ்ஞானத் துறைப் போதனைகளை முஸ்லிம்கள் ஆழ்ந்து சிந்தித்தனர். பிரபஞ்சம் முழுவதும் அல்லாஹ்வுக்கு முற்றிலும் அடிபணிகிறது என்ற கருத்து இஸ்லாத்தின் தௌஹீத் கோட்பாட்டுடன் இயைந்து செல்கின்றது. ஆதலால், பிரபஞ்சம் பற்றிய ஆய்வை இஸ்லாமிய ஆய்வாகவே முஸ்லிம்கள் கருதினர்.

விஞ்ஞான அறிவு அவதானம், ஆழ்ந்த சிந்தனை ஆகிய இரு முக்கிய காரணிகளில் தங்கியிருக்கிறது. முன்னையது புலன்களின் பிரயோகத்தோடும் பின்னையது உள்ளத்தின் செயற்பாட்டோடும் தொடர்புடையதாக இருக்கின்றது.

இறை படைப்புகளை அவதானிப்பதும், அதனைப் பற்றிச் சிந்திப்பதும் இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதிலும் அவனது எல்லையற்ற வல்லமையிலும் மகிமையிலும் ஏனைய பண்புகளிலும் ஒருவன் நம்பிக்கை கொள்வதற்கு வழிவகுக்கின்றன. குர்ஆனில் கூறப்பட்டுள்ள இப்றாஹீம் நபியின் சரிதையில் விண்மீன்களும் சந்திரனும் சூரியனும் மறைந்து விடுவதை அவதானித்துப் பார்த்து விட்டு, அவை வணங்கப்படத் தகுதியற்றவை என அவர் நிராகரித்தமையை அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

சில உண்மைகளை விளங்கிக் கொள்வதற்காக அவதானித்தவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதும் அவசியமாகும். ஆதலால், அல்குர்ஆன் சிந்தனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருக்கின்றது.

தமது புலன்களைக் கொண்டு அவதானிக்காதவர்களும் உள்ளங்களைக் கொண்டு சிந்திக்காதவர்களும் கால்நடைகளுக்கு நிகரானவர்களாகவும் கால்நடைகளைவிட மோசமானவர்களாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சித் துறைகளில் ஈடுபடுவதற்குத் தூண்டக்கூடிய வகையில் அல்குர்ஆன் சில தெளிவான அறிவுறுத்தல்களை விசுவாசிகளுக்கு வழங்கியிருக்கின்றது. சந்திரனின் பல்வேறு நிலைகள், குறிப்பிட்ட வேகத்தில் சூரியன், சந்திரன் ஆகியவற்றின் சுழற்சி, குறிப்பிட்ட ஒழுங்கிற்கேற்ப அவற்றின் அமைவு, படைப்புக்கள் அனைத்தும் சோடி சோடியாகப் படைக்கப்பட்டிருத்தல் என்பன போன்ற பிரபஞ்ச இயற்கைத் தோற்றப்பாடுகள் பற்றி அடிக்கடி பேசும் அல்குர்ஆன் வசனங்கள் விஞ்ஞான ஆராய்ச்சிக்கான தூண்டுதல்களைத் தருகின்றன. அல்குர்ஆன் எடுத்துரைத்துள்ள ஏராளமான பிரபஞ்ச உண்மைகளில் வெகு சொற்பமான அளவையே நவீன விஞ்ஞானம் இன்று புரிந்து கொண்டுள்ளது.

தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற குர்ஆனியக் கட்டளைகளும் விஞ்ஞானக் கல்விக்கான தூண்டுதல்களை வழங்குகின்றன. தொழுகை நேரங்களில் முஸ்லிம்கள் தமது முகங்களைக் க.்.பாவின் பக்கம் திருப்பிக் கொள்ளக்கூடிய வகையில் முஸ்லிம்களுக்குக் க.்.பாவின் திசையையும் தொழுகைக்குரிய நேரங்களையும் நிர்ணயிக்க வேண்டியிருந்தது. இது முஸ்லிம்கள் வாழ்ந்த அனைத்து இடங்களுக்குமுரிய அகல, நெடுங்கோடுகளையும் சூரியனின் குத்துயரத்தையும் நிர்ணயிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது.

ஹஜ், ஜிஹாத், வர்த்தகம் போன்ற நோக்கங்களுக்காக முஸ்லிம்கள் கடலிலும் தரையிலும் நீண்ட நெடும் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே, இந் நடவடிக்கைகளுக்குத் தேவையான நட்சத்திர நிலைகள் பற்றிய படங்களைத் தயாரிக்கும் ஆர்வம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. புவியியற் கல்வியை விருத்தி செய்வதில் ஹஜ் முக்கியமானதொரு பங்கினை வகித்தது. மக்காவுக்குத் தமது புனித யாத்திரையை மேற்கொள்ளத் தொடங்குவதற்கு முன்னர் ஹஜ்ஜாஜிகள், மக்காவுக்குச் செல்லும் வழியிலுள்ள பிரதேசங்கள் பற்றி தேவையான அனைத்துத் தகவல்களையும் திரட்டிக் கொள்ளலாயினர். இவ்வகையில் எழுதப்பட்ட நூல்கள், பல நாடுகளினது மத, சமூக, அரசியல், பொருளாதார, புவியியல், விவசாய ஆய்வுகளை உள்ளடக்கியனவாக இருந்தன.

இஸ்லாத்தின் வருகைக்குப் பின் ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் இஸ்லாமிய சாம்ராஜ்யமானது அரேபியாவிலிருந்து, அத்திலாந்திக் கரை வரையும் பரந்து விரிந்திருந்தது. ஜிஸ்யா, கராஜ், உஷ்ர், கனீமத் என்பன இப்பரந்த இராச்சியத்தின் வருமானத்திற்குரிய பிரதான மூலங்களாக இருந்தன. கணக்கு வழக்குகளைப் பேணி வருவதற்கு எண் கணிதத்தில் சிறந்த அறிவு தேவைப்பட்டது. கட்டடங்களையும் பள்ளிவாயல்களையும் நிர்மாணிப்பதற்கு திரிகோண கணிதம், கேத்திர கணிதம், அட்சர கணிதம், எண் கணிதம் என்பவற்றில் ஆழ்ந்த அறிவு தேவைப்பட்டது.

அல்குர்ஆன் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்திற்கான முன்னேற்பாடுகளை வகுத்துக் கொடுத்திருக்கிறது. சிக்கலான வாரிசுரிமைச் சொத்தின் நடைமுறை களைத் தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு எண் கணிதத்தில் சிறந்த அறிவு பெற்றிருப்பது அவசியமாகும். இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்திற்கிணங்க உரிமையாளர்களின் பங்குப் பிரிவுகள் பற்றி பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

பூமியின் கீழுள்ள கனிப்பொருட்கள் பற்றிய அறிவையும் அல் குர்ஆனே வழங்கியுள்ளது. தாவரவியல் பற்றி அல் குர்ஆனில் பல இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

> "மேகத்தில் இருந்து மிக்க பாக்கியம் உள்ள மழையை நாம் வருவிக்கச் செய்து அதனைக் கொண்டு பல சோலைகளையும் அறுவடை செய்யும் தானிய மணிகளையும் முளைக்கச் செய்கின்றோம். அடுக்கடுக்காக (கனிகள்) நிறைந்த குலைகளையுடைய நீண்டு வளரும் பேரீச்ச மரங்களையும் (முளைப்பிக்கச் செய்து) அடியார்களுக்கு ஆகாரமாக்குகின்றோம்...." (50 : 9-11)

> "வித்துக்களையும் விதைகளையும் நிச்சயமாக அல்லாஹ்தான் வெடி(த்து முளை) க்கச் செய்கின்றான்....."(6 : 95)

தாவரவியல் பற்றி எடுத்தாண்ட மேற்குறித்த கருத்துக்களால் தூண்டப்பட்டதால் முஸ்லிம்கள் பலர் இத்துறையில் நிறைய ஈடுபாடு காட்டினார்கள். ஜாபிர் பின் ஹய்யான், அபூ சஈத் அல் அஸ்மஇ, இப்னு பாச்சா, இப்னுல் லதீப் அல் பக்தாதி, அல் கஸ்னவி போன்றவர்கள் இத்துறையில் நிறைய பங்களிப்பு செய்துள்ளனர்.

விவசாய உற்பத்தியையும் அல் குர்ஆனும் சுன்னாவும் ஊக்குவித்தன. "நாளை உலகம் அழியப்போகிறது என்று அறிந்தாலும் இன்று நீ ஒரு மரத்தை நடு" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்குர்ஆனும் விவசாய உற்பத்தியை விதந்து பாராட்டியுள்ளது.

இவ்வாறான பல குர்ஆன் ஆயத்துகளால் உந்தப்பட்ட முஸ்லிம்கள் ஆரம்ப காலத்தில் இருந்தே விவசாயத்தில் அதிக ஈடுபாடு காட்டினர். உற்பத்தியின் தரத்தைக் கூட்டினர். உற்பத்தியைப் பெருக்கி புதிய தாவரங்களை அறிமுகப்படுத்தினர். விவசாய உத்திகளைக் கையாண்டனர். நிலம், நீர், தாவரங்கள், மிருகங்கள் என்பவற்றை விவசாயத்துக்குப் பயன்படுத்தும் அறிவைப் பெருக்கினர். பல அறிஞர்கள் விவசாயம் பற்றிய நூல்களை எழுதினர்.

இதைப் போலவே இரசாயனக் கலவைகள் பற்றியும் அல் குர்ஆன் சிந்திக்க வழிகாட்டுகிறது.

"உமதிறைவன் தேனீக்கு உள்ளுணர்ச்சியை உண்டாக்கினான். மலைகளிலும், மரங்களிலும் உயர்ந்த கட்டிடங்களிலும் நீ கூடுகளை அமைத்துக் கொள். அன்றி, நீ எல்லாவிதமான கனி(களின் மலர்)களிலிருந்தும் அருந்தி உமதிறைவனின் எளிதான வழிகளில் (உன்னுடைய கூட்டுக்குள்) ஒடுங்கிச் செல். இதனால், அதன் வயிற்றிலிருந்து பல நிறங்களையுடைய ஒரு பானம் (தேன்) புறப்படுகிறது. அதில் மனிதனுக்கு நிவாரணியுண்டு..." (16 : 68 – 69)

அல்குர்ஆனின் இவ்வாயத்து சடப் பொருட்கள் பல அளவுகளில் ஒன்றுடன் ஒன்று கலப்பதால் ஏற்படும் மாற்றங்கள் பற்றி சிந்திக்கத் தூண்டியது. உடலில் ஏற்படும் வலியை உணரக்கூடிய தன்மை மூளைக்கே உண்டென பலரும் நம்பி வந்தனர். ஆனால், நரக வேதனை பற்றிக் கூறவந்த அல்குர்ஆன், அவர்களுடைய தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவர்கள் வேதனையை அனுபவிப்பதற்கான அவை அல்லாத வேறு தோல்களை நாம் அவர்களுக்கு மாற்றிவிடுவோம் (4 : 56) என்று குறிப்பிடுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நடத்தப்பட்டபோது வலி உள்வாங்கிகள் தோலில் அமைந்திருப்பதால்தான் மனிதன் வலியை உணர்கிறான் என நிரூபிக்கப்பட்டது.

அண்மைய நூற்றாண்டுகளில் பல உண்மைகளை அறிவியல் கண்டறிந்துள்ளது. அவை, ஐரோப்பிய, அமெரிக்க அறிஞர்களின் சாதனைகளாகவே கொள்ளப்படுகின்றன. அல்குர்ஆனை நுணுக்கமாக ஆராய்பவர்கள் இந்த அறிவியல் உண்மைகள் தெளிவாகவோ, மறைமுகமாகவோ14 நூற்றாண்டுகளுக்கு முன்னர் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்டுகொள்வர்.

அல்குர்ஆனில் மேலே சுட்டியது போன்ற ஆயத்துகள் பல விஞ்ஞான ரீதியான உண்மைகளைப் புலப்படுத்தி அக்கலைகளை வளர்த்துச் செல்லும் மனப்பாங்கையும் முஸ்லிம்களிடம் தோற்றுவித்தது. அதன் விளைவாகத்தான் முஸ்லிம்களிடையே விஞ்ஞானக் கலை அப்பாஸியர் காலமுதல் வளர்ச்சி யடைந்ததைக் காணமுடிகிறது.

அல்குர்ஆனின் போதனைகளின் துண்டுதலால் இயற்கையின் படைப்பினங்களில் அவதானத்தைச் செலுத்தி, படைப்புகளில் காணப்படும் சீரமைப்பையும் ஒழுங்கையும்

அடிப்படையாக வைத்து இயற்கையைப் பிணைத்திருக்கும் இயற்கை விதிகளைக் கண்டறிந்த முஸ்லிம் அறிவியல் அறிஞர்கள் பெருமைக்குரிய ஓர் அறிவியல் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்பினர். வானியல், புவியியல், மருத்துவம், பௌதிகம், இரசாயனம், தாவரவியல் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் முஸ்லிம் அறிவியல் மேதைகள் பங்களிப்புச் செய்துள்ளனர். முஸ்லிம்கள் கிரேக்க, பாரசீக இந்திய அறிவியல் பாரம்பரியங்களை ஆழமாகக் கற்று, அவற்றில் காணப்படும் குறைகள், பலவீனங்களை இனங்கண்டு, தமது ஆய்வுகளின் அடிப்படையில் புதிய அம்சங்களை இணைத்து அதற்கேயுரிய சிறப்பியல்புகளைக் கொண்ட இஸ்லாமிய அறிவியல் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்பினர்.



15-CM 14795

# 09. துறைசார் அறிஞர்களின் பங்களிப்பு

## 1. இமாம் அபூஹனீபா (ரஹ்)

நு∴மான் எனும் பெயருடைய இவரின் தந்தை தாபித் ஆவார். அபூஹனீபா (ரஹ்) என்ற புனைப் பெயராலேயே அழைக்கப்படுகின்றார்கள். ஹிஜ்ரி 80 இல் (கி. பி. 699) இறாக்கிலுள்ள கூபாவில் பிறந்தார். இவர் நடுத்தர உயரமும் அழகிய தோற்றமும் வாய்க்கப்பெற்றவராயிருந்தார்.

அக்காலை கூபா நகர் அறிஞர்களால் நிரம்பி இருந்தது. ஆதலால், பல பெரியார்களிடம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றார். எனினும் ஹம்மாது என்பவர்களிடமே அதிக காலம் மாணவராக இருந்து கல்வித் தேர்ச்சி பெற்றார்கள். மூலாதாரங்களிலிருந்து சட்டங்களைத் தொகுத்து (பத்வா) தீர்ப்புக் கொடுக்கும் தகுதியைப் பெற்றார். அக்காலை சட்ட நுணுக்கங்களில் பிரசித்திபெற்ற ஒருவராக விளங்கினார். அத்துடன் இறை பக்தியிலும் நிகரற்று விளங்கினார்.

இவர்களுக்கு கியாஸ் வழிமுறையில் சட்டங்களை இயற்றுவதில் விசேட சாமர்த்தியமிருந்தது. இவர்களிடம் பல ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்றார்களாயினும் அபூயூசுப், முஹம்மது சைபானி ஆகிய இருவருமே பிரபலமானவர்களாவர். அவர்களே தமது ஆசிரியரின் விளக்கங்களை நூல்கள் வாயிலாக உலகுக்கு அளித்து உதவினார்கள். இவ்விருவரும் அப்பாஸிய ஆட்சியாளர்களிடம் மதிக்கப்பெற்ற காழிகளாக இருந்தார்கள்.

இமாமவர்கள் இறைவணக்கம், கல்வி, தயாளம், உலகப்பற்றின்மை, ஆதியாம் குணங்களில் நிகரற்றவர்களாக இருந்தார்கள். பெரும்பாலான முஸ்லிம்கள் இவர்களின் சட்ட வழியையே (மத்ஹப்) பின்பற்றி வருகின்றார்கள். இவர் நாஸ்திகர்களுடன் தர்க்கித்து அவர்களை அடக்குவதில் நிகரற்று விளங்கினார்கள். பலமுறை மக்கா மதீனா சென்றுள்ளார்கள். அச்சமயம் இமாம் மாலிகையும் சந்தித்துள்ளார்கள்.

பிக்ஹுல் அக்பர், அல் ஆலிம் வல் முதஅல்லிம், முஸ்னத் முதலானவை இமாமவர்களது ஆய்வுகளை உள்ளடக்கிய சட்ட நூல்களில் சிலவாகும்.

இவர்கள் ஹிஜ்ரி 150 இல் பக்தாத் நகரில் வபாத்தாகி அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இவரது சட்டத்தொகுப்பைப் பின் தொடர்பவர்கள் ஹனபியாக்க ளென்று அழைக்கப்படுகின்றனர்.

## 2. இமாம் மாலிகிப்னு அனஸ் (ரஹ்)

இமாம் மாலிக் அவர்களின் மூதாதையர்கள் யெமனைச் சார்ந்தவர்கள். மதீனாவில் இஸ்லாம் வேரூன்றிய காலத்தில் குடியேறினார்கள். இவர்களின் தந்தை பிரசித்திபெற்ற ராவி (ஹதீதுகளை மனனமாய் ஒப்படைப்பவர்) ஆவார். இமாம் மாலிக் ஹிஜ்ரி 93 இல் பிறந்தார்.

அக்காலை மதீனா கல்விக் களஞ்சியமாகவே காட்சியளித்தது, வீடுகள்தோறும் கல்விச் சபைகள் நடந்து கொண்டிருந்தன. இமாமவர்கள் தனது ஆரம்பக் கல்வியை வீட்டிலேயே கற்றார்கள். பின், மதீனாவிலிருந்த பல பெரியார்களிடம் சென்று கற்றுத் தேர்ந்தார்கள். அக்காலக் கல்வி, குர்ஆன், ஹதீஸ், பிக்ஹ் என மூன்று துறைகளிலுமே அடங்கியிருந்தது. இவர்கள் ஹஜ்ஜுக்கன்றி ஒரு போதும் மதீனாவை விட்டும் வெளியே செல்லவில்லை. இதனால், இமாமுல் மதீனா என அழைக்கப்பட்டார்கள் மதீனாவிலேயே பிறந்து அங்கேயே கல்வி கற்று அங்கிருந்தே கல்வியை உலகெங்கும் பிரகாசிக்கச் செய்தார்கள். இவர்களின் கல்விச் சபை நபிகளாரின் பள்ளியிலேயே மிக கண்ணியத்தோடு நடந்துவந்தது.

ஒரு முறை, கலீபா ஹாறூன்றஷீத் மதீனா வந்தபொழுது தனது இல்லததிற்கு வந்து இமாம் அவர்கள் எழுதிய முஅத்தாவெனும் ஹதீஸ் கிரந்தத்தை வாசித்துக் காட்டும்படி தூதுவரை அனுப்பி விண்ணப்பிக்க, “கல்வியின்பால் மனிதர் வரவேண்டுமேயன்றி கல்வி மனிதரை தேடிச் செல்லாது” என அவர்களிடம் கூறி அனுப்பினார்கள். இவரது முஅத்தா எனும் கிரந்தமே ஹதீஸ் கிரந்தங்களுள் முதலில் வெளியான நூலாகும். இதே கலீபா மறுமுறை மதீனா வந்த போது தன்னுடன் தலைநகராகிய பக்தாதுக்கு வரும்படி அழைக்க நபியவர்களின் பட்டணமாகிய மதீனாவை விட்டும் வரமுடியாதென மறுத்துவிட்டார்கள்.

இவர்கள் சுய மரியாதையுள்ளவர்களாயும், கல்வியையும் கல்விமான்களையும் கௌரவிக்கின்றவர்களாயுமிருந்தார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் இவர்களிடம் கல்வி கற்றிருக்கின்றார்கள். இவர்களில் அதிகமானவர்கள் பெரும் தலைவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். இவர்களின் சபையில் கலீபாக்கள் எழுவர் சமூகம் அளித்துக் கல்விப்பேறு பெற்றிருக்கின்றார்கள். இமாம் ஷாபிஈயும் இவர்களின் மாணவரே.

ஒரு காலத்தில் மதீனா மக்கள் தங்களின் வாழ்க்கையை நடாத்த முடியாது கூரைக் கம்புகளைக்கூட விற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்பொழுது சிரியா எகிப்துபோன்ற தூரதேசங்களிலிருந்தெல்லாம் அவர்களுக்கு வெகுமதியாக செல்வங்கள் வந்து குவிந்தன. அச்செல்வங்களைத் தனது சீடர்களுக்கும் ஏனையோருக்கும் வாரிக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இமாம் ஷாபிஈ மக்காவிலிருந்த போது வருடாவருடம் 11,000 தீனர்களை (நாணயம்) அனுப்பிக்

கொண்டிருந்தார்கள். ஒரு முறை மதீனா அதிபர் ஜ.ஃபர், இமாம் அவர்களுக்குத் தண்டனை வழங்கியதை கேள்வியுற்ற கலீபா அவரைப் பதவி நீக்கம் செய்து கழுதையிலேறி பக்தாதுக்குச் செல்லும்படி உத்தரவிட்டார்.

இமாமவர்கள் எந்த வினாவுக்கும் தகுந்த ஆதாரமில்லாது பதிலளிக்க மாட்டார்கள். சற்று ஐயமேற்படினும் தனக்குத் தெரியாதெனத் தயங்காது கூறிவிடுவார்கள். இவரது முஅத்தாவெனும் கிரந்தம் (ஹி 131-140 க்கிடையில் இயற்றப்பெற்றது. இக்கிரந்தத்தைப் பலரும் புகழ்ந்துள்ளனர். இதைத் தவிர வேறு 11 கிரந்தங்களையும் இயற்றியுள்ளார்கள். இவர்கள் 86 ஆவது வயதில் ஹிஜ்ரி 179 இல் காலமானார்கள். ஜன்னதுல் பகீஊ எனும் பரிசுத்த இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். மேற்கு ஆபிரிக்கா, எகிப்து, ஹிஜாஸ் ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் இவர்களின் மத்ஹபையே பின்பற்றி நடக்கின்றனர். இவர்கள் மாலிகீ என்று அழைக்கப்படுகின்றனர்.

### 3. அபூ அப்துல்லாஹ் முஹம்மதிப்னு இத்ரீஸ் அஷ்ஷாபிஈ (ரஹ்)

இமாம் ஷாபிஈ, நபியவர்களின் பாட்டனார், முத்தலிபின் வழிவந்தவர்கள். இவர்கள் ஆலிமுல் குறைஷ் என்றும் முத்தலிபி என்றும் பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுவதுமுண்டு. இவர்கள் ஹிஜ்ரி 150 இல் பலஸ்தீனிலுள்ள காஸா எனுமிடத்தில் பிறந்தார்கள். எனினும், சிறு வயதிலிருந்தே மக்காவில் வளர்ந்தார்கள்.

இவர்கள் அக்காலை மக்காவில் பிரசித்திபெற்றிருந்த அறிஞர் முஸ்லிமிப்னு காலித் என்பவர்களிடம் கற்றார்கள். 7 வயதில் அல்குர்ஆனை மனனம் செய்ததோடு முஅத்தாவெனும் கிரந்தத்தையும் மனனம் செய்துவிட்டார்கள். 14 வயதில் மார்க்கத் தீர்ப்பு வழங்கும் தகுதியைப் பெற்றார்கள். இவ்வாறிருந்தும் இவர்களின் கல்வித்தாகம் தணியவில்லை. மதீனாவில் மாலிக் இமாமின் மகிமையைக் கேள்வியுற்று அங்கு சென்றார்கள். இவர்களின் தோற்றத்தையும் கல்வித் தேடலையும் கண்ணுற்ற இமாம் தனது இல்லத்திலேயே தங்கி இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ஒவ்வொரு நாளும் எத்தனை ஹதீஸ்களை உபதேசிக்கின்றார்களோ அவற்றையெல்லாம் மற்ற மாணவர்கள் எழுதிக்கொள்ள, இவர்கள் மட்டும் மனனமிட்டு அத்தனை ஹதீஸ்களையும் அப்படியே ஒரு அட்சரமேனும் பிசகாது மறுநாள் ஒப்புவிப்பார்கள்.

இவ்வாறு போதிய கல்வி ஞானத்தைப் பெற்றபின் அன்றைய இஸ்லாமியத் தலைநகராக விளங்கிய பக்தாத் செல்ல அனுமதி கேட்டார்கள். வழிச் செலவுக்கு பணம் கொடுத்து நெறிபிறழாது நடக்கும்படி உபதேசித்த ஆசிரியர் அனுமதி வழங்கி அனுப்பிவைத்தார்கள். ஹிஜ்ரி 195 இல் பக்தாத் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு இவர்களின் கல்வித் திறனைக்கண்ட அறிஞர்கள் பலர், இவர்களின் சீடர்களாக அமர்ந்து கல்வி ஞானம் பெற்றார்கள். பின்னர் மக்காவுக்கு வந்து கல்வித் தொண்டு புரிந்தார்கள். பின் எகிப்து சென்றார்கள். இறுதி வரை அங்கு

தங்கினார்கள். அங்கிருக்கும் பொழுதுதான் உம்மு, ஆமாலி, இம்லா உஸ்ஸகீர் என்னும் கிரந்தங்களையும் வேறு நூல்களையும் இயற்றி உலகுக்கு உதவினார்கள்.

இல்முல் உஸுல் எனும் கலையை வகுத்து வழிகாட்டியவர்கள் இவர்களே. பிக்ஹ் எனும் சட்டக் கல்வியில் பல விடயங்களை வகுத்து வழிகாட்டியுள்ளார்கள். மார்க்கக் கல்வியில் மட்டுமன்றி கவி புனைவதிலும் நிகரற்றிருந்தார்கள். இவர்களின் செய்யுட்களைப் பல ஆசிரியர்கள் ஒன்று திரட்டியுள்ளார்கள். இமாம் அஹ்மதிப்னு ஹன்பலும் இவர்களின் சீடர்களில் ஒருவரே. பல்லாயிரம் சீடர்களிருந்தாலும் முஸ்னீ, றபீஉ ஆகிய இருவரும் விசேடமானவர்கள், இவர்களே இமாமின் கருத்துக்களை உலகில் பரவச் செய்தார்கள். இமாமவர்களின் ஜீவிய சரிதையை பல பெரியார்கள் நாற்பதுக்கு அதிகமான நூல்களில் தந்துள்ளார்கள்.

ஷாபிஈ என்பவர் இவர்களின் மூதாதையர்களில் ஒருவர். அவரின் பெயராலேயே இவர் சாபிஈ என அழைக்கப்படுகின்றார். இவரது சட்டத்தொகுப்பைப் பின்பற்றுப வர்கள் உலகில் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகின்றனர். இவர்கள் ஷாபிஇயாக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். ஹிஜ்ரி 202 இல் றஜபுப் பிறை இறுதி நாள் வெள்ளியன்று இவர்கள் வபாத்தானார்கள். எல்லாக் கலையிலும் வல்லுனராக இருந்த இமாமவர்கள் நற்குணம், நல்லொழுக்கம், பக்தி, உலகப் பற்றின்மை, நேர்மை, தயாளம் ஆதியாம் நற்குணங்களில் சிறப்புற்றுத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### 4. அபூஅப்தில்லாஹ் அஹ்மதிப்னு ஹன்பல் (ரஹ்)

இமாம் ஹன்பலி அவர்களின் தாய் தந்தையர் மர்வு எனும் ஊரிலிருந்து பக்கதாத் நகரில் குடியேறியவர்களாவர். இமாமவர்கள், ஹிஜ்ரி 164 இல் கலீபா மஹ்தியின் காலத்தில் பக்தாதிலேயே பிறந்தார்கள். ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் பக்தாத் நகரிலேயே கற்றார்கள். அக்காலை பக்தாதிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் அறிஞர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் எல்லோரினது சபைகளுக்கும் சென்று ஹதீஸ்களையும் பிக்ஹையும் கற்றார்கள். கல்விச் செல்வத்தைப் பெருக்க நாடி கூபா சென்று பலரிடமும் கற்றுக்கொண்டார்கள். பின்னர் பஸரா, மக்கா, மதீனா, யெமன், எகிப்து, சிரியா, தப்ரீஸ் ஆகிய பல தேசங்கட்கும் சென்று கற்றுத் தேர்ந்தார்கள்.

பக்தாதுக்குத் திரும்பி வந்து கல்வி கற்பிக்க ஆரம்பித்தார்கள். இவர்களிடம் பல்லாயிரம் மாணவர்கள் பயின்றுள்ளார்கள். புகாரி, முஸ்லிம், அபூதாவூத் போன்ற பெரியார்களும் இவர்களிடம் கற்றிருக்கின்றார்கள். இவர்கள் பல கிரந்தங்களை இயற்றியுள்ளார்கள். அவற்றுள் முஸ்னத் அஹ்மத் எனும் ஹதீஸ் கிரந்தம் மிக விசேடமானது. எளிமையாக வாழ்ந்த அவர் தனது உற்ற நண்பர்களிடமேயன்றி வேறு எவரிடமும் வெகுமதியாகவேனும் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

உபதேசிக்கும், படிப்பிக்கும் நேரங்களைத் தவிர, ஏனைய நேரங்களை இறை வணக்கத்திலேயே கழித்தார்கள். இவர்களைப் போற்றாத அறிஞர் எவருமே இலர்.

கலீபா ம.்.மூனின் காலத்தில் குர்ஆன் படைக்கப்பட்டதா? இல்லையா? எனும் விவாதத்தில் குர்ஆன் படைக்கப்பட்டது என்ற கலீபாவின் கொள்கைக்கு மாறாகத் தீர்ப்புக் கூறினார்கள் என்பதற்காகச் சிறையுள் தள்ளப்பட்டு நீண்ட காலம் தண்டிக்கப்பட்டார்கள். இறுதிவரை தான் உண்மை எனக் கண்டதை விட்டுக்கொடுக்கவேயில்லை. இவர்கள் ஹிஜ்ரி 241 றபீஉல் அவ்வல்பிறை 13 இல் மரணமானார்கள். இவர்களின் ஜனாஸா ஊர்வலத்தில் 1,000,000 க்கு அதிகமானோர் பங்குபற்றியதாகவும் 20,000 அந்நிய மதத்தவர்கள் இஸ்லாத்தைத் தழுவியதாகவும் கூறப்படுகின்றது.

### 5. அபூ அப்தில்லாஹி முஹம்மதிப்னு இஸ்மாயிலுல் புகாரி (ரஹ்)

அல்குர்ஆனை அடுத்து மிகச் சிறந்த நூலாகப் போற்றப்படும் சஹீஹுல் புகாரி எனும் கிரந்தத்தை தொகுத்த இவர்கள், ஹிஜ்ரி 194 இல் புகாரா எனும் நகரத்தில் பிறந்தார்கள். இவர்களின் மூதாதையர்கள் மஜூஸிகளாவர். இவர்களின் தந்தை இஸ்மாயீல் பெரிய அறிஞராகவும் வியாபாரியாகவும் திகழ்ந்தார்கள். எனினும், இமாம் சிறுவராக இருக்கும்பொழுதே மரணமடைந்து விட்டார்கள். குர்ஆனை ஓதி முடித்ததும் ஹதீஸ்களை மனனம் பண்ண ஆரம்பித்தார்கள். அக்காலை ஹதீஸ் வகுப்புகள் எங்கும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அது ஹதீஸ் கலை முதன்மைபெற்ற காலம். எனவே, ஹதீஸ்களை ஒன்று சேர்க்கவும் எழுதவும் ஆரம்பித்திருந்தார்கள். 17 ஆம் வயதில் மூத்த சகோதரனுடனும் தாயுடனும் ஹஜ்ஜுக்காக மக்கா யாத்திரை சென்றார்கள். ஹஜ்ஜு முடிந்ததும் தாயாரும் சகோதரரும் ஊர் திரும்ப கல்வி விருத்தியின் பொருட்டு இவர்கள் ஹிஜாஸில் தங்கி விட்டார்கள். ஹதீஸ்களை நேரடியாய் கேட்டறிய நாடி எகிப்து, சிரியா, பக்தாத் போன்ற பிரதேங்களுக்குப் பலமுறை விஜயம் செய்து ஹதீஸ்களைத் திரட்டினார்கள்.

இதற்கு முன்பே பல ஹதீஸ் கிரந்தங்கள் தொகுக்கப்பட்டிருந்தன. எனினும் அவற்றை விட, சகல அம்சங்களிலும் சிறந்து விளங்கும் வகையில் ஹதீஸ்களை ஒன்று சேர்க்க இவர்களின் மனம் தூண்டியது. ஆகவே, 18 ம் வயதில் இப்பணியை ஆரம்பித்து 36 ஆம் வயதில் முடித்தார்கள். 18 வருட கால உழைப்பில் பல இலட்சக்கணக்கான ஹதீஸ்களிலிருந்து தெரிவு செய்தே இதை தொகுத்து முடித்தார்கள். ஓர் இலட்சத்திற்கு அதிகமான மாணவர்கள் இவர்களிடம் கல்வி கற்றிருக்கின்றார்கள். முஸ்லிம், திர்மதீ போன்ற முஹத்திஸீன்களும் இவர்களின்

சீடர்களே. இவர்களைப் போற்றாத அறிஞர்கள் எவருமே இல்லை. கல்விச் செல்வத்துடன் பொருட் செல்வமும் அவரிடம் போதியளவு திரண்டிருந்தது.

இவர்கள் இறுதிக்காலத்தில் புகாராவிலேயே தங்கிக் கல்வியூட்டி வந்தார்கள். இவர்களின் மகிமையைக் காணச்சகியாத சில துரோகிகள் அப்பிரதேச அரசனிடம் சென்று, "உங்கள் சபையில் அவரே சமூகம் தந்து புகாரியை வாசித்துத் காட்டச் சொல்லுங்கள்" என ஆலோசனை கூற, அரசனும் அவ்வாறே கட்டளையிட்டார்.

இமாம் அவர்கள் இது கல்விக்கிழிவு, அரசர் விரும்பினால் எனது பள்ளியில் வந்து கேட்டுப்போகலாமெனச் சொல்லி அனுப்பினார்கள். அரசன் கோபங்கொண்டு தனது நகரை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டான். இந்த புகாரா நகர் சீனத்துருக்கிஸ்தான் பக்கத்தேயுள்ளது. முன்னர் கலீபாக்களின் கீழிருந்து வந்த அது பின்னர் தனித்த முடியரசாகியது. அரசனின் கட்டளைக்கிணங்க நகரை விட்டு நீங்கி சமர்கந்து எனும் ஊர் செல்ல நாடி குர்தங்கு எனும் கிராமத்தில் வந்து தங்கினார்கள்.

அங்கிருக்கும் போது, ஹிஜ்ரி 256 றமழான் மாதம் இறுதி நாளன்று வபாத்தானார்கள். பெருநாள் தொழுகையின் பின் அவ்வூரிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

புகாரி கிரந்தம் பொதுவாக ஹதீஸ் கிரந்தங்களில் தலை சிறந்ததாகும். சுமார் மூன்று லட்சம் ஹதீஸ்களிலிருந்து 7275 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து அவர் இதனை தொகுத்துள்ளார். இதுவன்றி வேறு கிரந்தங்களையும் இயற்றியுள்ளார்கள்.

### 6. அபுல் ஹுஸைன் முஸ்லிமிப்னு ஹஜ்ஜாஜுல் குசைரி (றஹ்)

இமாம் முஸ்லிம் குசைரி எனும் பிரசித்திபெற்ற வகுப்பாரைச் சார்ந்தவர்கள். இவர்கள் ஹிஜ்ரி 206 இல் நைசாபூர் எனும் பட்டணத்தில் பிறந்தார்கள். ஹிஜ்ரி 261 றஜபுப் பிறை 21 இல் அவ்வூரிலேயே மரணமானார்கள்.

ஆரம்பக் கல்வியையும் ஹதீஸ்களையும் ஊரிலேயே கற்றார்கள். பின்னர் உயர் கல்வியை நாடி ஹிஜாஸ், சிரியா, எகிப்து ஆகிய தேசங்களுக்குச் சென்று போதிய காலம் தங்கி கற்றுத் தேர்ந்தார். பக்தாது சென்றபொழுது இவர்களின் கல்வித் திறனைக் கண்டு பலரும் சீடரானார்கள்.

இவர்களின் சஹீஹ் முஸ்லிம் எனும் கிரந்தம், சஹீஹ் புகாரியை அடுத்த சிறந்த கிரந்தமென யாவராலும் போற்றிப் புகழப்படுகின்றது. ஹிஜாஸ், எகிப்து, சிரியா, யெமன், பக்தாது ஆகிய பிரதேசங்களில் நீண்ட பிரயாணம் செய்து 300,000 ஹதீதுகளைச் சேகரித்து அவைகளை அலசி ஆராய்ந்து சுமார் 7000

ஹதீஸ்களை மட்டும் தெரிந்து ஸஹீஹ் முஸ்லிமை தொகுத்து முடித்தார்கள். சில விடயங்களில் புகாரியை விடவும் இது விஷேடமானதெனக் கூறுவாருமுண்டு. இமாமவர்கள் வேறு பல கிரந்தங்களையும் எழுதியுள்ளார்கள்.

பக்திமிக்கத் தாய் தந்தையார்களின் பாதுகாவலில் வளர்ந்தமையாலும் சிறு வயதிலிருந்தே கல்வியொன்றையே நோக்காகக் கொண்டு வாழ்ந்ததாலும் மிக சிறந்த மனிதராகத் திகழ்ந்தார்கள். இறுதியில் சுகவீனமுற்று ஹிஜ்ரி 261 இல் வபாத்தானார்கள்.

### 7. அபூதாவூத் சுலைமானிப்னு அஷ்அத் (ரஹ்)

ஸுனன் அபீதாவூத் எனும் சிறந்த ஹதீஸ் கிரந்தத்தை இயற்றிய இவர்கள் ஹிஜ்ரி 202 இல் சீஜிஸ்தான் எனும் ஊரில் பிறந்தார்கள். அண்மையிலுள்ள நைஸாபூரில் ஆரம்பக் கல்வியை கற்றதோடு முஹம்மது தூஸி என்பவரிடம் ஹதீஸ்களையும் கற்றார்கள். பின்னர் பஸரா, கூபா, எகிப்து போன்ற வெளியிடங்களுக்குச் சென்று சிறப்பாக ஹதீஸ்களிலும் பொதுவாக ஏனைய கலைகளிலும் தேர்ச்சியுற்றார்கள்.

இறுதியில் பஸரா நகரில் தங்கி கல்விப் போதனை வழங்கினார்கள். அங்கிருந்தபொழுதுதான் தங்களிடமிருந்த 500,000 ஹதீஸ்களிலிருந்து 4800 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து ஸுனன் அபீதாவூத் எனும் இக்கிரந்தத்தை எழுதி முடித்தார்கள். கிரந்தத்தை முடித்ததும் தங்களின் ஆசிரியர் ஹன்பலி இமாமிடம் காண்பிக்கவே அவர் மிக மகிழ்ந்து பாராட்டினார்கள். புகாரி, முஸ்லிம் எனும் கிரந்தங்களுக்கு அடுத்ததாக இதுவே சிரேஷ்டமானதாகக் கொள்ளப்படுகிறது.

இவர்களிடம் அநேக மாணவர்கள் கல்வி கற்றார்கள். இவர்களின் கீர்த்தி எங்கும் பிரபல்யமடைந்திருந்தது. இவர் 72 ஆம் வயதில் (ஹிஜ்ரி 275) பஸரா நகரில் காலமானார்.

### 8. முஹம்மதிப்னு ஈஸா அத்திர்மிதி (ரஹ்)

யாவராலும் போற்றப்படும் ஆறு ஹதீஸ் கிரந்தங்களில் நாலாவது கிரந்தமாகிய ஜாமிஉத் திர்மிதியை இயற்றிய முஹம்மதிப்னு ஈஸாவெனும் இவர்கள் ஹிஜ்ரி 209 இல் திர்மித் எனும் ஊரில் பிறந்தார்கள்.

ஊரிலேயே ஆரம்பக் கல்வியையும் ஏனைய கல்விகளையும் கற்றபின், முஸ்லிம் பிரதேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து பலரிடமும் ஹதீஸ்களைக் கேட்டுத் தேர்ச்சியுற்றார்கள். புகாரி, முஸ்லிம், அபூதாவூத், குதைபா போன்ற பல பெரியார்களிடமும் ஹதீஸ்களைக் கேட்டு சேகரித்தார்கள். அவர்களும் இவர்களிடம் சில ஹதீஸ்களைக் கேட்டுப் பலன் அடைந்துள்ளார்கள்.

இவர் திருத்தமாகவும் பிழையின்றியும் சில நவீன முறைகளைக் கையாண்டும் இக்கிரந்தத்தை எழுதி முடித்தார்கள்.

பின்னர், அவற்றில் பல பிரதிகளை எழுதுவித்து, ஒவ்வொரு பிரதேசப் பெரியார்களுக்கும் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் இதை கண்ணுற்றதும் இதன் அமைப்பைக் கண்டு புகழ்ந்து வாழ்த்தினார்கள். இவர்கள் இன்னும் பல நூல்களை எழுதியதாகவும் இப்பொழுது அவை கிடைக்கப்பெறவில்லை எனவும் கூறப்படுகின்றது. இவர்களிடம் பல ஆயிரம் பேர் கல்வி கற்றுப் பயனடைந் துள்ளார்கள்.

இவர்கள், ஹிஜ்ரி 269 ரஜபுப் பிறை 17 இல் அப்பாஸிய கலீபா மு∴ தஸிமின் காலத்தில் 60 ஆம் வயதில் வபாத்தானார்கள்.

### 9. அஹ்மதிப்னு சுஐப் அந்-நஸாஈ (ரஹ்)

ஸுனனுன் நஸாஈ எனும் கிரந்தத்தை இயற்றிய இப்பெரியார் ஹிஜ்ரி 214 இல் குராஸானைச் சார்ந்த நஸாஊ எனும் ஊரில் பிறந்தார்கள்.

ஆரம்பக் கல்வியை முடித்தபின் அக்காலை கல்வியில் சிறந்து விளங்கிய முஸ்லிம் உலகத் தலைநகரங்களுக்குச் சென்று பல பெரியார்களிடம் கல்வி கற்று எல்லாக் கலைகளிலும் தேர்ச்சியுற்றார்கள். ஹதீஸில் மட்டுமின்றி பிக்ஹ் எனும் சட்டக் கல்வியிலும் நிபுணத்துவம் பெற்றிருந்தார்கள்.

பல தேசங்களுக்கும் யாத்திரை சென்று இறுதியில் எகிப்தில் தங்கி அங்கேயே கல்வித்தொண்டு புரிய ஆரம்பித்தார்கள். அவ்வேளை முஜ்தாபா எனும் ஹதீஸ் கிரந்தத்தை ஒன்று திரட்டினார்கள். அதுவே இப்பொழுது ஸுனனுன் நஸாயி என அழைக்கப்படுகின்றது.

இவர்கள் நோன்பு, இறைவணக்கம் ஆகியவற்றில் நிகரற்று விளங்கினார்கள். ஷாபிஈ அவர்களைப் பின்பற்றி நடந்து வந்தார்கள். இவர்கள் மனாகிபுல் முர்தழவி என்னும் அலி (றழி) அவர்களின் சரிதை பற்றிய தனது நூலை திமிஷ்க் பள்ளியில் வாசித்துத் கொண்டிருக்கையில் அவரை றாபிளி எனக் கருதிய சிலர் கடுமையாக அடித்து வெளியே தள்ளினார்கள். உடனே தன்னை மக்கா நகருக்குத் தூக்கிச் செல்லும்படி ஆதரவாளர்களைப் பணித்தார்கள். மக்கா அடைந்ததும் ஹிஜ்ரி 303 இல் வபாத்தானார்கள்.

திமிஷ்க் வாசிகள் அலி (றழி) அவர்களை வெறுத்தமையால் இவர்கள் எழுதிய புத்தகத்தை வாசிக்கக் கேட்ட மாத்திரத்தில் அடித்துத் துன்புறுத்தத் துணிந்தார்கள். அவர்கள் றாபிளிப் போக்குடையவர்களல்ல. சுன்னத்து வல்ஜமாஅத்தை சார்ந்தவரே.

### 10. அபூ அப்தில்லாஹி முஹம்மதிப்னு யஸீத் கஸ்வீனி இப்னு மாஜஹ் (ரஹ்)

ஸுனனு இப்னுமாஜா எனும் ஹதீஸ் கிரந்தத்தின் கர்த்தாவாகிய இவர்கள் ஹிஜ்ரி 209 இல் ம.்.முன் காலத்தில் கஸ்வீன் எனும் ஊரில் பிறந்தார்கள். மாஜா என்பது இவர்களின் அன்னையின் பெயரெனக் கூறப்படுகின்றது. இதனாலேயே மாஜாவின் மகனென அழைக்கப்படுகின்றார்கள்.

ஊரிலேயே ஆரம்பக் கல்வியைக் கற்றபின் பல பாகங்களிலும் சென்று ஹதீஸிலும் பிற கல்வித் துறையிலும் தேரச்சியுற்றார்கள். பின்னர் பிரசித்தி பெற்ற சுனனு இப்னுமாஜா எனும் கிரந்தத்தை இயற்றினார்கள். இதுவே ஆறாவது கிரந்தமாகக் கணிக்கப்படுகின்றது. இதில் 4000 ஹதீஸ்கள் அடங்கியுள்ளன. இக்கிரந்தத்தில் பலவீனமான சில ஹதீஸுகள் புகுத்தப்பட்டுள்ளதால் இதை ஆறாவதாக அங்கீகரிக்கக் கூடாதெனவும் முஅத்தாவையே ஆறாவதாகக் கணிக்க வேண்டுமெனவும் கூறுவோர் உண்டு. ஆயினும் பலர் இதையே ஆறாவதாக அங்கீகரித்துள்ளதோடு சில பலவீனமான ஹதீஸுகளை இவர்களின் எதிரிகளே இடையில் புகுத்தி இருக்கலாமென கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் ஹிஜ்ரி 273 ரமழான் 22 இல் வபாத்தானார்கள். இத்தகைய ஆறு கிரந்தங்களிலும் ஹதீஸ்கள் யாவும் அடங்காவிட்டாலும் தேவையான அனைத்தும் பொதிந்து கிடக்கின்றன. இவ்வாறுமன்றி, தாறகுத்னி, பைஹகி, தாரமி போன்ற வேறு கிரந்தங்களும் காணப்படுகின்றன.

### இமாம் கஸ்ஸாலி (ரஹ்) (கி.பி.1058 - 1111)

அபூஹாமித் முஹம்மத் அல் கஸ்ஸாலி (ரஹ்) ஹிஜ்ரி 450 (கி.பி.1058)இல் தபரானிலுள்ள ‘தூஸ்’எனுமிடத்தில் பிறந்தார்கள். தனது இளமைப் பருவத்திலேயே தந்தையை இழந்து விட்டார்கள். ஆரம்பத்தில் தூஸிலும் பின்னர் ஜுர்ஜானிலும் கல்வி கற்ற கஸ்ஸாலி (ரஹ்) நிஷாப்பூர் சென்று, அக்காலை புகழ்பூத்த பேரறிஞராக விளங்கிய இமாமுல் ஹரமைனின் மாணவராக சில காலம் விளங்கினார்கள். கஸ்ஸாலி (ரஹ்)வின் அறிவாற்றலினால் கவரப்பட்ட இமாமுல் ஹரமைன், அவரைத் தனது துணையாசிரியராக நியமித்தார்கள். ஹிஜ்ரி 478இல் இமாமுல் ஹரமைனின் மறைவைத் தொடர்ந்து கஸ்ஸாலி (ரஹ்) நிஷாப்பூரை விட்டு வெளியேறிய போது அவருக்கு 28 வயதே நிறைவுற்றிருந்தாலும் அக்காலத்திலிருந்த ஏனைய அறிஞர்களை விட இமாம் கஸ்ஸாலியின் அறிவும் ஆற்றலும் விவேகமும் மிகப் பிரபல்யமடைந்திருந்தன. அக்காலை ஸெல்ஜுக்

மன்னர் மலிக் ஷாவின் பிரதமராக விளங்கிய நிழாமுல் முல்க் இமாம் கஸ்ஸாலியை வரவேற்று, தனது அரசவையில் அவர்களுக்குச் சிறப்பிடமளித்து கௌரவித்தார். நிழாமுல் முல்க் கலை, இலக்கிய வளர்ச்சியில் தீவிர ஆர்வம் செலுத்தியதன் காரணமாக அவரது அரசவையில் பல்வேறு கலைகளிலும் ஆற்றல்பெற்ற அறிஞர்களும், இலக்கிய மேதைகளும் நிறைந்திருந்தனர். அவர்களுள் இமாம் கஸ்ஸாலியின் அறிவாற்றலினால் ஈர்க்கப்பட்ட நிழாமுல் முல்க், அவரை அக்காலை புகழ் பெற்று விளங்கிய நிழாமிய்யா பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக நியமித்தார். ஒரு பேராசிரியர் என்ற வகையிலும் அழகு நடையில் பயன்தரு கருத்துக்களை வழங்கும் ஒரு சொற்பொழிவாளர் என்ற வகையிலும் அவர்களது புகழ் பரவ ஆரம்பித்தது.

இவ்வாறாக அவர், புகழின் உச்சத்தை அடைந்திருந்த வேளையில் அவரது வாழ்க்கையில் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டது. தமது ஆத்மாவின் வேட்கையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு புகழ்மிக்க பதவியையும் வருவாய்மிக்க தொழிலையும் துறந்து பக்தாதை விட்டு வெளியேறிய அவர் சுமார் பதினொரு ஆண்டுகள் மக்களிலிருந்து ஒதுங்கி, துறவற வாழ்க்கை வாழ்ந்தார். இக்காலப் பிரிவில் டமஸ்கஸ், ஜெரூஸலம், மக்கா, மதீனா ஆகிய இடங்களைத் தரிசித்து, ஆன்மீகத் தூய்மை நாடி நீண்ட நேரம் தொழுகையிலும் தியானப் பயிற்சிகளிலும் ஈடுபட்டுவிட்டு தனது 48ஆவது வயதில் வீடு திரும்பிய போது அவர் முற்றிலும் மாற்றமடைந்த ஒரு மனிதனாகவே விளங்கினார். சத்தியத்தைத் தேடும் இக்காலப் பிரிவில், தான் பெற்ற அனுபவத்தை அவர் தனது 'அல் முன்கித் மினழ் ழலால்' என்ற நூலில் விளக்கியுள்ளார்.

தனது பதினொரு வருட கால துறவற வாழ்வின் பின் வீடு திரும்பிய அவர் தனது கால சமுதாயத்தவரிடையே சீர்திருத்தத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தலானார். தனது பிறந்தகமான தூஸ் நகரில், தன் இல்லத்துக்குப் பக்கத்தில் மார்க்க சட்ட விளக்கம் பெற விழைந்தோருக்கான கல்லூரியொன்றையும், ஆன்மீக விமோசனம் பெற வேட்கை கொண்டோருக்கான பயிற்சிப் பாசறையொன்றையும் ஸ்தாபித்து நடாத்தினார்.

தம் காலத்திலிருந்த சமயப் பிரிவுகள் பலவற்றையும் நுணுக்கமாக ஆராய்ந்து, அவற்றிட்கிடையிலான வேறுபாடுகளை எடுத்துக் காட்டி இஸ்லாத்திற்கும், இஸ்லாம் அல்லாததற்குமிடையிலான எல்லைக் கோடுகளையும் வகுத்தார். அன்னாரது இம் முயற்சி சண்டையிட்டுக் கொண்டிருந்த சமயப் பிரிவுகளின் உத்வேகத்தைத் தணிப்பதற்குப் பெரிதும் உதவியது.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்பும் பகுத்தறிவு அடிப்படையில் மறுத்துரைக்க முடியாத வண்ணம் இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளுக்குப் பகுத்தறிவு சார்ந்த விளக்கமளித்தார். அத்துடன் ஷரீஅத் சட்டங்களின் இரகசியங்களையும் நன்மைகளையும் விளக்கி, இஸ்லாம் பகுத்தறிவுக்குப் பொருந்துவதாகுமா என்ற மக்களின் ஐயப்பாட்டினை முற்றாக அகற்றத்தக்க வகையில் அவரது விளக்கமமைந்திருந்தது.

நுண்மதித் திறத்தோடு கிரேக்கத் தத்துவங்களைப் படித்து, அதன் குணத்தையும் குற்றத்தையும் கண்டறியும் நோக்குடன் அதனை ஆராய்ந்தார். அவரது ஆய்வுகளின் விளைவாக கிரேக்க தத்துவவியலின் பிடியிலிருந்து முஸ்லிம்களின் சிந்தனை பெருமளவுக்கு விடுவிக்கப்பட்டது.

தக்லீதைக் கடுமையாக எதிர்த்த அவர் மக்கள் தம் கவனத்தைக் குர்ஆன், ஸுன்னாவின் பக்கம் செலுத்தச் செய்தார். இஜ்திஹாத் உணர்வுக்குப் புத்தூக்கமளித்த அவர், சமயப் பிரிவுகளின் பலவீனங்களையும், இஸ்லாத்திற்கு முரணானவற்றின்பால் அவை சார்ந்து நிற்பதையும் கண்டித்து அவை சீர்திருந்துவதற்கு அவசியமான தூண்டுதல்களை வழங்கினார்.

நலிவுற்றுக் கொண்டிருந்த கல்வி முறையினைக் கண்டித்து, அதற்குப் பதிலாக ஒரு புதிய கல்வித் திட்டத்தை வகுத்தளித்தார். அவரது சமகால சமய அறிஞர்கள் அத்திட்டத்தை வன்மையாக எதிர்த்தனர். எனினும், பிற்காலத்தில் பல்வேறு முஸ்லிம் நாடுகளும் இமாமவர்களின் திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் தம் கல்வித் திட்டங்களை வகுத்தன.

மார்க்க அறிஞர்கள், தலைவர்கள், அதிகாரிகள், அரசர்கள், பொது மக்கள் என்போரின் வாழ்வை ஆராய்வதற்கு, தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டார். மேலே குறிப்பிடப்பட்டவாறு டமஸ்கஸ், ஜெரூஸலம், மக்கா, மதீனா போன்ற பல்வேறு பிரதேசங்களுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரடியாக அறியும் சந்தர்ப்பத்தை பெற்ற அவர் இப்பயணத்தை முடித்து வீடு திரும்பிய சூழ்நிலையில் ‘இஹ்யாஉ உலூமுத்தீன்’ என்ற பெருநூலை எழுதினார். அவரது காலப் பிரிவில் வாழ்ந்த மக்கள் மத்தியில் தார்மீக, ஆத்மீக விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிக்கும் பொருட்டே இமாம் கஸ்ஸாலி (ரஹ்) இந்நூலை எழுதினார். அதற்கு முதற்படியாக அச்சமுதாயத்தில் புரையோடியிருந்த தீமைகளையும், சமுதாயத் தலைவர்களின் இழிநிலையையும் உணர்த்தி சமுதாய வாழ்வின் மேம்பாட்டிற்கு அவசியமான வழிமுறைகளை இந்நூலில் விளக்கியுள்ளார்.

## 13. அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)

கி.பி. 11ஆம் நூற்றாண்டு, முஸ்லிம்கள் சமய, அரசியல், பொருளியல் துறைகளில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கிய காலப்பிரிவாகும். இக்காலப்பிரிவில் முஸ்லிம் சமூகம், ஒழுக்க, ஆத்மீக துறைகளில் மிகச் சீர்கேடான நிலையிலிருந்தது. அப்போது, அப்பாஸிய கிலாபத் ஆட்டம் கண்டு கொண்டிருந்தது. ஆட்சியாளர்கள் ஆதிக்கப் போட்டியிலும், அரண்மனை வாழ்வின் சுகபோகத்திலும் திளைத்திருந்தனரேயன்றி, மக்களின் பண்பாட்டு வளர்ச்சியில் எத்தகைய அக்கறையும் செலுத்தவில்லை. சிற்றரசுகள் கலீபாவுக்குக் கட்டுப்படாமல் சுயமாக ஆட்சி செய்யத் தலைப்பட்டன.

இவ்வாறானதொரு காலகட்டத்தில் தான் ஹிஜ்ரி 470 (கி.பி.1078)இல் பாரசீகத்தின் வடமேல் மாகாணத்திலுள்ள 'ஜீலான்' என்ற ஊரில் அப்துல் காதிர் அவர்கள் பிறந்தார்கள். இவரது பெற்றோர் இறையச்சமிக்கவர்கள். நபி (ஸல்) அவர்களின் வழித் தோன்றல்கள். குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்து தாயின் பராமரிப்பில் வளர்ந்தார்கள். தனது கிராமத்திலேயே ஆரம்பக் கல்வியைக் கற்ற சிறுவர் அப்துல் காதிர், இளமையிலேயே அல்குர்ஆனை மனனமிட்டுக் கொண்டார். தனது 18ஆவது வயதில் அக்காலத்தில் இஸ்லாமிய உலகில் கலை, கல்வி என்பவற்றிற்குப் பிரபல்யம் பெற்று விளங்கிய பக்தாத் நகருக்கு கல்விக்காகப் பயணமானார். அச்சமயம் பக்தாத் நிழாமிய்யா பல்கலைக்கழகத்தின் முக்கிய போதகராக இருந்த இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தனது பதவியைத் துறந்து, பக்தாதை விட்டு வெளியேறிச் சென்றார்கள்.

அக்காலை அறிவுத் துறையில் புகழ் பெற்று விளங்கிய அபுல் வபா இப்னு அகீல், முஹம்மத் பின் ஹஸன், அபூஸகரிய்யா போன்ற அறிஞர்களிடம் இஸ்லாத்தோடு தொடர்பான பல்வேறு கலைகளையும் கற்றார். அதனைத் தொடர்ந்து சுமார் பதினொரு வருடங்களாக உலகத்திலிருந்து தன்னைத் துண்டித்து துறவற வாழ்க்கை வாழ்ந்த அவர் பின்னர் தான் பெற்ற அறிவையும் ஆத்மீகப் பயிற்சியையும் பயன்படுத்தி மக்களை நல்வழிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

பக்தாதில் அவர் ஒரு மார்க்க வல்லுனராகவும், சட்ட வல்லுனராகவும் தகுதி பெற்றிருந்தார். பக்திமான்களினதும், ஏழைகளினதும் சகவாசத்தையே அதிகம் விரும்பிய அவர் ஆட்சியாளர்களையும் செல்வந்தர்களையும் விட்டுத் தூரமானார்.

அறிவுத் துறையிலும் ஆத்மீகத் துறையிலும் ஒப்பற்று விளங்கிய அவரது புகழ் இஸ்லாமிய உலகெங்கும் பரவியிருந்தது. ஆட்சியாளர்களும், அரச பிரதிநிதிகளும் பொது மக்களும் சமமாக அமர்ந்திருந்து அவரது சொற்பொழிவு களைக் கேட்டுப் பயனடைந்தார்கள். ஒரு முறை அவரது சொற்பொழிவு மண்டபத்திலிருந்து குறிப்பெடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட 400 மைக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டமையிலிருந்து அவரது சொற்பொழிவைக் கேட்கக் குழுமியிருந்த மக்கள் கூட்டத்தின் எண்ணிக்கையை ஊகிக்க முடிகிறது. அவரது உணர்ச்சிபூர்வமான உரைகள் அறிஞர்களால் ஒன்று திரட்டப்பட்டு நூலுருப்படுத்தப் பட்டுள்ளன. அவற்றுள் 'பத்ஹுர் ரப்பானி', 'புதூஹுல் கைப்' ஆகிய நூல்கள் பிரதானமானவையாக விளங்குகின்றன.

தனது சொற்பொழிவுகளில் அன்றைய வழிகெட்ட சூழ்நிலையையும் முஸ்லிம்களின் பரிதாபகரமான நிலைமையையும் எடுத்துக்காட்டி, இஸ்லாத்தின் உண்மை நோக்கத்தையும், முஸ்லிம்களின் பாரிய பொறுப்பையும் உணர்ச்சிபூர்வமாக எடுத்துக் காட்டினார். தனது சொற்பொழிவுகளில் இறையச்சம், பணிவு, அன்பு, கருணை, மனிதாபிமானம் போன்ற அம்சங்களை வலியுறுத்தினார். அவை அவருக்கிருந்த இஸ்லாமிய கலைஞானங்கள் பற்றிய அவரது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துவனவாக அமைந்தன. ஆன்மீக வாழ்வில் அதிக நம்பிக்கை கொண்டிருந்த அவர், துறவறத்தைப் போதிப்பவராக இருக்கவில்லை. அத்தோடு எவருக்கும் அஞ்சாத தீர நெஞ்சம் கொண்டவராகவும் அவர் காணப்பட்டார். எனவேதான், ஆட்சியாளர்கள், உயரதிகாரிகள், நீதிபதிகள், மார்க்க அறிஞர்கள், பாமர மக்கள் என்று பாராது அத்தனை பேரின் தவறுகளையும் துணிவோடு சுட்டிக் காட்டி, கண்டித்தார்.

அவரது உணர்ச்சிபூர்வமான உரையொன்று பின்வருமாறு அமைகிறது.

"முஸ்லிம்களே, அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களினால் கட்டி எழுப்பப்பட்ட மாபெரும் கட்டடம் ஒவ்வொரு கல்லாக அப்புறப்படுத்தப்பட்டு, இப்போது உடைந்து விழும் நிலையிலுள்ளது. மக்களே, வாருங்கள். உடைந்திருக்கும் கட்டடத்தை மீளக் கட்டியெழுப்புவோம். இப்பணி முடியுமட்டும் நாமனைவரும் ஒருமுகத்தோடும் ஒற்றுமையோடும் செயற்படுவோம்".

மற்றோரிடத்தில் இவ்வாறு குறிப்பிட்டார். "நாய் கூட அதன் எஜமானனுக்கு விசுவாசமாக இருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியும். அது எஜமானனின் கால்நடைகளையும் விவசாயத்தையும் பாதுகாக்கின்றது. வெறுமனே சில ரொட்டித் துண்டுகளுக்காக எவ்வளவு நன்றியுணர்வோடும் மகிழ்வோடும் அதன் எஜமானனை எதிர் கொள்கின்றது. நீங்களோ, உங்கள் இரட்சகனின் அருட்கொடைகளை ஏராளமாக அனுபவிக்கிறீர்கள். ஆனால், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவ தில்லை. அவன் உங்கள் மீது விதித்துள்ள கடமைகளை நிறைவேற்றுவதுமில்லை.

நீங்கள் செய்வதெல்லாம் அவனது கட்டளைகளை மீறுவதும் அவனது வரையறைகளைக் கடந்து அட்டகாசம் புரிவதும்தான்".

அவரது இதுபோன்ற கருத்துச் செறிவுள்ள உணர்வுபூர்வமான சொற்பொழிவுகள் அன்றைய முஸ்லிம்களின் உள்ளத்தைக் கிளறி விட்டன. அவர்கள் அவரது ஆன்மீக வழிகாட்டலைத் தமது வாழ்வில் அமைத்துக் கொள்ள முன்வந்தனர். பலர் தமது முன்னைய பாவங்களை நினைத்துக் கண்ணீர் வடித்து அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடி புதுவாழ்வு வாழ ஆரம்பித்தனர். இந்நிலையில் அப்துல் காதிர் ஜீலானி, மக்களை நல்வழிப்படுத்த வெறுமனே சொற்பொழிவுகள் மட்டும் போதாது, அவர்களைத் தன்னோடு இணைத்து ஆன்மீகப் பயிற்சியளிக்க வேண்டுமென்று உணர்ந்தார். எனவே, தமது ஆழமான அறிவு, உன்னதமான ஆளுமை ஆகியவற்றின் துணைகொண்டு 'பைஅத்' முறையை அறிமுகப்படுத்தி, 'காதிரிய்யா' எனும் தரீக்காவை நிறுவினார். அவரது காலப்பிரிவில் ஆயிரக்கணக்கானோர் அவரது வழிகாட்டலின் துணைகொண்டு ஒழுக்கமும், பண்பாட்டு பயிற்சியும் கொண்ட வாழ்வை அடைவதில் வெற்றி கண்டனர்.

ஹிஜ்ரி 561 (கி.பி.1166)இல் நிகழ்ந்த அவரது மறைவின் பின்னர் அவரது சீடர்கள் முஸ்லிம் நாடுகளில் காதிரிய்யாத் தரீக்காவின் பரவலுக்குக் காரணமாக இருந்தனர். முஸ்லிம்கள் வெற்றி கொள்ளாத பிரதேசங்களிலெல்லாம் இஸ்லாத்தைப் பரப்பினார்கள். கறுப்பின ஆபிரிக்கர்கள் மத்தியிலும், இந்தோனேசியா, சீனா, இந்து சமுத்திரத் தீவுகள், இந்தியா முதலான நாடுகளிலும் ஏகத்துவப் பிரசாரம் செய்து பலரை இஸ்லாத்தில் சேர்த்துள்ளனர்.

### 14. அபுல் ஹஸன் அஷ்ஷாதுலி (ரஹ்)

ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகரான அபுல் ஹஸன் அலி அஷ்ஷாதுலி (ரஹ்) (ஹிஜ்ரி 593 - 656 / கி.பி. 1195 - 1258) வட ஆபிரிக்காவிலுள்ள சியூட்டாவுக்குத் தெற்கேயுள்ள 'கிமாறா' எனும் ஊரில் பிறந்தார். அன்னாருக்கு 'அலி' என்று பெயர் சூட்டப்பட்டது. ஆரம்பத்தில் அபூ மத்யன் என்னும் புகழ்பூத்த சூபியின் மாணவரான அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் ஹராஸியின் சீடராக இருந்த அவர் அதனைத் தொடர்ந்து அபுல் பத்ஹ் அல் வாஸிதியின் சீடராக சில காலம் விளங்கினார். தனது ஆசானின் பணிப்புரையில் மேற்கு நோக்கிப் புறப்பட்ட அவர் 'பாஸ்' எனுமிடத்தில் அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஷ் என்னும் ஆத்ம ஞானியைச் சந்தித்து அவரது சீடராகவும் விளங்கினார். அதன் பின் அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஷின் கட்டளையின் பேரில் டியூனிஸியாவிற்குச் சென்ற அவர் 'ஷாதிலா' எனுமிடத்தில் சில காலம் துறவற வாழ்க்கையிலும் தியானத்திலும் ஈடுபட்டார். இதனாலேயே அவர் 'ஷாதிலி' என்ற அடைமொழியைப் பெற்றார். தனது அமைதியான தியான வாழ்வு மூலம் ஆத்மீகப் பக்குவம் பெற்ற அவர் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

இவர் இரவு பகலாக இறை வணக்கத்தில் ஈடுபட்டதுடன் மக்களை 'ஷரீஆ' என்ற சன்மார்க்க சட்டப்படி நடக்க வற்புறுத்தியும் வந்தார். இறை வணக்கத்தில் ஆர்வம் பிறப்பதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுத்து, அதன்பால் மக்களை ஆர்வமூட்டியும் வந்தார். இவரது ஆத்மஞான வழிமுறையே 'ஷாதுலிய்யாத் தரீக்கா' என அழைக்கப்படுகிறது. இவர் ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஐந்து அடிப்படை நியதிகளையும் அனுஷ்டித்து வரவேண்டுமென்று தனது தரீக்காவைப் பின்பற்றும் மக்களுக்குக் கட்டளையிட்டார்.

ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஐந்து அடிப்படை நியதிகள் பின்வருமாறு.

1. பகிரங்கமாகவும், அந்தரங்கமாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்க வேண்டும்.
2. சொல், செயல் இரண்டிலும் சன்மார்க்க நெறி முறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.
3. சகல கருமங்களிலும், செல்வம், வறுமை இரண்டு நிலைகளிலும் சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ்வையே முன்னிலையாக்க வேண்டும்.
4. அல்லாஹ்வின் அருட்கொடைகள் கூடுதலாகவோ, குறை வாகவோ அருளப்படும் போது அவனது செயலுக்குப் பூரணமாக இணங்கி நடத்தல் வேண்டும்.
5. இன்பத்திலும் துன்பத்திலும் அல்லாஹ்விடமே திரும்பிவிட வேண்டும்.

இவர் எந்த நூலையும் எழுதவில்லை. இவரிடம் "தாங்கள் ஏன் ஒரு நூலையேனும் எழுதக் கூடாது" எனக் கேட்கப்பட்டபோது "எனது மாணவர்களே எனது நூலாகும்" எனக் குறிப்பிட்டார். அவரது மாணவர்களுள் ஒருவரான 'அபுல் அப்பாஸ் அஹ்மத் அல் முர்ஸி' என்பவரின் மூலமாக ஷாதுலிய்யா தரீக்கா பரவியது.

உலகின் எல்லாக் கோணங்களிலும் முஸ்லிம்களிற் பலர் பின்பற்றி அனுஷ்டிக்கும் தரீக்காக்களில் ஷாதுலிய்யா தரீக்காவும் ஒன்றாகும். மக்கா, மதீனா, அல்ஜீரியா, டியூனிஸ், எகிப்து, சூடான், மலேசியா, இந்தியா, இலங்கை முதலிய இடங்களில் வாழ்வோருக்கு மிகவும் அறிமுகமான தரீக்காவாக இது காணப்படுகிறது.

இத்தரீக்காவில் 'பாஸிய்யா' என்ற கிளையே இலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளது. தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இத்தரீக்கா அஷ் ஷெய்க் முஹம்மத் அல் பாஸி வழியாக பரவியது. இதன்பின் தென்னிந்திய காயல்பட்டண வாசியும் ஷெய்க் அல் பாஸியின் கலீபாவுமாகிய முஹம்மத் அபூபக்கர் மிஸ்கீன் ஸாஹிப், அஷ்ஷெய்க் அஹ்மத் இப்னு ஸாலிஹ் அல் யமனி, ஷெய்க் அல் பாஸியின் புதல்வரான அஷ் ஷெய்க் ஷம்ஸுத்தீன் அல்மக்கி அல்பாஸி ஆகியோர் இலங்கை வந்து கொழும்பு ஸாவியாவில் இருந்து இத்தரீக்காவைப் பரப்பினார்கள்.

# அஸ்ஸீரா வத்தாரிக்
# (இஸ்லாமிய வரலாறு)

4-CM14795